Q. 2338.21
M 87
162892

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

சீகாழி

# அருணாசலக்கவிராயரவர்கள்

மொழிபெயர்த்தருளிய

# சீகாழித்தலபுராணம்.

Accn. No: 162892
No of Pages: 182

இஃது

ஸ்ரீமத் உபசுப்ரமண்ணிய மரபினராகிய ஸ்ரீமான்

## காஞ்சி-சரவணமுதலியாரவர்கள்

விருப்பத்தின்படி

அஷ்டாவதானம்

## பூவை. கலியாணசுந்தரமுதலியாரவர்களால்

பரிசோதிக்கப்பட்டு,

இவர்மாணாக்கர்

## கா. நாகலிங்கமுதலியாரால்,

சென்னை:
ஆல்பீனியன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.
வியய௵ மகரரவி.

1887.

(Registered Copy-right.)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிறப்புப்பாயிரம்.

பேறை—தசாவதானம்.

## செகநாதப்பிள்ளை யவர்கள்

இயற்றியது.

குளகம்.

பூவாய்ந்த தளம்வாய்ந்த புதுநறவத் துளிவாய்ந்த
காவாய்ந்த கார்வாய்ந்த கவின்வாய்ந்த பூம்பொய்கைச்
சோவாய்ந்த தளிவாய்ந்த தோணிபுர மெனத்தெய்வப்
பாவாய்ந்த பிரமபுரப் பதிவாய்ந்த சோணாட்டு. (க)

மகங்கண்ட வொருநாலு மறைகண்ட பல்கோடி
யுகங்கண்ட சீகாழி யுரைக்கருமெய்ம் மகத்துவமுஞ்
சகங்கண்ட தெனவாய்ந்த தமிழ்நாட்டு நிகழ்மாந்தர்
அகங்கண்ட மொழியின்ப மனைத்துமினி துறக்காண்பான். (உ)

சொற்பொலிவும் பொருட்பொலிவுந் தொடைப்பொலிவு நடைப்பொ
நற்பொலிவி னணிப்பொலிவு நாற்பயன்காட் டுறுபொலிவும் [லிவும்
சிற்பொலிவின் மதத்தினுயர் சித்தாந்தத் திறப்பொலிவும்
மற்பொலிவு மொருங்கறியப் பதிமனத்தார்க் கிலக்காவான். (ங)

ஊழிவளர் பதியெனவு முயர்சேந்த னுலகுய்ந்து
வாழிபெற வவதரித்து வண்பதியீ தெனவுமுன்னி
மேழியரா முயர்சைவ வேளாளர் குலம்வாய்ந்த
காழியரு ணாசலமாங் கவிக்கோன்சொற் றனனாக. (ச)

குயிலேறு தேமாவின் குலையேற நறைவாரும்
எயிலேறு வளக்காஞ்சி யினில்வந்து கூர்ம்படையாம்
அயிலேறுஞ் செங்கரமு மறுமுகமு மேதுளங்க
மயிலேறுங் குகனோடு வருவீர வாகுவந்த. (ரு)

குலம்விளங்கச் சுத்தபல குணம்விளங்கப் பெருவாய்மை
நலம்விளங்க மெய்ஞ்ஞான நடைவிளங்கக் கொடைவிளங்க

162892

ஒ,23:38·2119(3)\S
ஈ87

நிலம்விளங்கக் காட்டுபொறை நிறைவிளங்கச் சிவவிரத
வலம்விளங்க வடியருழை மாருவன் பதுவிளங்க. (௬)

பாவணலாஞ் சம்பந்தப் பதிபத்தி மிகத்தழைத்துத்
திரவணம்பெற் றுயர்முத்துச் சீயாலவேலளித்த
சரவணமாலெம் போல்வார் தாமென்று மேபடித்துச்
சிரவணிக்கப் புராதபுத்துச் சீர்திருத்தித் தருகென்ன. (௭)

அத்தகையபெருமான்மி யம்வரைந்தோ ராலமைந்த
கொத்தமறும் வழுவனைத்துங் கூர்ந்துணர்ந்து நூலிசைத்தோன்
சுத்தபிர தியைக்கடுப்பத்தோன்றுது தோற்றியவவ்
வித்தகனே வளப்பூவை வேளாளர் வியன்மரபின். (௮)

சிவஞான மாகுபெருஞ் செல்வனண்ணு சாமிசெய்த்
தவமான தோருருவிற் றன்ழத்தாங்கு நெடிதுதித்து
நுவலரிய பலகலையி னுண்ணறிவா லெண்விதமாம்
அவதான மேவுகவி யாணசுந் தரச்செம்மல். (௯)

பல்காலத் தவ்வவர்கைப் பட்டவரிற் பட்டிரியச்
செல்கால நோக்கினவை சிதைத்தெளிதி னியைத்தளிக்க
எல்கால விளங்குமணி யெயில்சூழும் கன்னிநகர்
மல்காலயத் தென்றும் வளர்கம்பன் பதம்போற்றி. (௧௦)

கல்வியறி வொழுக்கமீ கைத்தன்மை தாளாண்மை
செல்வியருள் சிவஞானச் செல்வமடியவர் மாட்டு
நல்விழைவி னெளிரன்பு நாணுளும் பதியோகு
சொல்லினய முதலகுணத் தொகைகணிரம் பியவழகே. (௧௧)

பெற்றசா வணவேளாம் பெருந்தகையன் றவத்துவந்து
பற்றலருந்தாழ்வுறவின் பகர்ச்சிசொலும் போற்றல்
உற்றவனுஞ் சித்தாந்தத் துண்மை நெறிதிரிபின்றிக்
கற்றவனுந் தருசெலவிற் களிப்பவனு மாய்கின்றே. (௧௨)

நங்குந்த வினையகற்று நாகலிங்கப் பெயரினன்தன்
செங்குந்த நெடுமரபு சிறக்குறவித் திகழ்வையம்
எங்குந்த னிசையிலக வெழுதாத வெழுத்தென்னத்
தங்குந்தச் சினிவியற்றித் தனிமுறையிற் றந்தனனால். (௧௩)

சிறப்புப்பாயிரம் முற்றும்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சீகாழி
# அருணாசலக்கவிராயரவர்கள்
# சரித்திரச்சுருக்கம்.

இந்நூலாசிரியராகிய அருணாசலக்கவிராயர் சற்றேறக்குறைய நூற்றெழுபதுவருஷத்திற்குமுன் சோழமண்டலத்திலே, தில்லையாடியிலே, வேளாளர்குலத்திலே நல்லதம்பி பிள்ளைக்கும் அவரது கற்புடைமனைவி வள்ளியம்மாளுக்கும் சற்புத்திரராக அவதரித்து ஒழுக்கம், அன்பு, அருள் முதலிய நற்குணங்களோடு வளருவாராயினர்.

பின்பு தந்தைதாயர்களாலே ஐந்தாம்வயதிலே வித்தியாரம்பஞ்செய்விக்கப்பெற்றுப் பன்னிரண்டு வயதுக்குள் சிறிது கல்விகற்றவளவிலே திருக்கைலாச பரம்பரைத் தருமபுரவாதீனத்தையடுத்துச் சமய விசேஷ முதலிய தீட்சைகளைப்பெற்று அம்பலவாணத்தம்பிரான் சுவாமிகளை ஆசிரியராகக் கொண்டு தென்மொழியிலே பல இலக்கணங்களும், இலக்கியங்களும், ஞானநூல்களாகிய பதினான்குசாத்திரங்களும், வடமொழியிலே தருக்கமுமற்றநூல்களும் ஓதியுணர்ந்து இயல், இசை, நாடகமென்னு முத்தமிழிலேயும் சிறந்தவராய் வீற்றிருந்தார்.

பின்னர் தருமபுரவாதீனத்தினின்று நீங்கி தனது தில்லையாடியிற் சென்று அபிஷேகக்கட்டளைக்கருப்பூரில் தம்மரபினருளொரு கன்னிகையை மணந்து அப்புண்ணியவதியோடு தமதில்லற தருமத்தை நடாத்திவருகையில் ஒருநாள் புதுவைக்குச்சென்று திரும்பிவருகிறபோது சீகாழியில் தங்க, அக்காலத்தவ்விடத்திருந்த தருமபுரவாதீனம் சிதம்பரநாதத்தம்பிரான் சுவாமிகள் கட்டளையை மறுக்கக்கூடாதவரா யப்பதியிலேயே குடும்பசகிதராய்த் தங்கிவிட்டனர்.

இக்கவிராயரிங்கு வசிக்கையில் பல மாணாக்கர்களுக்கு இலக்கண, இலக்கிய, சித்தாந்த பாடங்களைக் கற்றுக்கொடுத்துக்கொண்டு மிக்கவாக்குவல்லபத்தையுடையவராய், எல்லாராலு நன்குமதிக்கப்பெற்றுச் சிறந்து விளங்குவாராயினர். இச்செய்தியைச் சட்டநாத புரத்திலிருந்த சங்கீதவித்துவான்களாகிய வேங்கடராமையர், கோதண்டராமையர் இருவரும் கேள்விப்பட்டு வந்து கவிராயனை யடுத்துக் கம்பராமாயண முதலியநூல்கள் பாடங்கேட்டு

வருப்வர் பலநாளும் பிரார்த்தித்து இராமாயணத்தைக் கீர்த்தனைரூபமாகப் ப்பாடித் தந்தருளவேண்டுமென, கவிராயர் ஒருவாறு மாணாக்கர்களின்பொருட்டு இசைந்து சிவோத்கர்ஷம்பாதியாது செந்தமிழ்ச்சொற்களாற்பாடி முடித்துச் சென்னை முதலிய விடங்களிற் சென்று பிரசங்கித்துத் தக்கசன்மானங்கள் பெற்றுத் திரும்பினர்.

இதனைக் கேள்வியுற்ற, சுத்த சிவசன்மார்க்கம் பற்றியொழுகும் சிதம்பரநாதத்தம்பிரான் சுவாமிகள் அழைப்பித்துச் சொற்றபரிகார ஆக்கினையைக் கவிராயர் சிரமேற்கொண்டு சகலசமையாதீதாத் வைதமாய் விளங்குஞ் சைவ சித்தாந்த வுண்மைபரவ வந்த நமது திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருவவதார க்ஷேத்திரமாகிய, சீகாழித்தலபுராணத்தைச் சொல்வளம், செய்யுணடை, சந்தம், பொருட்சுவை முதலிய பொலிய மொழிபெயர்த்தனர். (இவ்வுண்மையிந்நூல் கடவுள்வாழ்த்தால் விளங்கும்) புராணத்தைத் தருமபுரமுதலிய மடங்களின் ஆதீனத்தர்களுமகமகிழ அரங்கேற்றினர். பின்னர் சீகாழிக் கோவை, அசமுகி நாடகமுதலிய நூல்களியற்றியருளினர்.

இங்ஙனம் லோகோபகாரமாகப்பலநூல்கள் செய்து பல நன்மாணாக்கர்களுக்கும் போதித்துச் சதா சிவத்தியானாதிகளில் வதிந்து சிவசாம்பிராச்சிய மெய்தப்பெற்றனர்.

இவர் அவதாரம் சாலிவாகன சகம் க௲ஙச வதாகிய விஜயஷு
இவர் பரிபூரணம் சாலிவாகன சகம் கஎ0க வதாகிய விகாரிஷு
இவருக்கு வயது சுஎ.

---

சைவபூஷணம்.

சிதம்பரம் மறைஞானசம்பந்த சுவாமிகள் இயற்றிய சைவபூஷணம் வடமொழியில் சுலோகமும் தென்மொழியில் வியாக்கியானமுமாக அச்சிட்டுவருகிறேம் வேண்டியவர்கள் முன்னதாகத் தெரிவிக்கலாம்.

இங்ஙனம்,
காஞ்சி, நாகலிங்கமுதலியார்.
நெ. 45 பஹிராகிமடத்து வீதி
சென்னை.



உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# சீகாழித்தலபுராணம்.

## விநாயகர் காப்பு.

பொன்னாரிதழி மதுமாலைப் புனிதன்மரும மிசைமேவி
மின்னாருமையா ளுதற்பிறையின் வேணிப்பிறையைச் சேர்த்திலகும்
பன்னாணிறைந்த மதியமெனப் பார்த்து மகிழ்ந்து முகமலருந்
தென்னார் காழி யாண்டபிள்ளை செந்தா மரைத்தாளிணை பணிவாம்.

### வேறு.

நீண்டவட வரைமீது நிறைகுணத்தோன் சொல்பனுவல்
பூண்டதனி மருப்பாரம் புனைந்தெழுதி நினைந்தவெலா
மீண்டவரும் பழவடியார்க் கின்பமுட னருள்காழி
யாண்டகண பதிதுணைத்தா ளம்புயங்கள் வணங்குவாம்.

---

## கடவுள் வாழ்த்து.

### பிரமேசர்.

நீர்பூத்த பேரொளியா யுயிர்க்குயிரா யகண்டிதமா நிறைவாய் நீங்காப்
பேர்பூத்த குணங்குறிக ளிகந்தபழமறைக் கொழுந்தாய்ப் பெருமைசான்ற
பார்பூத்த பரையினொடு கலந்துருவாதிமும்மைப் படிவமாகிச்
சீர்பூத்த காழிநக ரமர்ந்தபிரமேசனையாஞ் சிந்தைசெய்வாம். (க)

### திருநிலை நாயகி.

ஒருநிலையே யுலகனைத்தும் பொருணிலைசேர் வெண்டிருநீ றுயர்ந்தவேதந்
தருநிலையால் வளர்ந்தோங்க விரங்குமருமறைக் குழவிதன்பாலன்பாற்
பெருநிலைசேர் முலைக்கண்ணுஞ் சிலைக்கண்ணு மிரங்கியவெம்பிராட்டியன்பர்
கருநிலை தீர்த்தருள்காழித் திருநிலைநாயகிதுணைத்தாள் கருத்துள்வைப்பாம். (உ)

### பெரியநாயகர்.

அரியநாயக ஞரணநாயகனணங்கார் முடிவாய்ந்த
கரியநாயகன் காணருநாயகன் கவுணியமுனி காட்டத்
தெரியுநாயகன் ஞேணிமேலோங்குயர் தெய்வநாயகன்காழிப்
பெரியநாயகன் கைமணிநூபுரம் பிறங்குசேவடிபோற்றி. (௩)

### பெரியநாயகி.

அகலிஞயகிமணி யெனச்சுடரையுய்த்ததற் கருமறைக்காட்டி
னிகலிஞயகிலாண்டநல்கிய முதவிடத்திருந்தொருகோடி
பகலிஞயகி யாதியைப்படைத்து நீள்பழமறைக்கொழுந்தாய்
புகலிஞயகி பெரியநாயகிமலர்ப் பொன்னடித்துணை போற்றி. (௪)

### சட்டைநாதர்.

தங்கமாமணித் தூணில்வந்திரணியன் ஞேள்வலிதனைவாங்குஞ்
சிங்கவேற்றரியரைக் கசைத்துலகெலாந் தேர்ந்தளந்தவன்மேனி
யங்கயாவுமோர் கதையதாய்க்கொண்டதளங்கியாப்புனைகாழிச்
சங்கவார் குழைச்சட்டை நாயகன் றுணைத்தாமரைச் சரண்போற்றி. (௫)

### ஆபத்துக்காத்தபிள்ளையார்.

பூத்தபிள்ளை யனத்தன் புகழ்நிலாக்
கோத்த பிள்ளை மதியணி கோமகன்
மூத்த பிள்ளையை முன்னின ராபத்துக்
காத்த பிள்ளையைக் கைதொழு தேத்துவாம். (௬)

### குமாரக்கடவுள்.

அலமடையுங் கொடுஞ்சூரன் குலமடியப் புள்ளினங்க ளமரைவேட்ட
பலமடையப் பெரும்பூமிபலமடையக் கரும்பகட்டிற் படருங்கூற்றன்
வலமடையுங் கரம்வருந்தா நலமடையப்பிரமாதி வானோர்தங்கள்
தலமடையத் தனதுகரதலமடையும் வேலெறிந்தோன் சரணம்போற்றி. (௭)

### திருநந்திதேவர்.

ஆதியிடை யீறில்லானருளேகண்ணுக நின்றே னமலன்பாத
மீதிலிறைஞ்சிட வணுகும்வாசவ ஞன்முகனெடியோன் மிடைந்தபோது
போதிர்விலகு திரெனலாற்றருமலரம்புயந் துளபம்பொதிந்ததெய்வத்
தீதின்மணம்படைத்த மணிப்பிரம்புடையதிரு நந்திதிருத்தாள்போற்றி. (௮)

### கலைமகள்.

கருமழைத்தண்டுளி பொழியுங்கால மதியொளியு மொளிகாலுமுத்தின்
பருமணிமாலையு மபயவரதமும் புத்தகமும் வடப்பளிங்குந்தாங்கி



முருகுயிர்க்கு நறுந்தவள முளரியாலயத்திருந்தமுது பிராட்டி
யிருபதமுங் கடைப்பிடித்தேனெப்பதம் வாராத பதமெனக்குமன்றே. (௯)

### ஆளுடையபிள்ளையார்.

குழுவேறச் சமண்மூக ரழலேற விடுத்ததனைக்கூடற் கோமான்
வழுவேறு முடலேற வுடன்மூறு மனமூறு மாற்றியன்ஞர்
கழுவேற வெண்ணீறுமைந்தெழுத்தும் விரித்துலகைக்கதியிலேற்றி
மழுவேறுங் காத்தரன்றனருளேறுங் கவுணியர்கோன் மலர்த்தாள்போற்றி. ()

### ஆளுடைய வரசு.

விடற்கரிய கொடும்பாசத் தொடராறுத்தைம் புலனுய வேழஞ்சீறி
யடற்கரியன் மும்மதமுமமணருடைத்துன் மதமுமழியநூறித்
தடக்கடலைக் கன்மிதவை யாலுழக்கிச் சிவஞான தானம்வீசுங்
கடக்களிறென்றுல கேத்தவருநாவுக்கரசர் பதங் கருதிவாழ்வாம். (௧௧)

### ஆளுடையநம்பி.

இருக்காதிமறைகாணு வினைத்தாளை மறலிமுடி யிடறுந்தாளைத்
திருக்கேள்வன் விழிபுனைந்த செழுந்தாளை யரக்கன்முடி திரித்ததாளை
யொருக்காலுக் கிருக்காலாய்ப் பரவைமனை யகந்தேடியுறமாசெய்தோன்
மருத்தாழ தலர்ந்ததுணைமலர்த்தாளையகத்தாழ வணக்கஞ்செய்வாம். (௧௨)

### ஆளுடையவடிமை.

விலங்குமனத் தினர்கடுக்கையுடுக்கையர் கார்மயிற் பீலிவிளங்குகையர்
புலம்புமொழிக்கட்டறுத்து நிறைதிருவாசகவமு தப்புணரிதேக்கி
இலங்குமதித்திருக்குலத் தான்பிறப்பறுத்து மணிமன்றத் திறைதாள்சேர்ந்தோ
ரலங்குபிணைப் பொழில்புடைசூழ் வாதவூரடிகளடி யகத்துள்வைப்பாம். (௧௩)

### சேய்ஞலூர்ப்பிள்ளையார்.

எந்தைதாள் காமுறுவாரிருவினைத் தாளறுக்கவெனு
முந்தையாரணம் புகன்றமுதுக்குறைவானது பதிந்த
சிந்தைதானரனடிக்கே செறிவித்துச் சினந்துவருந்
தந்தைதாளோரிரண்டுந்தடிந் தவன்றுடலைக் கொள்வாம். (௧௪)

### அறுபத்துமூவர்.

அத்திமான்கலைமானைந் தருநிழன்மானயில் விழிக்கஞ்சனமமைத்த
புத்திமானென்றே கடுவடையாளம் பொறித்தகந்தர முளபெம்மான்
சத்திமான்காழித் தடவரையெம் மான்றன் னடிநீழ லிற்சேரு
முத்திமான் றனைச்சேரோ ரறுபத்துமூவர்தாண்முடி மிசைவைப்பாம். (௧௫)

### பட்டினத்தடிகள்.

துறவாத மும்மைவினைத் தொடர்பரிந்து மையல்விழிக்
குறவாய பொருணீக்கி யுழுவலன்பிற் கழுமலத்தார்க்
கிறவாமும் மணிமாலை யியற்றியருள் வழிநின்று
பிறழாத பட்டினத்துப் பிள்ளையிணை யடிபோற்றி. (௧௬)

### அஷ்டவைரவர்.

தண்டமதி புனைந்தகல்விண் டோய்சிகரத் தினிதமர்ந்த
வண்டர்பிரான் கணத்தலைமை யசிதாங்கன் கபாலி
சண்டனுரு ருக்குரோதன் சங்காரன் பீடணன்சீர்
கண்டருளுன் மத்தனிவர் கழற்கமலம் பரவுதுமே. (௧௭)

### காலவித்தாசர்.

சுருதிவழியுலகனைத்துந் தனிக்கவிகை நிழற்றிமுது தோணியார்க்கு
மிருதிபுகழ்கயிலைவரைச் சிகரமுங்கோபுரமு மெயில்விதமு மன்பாற்
கருதியெனைப்பலபணியும் புரிந்துபிற வாநெறியைக் காணிகொண்ட
பருதிகுலத்தவதரித்த காலவித்துமகிபதிதாள் பணிந்து வாழ்வாம். (௧௮)

### துணைத்தலைப்பாடியுடையார்.

கலைப்பாடி யூர்ந்தாற்போற் கண்டுணர்ந்து காழிநகர்
மலைப்பாடி வளவென்று மாணிதியா லமைத்துவினை
யலைப்பாடி யுழலாமே யமலனடி யடைந்தகுணத்
தலைப்பாடி யுடையாரென் றனையாள வுடையாரே. (௧௯)

### பரிசாரத்தொண்டர்கள்.

தாயினுமன் னுயிர்க்கினிய சண்பைநகர்க் காவலன்வாழ்
கோயின்மணிமுன்றி ஹெறுங்குயின்ற தூாலகற்றுமுது
வாயினரை யீருக வழுவில்பரி சாரகண
மாயினசேர்த்தொண்டர்துணையடியெமது முடிவைப்பாம். (௨௦)

### வாழ்த்து.

தெண்ணீர்குதட்டும் புயறிங்களின் மூன்றுபெய்க
வெண்ணீரரசன் றிருக்கோன்முறை யேந்தியாள்க
பண்ணீரறநீடுக நன்னெறிபல்க வெங்கோன்
வெண்ணீறொடோரைந் தெழுத்தோங்குக மேதினிக்கே. (௨௧)

### நூல்செய்ததற்குக் காரணம்.

பண்டேபழிச் சாமையினுற் பவம்பற்றினேமி
னுண்டேயென வாழ்த்தினுமேற் பவமுற்றிடேமால்



வண்டேய்பொழில் வேணுபுரத்தானை யிம்மாண்பில்யாக்கை
கொண்டேதுதிப்பா மிஃதெம்முடைக் கோளதன்றே. (௨௨)

### வேறு.

நாதனுலருண் நந்திபாற்றெளி சனற்குமரன்
வாதராயணற் குரைப்ப மற்றவன் புகல்வழியே
சூதனோர்ந்ததைநயிமிசாரணியம் வாழ்நகமுர்
மாதவர்க்கெலாம் வழங்கிய புராணமூவாறில். (௨௩)

முறைதரும் பவுடிகத்து முன்கேத்திரகாண்டத்
தறைதருந் தனியாதிபாகத்தினுங் சாந்தத்
திறைதரும் பரிச்சேத மூன்றுவதனிடத்தும்
பொறைதருந் திருப்புகலிமான்மியமிது புகலின். (௨௪)

இனையகாதை யீண்டியம்பவும் வல்லனோதருமை
முனைவனன்புசால் சிதம்பர நாதமாமுனிவன்
வனையுமாரிய மொழிவழியருந்தமிழ் வகையா
லெனைவிளம்புகென் றோதலுமிது துணிந்தனன்யான் (௨௫)

பிறந்தி றந்துழ லுந்தெய்வப் பிணங்களைப் பாடி
யறந்து றந்தலைந் தொழிந்தனை யரும்பெருங் காழி
சிறந்த மான்மியம் பாடெனச் சிதம்பர முனிவ
னறைந்த சொற்கொடு சொற்றன னன்பினு லிதையே. (௨௬)

### அவையடக்கம்.

விண்ணலங்கொள் காரெழிலிநீர் விரிதிரையுடுத்த
மண்ணலங்கொள் மஞ்சனமாயின வல்லோ
ரெண்ணலங்கொள் பேரவை புகுந்தினியவாய்க்காழி
யண்ணலஞ்செவிக் காவனவளிய னேன்புன்சொல். (௨௭)

### வேறு.

பொருமாலேற்றுக் கொடியுயர்த்த புகலிப்பெருமான் புகழையளந்
தொருநான்மறையும் வரம்பறியாதுழலவேயு முரைப்பனெனத்
தருமாதரவால் வினையேனுஞ் சமைத்தவாறு வான்கிளைத்து
வருநாண்மதியைவருகென்று மகவொன்றழைத்த வாறேயால். (௨௮)

குறுமையிலையேனெடுமை யதன்குணமாரறிவா ரெனதுமொழிச்
சிறுமையிலையேன் முதுமைமொழித்திறமெவ்வாறு புலப்படுங்கா
ருறுமையிழைத்த விருட்பிழம்பாருறையிங்கிலையே லுரகன்முடிப்
பொறுமைகிலத்துக் கதிர்த்திங்கட்புத் தேட்பொலிவும்பொலிவின்றே .()

பொற்காலகத்தைம் பேரமளிப்பொறிவாய் விளக்கிட்டாயிழையார்
நற்கால்வருடமகிழ்வார் முனடுநாளிருளின் மின்மினியிட்
டொற்காவரிபுற்குடம்பையுட்பேட்டேனேமகிழுங்குரீ இக்கணம்போற்
சொற்காவலர் செந்தமிழியன்முன் சிறியேன் புகலத்துணிந்தேனே. (௩௦)

## சிறப்புப்பாயிரம்.

மாத்தவருஞ்சிலையாக மணிநாணும் பணியாகவரன்காத்தின்பம்
பூத்தவருந்தகைவாழுஞ் சீகாழிமான்மியத்தைப் புலமைசான்ற
நாத்தவரும்வியந்ததமிழ் புனைந்தருணாசலக் கவிஞனுமன்ப
ரேத்தவருங்குருலிங்க சங்கமசந்நிதியி லரங்கேற்றினனே. (௩௧)

செவியுணருந்தமிழ்க்கடல்வாய்நாமணிமந்தரநிறுவித்தெளிசாலன்பி[துப்
னவிரொளிய மணிவடந்தொட்டான் றமைந்ததொல்கேள்வியறிவாலீர்த்
புவிபுகழுமாலருணாசலமதித்துச் சீகாழிப்புராணமென்னுங்
கவியமுதந்தனையளித்தான் புலவரெல்லா முண்டுமனங்களிக்கமாதோ. ()

### வேறு.

பொன்னீரிமையப் பொலன்குவட்டிற் புலியையிழைத்துக் கலியிருடீர்த்
தின்னீர்முளரிப் பண்ணவனீன்றிருள்வாய்ப்பாங் தண்முடிவளர்த்தி
முன்னீருடுத்த நிலமகளை முறையான்மணந்த செம்பியர்வாழ்
சொன்னீர்வளவை பழுத்ததமிழ்ச்சோணாட்டணியீண் டுரைசெய்வாம். ()

## கடவுள்வாழ்த்து முற்றிற்று.

ஆக. திருவிருத்தம் ௩௩.

---

# திருநாட்டுச்சிறப்பு.

முடங்கல்வாயல மேந்திஞனுருவெனமுதுவா
னிடங்கலந்து சென்றிமிழ் திரைமுகட்டு நீராழி
யடங்கமேய்ந்து பாட்டளி முரலல்லியங்கமலத்
தடங்கணூனுருக் கொண்டுமீண்டன சலதரங்கள். (௧)

விழையுமார்கலி யிறைமக னீண்டுமெய்யன்பு
தழையுமீயுயர்சையமால் வரைத்தடங்குவட்டிற்
குழையினீண்ட கட்குலமனைக்கிழைத்தியைக்கூவு
முழையர்போன்மென வுற்றனமழைக்குலமொருங்கே. (௨)

வகுத்தகார்ம கண்மறிதிரையாடினண் மலர்த்தா
தருத்தவார் குழல்விதிர்த்தெனவு தறிவள்ளுகிரான்



மிருத்துலாமயிர்க்கா ருறுமுளர்ந் தெனவிரிந்து
பகுத்தவால்வகிர் காட்டினமின்னலின் பரப்பே. (௩)

அண்ணன்மால் வரையலர் முலைக்கட்டிரையாடைட
வண்ணமாகவெள் ளருவிவேய்ந்துள நிலமகளைக்
கண்ணழன் றிருட்களிறுகைத்தைங்கணைக்காளை
தண்ணலங்கணை பெய்வதொத்தன மழைத்தாரை. (௪)

மண்டிலம்படுமெணிதழீ நித்திலம் வரன்றித்
திண்டிறற்கரி மருப்பெறிந்தகிற்றுணி சிதறிக்
கண்டிரண்ட வேயடர்வ ரைவளனெ லாங்கவர்ந்து
கொண்டிழிந் தனகறங்கு நீர்க்கோதை வெள்ளருவி. (௫)

அறனெலா மிழைத்துல கருளன்னை யையடல்சேர்
விறல்கெழுங் குவட்டிமய வேந்தளித் தெனவிண்டீன்
றறநிவந்த மால்வரை தருசெவிலி போன்றொழுகிப்
புறவமே யதுகளிர்ப்புனற்புண்ணி யப்பொன்னி. (௬)

குயின்றழூ ரலுண்டகட் டிருபுடை புறங்கோப்ப
வயின்றமாக் களிற்காந்தள் கைமறிப்ப வாண்டொருவி
யெயின் குழாங்க ளாறலைத்த தாறலைத்தெதன்றிரையப்
பயின்றபல் பொருண்மடுத்த கன்பாலை விட்டதுவே. (௭)

அள்ளற்பூம் புனல்வெளிய பாலொளியி னலரனு
யுள்ளத்தா ழியுள்வெண்ணெய் வாய்மடுத்து மாலுருவாய்
வள்ளத்தா மரையொடுவி ராய்மல ரயனுருவாய்
வெள்ளத்தாழ் புலல்வியன் பனையருத மேவியதே. (௮)

பாட்டகன் றிணர்த்தலை மகன்குல மனைப்பன்னி
வேட்டகம் பெறமருத மான்விரி யிதழ்கமல
வீட்டமெல் லிலைத்துளியி னீராஞ் சனமேந்திக்
காட்டவெண் மணற்புன்னை யங்கான லெய்தியதே. (௯)

முரண்டடஞ் சினைப்புன்னை முத்திறைத்து மொய்த்தலர்ந்த
திரண்டகா லனைநெய்த லின்விழிக ளாற்றெரித்துப்
புரண்டவெண் டிரைக்கை கொடுபுல்லி யப்புணரி
யரண்டனிற் புகுந்தகலி டம்பொலிந்த தையன்றே. (௧௦)

### வேறு.

அள்ளற் றண்புனல் பாய்மத க... ...காலி
கொள்ளப்பன் முழவொத் திரைகொள்கை ...

மள்ள மாக்க ளிரட்டு மருதநீள்
வெள்ள நீர்ப்பறை வீங்கொலி மாய்க்குமே. (கக)

நானமும் புழுகுநறுஞ் சந்தமுந்
தானவாரணக் கோடுந்தலைசிறந்
தானமின்மணியும்பொ னுமுய்த்தலால்
மானவாணிக மாக்களுமானுமே. (கஉ)

அணையுலாந்திரை யாற்றிலெலாமடுத்
துணையெலாமலர்ச் சோலையெலாமகன்
றிணையெலாநறுஞ் சேயிதழ்க்காவியம்
பணையெலாஞ்சென்று பாய்ந்ததுவெள்ளமே. (கங)

ஏறுபைம்புய லேழுங்கலங்கிய
வாறுதானுங் கலங்கியருட்புன
லூறுகங்கை யுறுங்குடிமன்னர்சொற்
றேறுநீரிற் றெளிந்ததுதண்புனல். (கச)

அயர்விலாவொலி யொன்றெழுத்தாலஃ
தயிருறுப்புயிர் மெய்யெனவோதல்போ
லியல்குளங்கிடங் கேரிதண்காலெனப்
பயிலுநாமம் படைத்தனவாரியே (கரு)

உழுநரோதையு மொள்விசிவார்கிணை
தெழிநரோதையு மிந்திரதெய்வதந்
தொழுநரோதையுந் தூநறவாய்மடுத்
தெழுநரோதையு மேழ்கடலோதையே. (கசு)

கயத்து வாய்ப்பக டோச்சிய காளையர்
நயத்த வேர்செல நல்குமி சைத்தமிழ்
பயக்கு மேகக் குழாத்திடை பண்ணமைத்
தியக்கர் பாடு மிசையமு தொக்குமே. (கஎ)

இலங்கு மள்ளர் பிறையிரும் பின்னிழல்
மலங்கு கொல்லென மாத ரலமரக்
கலங்கி நோக்கினர் கண்ணிழல் சேலென
விலங்கு காளையர் வீழ்ந்து நகுபவே. (கஅ)

எய்க்கும் பன்மொழி யீ[illegible]ழைப் பேர்முத
லா[illegible]வை யாக்குனர் போல்வயல்



வாய்க் குழீயபன் னுறுகள் வாங்கினர்
போய்க் கரும்புலத் தூன்றுவர் பொற்பவே. (ககூ)

பெறுமனைக் கன்வ ளர்ந்தோர் பெருந்தகை
யுறுமனைக் கணின் றோங்கிய மாதரின்
மறு புலத்திடை மன்னிய நாறெலாஞ்
சிறு பசுங்கிளி போனிறஞ் செய்தவே. (உ0)

கோலி நாட்டமுங் கொம்மை வதனமு
மேலு மாதரா யிண்டையு நீலமும்
போலி காட்டின வென்னப் புலம்புநீர்
வேலி வாய்க்களை வீசி யெறிபவே. (உக)

உள்ளு காம மெனக்கரு வுற்றுலா
யெள்ளு மூட லெனப்பொறித் தன்னலார்
கள்ள நீத்த கலவியிற் பைங்கதிர்
கொள்ள, மல்கியங் நாணிற் குனிந்தவே. (உஉ)

பொரும மூப்படைப் பிஞ்ஞகன் பூங்கழற்
குருகு சிந்தையி னோங்கி வளைந்தவை
பெருகு தொண்டர் திறத்தவன் பேரருட்
டிருவிளந் தெனச் செந்நெல் விளைந்தவே. (உங)

எழினல் லாரிய லாய்ந்தின கல்வியி
னெழுகு மின்சுவை யிற்பய னோங்குபு
கெழுதடம்பணை வாய்க்கிளர் செந்நெலின்
குழுவ னைத்துங் குயங்கொடு கொய்வரால். (உச)

அரியு நெல்லரி சும்மையிட் டாரழ
லெரி விழிப்ப கட்டேற்றின் மிதித்துவை
பரிய நீத்தநெற் பற்பல குன்றென
வுரிய பூமி யுவப்பக் குவிப்பரால். (உரு)

வழுவ கன்றும துரித்து மென்பொரு
டழுவி நின்றசொற் சால்கவி யீட்டம்போ
லழி விலாநெற் குவையை யலங்கொளி
பொழியு மாடத்திற் போந்து தொகுப்பரால். (உசு)

தவர்க்கும் வானப் பிரத்தர்க்குந் தன்னிலை
யவர்க்கும் வன்னியர்க் கும்மமு தூட்டலா
லெவர்க்கு மின்பந் தனித்தனி யேதருஞ்
சுவர்க்க மென்பது தொன்மனை மாலையே. (உஎ)

வேறு.

தளர்வரு மன்னஞ்செந்நீர் தனைத்தரத் தந்தவூன்கொண்
டிளகிய பொறியாலாவி யிசையவெவ் வுலகுமுண்டா
யளவறு மின்பந்துய்க்கு மளப்பருங் கடவுளாட்சி
வளவநா டிதற்குநேராய் வந்தநா டெந்நாடே. (௨௮)

முட்டுவ வறுமைநோயே முருக்குவ கழையேயாண்டுந்
தட்டுவ வயலோர்நாலே தாழ்வன நறையைம்பாலே
வெட்டுவ வினைக்கண்வாளே மெலிவசிற் றிடையேமாதர்
கட்டுவ கணவர்திண்டோள் கடியன நெடியபைங்கா. (௨௯)

வேர்த்தவெங் களிறுமாய வேலிசெய் சாலியெல்லாம்
வார்த்தகா ரெழிலிபெய்து வளர்ப்பதென் வெறுக்கையோடு
மார்த்தநான் மறைவல்லாள ரங்கையில் வீழ்ந்துதுன்பந்
தீர்த்தநீ ரோடும்பொன்னித் தீர்த்தநீர் வளர்க்குமாதோ. (௩0)

மடையெலா முத்தஞ்செம்பொன் வரம்பெலா முத்தம்பூகத்
திடையெலா முத்தஞ்செந்நெ லிடமெலா முத்தம்வில்வேள்
படையெலா முத்தஞ்சூல்வெண் பணிலங்க ளுயிர்த்தகால்வா
யடையெலா முத்தமோடை யகமெலாம் வனசமுத்தம். (௩௧)

பரம்பெலா நாறுசேறு பாலெலாநாரைதேரை
சரம்பெலா மோங்குகோங்கு கயமெலாங் கஞ்சமஞ்சம்
வரம்பெலாம் வாழைதாழை வயலெலாங் கன்னல்செந்நெல்
குரம்பெலா நாகம்பூகங் குறையெலாஞ் சாலைசோலை. (௩௨)

உள்ளவாங் குழக்கன்றுன்னி யொழுகுபாலுவட்ட வாயாற்
பள்ளவான் செந்நெல்மேய்ந்து பசுங்கதிர்ப்பாலும் பில்க
வெள்ளநீர் திரிந்துதீம்பால் வெள்ளலை யாழியென்னப்
புள்ளவாங் கவைக்கான் மேதிபுயலெனத் திரியும்பண்ணை (௩௩)

பாசிலைக் கமலப்பள்ளி பண்ணளிகுமுறச் செந்நெல்
வீசிளங் கவரிதூங்கமென்பசுந் தவளைபாணி
பேசிட வெடிகொள்வாளை பெருநடங் கவினக்கண்டு
காசினி வேந்தரென்னக் களியனங் களிக்குமோடை. (௩௪)

நிரையிதழ்க் கதவஞ்சாய கிறைமதுப்பிலிற்றும் வெண்டா
மரைமலர் மலர்ந்தவாவி வயின்வயினிருந்த தோற்றங்
குரைபுனற் பொன்னிவைப்பிற் குளிர்புனலாடிக்கொண்ட
புரைமறுக் கழுவுந்திங்கட் பூரணக்கடவுள் போலும். (௩௫)



பிரிவுநோ யகலக்கேழ்வர் பெருமணித் தடந்தேர்நீட்சி
யுரியதங் கற்பினல்லார்க் குணர்த்துறு பாணரேபோல்
விரிகதிர் மணித்தேர்தோன்ற மெல்லிதழ் பொதுளுஞ்செய்ய
வரிமலர்க் கமலந்தோறும் வண்டுபொண்மிழற்றும் பொய்கை. (௩௬)

தோடலர் சினைமுட்டாழைத் துறுமலர்த் துறைவாய்நீர்க்க
ளுடல்செய் நிழலையாவிப் பெடையென வயிர்த்துநோக்க
நீடல்செய் கயல்களோடி நிழலிலங்காமை யுன்னி
யூடலி னொளித்ததென்று வுருகுயாற் கருங்கால்வெண்புள். (௩௭)

வரியிலைப் பலவின்வீழ்ந்த மாண்சுளை வவ்விக்காலா
லரிமலர்ப் புனங்கொய்தூறிட் டளைபுகும லவன்காட்டும்
பெருவலித் தெவ்வராண்ட பேரெயி லுடைத்தகொற்றத்
திருவினை தடிந்துசெல்லு மிறைமகன் படைஞர்செய்கை. (௩௮)

நெடியதன் னிலையினல்கு நெறிபிறழ்ந் திடினும்வான்செய்
குடிமையார் தமதுசெய்கை குறைபவோ குடக்காய்த்தெங்கி
னெடிகனி முட்பலாவைக் கதலியை யுலையமோதித்
தடிதொறு மெருக்கள்செய்யுந் தன்னிலை திரிந்தபோதும். (௩௯)

வெள்ளெயிற் றுழாவேமேதி யொருத்தலை விலக்குமாலை
யுள்ளுகு கதிர்கால்முத்தங் கருவெனக் கொடுபோயுற்ற
தெள்ளொளிப் பசியகூட்டுத் தோலடிச் சிறகரன்ன
முள்ளரைக் கமலச்சேக்கை முகட்டடை கிடக்குமன்றே. (௪0)

உடைதிரைக் குடிஞைதோறு முறுசிறை விரித்து மீக்க
ணடைகயல் வேட்டுப்பல்கா லாழ்ந்தெழுசிரல்கள் காட்டு
மிடையிடை தருவவேண்டி யிழிந்தெழுந் தும்ப ரேறிக்
கொடைகுறித் துழலும்வேழக் கூத்தியராடற் றன்மை. (௪௧)

குருச்சுட ரிதழ்வண்டாடக் கொல்லழல் கிகர்த்தவிண்டை
நெருக்கிடை முகிழ்த்துநீல நிற்பனபருவக் கொல்ல
னிருப்பென வனங்களுளுமெய்கர வாளிபண்டை
யுருத்துரு சகற்றிநீட்டி யொண்கணை யமைத்தல்போலும். (௪௨)

மொய்ம்மலர் குடிஞைதோறு முளரியங்கொடியை யன்னார்
கொம்மைவெம் முலையிற்றேய்ந்த குங்குமநறுநீர் பாய்ந்து
வெம்மைசால் சுறவுபண்டை விரிபுலான் மாறலாலே
தம்மின்வே றென்னவையுற் றிரிவன சலதிப்பன்மீன். (௪௩)

தழைதரு நெல்லின்சும்மை சாரலென் றெண்ணியாண்டே
பிழைவழி யிழியவோர்க்கட் பெருவிறல் மள்ளர்பூட்டி

யுழைதொறு முழுங்காலஞ்சி யொல்கிமீண் டொருசார்தூங்கு
மழையென மருதநீழல் வைகுவ மேதியேறு. (சச)

காப்பது செய்யார்நல்குங் கடமையார் காத்தகாலு
மீர்ப்பது பூண்டோர்யாண்டு மெய்துப வன்றேமோட்டுப்
பாப்பணை யன்றிவேரிற் பழுபழம் வெடித்தவாய்புக்
காற்றுவ ஞிமிறுந்தேனு மள்ளிலைப் பலவுதோறும். (சரு)

பைந்துழாய் மௌலிமள்ளன் சுராசுரப் பகடுபூட்டி
மந்தர வலத்துப்பாந்தள் வடங்கொளி யாழிப்பண்ணை
முந்துற முயன்றுதாவா மொய்யுயி ரெவையுமுண்ணச்
சந்தத மமுதுநல்லூண் டருவன மருதவைப்பு. (சசு)

காசற நிவந்ததெங்கின் காவெலாங் ககனந்தோயப்
பாயொளிப் பசுங்காயெண்ணில் பரித்தன கண்ணனீந்த
தேசமு தொருநாளென்று தினந்தொறு மும்பருண்ண
வாசநீ ரமுதம்பெய்து வைத்ததண் குடங்கள்போலும். (சஎ)

அள்ளிலைப் பலவும்யாத்த புதுக்கல மனையசெங்காய்
வெள்ளகன் சினைசெய்யாலு மாவொடு மிடைந்துநீழல்
கொள்ளவா றியங்குஞ்சோலை குறைவிலா நிறைமைத்தேற
மொள்ளொளிப் பரிதிப்புத்தே ளூறுசுடர்க் குறையொன்றுண்டே. ()

புனிதனும் புனிதனல்கும் பொன்னியு மன்னும்வீட்டை
நனிதரு பதியுமுள்ள நாடரோ விதனைநண்ணார்
கனிதரப் பெற்றுந்திய காய்க்கவா வுறுதல்போலா
மனிதரோ ரறத்தைவேண்டி மற்றொரு நாட்டைச்சேறல். (சகூ)

கிணறெலாம் புனிதமந்தா கினிமலர்த் தடங்களெல்லாந்
துணர்செய்மா னதப்பேரோடை துருமமைந் தருவாளெல்லாங்
குணமலி சுரபிவைத்த குரமெலாந் தீர்த்தந்தூய
மணலெலா மிலிங்கமென்றால் வழுத்தலாந் தகைமைத்தன்றால். ()

ஆன்றநீர் ஞாலமீன்ற தகன்புனற் பொன்னிபொன்னி
யீன்றது திருவையன்ன தியலிசை நாடகங்கள்
மூன்றையு மீன்றதன்ன முதுக்குறை வீன்றவாய
தீன்றது வீட்டையெல்லா மீன்றது வளவன்செங்கோல். (ருக)

ஆயிரங் கலையிலொன்றே யகலிடத் தளிகடோறு
மேயின பூசைவேட்டு மீண்டியர் கனகமன்றக்
கோயிலா னுடையான்மேனி குலவலா லுலகில்யாண்டுப்
போயினு முத்திநல்கும் புண்ணிய நாடின்றேடே. (ருஉ)



மாவலா னுதிவிண்ணோர் வந்தடி பரவிவாயிற்
காவலான் கடைக்கணோக்கங் கண்ணிய கயிலையெம்மான்
பாவலான் விடுப்பக்கங்குல் பழுத்தபா னுளிலந்தோ
வேவலா னுகப்பெற்ற தெத்திரு நாடுமன்னே. (ருங)

ஒருமறைக் கிழவன்றன்னை யுலகுண்டா னிலருநாபித்
திருமல ரீன்றதன்றே தெய்வநூல் திவளுமார்பி
னருமறைக் கிழவரெண்ணி லவனையிப் பொன்னிநாடா
மொருமல ரீன்றதென்று லொக்குமோ வனையானுந்தி. (ருச)

பையழற் பகுவாய்ப்பாந்தட் படலையா னுலகமென்கோ
நெய்யொளிர் பவளக்கொண்டல் நீடுல கென்கோவோரெண்
கையர சுலகமென்கோ காவிரி நாட்டையீதென்
றையமற் றுரைத்ததேற்றேன் றறிஞர்த மதியின்மேற்றே. (ருரு)

கூற்றவளோடு மிந்நாட்டணிவளங் குறித்தோபொன்னி
யாற்றுநீர் விருப்போவேனையடியர் பத்திமையினாலோ
நாற்றியலென்ன நாதன்றளிதொறு நண்ணலாலே
சோற்றியலகம்ப மானதென்னுளஞ்சென்னி நாட்டில். (ருசு)

தமிழ்முனிதென்னாட் டென்னத்தக்க தென்னவனையீன்ற
கமழ்மலர்முனிவன்பூசைக் கடவுண்மாமுனிவன்காதி
லமிழ்துறு குடிலையோதி யருண்முனி மகவாய்த்தோன்றித்
தமிழ்வளம் படைத்தாலீதேதண்டமிழ் நாடுமாதோ. (ருஎ)

தீர்த்தகோ டிகள்போயாடுஞ் செழுந்திரைக் கங்கைதன்மேற்
கூர்த்தவல் வினைகடீரக் குளாதிரைப் பொன்னிவைப்பில்
வேர்த்தவெள்ளரிமேல் வேந்தன்மேவிய வாண்டிற்கும்பம்
பார்த்துவந்தாடு நாட்டைப்பகர்வ தென்பார்க்கப்பல்கால். (ருஅ)

ஏமமாதவத்தோர்முத்திக் கேணியாய்வேணிவேய்ந்த
சோமனார்க் கிருக்கையாகுஞ் சோழநா டெனுமாண்பூண்ட
வாமநல் லாரமாகி வயங்கிசை தருமீ ராறு
நாமநீர் வளஞ்சூழ்காழி நகர்வளம் பகரலுற்றேன் (ருகூ)

## திருநாட்டுச் சிறப்புமுற்றும்.

ஆக. திருவிருத்தம். கூஉ.

---

# திருநகரச்சிறப்பு.

அகலிடக்கொடிமணி கெழுமேனியம்புவியே
புகரில்பல்வளமல்கிய பொன்னிநாடனையாண்
முகமலர்ச்செழுங்கமல மேயம்மலர் முகத்தி
னகையுலாமணித்திலகமே காழிமாநகரம். (க)

தானமெண் ணிலவுழன் றருட்குரவனைச்சாரி
ஞானமுத்தி வீடெய்துமீ தருமறைவழக்கே
மோனவீடுமெவ்வீ டெளிதேயுற மொழியும்
ஞானதேசிக னிருக்கையுங் காழிமாநகரம். (உ)

சுற்றுமோரிரு கோளும் வந்தனைசெயத்துலையா
முற்றும் வல்வினை யிருட்கெட முதுக்குறை யடியார்
பெற்றநீற் றொளிவெண்ணிலா வயங்கிடப் பிறந்த
நற்றமிழ்க்கதி ரிமைப்பது காழிமா நகரம். (௩)

தளைப்புறத்தினை மறைப்பன கொழுநிரைத் தண்ணீர்
திளைப்புறத்தினை மறைப்பவெள் வளைக்குலஞ் செந்நெல்
விளைப்புறத்தினிற் கடுங்களை கட்டலா னீண்ட
களைப்புறத்தினை மறைப்பன வள்ளிதழ்க் கமலம். (௪)

காயும்வெங் கதக்களிறுகால் யாத்திடக் கரத்தால்
மாயிருந்தொடர் கொடுத்தென மள்ளர்கை யெறிந்த
சேயிருங் குவளையுங் கமலமுங்கொடு சிலைவேள்
பாயநொந்தன ருழத்தியர் விழிவலைப்படுவோர். (௫)

மடையுஞ் செம்புனல்வளா கமுமண் முதுகுடைக்கும்
படையுமென் கிளிநிறத்து நெட்டிலைவளைபசு நெற்
கிடையுமுட்டு நீர்வாலரிக்கற்றைகள் கிளைத்த
தொடையுமன்றி வெள்ளிடைபெறுவகல் வயற்சூழல். (௬)

உள்ளடங்கி நல்லுருக்கொளீ இயுரத் திறமாந்தாங்
கள்ளிடங் குழைந்தவாப்பெருந் தன்னிலைபிறழ்ந்து
கள்ளநோக்கிய ரெழுபருவந் தொறுங்காட்டு
மெள்ளநீர் முலைநிகர்த்தன கதிர்த்தநெல் லீட்டம். (௭)



கருவிபோழ்தரு நூழைபோங் கள்வனைக்காணு
வொருவனீர்த்திட வொலித்தலின் மகளிரார்த்தென்னத்
திருகளைப் புகுந்தேரையை நீரராபற்ற
வெருவியார்த் தலினார்த்தன விரிசிறை யன்னம். (அ)

வாலிதாமுளை யொருபுறம் வளர்செறு வொருசார்
பாலிநெல்லொரு சாரொரு சாரரிப்பறம்பு
சாலிவேலையோர் சாரிவை தலைமயக்குறலால்
வேலியாயிரம் விளையுளென்பது மிதன்மேற்றே. (௯)

குண்டலாதி பணிடுபணிதலைக்கொடுகுமூறி
மண்டலத்து நீருமிழ் கரும்புயலென வயவர்
திண்டடக்கை யாலிடு கழையுண்டு வாய்சிலைப்ப
வெண்டருஞ்சுவை மழைபெய்வதாலை யெந்திரங்கள். (க0)

குறுத்ததாழ் சினைவருக் கையுங்கோழரை யரம்பை
பொறுத்த பைங்கனியீட்டமும் பொறியரைத்தேமா
விறுத்த மென்கனிப் பெருக்குநல் லெருக்களாயீண்டிக்
கறுத்த சேதகத்தெழுவன நாற்றிளங் கானம். (கக)

எழுந்துலாங் கதிர்ப்புர விபுக்கயர் வுயிர்த்தேகச்
செழுந் தண்ணீழலைச் செய்வதோவியப்ப மஞ்சிறைத்தேன்
விழுந்த நாண்மலர்ப் பொதும்பரின்கோடு கள்விசைத்துக்
கொழுந்து தேய்த்தலிற் களங்கமுற்றிடு முயற்கூடு. (கஉ)

வளர்ந்தநாண் மலர்ப்பொதும்பரிற்சே யொளிவாய்ந்த
விளந்தளிர்க்குழாமெரிக் குழாங்கொல்லென விரங்கிக்
கிளர்ந்துகூவிய யாழிசைமிடற்றகோ கிலத்தைத்
தளர்ந்தநோய் கெடத்தைவருந்தவழ் நடைத்தென்றல். (க௩)

வீங்குதெண்டிரை முகடுகீண்டெழுகதிர் வேந்தை
யீங்கிருட்பகை துடைத் தனைவருதி யென்றெதிரே
பூங்குடத்தினீரேந் தினபோன்று முப்புடைக்காய்
தாங்கிநிற்பன நெட்டிலை விரிதலைத்தாழை. (க௪)

கூடல்வைகையோர் கவுணியமுனிவரன் குணத்தைப்
பாடல்கொண்டறி வுறுத்தியதென்று தண்பணிநீ
ராடல்செய்துளோர்க் கவனருட் குணத்தையக்கணத்தே
கூடல்செய் நதிக்கழுமல மந்நகர்குடிஞை. (க௫)

கல்லெனார்ப்பினற்கலினமான் றிரையினற் கனகச்
சில்லியந்தடந்தேர்ப் பெருங்கலத்தினற் சிறுகண்

வல்விலங்கெனுஞ் சுறவினால் மணியினாற் பசித்தோர்
செல்லறீர்த்த லாலமுதவாரிதியன தெருக்கள். (௧௬)

பாழிசாலிருங் கொடிநிரை பரிதிவானவன்பொன்
னாழிதட்பனமேலிடத் தன்னலார் புலப்பால்
வீழிருங்கலன் மிடைந்து தேர்வேத்திளங்குமர
ராழிதட்பன கீழிடத்த கன்மணிவீதி. (௧௭)

வேனில்வேளனார் முடிமணியுறைத்தயன் மிதித்த
கானிலாமொழியா ரடியலத்த கங்கையைப்
பானிலாமதிக்கெதிருமிழ் நறும் புனல்பரப்பும்
வானிலாவுமிழ் சந்திரகாந்த நீண்மாடம். (௧௮)

செறித்தமா மணியிழைத்த தெற்றிகடொறுஞ் செங்கே
ழெறித்தமென் சுடர்க்கற்றையந் தளிர்களையெட்டிக்
கறித்தபைங் குளககற்றிவன் றொடறக்கழுத்தா
னெறித்துநா நிமிர்த்தயில் வனனெட்டையொட்டகங்கள். (௧௯)

நேர்ச்சிறுண் மருங்கலம் வரநிரைவளைகறங்கக்
கார்ச்சி கண்டிபோல் மாதராடரங்க முங்கலைநூல்
தேர்ச்சிவல்லவ ரறிவினாற்செம் பொருடுணிந்த
சோர்ச்சிவல்லவர் கழகமும் பதமலிதொடைகள். (௨௦)

நலத்தமேலவர் நன்னரன்பொடு தமைநட்டார்
கலக்கமில்குணமாவ ரென்பதுமிவண்கண்டே
மிலக்குவெண் பளிக்குபரிகையயல் நின்றவெவையும்
புலப்படுத்தி நின்றோங்கின புயலுரம்பொறுத்தே. (௨௧)

நீட்டுகையொடுமெடு புகர்முகத்தொடு நெறிவெண்
கோட்டுவாரணப் போர்புரியமலையிற் குளைத்தே
தீட்டுகோலவாய் நிணம்பொதியலகவாய்ச்சிலைக்குஞ்
சூட்டுவாரணப் போர்புரி யிளையவர்துழனி. (௨௨)

கற்றை வெண்டிரைகலந்திடத் தோணியிற் கலந்த
வெற்றி வானவன் பொற்றொடிக் கின்னருள் விளக்குங்
கொற்றவன்றனு திருக்கையைப் பொன்னெடுங் குன்ற
முற்றல் போன்றன முழுமணிக்கொடிநுடங் கெயில்கள். (௨௩)

ஈறிலாமையால் விதிமுகங்காட்டலா லெவர்க்குங்
கூறொணாமை யாற்பலவணங்குலவலாற் புலவோ
ராறுமஞ்சு நன்மதியொடு முடித்தலா லளவாற்
றேறுநான்மறை நிகர்த்தனசெயிரில் பொன்னெயில்கள். (௨௪)



கலவியா லுகுத்தமுத்தமுங் கணவர்பா லடுத்த
புலவியா லெறியிழைகளும் பொன்னணி மறுகிற்
குலவு வேற்கணார் வண்டலில் விண்டிடக்குயின்ற
கலனு மல்லது குப்பையென் றுறுபொருள்காணா. (௨௫)

ஆளியன்னவ ரகலமேலாலை வில்லனங்கன்
வாளிபாய்ந்த புண்ணழல்கெட மணிவடம் புனைந்த
கேளியாலுற வழுத்தியுங் கிஞ்சுகச்செவ்வாய்க்
கோளிலா மருந்தூட்டியுந்தணிப்பர் கொம்பனையார் (௨௬)

வசனமென்கிளி வாயிதழ்கொவ்வை வெண்மடங்க
லசைமருங்குல் கண்ணனவை மான்முக மதிய
மிசையுமெல்லடி நளினமாய்ப்பகைத்த மெல்லியலார்
பசையுமன்பர்தா ரளியொடும் பகைப்பர்தம் பதத்தால். (௨௭)

வேறு.

நெட்டிலையயிற்க ணல்லார் நிலாமணி முன்றிலேறி
மட்டின்மே னிலைக்கண்ணாட வாங்கிய பொன்னம்பந்து
முட்டியைந் தருவினொண்கேழ் மொய்ம்மலரு குப்பமாரன்
புட்டில்வாய் மலர்களோடும் பூமழை பொழியும் வீதி. (௨௮)

சேலைவென் றடர்த்துநீண்ட சில்லரித்தடங்கண் மாதர்
வேலைவெள் ளாரம்வேய்ந்த வெம்முலை மதுகைமாந்த
ராலைவில் லனங்கன்வாளி யஞ்சின ரணைந்துநிற்ப
மாலை வெள்ளருவி தூங்குமலையரண் கடுக்குமன்றே. (௨௯)

அன்னமென் னடையார்செம்மாந் தணிந்தவெம் முலையிற்சாந்தம்
பொன்னிலந் திளைத்தலமந்தர் புரவிமான் குரத்தாலெற்றுண்
டென்னில வரைப்புஞ்சூழ்போ யெண்டிசை பரிக்கும்யானை
மன்னெடுங் கரடத்தாழ்ந்த வண்டின முயிர்க்குமாதோ. (௩௦)

அதிரொலி கலினமான்றே ரார்ப்பொலி யடுங்கையானை
முதிரொலி கறங்குவள்வார் முரசொலி யரசர்கோயிற்
சதிரொலி யனைத்துமீண்டித் தளைசெவி டெறிவதொன்றோ
பொதிரெறிந் திடுமொலந்தண் புயல்படு ககனகூடம். (௩௧)

நடையறிகின்றதேர்ச்சித் துணைவலா நயவாதுள்ளக்
கடையலா நயத்தவெந்தைக் கடுத்தன காகப்பந்த
ரடைவுறக் கவிப்பப்பாக னங்குசநிமிரவம்பொரா…
புடைமணிக் கவ்வைபோற்பப்பு… …யயங்கும்யானை (௩௨)

நாகிளஞ் சுரும்ப்ர்பாடக் குவளையுங் குழுமிநான்ற
பாகவள்ளையுஞ் சேதாம்பலலரியும் பனிவெண்முல்லைச்
சேகருமுகையுங் காட்டிச் சிறைப்புனற் பழனத்தன்றிப்
பூகமெல் முளரிவைகும் புயறொடு குடுமிமாடம். (௩௩)

மறங்கிளர் வேற்கணாரு மைந்தருமாடத்தும்ப
ருறங்குழி யுறங்காவிற்கையுருவிலி யானைமீக்கொண்
டிறங்கிவெண்கோல் கொண்டேற்றி யின்பரூக் காமப்பைங்கூழ்
திறம்பெற வளர்ப்பிப்பான்போற் றிங்களங்கதிர் பாய்ந்தன்றே. (௩௪)

தன்ணளி நூல்களாகத் தாழ்மொழி யலர்கள் சேர்த்திக்
கண்ணளி யாசைமாலை கைபுனைந்திளையர் சூட்டப்
பெண்ணலங் கனியநின்றார் பெருவளைக்கையாற் கட்டி
விண்ணமுது வர்ப்பச்செவ்வாய் விருந்தமுதூட்டுவார்கள். (௩௫)

கன்னலின் புகையுமட்டிற் காரகிற் புகையுநல்லார்
பின்னலின் புகையுமல்கிப் பகலிருள் பிறக்கவில்வே
ளன்னிலை வாளியெய்த லருமையே யவிவேட்டன்றோ
வின்னவென் றுணரார் விண்ணோர்நோக்கின் றாரிமைப்பிலாராய். ()

பருதிவாய் பற்றலாணி பண்வழி திருத்திச்செவ்வாய்ச்
சுருதியாழ் நரம்போடொன்றத் ஆக்கிமேல் விரனடாத்திக்
குருதிவே லனையகண்ணார் பாடலிற் குமரரன்னார்
கருதியுள் ளுடைவதொன்றோ கவின்றதூண் டளிர்க்குமென்றால். ()

குணங்கிளர் சுதையின்மாணக் கோட்டிய கிளியுமாதர்
மணங்கிளர் கரத்துத்தீஞ்சொல் மழலைவாய்க் கிளியுஞ்சோதிக்
கணங்கிளர் பளிக்குத்தூணிற் காண்பன கலவிசான்ற
நுணங்கிய கேழ்வியார் முன்னுண்ணறி வில்லார்போலும். (௩௮)

புட்பிணியளகக் காட்டிற் புணர்முலைக்களிற்றின் மென்சொற்
பட்பிணிவலை யினம்பொற்ப கட்டெழிலல்குற்றேரி
னட்பினிற் படுத்திப்போர்செய் தாடவர்நனவைப் போழ்ந்த
கட்படைக் கணிகைமாதர் கற்பகப்பொலன் கொம்பன்னார். (௩௯)

வான்படு மயிலஞ்சாயல் மணிநகை முறுவல்கோட்டித்
தேன்படு கிளவிதன்னாற் சிலைத்துமீ தலத்துநின்று
கூன்படு புருவத்தூண்டிற் கூர்விழிமுள்ளிலாசை
யூன்படுத் திளைஞருள்ள மீன்படுத் தூற்றங்கொள்வார். (௪௦)

பொன்னலா[illegible]மவல்லி புறந்தரப்பாணியொற்றிக்
கன்னல்மென் றனைய[illegible]ல்லார்காம கீதங்கள்பாடித்



தென்னிளங் காளையன்னார் சிந்தையைப் பரிசில்வாங்கிப்
பன்னில வரைப்பும் பெட்பப் பட்டிமைவிளைப்பர் மாதோ. (௪௧)

எழுந்தளந் தெடுத்தபாட லெழுவகை நரம்பினல்யா
ழொழுங்குற மாதர்பாட வுணர்ந்ததோவிய மொன்றேயோ
வழுங்கவர் வரிந்தவுள்ளத் தறவர்வேட்டிரங்கப் பைம்புற்
கொழுந்தையுந் தின்னாதன்றோ கோவிளம் பசலைக்கன்று. (௪௨)

தருமமுந் தருமந்தாங்குந் தானமுந் தானமோங்குங்
கருமமுங் கருமங்காக்குங் கருணையுங் கருணைநீரா
வருமமும் பலன்களாக வைகலும் பழுத்ததெய்வத்
தருமமே யனையாரின்னதொன்னகர் மேழிச்செல்வர். (௪௩)

ஆடியற் பாவைபோல வகன்றுழி யகலாதென்று
நீடிய சீர்த்திப்பாவை நிலவிய செஞ்சொன்மாலை
பாடிய பனுவல்மாக்கள் பருவர லுழந்துபன்னாள்
வாடிய வறுமைநோயை வறுமையாய்ச் செய்யவல்லார். (௪௪)

பிச்சிநாண் மலர்செய்வேணிப் பிஞ்ஞக னடியார்க்காணி
னுச்சிநீ ரவலிற்பாய்ந்தாங் குழுவலன் போடுந்தாழா
வெச்சமி லமுதந்தெண்ணீர்க் கிணற்றிடை யெழப்பெற்றார்போ
லிச்சையோர்ந் தளிமிக்கூறிக் குறித்தவா றிழைத்தல்செய்வார். ()

முழுமதி சிதறியன்ன புளிதயிர் வெருகின்கண்போ
லெழுதருங் குய்யமுதவின் புறுகருணைவாச
மொழுகு முக்கனி நெய்வாரியூட்டியாளுடையானன்பர்
கெழுமன மகிழ்ச்சிதூங்கக் கிழமை பூண்டேவல்செய்வார். (௪௬)

மலைதருவனவு நீண்டமலையெனச் சுலவுமாழி
யலைதருவ்னவுந்தூ வெள்ளலை புரள்கலுழிக்கானத்
தலைதருவனவுஞ் சூழ்தண்டலை பல கிளைத்தவேலி
நிலைதருவன்வுமுண்டு நிவந்தபீடிகைமாடங்கள். (௪௭)

பதித்தவெண் பளிக்குவேதிப் பவளக்காணிறுவிப்பைங் கேழ்
கதிர்த்தகல் விடங்கமூட்டிக் கண்ணகல் விண்ணோடேய்ப்பக்
மதித்துணியனைய வொள்வாள்வயிரமுந் துகிரும் பொன்னுங்
கொதித்தெரிகலனுமுத்துங் குவிந்தன பயின்றகூடம். (௪௮)

நனந்தலை யுலகத்துள்ளார் நல்குர விரவுமோவாத்
தினந்தரு மிரவுஞ்சீய்க்குஞ் செம்பொனா வனத்துச்செல்வர்
கனந்தருங் கண்டன்காழிக் கடவுள்மூ வுருவானேனென்
றினந்தருந் தோழன்வெவ்வே றிசையந்தன வியந்தார்மாதோ. (௪௯)

உரைசெயா ரியமேமுன்று மொன்பதிற் றிரண்டுகூற்று
வரைபடா வொலியாலார்க்கும் புட்பொழில் மானுங்கூலம்
புரைபடா துறுபல்வேறு பொருள்களா லுலகமுண்ட
விரைசெயுந் துளபப்பைந்தார் மேலவ னுதரம்போன்ற. (௫௰)

வண்டல மருமென்கூந்தன் மாணிழை மகளிர்செம்பொற்
குண்டலந் தெருவில்வீசக் கோழிமேல் வீழ்ந்தமுன்றிற்
கண்டடக் கவைக்கான்மேதி காலுறைத் தழுங்குமென்றூல்
மண்டலத் திவர்தஞ்செல்வ வளனெடுத் துரைக்கற்பாற்றே. (௫௧)

உறைகழித் தொளிறுவாளா லொன்னலார் மடவார்மைக்கட்
கறைகழித் துயர்திண்டோளிற் களிறுவீழ் ஞாட்பிற்பட்ட
நிறைபடச் சுவட்டின்மாதர் முகிழ்விர லுகிரினேர்ந்த
பிறைகழிப் பில்லாவேந்தர் பெருவிற லாளியன்னார். (௫௨)

வானிறப் படைகள்போழு மணிநிறத் தணங்கனார்கள்
வேனிறத் தாழத்தொங்கல் விளரியஞ் சுரும்பர்பாடக்
கோனிறக் கணையிற்றூண்டிக் கோவிளங் குமரர்வாய்ந்த
தூனிறக் கவரிநெற்றித் துரகத்தே றூர்தல்செய்வார். (௫௩)

இருணக்க பவளக்காலின் முழுமதி யிருத்தியன்ன
வருணத்தன் குடைக்கீழ்மன்னர் மல்லடுபோருங்கூன் கோட்
டருணத்தின் போருங்காண் பாரமலையான் மலிந்ததம்மா
கருணைக்குன்றனையான் காழிக்கடிமணி மாடவீதி. (௫௪)

சூலம்வாள் கதைகணிச் சிசுரிகைசக்கரங்கள் பிண்டி
பாலநீள் குலிசமேறு பலகைகப்பண முலக்கை
கோலெழுஞாங்கர்வன் றேல்கொடுமர மலிந்தகூடஞ்
சேவலாந் தடங்கட்கன்னித் திருமகள் கூடம்போலும். (௫௫)

புனன்மடுத் தெழுகொண்மூவைப் பொங்குளை யரிமானேறு
சினமடுத் தாரத்தாவென்னத் தீவிழிகாலச்சீறிக்
கனன்மடுத் தழலும்வைவேற் காளையர்கைவாளோச்ச
வினமடுத் தாறச்சோனையென மதம்பொழிவயானை (௫௬)

பொன்பொலி வடிவுகாணப் பொலிதலான் மதனின்மிக்கா
ரீன்பொருளறிந்து நாவொன்றியைந்தனந் தனிலு மிக்கா
ரொன்பது நிதிக்குமேலா யுயர்ந்துபிங்கலனின் மிக்கா
ரன்பினிற் கவடிலாமை யளித்தலாற்றருவின் மிக்கார். (௫௭)

இலையயிற் குமரனன்னாரியங்கு தண்டலைகளெங்குந்
தலைவிரி குழையத்தேமாத்தண்மலருகுப்ப் மாரன்



கொலைமுகப் கழிக்காற்றூர் குளிர்நிழல் புகல்புக்காங்குந்
துலைவறு காமத்தீய்க்குத் துப்புறை பொழிதல்பொலும் (௫௮)

இருமணித் தடக்கைநல்லா ரிழைத்திடு வண்டல்வீட்டி
லுருள்மணி முத்தம்வெண்சோ றூமைமார் செங்கைநீண்டக்
குருமணி யாதல்கண்டு குறுநகை விளைத்துப்பண்டைப்
பருமணி முத்தமாக விளநிலா விரிக்கும்பாங்கர். (௫௯)

பெறலருங் கொடிமென்முல்லை பிலகரும் பீன்றதென்று
நறைவிரி யலங்கலோதி நங்கையர் வதுவையாற்றுஞ்
சிறுகண்ணூர் முழவமார்த்த வின்னொலி செவியின்மாந்தி
யறிமுகி லென்னமஞ்ஞை யாலுவ சோலைதோறும். (௬௰)

அறுசுவை கனிந்தவிண்ணூட் டமிழ்தினு மியன்றுமுல்லைக்
குறுமுகை கவற்றுமூரற் குழைவுறு முகமன்கூற
மறுவறு மனுக்களார்ந்த வாயினின் மறைதேர்வாழ்க்கை
யுறுவனா யருத்திவெவ்வே றுக்கலோ டுண்பரன்றே. (௬௧)

மந்திரத் திறலார்கால மும்மையும் வரம்புகண்டா
ரெந்திரப் பவத்தைவேர்கீண் டெறிபடை யன்னநாவார்
சுந்தர முளரிமாலைத் தொழுதகு தெய்வமன்று
ரந்தரத்தயனையொப்பா ரணிநக ரந்தணாளர். (௬௨)

மறைகளு மங்கமாறு மறுவில்மூ வறுபுராணத்
துறைகளு மிருதிநூலுந் துளக்கற விளக்கிச்சூழ்ந்த
விறைகொடுத் தெதிர்விஞக்கொண் டெவற்றினுந் தோய்ந்துந்தோயா
நிறைபரம் பொருண்மேலுள்ள நிறுவிய வறிவின்மிக்கார். (௬௩)

கிளந்தறி யாதவேதக் கிடையிடைப் பதங்கள்கோவை
யளந்தபே ரோதைப்பொம்ம லண்டகோ ளகையுமுட்ட
வளந்துநான் முகத்துத்தங்கள் பெருந்தகை மகிழவோது
மிளந்துணை மறைச்சிறார்க ளீட்டமெண் ணிலவுமீண்டே. (௬௪)

அருள்விளை புலத்திற்காம மாதிய பூடுபூத்த
விருவினை களைக்கட்டார்வத் தெயிலுடுத் துயிர்க்கூ றஞ்சுந்
திருமணி யிழைத்துஞானச் சேயிழை யொடுகுலாய
கருணையங் கோயில்வைகுங் கடவுளர் மடங்களெங்கும். (௬௫)

வடநிழல் விரித்தநாலேழ் மருத்துநூ லுணைத்தவாறே
சடவுள்கண் மணியாலந்தக் கரத்துமந் திரத்தால்வெண்ணீற்
றடல்கெழு மருந்தால்யார்க்கும் பிறவிநோ யறுக்குஞ்சைவத்
தொடர்கொள்வே தியர்தாமாயுள் வேதிய ராயதொல்லோர். (௬௬)

இருவிரல் கூட்டிநால்வர்க் கிசைத்தமெய்ப் பொருளையீதென்
றொருவிரல் காட்டிப்பாடு மொருவனைப் பயந்தோன்சுற்றத்
தருமறை பயின்றசென்று முனிவரராற் றல்சான்ற
தருமநூன் மருமச்செல்வர் தனிமட மாலையெங்கும். (௬௭)

பைந்தமிழ்ப் பாவைபாடும் பன்மணி யாங்குலைக்
கந்தர னடியார்காணி காசினித் திலகம்யோக
மந்திரர் முத்திவைப்பு மறைவளர் தெய்வப்பூமி
யந்தணர்க் குறையுள் சீர்த்தி யணங்கினுக் கிணங்குபீடம். (௬௮)

உறக்கமென் பனநல்யோக முணர்வுசால் புறவான்கண்கள்
திறப்பன நிறைமெய்ஞ்ஞானஞ் செப்புவ மனுக்களிவ்வூர்ப்
புறத்துளார் செயலுமெம்மான் பூசனை யெனவீதேபோற்
றுறக்கநாட் டகத்துமோரூர் தொல்லைவை யகத்துமின்றே. (௬௯)

வேறு.

விண்கொண்ட காவலவன் வேணுவுரு வெய்திப்
பண்கொண் டடித்துணை பழிச்சவருள் வீசும்
வண்கொண்ட லன்னவன் மணிச்சிக ரத்தான்
தண்கொண்ட பேரொளி தருங்கைலை போலும். (௭௦)

நாதித்த வெள்ளருவி நன்மலை முகட்டி
லாதித்த மண்டலம மைந்தொளிர்வ தென்று
மீதிற் கிளர்ந்திருள் விழுங்கியொளி காலுஞ்
சோதித்த சும்பொடுது ளங்குறுவி மானம். (௭௧)

நீரேறு மன்பர்பிழை நேரினு மவர்க்கே
சீரேறு நன்றிபல செய்கட னெனக்கென்
றோரேறு வேணியன சைத்தகொடி போலும்
பேரே றிலங்குகொடி பொங்குமணி முன்றில். (௭௨)

சேல்பாய் வயற்கழும லச்சிவனை வேதன்
சால்பா யருச்சனைசெய் தன்மைய துணர்ந்து
மால்வாய் நெடுந்திசைவ ழாதுகடை நின்ற
நால்வேத மேயனைய நற்கோபு ரங்கள். (௭௩)

மின்றோய் நெடுஞ்சிகரி விண்ணகடுதோயத்
தன்றே சுலாவுமதி சாளரவழிக்கட்
சென்றே குறைந்தமை தெரிந்து புடைசெல்வே
னென்றே விரண்டயனமெய்தின னவ்வெய்யோன். (௭௪)



நன்றாய கோளுமுடு நாளுமணிமாலை
யென்றாய விளங்கவதி னேறுகொடியின்கால்
கன்றாமலர்த் தருவனக் காமவல்லி
குன்றாதனைத்த கொழுகொம்பரென நின்ற. (௭௫)

மைநாடு கொண்டல்கள் வளைந்துருவ மூடிப்
பொன்னாடு கஞ்சுக புராணனை நிகர்ப்பத்
தன்னாத னெத்தகைய னத்தகைய தானை
யென்று விரும்புவி யிசைப்பதை யிசைக்கும். (௭௬)

மையார் வினைப்பவம் வாராதகலுகைக்கோ
பொய்தீரு ஞானவொளி பொங்கியெழுகைக்கோ
மெய்யான தொண்டர்கள் விரும்பிவருகைக்கோ
வெய்யாதலங் குவவிலங்குறு வசங்கள். (௭௭)

வேறு.

ஐம்பொறி மிசையலூட்டு மமுதுவாலறிவன்சொன்ன
செம்பொரு ளாகமங்கடெளித்த தெள்ளமுது மூவர்
தம்புலத் தமைத்தஞானத் தண்டமிழமுது மிக்கா
ரிம்பரிற் புணர்த்தசெஞ்சொ லமுதுமே யெவ்விடத்தும் (௭௮)
விடுபொருள் விடுத்துமேற்கொள் வினாவெதிர்மறுத்தருஞ் செவ்வே
தொடுபொரு ளிலக்கியங்க டொகைவகை விரித்துந்தொன்னூற்
படுபொருள் வரம்புகண்டார் பனுவலந்தமிழைக் காழி
வடுகனே மகிழ்ந்தாலேனை வாறுளோ ரென்படாரே. (௭௯)

வேதநாவலர்கள் வாயும்வீதியுந்தழைவ வாசி
பொதரு நிதியுமன்னர் புயங்களுந்தருமறங்கள்
கோதையர் விழியும்வீடுங்குவ வுறுமயில்கள் ஞானப்
போதகர் கையுஞ்செய்யும் பொலிவன பலவண்டானம். (௮௦)

தன்மைநீர்க் கிடங்குமன்ன சாலையும்பசலங்கள்
புன்மைதீ ரியலும்பைம் பூம்பொங்கரு மறுபதங்கள்
நன்மறு கிடமும்யாறு நவின்மத வாரணங்கள்
பன்மையோர் தொழிலுங்காவும் பலவிரதங்கண் மாதோ. (௮௧)

மாதர்தம் மருங்குமம்பொன் மாடமும்விலக்குமின்னல்
கோதையர் கையுமன்னர் கோன்மையு மளிக்குமையஞ்
சீதமென் பொழிலுமுத்தீச் செயல்களுஞ் சிறப்பவாவி
வீதியி னயலுஞ்செந்நெல் வேலியும்பொலிவ வேழம். (௮௨)

விளரிவண் டொலியுஞ்சூழும் வேலியுஞ்சந்தக்கானம்
வளைகளும் பிடத்துமேலோர் மனத்தினுங் கொழிப்பவார

நளிபொழிலிடத்து மந்தணதிதொறும் வாசவண்ட
விளநலார் குழலுமில்லு மிலங்குகா சறையுமாதோ. (௮௩)

காசிற்ற புலமைசான்ற காப்பியக்கலைகளெல்லாம்
வாசித்து மிழுக்கொன்றில்லா மாசறுகாட்சியாரை
நேசித்துங் காழிமேய நிருமலக்கொழுந்தின்றாளைப்
பூசித்தும் பொழுதுபோமாற் பொன்னகர் மாக்கட்கெல்லாம். (௮௪)

எண்ணருங் காதையெல்லா மிலக்கண நெறியாற்பாடல்
பண்ணவுந் தருமமாதிப் பயக்குறா வியற்கையாய்ந்து
நண்ணவுஞ் சுவையாறெள்ளி நலச்சுவை பிறந்தகேள்வி
யுண்ணவும் போவதல்லா லொல்லையும் போகாவீணில். (௮௫)

சசிமுளை கிடந்தவேணிச்சண்பை நாயகற்குவேண்டிக்
கசிவுடைக் தொண்டராற்றும் விழவையார் கணிக்கற்பாலார்
பசியகட் பேழ்வாய்மோட்டுப் பறந்தலைக்கருத்தாட்பேய்கள்
நிசியிடைத் துயில்யாமத்து நிரைமுழவுறங்கா மூதூர். (௮௬)

பாடுவார் பல்லோரென்னிற் பழிபடா நிதியாலின்பங்
கூடுவா ரவரிற்பல்லோர் குழகனதடிக்கீ ழன்பு
சூடுவார் பல்லோரென்றாற் றுவருறத் துறந்துமுத்தி
வீடுகாண் குறுவாரின்ன வியனகர் வளமைகாண்பார் (௮௭)

பொறிவழிப் புலன்கள்செல்லும் புரையொடுபசுபோதங்க
ளறவெறிந்தடுமுப்பாழை யகன்றருள் வழியேயுள்ளம்
பிறிவறக் கலந்தார்க்கன்றிப் பெருநகரிதன்மாண்பெல்லாஞ்
சிறிதுண ரறிஞர்வாயாற் செப்பவும் பெறுமோதேர்ந்து. (௮௮)

பூழிப்பிலோ ரெழுத்தான்மெய் நூற்பரப்பெலாம் பரமன்காதி
லொழுக்கிய வொருவன்றோன்றி யுவமைதீர் கவிகளாக்கி
வழுக்கில் பல்லெழுத்தாற்கூறும் வளநகரியல்பையின்றோ
ரெழுத்தையு முணரமாட்டே னென்னெடுத் தியம்புமாறே. (௮௯)

காமரஞ் சுரும்பர்பாடக் கடிமுகை யவிழ்ந்ததண்ணந்
தாமரைக் கிழத்திவாழுந் தனிநகர் வளனீதாகப்
பூமகட் கணியாமிவ்வூர்ப் புண்ணியக் காதைவெவ்வே
றுமவை பலவென்றாலு மறைகுவா மறிந்தவாறே. (௯0)

## திருநகரச்சிறப்பு முற்றும்.

ஆக. திருவிருத்தம். ௧௮௨.

---

# புராணவரலாறு.

மழைவாய்ந் தன்ன கருமிடற்றுவர தன்காழிமான் மியத்தைக்
குழைவா யன்பர்தமக்குரைப்பான் குறுகுஞ்சூத முனியென்பான்
கழைவாய்வழி நீஞ்சுவைமொழியாற் கரையமுனிவர் கணங்கொண்ட
தழைவாய்குரம்பைத் தவப்பள்ளிதன்னை யறிந்தவா றுரைப்பாம். (௧)

### வேறு.

தெய்வவெண்டிரைக் கங்கையங் கரையது சிறந்தோர்
மெய் வளர்தரப் பொலிவது வேதநூலாதி
சைவநூல்களா னிகழ்வது மாயையின் றனைய
ரைவருஞ்செருக் கொழிவது நைமிசாரணியம். (௨)

என்றவல்வினை யிருளொழிந் தெமக்குளத் தூய்மை
தோன்றவோருழை தருகென முனிவரர் தொழலு
மீன்றநான் முகனுருட்டுபுவிடுத்த வின்றருப்பை
யான்றவாழி சென்றிறுத்தது நைமி சாரணியம். (௩)

மெய்ய ராரணக்கிழவர் வெண்ணீற் றொளிமேனி
யையர்தன் னெளியுளத்த ராணவத்தை வேரரிந்த
செய்யமா தவத்திறலர் முக்குற்ற முந்தீர்ந்த
துய்ய ரெண்ணிலார் பிறங்குவதவ் வனச்சூழல். (௪)

குணத்தின் மிக்கவ ரோம்புமுத்தீவளர் குண்டத்
தணக்கு வாய்ந்தபல் சமித்துகண்மனு முறையூட்டி
யணக்கும் வெஞ்சுடர்க் கின்றுணையாய் வளியாட்ட
மணப்பொதும் பரிற்சிறை விரித்தாடுவ மஞ்ஞை. (௫)

புதையவிண் கவித்தோங்கு யர்பொழி லிருள்போக்கித்
ததையுமெல் லிணர்த்தீப கத்தருச் சுடர்தாங்க
விதையநல்ல வர்க்கேந்திய சிரகமென் றிலையால்
அதையுமென் சினைநீட்டு வபுதுக் கனிச்சும்மை. (௬)

மலக்குறும் பறவெறிந்த நான்மறை பயில்வாழ்க்கை
யலக்கணில் லவரிமிழ் திரைக்கங்கை நீராடி
நலத்ததொல் கடனிரப்புபுஞாங்கரி னின்று
புலர்த்தும் வேணியைக் காட்டுவபூங் கனிக்கொன்றை. (௭)

எல்லொளித் தழலிறை யவனெழு வகைநாவா
லல்லறீர் மகப்பொரு ளுகர்ந்தரும் புகையீட்ட

மெல்லைநீத்த நாக்கொடு புகையீட்டுத லேய்க்குஞ்
செல்வினங் கிடந்துறங்கு தண்குழை நறுந்தேமா. (௮)

போதுகொள்பவர் சமித்தொடு செல்பவர் புனைநீர்
வாதுகொள்பவர் நல்லருட்கு ரவர்தாள் வனசத்
தாதுகொள்பவர் மனோலயவின் பசாகரமேற்
காதுகொள்பவர் கணிப்பிலர் தாபத கணங்கள். (௯)

நாமநூல் முதுவோர் தவப்பள்ளியின் ஞாங்கர்
காமநூறெரிவிட ரெனக்கடுவெ னின்றிரங்க
வேமவைம் பொறியவித் துளவிரதரி னீண்டைக்
காமதன் றெனவகலுவ கருவிரன் மந்தி. (௧௦)

புந்திவல்லவர் மகவினைப் பொடிகளைக் கரத்தாற்
சிந்திமெய் வெளிறடைந்த வெஞ்சினக் கடகளிற்றை
யிந்திரன் றனாதுயரிய மருப்புடை யிமையாத்.
தந்தியாங் கொலென்றயிர்ப்பன தளர்நடைப் பிடிகள். (௧௧)

முன்னமெம் முருவடைந்துளோன் காணரு முளரி
யன்னசேவடி யிவையெனப் புல்லுறைத் தழுங்கா
தின்னமாதவர் மெல்லடியி யங்கலா றெல்லாங்
கொன்னவின்ற வெங்கோட்டினால கழ்வன கோலம். (௧௨)

கொம்மைச்சூதத் திற்கதலியிற் பலவினிற் குழைந்த
வம்மைத்தீங் கனிச்சாற்றினா லாணவ மாதி
மும்மைப் பங்கமு மகன்றுளாரேனுமிம் மூன்று
செம்மைப்பங்க மீண்டகலு மாறறிந்தி லாதிரிவார். (௧௩)

ஏகமாமுனி சுகமுக மெண்ணிலா மறையும்
யோகநூல்களும் விரிந்தது கடுப்பநல் லுரவோர்
யாகசாலையின் மருங்கெலா மெழுதொணாக் கிளவி
மோகநீத்தநூல் விரிப்பன பலசுக முகங்கள். (௧௪)

நன்றுசெய்ததோ ருயிரெனி லக்குல நன்மை
யென்றுமே செயுமென்ப தீண்டறிந் தனமெரிகட்
கன்றுவெஞ் சினவுழுவையும் புயங்கமுங் கனக
மன்றுண்முன்னுளோர் பணிதலைக்கொள்ளு மவ்வனத்துள். (௧௫)

புறங்கடந்தவற் கடிமைசால கற்றுகில் புனைவார்
தரங்கநீர் படிந்தெழுந் துழித்தாங்கும் வற்கலையை
மரந்தெரிந்து கூர்நகம் பொதுத்துரித்து வல்லியங்க
ளிரங்கிநல்க நின்றீர்ங்கலை யேந்துவ கவிகள். (௧௬)



ஆசிலிவ்வனத் தருந்தவர்பெருமையை யளந்து
பேசில்வாளரா விறைவனு மிற்றெனப்பெறுமே
பாசிலைத்துழாய் முகிலுநேடரிய பொற்பதத்தை
யேசிலன்பு நூல்பிணித்துளத்திருத்தின ரென்றால் (௧௭)

புலனடக்குனர் புவிக்கெலாந்தண்ணளிப் பூப்பார்
நலன்விளைந்த நன்னெறியொழுக்கத்தினர் நாதத்
தலமகன்ற சின்மயப்பெருவெளியினிற் சலியா
துலவுநோக்கின ருறங்கலாவுறக்கமிக் குடையார். (௧௮)

கூறிவித்தையைத் திரிகோதமன் குமுதன்
மாறில் கண்ணுவன் வாமதேவன் சுகன்வசிட்டன்
வேறில் காசிபன் சவுனகனாதியர்மேனா
ளீறில் சத்திரவேள்வியொன் றிழைக்கு மவ்வெல்லை. (௧௯)

இயலிலங் குபன்மறைகளுங் கலைமுதலெவையு
மயலகன்றுள வாதராயண மகோததியிற்
பயனுகர்ந் துயிர்ப்பயிர்க்கெலா மின்னருள்பணிக்கும்
புயலையேநிகர் சூதமாமுனிவரன் போந்தான். (௨௦)

அடைந்தவண்ணலை யாயிடை யந்தணரடியே
மிடைந்த வெவ்விடாய்க்காய்ந்து நூற்கடலெலா மீண்டே
கடைந்துதெள்ளமுதளிக்கு மெங்கருணையம் பொருப்பே
மிடைந்த செல்வமே யென்றனரெதிர்கொடு விருப்பால். (௨௧)

அருக்கி யாதிதந்தாய் மணிப்பீட மிட்டதன்மே
லிருத்தி யெம்பிரானீண்டெழுந் தருளினையென்னா
விருத்த வேனில்வாய்க் கருவிமாமழைத்துளி வீசக்
குருத்த செந்நெலிற் களித்தனரோருரை கொடுத்தார். (௨௨)

மறுவில் மூவறுபுராணமும் வளரிதிகாசத்
திறனுமோதினை பல தருமாதியுந் தெரித்தா
யுறுதிவாய்ந்திலா வெமக்கடிகேண்மனத் துண்மை
பெறவழங்கிய பற்பல தலங்களும்பேசின். (௨௩)

வேறு.

உடனுறை மடவார் யாருமோம்பின ரின்றிவாடு
மடவரல் மகப்பேறெய்த வல்விழிமூடி மற்றை
யிடவிழி நோக்கிப்போற்றி யெந்தைதாயான தேனை
யடல் வினையறுப்பதாங்கொல் லதுசிராப்பள்ளிக் குன்றம். (௨௪)

நொய்யகாற் சிலம்பிமாட்டு நூலிழைப்படலஞ்சாய்த்த
வெய்யகால் யானைமாட்டு மொருநிலைவெளிப்பட்டோங்கு

மையநீர்த் திரளாயென்றும மர்ந்தவானைக்காவென்று
பொய்யிலாத் திருநீறிட்ட புரிசைசூழ் கிடந்ததொன்றே. (உரு)

மெய்யாறு முகத்தோன்றந்தை மேதகுவடிவும் வாழ்வுங்
கையாறு பிரம்புங்கோயில் காவலுஞ்சுடிகைப் பேறு
மூய்யாறு பெறுவானந்தி யொருவன்முன் பணிந்ததண்டா
லையாறு மாறுநீங்கு மருளாறுந் தருமையாறு. (உசு)

காரகன் மிடற்றுமுக்கட் கனிசெவிகொடுத்துத் தாழத்
தாரகப் பொருண்மையோதுஞ் சண்முகத்தொருவன்கோட்டம்
பாரகப் பரிக்குஞானப் பண்ணவர்துதைந்து போற்று
மேரக மென்னுந்தெய்வ வின்பவீ டளிப்பதொன்றே. (உஎ)

குடம்பொலி முனிக்குமன்றற் கோலமுங்காட்டி யெம்மா
னிடம்படு கோவணங்கொண் டியலமர்நீதியுய்ய
மடந்தையை மணியைப்பொன்னை மகவைமற்றுளவை யெல்லா
மடங்கலுஞ் சூறைகொண்டாங் களித்ததொன்றுளது நல்லூர். (உஅ)

பன்னரும் வினைகளெல்லாம் பலதலஞ் சாரப்பாறு
மென்னநீள் சுருதியாவுமிசைத்திடுந் தன்பாற்செய்த
துன்னரும் வினையும்யாண்டுந் துலைவுறுவினையுமெல்லாந்
தன்னகத் தெளிந்துதீர்க்குந் தலங்குடமூக்கொன்றுண்டே. (உகூ)

பத்தியங் கிலதொனுங்கண்படை கொள்ளிலன்றேயோ ரெண்
சித்தியும் பெறுவர்மேலுஞ் சிவனருள்பெறுவரென்று
முத்தியங் கனியைவேட்டு முழுமணிச்சுடிகைச் சேடன்
றுத்தியஞ் செய்யும்நாகேச்சரமொன்று துலங்கிற்றம்மா. (௩0)

பூசநீர்ப் படிந்ததொண்டர் பூங்கழற்றோய்ந்த சின்னீர்
பாசநீ ருடலிற்றோயப் பரித்தநீர்வேணி யான்றன்
வாசநீ ரிருக்கவென்னுவரந் தருமறலஞ் சாயற்
கேசநீர்ப் பொன்னிசூ ழக்கிளரிடை மருதொன்றுண்டால். (௩க)

கோவொடு புலவரீண்டிக் கூன்பிறைக் கோட்டுநல்லான்
ம்மாவடி வெய்திபோற்ற மதிநுதலதிதியீன்ற
தேவடுசெறுனர்ச்செற்ற திரிபிலம் படையான்வைகு
மாவடு துறையொன்றுண்டா லரும்பதியொன்றுமாதோ. (௩உ)

மற்றுலம் புனைந்தோன்வேப்பங் கண்ணியான் வயங்குசோதி
பற்றுலம் புயத்தைவென்று பன்னிறந்தருதாட் சென்னி
பொற்றுலம் போற்றுமந்தன் பொன்னிசூழ் துருத்தியாய
குற்றுல மென்னமன்னுங்கோன கரஃதொன்றுண்டால். (௩௩)



முதுசெல்வச் செழியனேவ முதல்வன்மண் பரித்தவாற்று
லதுவையைக் கரைக்குவார்த்தையாய தென்றமலனேற்றப்
புதுவெள்ளப் பொறைதான்கொண்டு பூந்திரைவிசிறிப்போற்று
மதிபுனற் பொன்னிசூழு மணியெயில் மயிலையொன்றே. (௩௪)

உடம்படு மாயைபுக்க வுயிரெலாந் தமிழான்முத்தித்
தடங்கரை யேற்றுஞான சம்பந்தர்துறைகாண் மூதூர்
முடங்குளை மடங்கலானோன் முதுபவந்தேறு முச்சீர்க்
கடந்திரு மன்றயோர்போற்றுங் கடவுண்மா நகரமொன்றே. (௩ரு)

சள்ளியல் பொழில்சூழிஞ் சிக்கார்சிராநனியே காட்டுப்
பள்ளிநான் கினுமிக்காயப் பள்ளிபூம்பள்ளியானும்
வெள்ளியந் திரைபுரட்டும் வெண்கடற் பள்ளியானுந்
தெள்ளிய ராகப்போற்றுந் திருச்செம்பொன் பள்ளிமாதோ. (௩சு)

தென்னவன் கூனுங்காமன் சிலையுடைக்கூனு மாற்று
மன்னவ னடியார்க்கன்ப னவனரக்கியாய
கன்னிமா திரங்கக்கூனிக் கலையற்கு கிமிர்ந்துகாட்டு
மன்னவன் கருணைகூர்ந்த வளநகரது பணிந்தாள். (௩எ)

கருக்கொடி யொழிக்கும்பொன்னிக் கரைக்கொடியடைந்து கும்பன்
மருக்கொடி மலர்கவேவி மணமிறுமாப்பனின்போ
லுருக்கொடி மும்மையன்பருள ரெனவுருவிற் காட்டிச்
செருக்கொடி யகலக்காத்தான் திருக்கோடி காவொன்றுண்டே. (௩அ)

விருப்பங்கூர்ந் துமையாளேத்த வெள்ளியங்கிரியிலென்று
மிருப்பங்கே யென்னமேவு மிறையவன் வினைவெங்கோடை
யுருப்பந்தீர்த் தருளுஞான வொண்முகிலானோன் வாழுந்
திருப்பங்கூ ராயதொன்மைச் சிவலோக நகரொன்றுண்டால். (௩கூ)

கானமர் கடுக்கைவேணிக் கடவுளே யடல்குன்றுத
மானமந்திரத்தாலே யோமருந்திறு வுலகில்யார்க்கு
மூனவல் வினையுமோவா வுற்பவ வினையுந் தீர்க்கு
மானபுள்மறைபூசித்த வகன்பதி வேளூருண்டால். (௪0)

போதியல் மூலதொட்டுண்ணு மகவைத்தம்பொழிபா லூட்டு
நீதியன்னையர் போன்முக்கணருளேநீடு யிருண்டுய்ய
மாதியல் பாகனன்பால் வகுத்தமுக்குளத்தினோங்கு
மாதிவெண் காடாமாதியம் பலமென்பதொன்றே. (௪க)

பண்ணலந்த கூகவென்ற குயின்மொழிப்பேதைபாகத்
தண்ணல் கண்ணனல்சால்றுக வாழிநீர்ச் சிழவன்பொன்னித்

தண்ணலங் கொடியைவேட்ட சங்கமத்துறை நீராடி
விண்ணலங்கனிந்தோன்போற்றும்வியன்சாயாவனமொன்றுண்டால்.

எனவருஞ் சையவோங்கலிடைநிகழ் பிரமகுண்ட
முனமதாய்க் கன்னிபொன்னி முயங்குசங்கம மீறுக
மனவுடைப் பணியானூர்மான்மியமெலாம் வகுத்தாயெந்தா
யுனதுழை யடியேங்கேட்ப வுரைத்தமொன்றுண்டுமேனுள். (௪௩)

மற்றதன் முன்னும்பின்னும் வரம்பறுகாதையெல்லாஞ்
சொற்றனை யெம்மனோர்க்குத் துளக்கற முன்வினைய
பெற்றியை யளித்தாயல்லை பெரிதுறவிழைந்தவெம்பால்
முற்றுற வருளல்வேண்டு முழுதொருங்குணர்ந்த தொல்லோய். (௪௪)

வேறு.

திருத்தலத் திலுத்தமமுமெய்த் தீர்த்தத்துத்தமமுங்
கருத்தர்தம் மிலுத்தமனையுந் தனித்தனி கரைந்தாய்
நிருத்தனே குருலிங்கசங்கமமென நிலைபெற்
றருத்திவீடருள் பதியுமொன்றுண்டென வறைந்தாய். (௪௫)

மூலவல்வினை யிருள்கெட வருணிலாமுகிழ்க்குஞ்
சீலவெண்கதிர்த் திங்களேயன்னகர்ச் சிறப்பை
யேலவெங்களுக் குணருமாறருளிதி யென்னக்
காலமும்மையு மொருங்குணர் சவுனகன் கரைத்தான். (௪௬)

புராணவரலாறு முற்றும்.

ஆக. திருவிருத்தம். ௨௨௮.

---

# தலவிசிட்டவத்தியாயம்.

மறுவில் மாதவனுவற்சியைச் செவித்துளை மடுத்துத்
தெற்சினத் தழலவித்தமாமுனிவரன் செவ்வே
யுறுமுளத்தில் வைத்தோதியிலுணர்ந்தனன் றனக்கோ
ரிறுதியில் லவனெழிலுலாங் காழிமான்மியத்தை. (௧)

வேறு.

குரவுவார் சோலைக்கழுமலவாணன் குரைகழல் வியப்பமு மாங்க
ணுரவுநீர்ப் பொன்னிவியபபமு நினைந்துள்ளுருகி மெய்சிலர்ப்ப வாய்மலரக்



கரமலர்குவிய வறிவறியாமை கடந்தபூரணப் பெருங்கடலிற்
பரவசமடைந்த முனிவர்தம்பெருமான் பகருவாணிகரிலாதனவே. (௨)

முன்னுமேற் கதியைத்தருபல தலனுமொழிந்தன முதல்வனே மூன்று
வன்னமாய்க் கதியைத்தருதலமொழிந்தாமற்று நீர்விழைதலாலரன்சீ
ருன்னுமாறரி தாமேனுமெம்மறிவா லுணர்ந்தவாருரைத்து மென்றுரைத்தான்
மன்னுநான்மறையா லெண்ணிலாரணங்கள் வடித்தவனடித்துணைமனத்தான்.

உருண்ட பொற்பழுத்த பொரியரைக்கருங்கோட்டெரியவெதிரிகாச்சிரமத்
திருண்ட பொற்களத்தான் கழுமலத்தியலை யெம்முகத்தளித்தநா ளவையுந்
தெருண்ட நங்குரவனெவர்க்கு மிவ்வியலைச் செப்பலையென்றனன் பவத்தால்
வெருண்டபக்குவத்தீர்க்குரைத்தலுமெமக்காம் வேட்டவுறுமக்கறனுமால் (௪)

புரையறு தவத்துமுனிவிர்காளந்தண் பொன்னிசூழ் வரக்கிடந்தமையால்
விரைமல ரலங்கல்மிலைந்ததுபோன்றும் வினைக்குறும் பேற்றை வியப்பாற்
கரைபொரு தலைக்குநீ ரரண்போன்றுங் கடவுளப்புலன்கெழு கோட்டு
வரையகத் துறலாற்கயிலையேபோன்றும் வயங்குமால்மணிமதிட் காழி. (௫)

வண்டுழத்திறந்த கமலமண்டபத்து வானவன்மலர்தலை யுலகம்
பண்டுகைம் மலர்தூய்ப்பழிச்சியவர்ற்ருற் படைத்திடற்களித்ததும் பன்னீ
ரொண்டுகொண் டணந்துகொண்டலாட்டயரு முரிதிரைக்கடலெழுஉங்கடை
நாள், மண்டுபோற் றோணியுருக்கொடு குடிலைவலியடைந்ததுவு மின்னகரே.

நீடுநல் லறங்களிழைத்துளோர்கயிலைநேர்வரீ தருமறைநெறித்தே
தேடுமெவ்வறத்துக் குறுபதமளிப்பான் சிவனலாற்றேவரில்யாரே
நாடுமெச்சிவனே மூவுருவாகி நற்றலம்பற்றின னென்றூற்
கூடுமோ விதற்குவேறொருதலத்தைக் குவலயத்தினை யெனக்குறித்தல். (௭)

உறுவரிலுயர்ந்த பராசரன்மேனுளொண்மலர்க்கிழவனைமறைநூ
னெறி பிறழ்கலியின் வலிதவவளிக்குநெடுந்தல நிகழ்த்துகென்றிரப்ப
வறிவகேளெம்மான்கயிலையி லுமைக்கீ தறைவுழியறிந்தயான் றெளியப்
பெறுந்தல மெவையுங் காழியுமிருபாற்பிறங்கிருதட்டினும் வைத்தே. (௮)

துலையிடை நிறுப்பவிந்நகர்க்கவை தாந்தொகுபதினாறிலோர் கூறு
நிலைபெறுதொழிய வெவற்றினுமோங்கி நிலவியதடியுகநெறித்தாய்த்
தலைமையெய்தியது சந்தமென்போற் சதுமுகரளவிலாப்பணிந்த
துலைவறுதவத்தோய் நீயவணேகி லுன்னியவெய்து மாலொருங்கே. (௯)

எனவருட் பனுவலாட்டி தன்கேழ்வனியம்பலு மனையவன் விடையான்
மனவலி கடந்தபராசரன் றொன்னுள்வந்தரும் பூசனைபுரிந்த
சினவிடைப்பாகன் றிருவருட் பெறலாற்றிகழ்ந்த ---- பராசரவாமெனும்பேர்
பனவரேத்தெடுப்பக் கொடுங்கலிவலி---- ப்பித்திமீ தூயர்ந்ததிப்பதியே. (௧௦)

ஆதிதெய்விகமே யாதிமுத்துயரட்டியை வடவைபோற் காய்வ
தீதிடைவதிவோ ரருந்தவந்தானம் யாகநற்பலன்க ளெய்துவரா
லாதலினதனை யணைகலார்மேலா மரும்பதமணைந்திடா ரணைந்தார்
போதருமறிவா லிழைத்தவல்வினைகள் போகுமாலிரவிமுன் பனிபோல். (கக)

விரதமெண்ணிலவு மெண்ணிருதான விகற்பமும் வேள்விகள்பலவுஞ்
சரதமாமறை நூற்பயிற்சியுநாளுந்தவறின் முத்தழலுளுற்றுதலும்
பரவுமட்டாங்க யோகமுமளிக்கும் பலனெலாமரியுரி போர்த்த
வரதனென்றெருகா லுன்னினர்பலத்தை மாறுமோவறுவளவேறும். (கஉ)

சேயமென்கமலத்தயன் முனங்கொணர்ந்ததெய்வதாருவை முறைவணங்கித்
தூயமென்றளிரை முடித்துவோரிடருந் தொடருறுபிணிகளுமுடிப்பா
ராயதன்னடிமன் னுதன்மிசையணிவா ரரும்பெறன்முத்திவீடணிவார்
பாயதன்னிழற்கீழோர் மறுக்கணித்தோர்பல மறுச்சித்தி நன்னுவரால். ()

வீதியினங் கப்பிரதக்கணம்புரிந்தோர் விமலனோடுளவளா யிருப்பார்
நீதியின் வணங்கிவணங்கியே நடந்துநிகழ் வலமொன்றொருகோடி
போதுறுவல மென்றோடி நடக்கிற்புகன் மகமாயிரகோடி
மாதியல்பாகற் குவப்புறுபூசை வலஞ்செயலன்றி வேறுளதோ. (கச)

கற்பநாண் முடிவினரும் புறமணம்போற்கலந்து மென்போதலர்மணம்போ
லற்பவநாளிலோங்கி யுங்காழியுயர்சிவன் விளங்குமன் னவன்பாற்
பொற்புறமாயனுதிமன் றுயிர்கள்புக் கொடுங்குறு முயரிலிங்கத்
தற்பமின்மாயை யொடுங்குமுற்பவத்தி னடங்கியமுறையுதித் திடுமால். (கரு)

வஃதெழிற்காழிமான் மியமனைத் துமியம் புறிலாயிரமுகத்துப்
பாந்தள்வேந்தனுக்கு மெண்ணில் பல்யுகங்கள்பகரினு மூலப்புருவதனுற்
பூந்துணரிதழிச் சடிலவானவனே புலனுறத்தெளிகுவ னல்லா
லாந்தனிமறையுந் தெரிவுறுதந்தோ வன்னதுசத்திய மாமால். (கசா)

பிறந்துளோர்க்கருளு முத்தியையாரூர் பிணக்குறுநிணப்பொதி யாக்கை
துறந்துளோர்க்கருளு முத்தியைக்காசித்துணைவிழிகளிப்புறக் கண்டு
றெந்துளோர்க்கருளு முத்தியைப்புலியூர் சேரவும்பிறந்துளோறிறந்தோ
ரறந்தகக்கண்டோ ரனைவர்க்குமுத்தி யருளுமின்னகர்வியப்பஃதே. (கஎ)

கல்லையன்னவருங் கண்படைகொள்ளிற் கணமனைக்கனமவன் வதியிற்
றெல்லைவல்வினைகள் பரிதிமுன்பனிபோற் றொலைவுபட்டிரியல்போங்காழி
யெல்லைகண்டவரு மெல்லைகண்டறியா விறையருட்கடல்படிந் திடலா
லொல்லையப்பதிபுக் கவர்களேகினோயோடோங்கலங்கயிலைபுக் குறைவார். ()

தோற்றமுமீறு மிகந்துமஃகுயிராய்த் துணையிலியாம்பரம் பொருளே
சாற்றருமிலிங்க மனமெனக்குரவனு வாக்கெனச்சங்கம முடலென்



றூற்றுமுக்கரண மிவைகொடுமூல மலமுதன்மூன்றையு மகற்றி
யேற்றருங்கதியுந் தரும்பொருட்டன்றே யினிதுவீற்றிருந்ததிந் நகரில். (ககூ)

ஆதலாற்றலங்கட் கதிகமாகியதிவ் வணிநகராயபராஞ் சுடரெங்
கோதிலாள்மூலையே யிலிங்கநல்லுருப்பே குரவன்மாதவமன் பர்களென்
றோதலாலிந்தத் தலத்தின்வாழன்பர்க் கூழ்முறைபணிபுரிந் துள்ளோர்
சீதவான்றிங்கட் கொழுந்தணிவேணிச் செம்மலாகுவரிது திண்ணம். (உ0)

ஒல்கலில்பசும்புல் மூலையகத்திடுறு முடன்மிசையுறத்திறு நறும்பால்
பில்குமோதுளியு மிலிங்கமுங்குருவும் பேணினர்பெரும்பய னனைத்தால்
மெல்கியவறுகை முகத்தருத்துவரேன் மேனியுங்குளிர்ந்துபால் மூலைக்கன்
மல்குமாலதனு லிருபொருட்கூங்கே வதிகுவான்சங்கம வடிகன். (உக)

மனமெனுமிலிங்கத் தாணவமாயும் வாக்கெனுங்குருவின்மா யைகள்போந்,
துனிவில்மெய்யெனுஞ்சங்கமத்தினுல்வினைபோஞ் சொல்லிலொன்றொன்றி
னூற் றலையா, நினைவிலோர்கருவியோர் கருவியதாய் நிகழ்ந்திடாமும்மலப்
பரப்பின், வினைவலிதன்னையித் தலம்போலமேதினித் தலங்கள்போக்கறியா.

அல்லியின்டையின்கா லிறிவுநாலிறுவ தருமைபோலியாக்கையிற் றூஉம்
புல்லியபல்லூழிருவி னைபோகாபோக்கறச் சமநிலைபெறுந [ல்
ளொல்லியல்கவலை பிணைகொடுகெடந்தாங் குறுகணைகாண்டல்போற்கண்டா
மல்லியல்ஞானம் வரும்பரகதியும் வருமதுமனனுயாக் கரிதாய். (உங)

மூவகைமலமு மூவகைவடிவமு முருக்குமித்திருக்கிளர் தலத்தை
யேவரேனுந்தா ரேனுமேல்வீட்டை யெளிமையினெய்துவர்யாண்டு
மாவளந்தருநீர்க் குய்யகாசியுநீள் மத்தியசிதம்பரந் தானு
மாவதின்னகரா லாதலினிதன்சீ ரறிகுனர்யாருந் தவத்தீர். (உச)

அலம்வரு மிடற்றன்காழியைத் துதித்தால லமருமரந்தைநோ யகல்வார்
வலம்வரி னென்பானீரிரண்டிலக்க வலம்வரும் பிறவியுமாயும்
பலம்வரப் பணிந்தால் விண்ணவில்வானவர் தம் பலமவர்தமக்குறு முடிக்கீழ்த்
தலமுறத் தொழுதாராணைபூண்டு ரேழ்தலம்வரு மவரடித்தலத்தே. (உரு)

சாணளவாடை யொருவர்பாலிந்தத்தலத்துற வளித்தவர்தகை சால்
பாணளிமிழற்றும் பசுந்துழாயலங்கற்பண்ணவன் பதவியைப்பெறுவார்
தோணியாருடையான் றிருமுனமொருகாற்றொழுதெழிற் சஞ்சிதமாதி
யேணிலாவினைப் போழியையீர்ந்தி யிறையருட் கரையில்வீற்றிருப்பார். (உசா)

தேசுறுதிங்கட் டிருறுதலமுதி திருநிலையமுதென்திருமன்
மாசறுமிரமதடத்து வெண்டிரைக்காலீர்ந்துளி மன்பதையுடன்மேல்
வீசுறவிமலராவ ரஞ்செழுத்தைவிசிப்பரேற் காசியேமுதலா
வேசறுதலத்தி விட்டிகள்பலவு மிழைத்தபேறெளிதி னெய்திடுவார். (உஎ)

இகலறு குணத்தாற் கெளிவரும்பிரமலிங்கரேரிலிங்கமு மிருடீ
ரகிலதேசிக னெம்பெரியனாயகன்போ லருள்பழுத்தளிந்த தேசிகனும்
பகவனார் முடைவெண்டலைபுனை தெண்டபாணிநேர் சங்கமப்பொருளும்
புகலில்வே றில்லைமட்புலத்தினிலும் புலவர்சேர் விட்புலத்திலுமே. (உஅ)

வேறு.

பணிப்பெருந் துயில்வானவனுதியர் பசும்புலான்முடை நாறுங்
கணிச்சியெம் பிரானருள்வழி நான்முகன்கண்ட விவ்வண்டத்
தினைக்குமேழ் பெருந்தீவிடை நாவலந்தீவுமற் றிதனுள்ளே
யணிப்பொ லங்கிரியெண்பதிற் றீரிரண்டாயிர நிவப்பிற்றாய். (உகூ)

முடிபரப்பு முப்பானிரண்டாயிர முற்றியன்னதிற்பாதி
யடிபரப்பு தியன்ன வேரளவதாய் விரிசுடர்சூழ
வடித்த நீலமுஞ் சிருங்கமும்விடையுமா வரைகளுத்தரங்காணப்
படிக்குன் மந்தரங் கிழக்குறவிபுலமாம் பருப்பதமேற்காக. (௩0)

இமையமால்வரை நிடதமால்வரையொடு மேமகூடப்பேரா
னமையுமால்வரை தென்றிசைதோன்றவிவ்வக விதழ்பலபூத்துச்
சமையுமேருவாம் பொகுட்டொடு நீடிரைதவழுநீ ரிறவேலை
யமைதருந் தடத்தலர்ந்த செந்தாமரையாகிய தணிவரய்ந்தே. (௩க)

பொன்பராவுமிந் நாவலந்தீவிடைப்புகன்ற யோசனையெல்லை
யொன்பதாயிரம் பரதகண்டத்துமேலும்பர் மாலயனாதி
யன்பாலமைத்தவு மூனைத்தெழுந்தது மளவிலாதானங்கொண்
டென்பரா பரனிமையமுன் மலையமட்டிருந்தன னிவைதம்மில். (௩௨)

கறையகன்றவிக் கருமபூமியினிடைக் காசியேகயையேசீ
ருறைபிறை யாகையே தில்லையேகுடந்தையே யோங்குதென்னாரூரே
மறைபழிச்சிய காளமேதிருவிடைமருதுமே யெனவெட்டா
விறைதருந்தல மிவைகளை யதிகமென்றியம் புவபல நூல்கள். (௩௩)

ஈண்டொ ரிருதலத்தினிமுயர்ந்ததா லித்தலமெவற்றென்றாற்
சேண்டயங்கு நீர்புதைத்தபேருழியிற் றிரிபிலாததனானும்
பூண்டவைதிகச் சைவநாட்டிய தமிழ்ப்புதல்வரைப் பெறலானு
மாண்டநாயகன் குருமுதல்முப்பொருளாய் வதிதரலானும். (௩௪)

ஐங்குரோச மட்டெல்லையின்வைகிய வறிவுள்ளோ ரறிவில்லோர்
தங்குமிற்பன பறப்பனதிரிவன தவழ்வன கிடந்தூர்வ
மங்குபுற் கொடிபாவையு மயற்புலர்வெத்தியெணிறந் தோரும்
பொங்கு கூற்றடுந் திருவடிநீழலிற்புகுதல் சத்தியமாமால். (௩௫)



வருபதங்களை மலைமகன்றந்தையால் வானவர்க்கிறைமாட்சி
யொருபதம் பெறவுன்பதம்புகலெனுமொலி யறுபதம்பாடிப்
பெருபதந் திகழ்கடம்பணி தடம்புயன்புகலி நாயகன்காட்சி
தருபதம் பணிந்தைம்பதம் பெற்றனனற்பதம்பெற விண்ணோர். (௩௬)

துகிருலாஞ் சடையலமரப்பணித் தொடைதுயல் வரக்குழையாட்
வகிருலாம்பிறை வயங்கவின் னருணகை வதனமண்டலம் பூப்ப
நகிலிளங்கொடிகாண்வர வாரணனைமுது தலைகொய்த
வுகிருலாங்கரத் தொருவனிப் பதியிலன்பொடுங் குனித்தனன்மேனாள். ()

குன்றிருஞ்சிறை யொருங்குறவரிந்தவாட்குலிசவே லிறைமுன்னு
மென்றியெண்டிசைத் தலைவருமன்னகர்விடைவலா னடிபோற்றி
மன்றவேரொரு கடவுளுந்தடமுமவ்வயினிறீஇவழிபாட்டா
லொன்றுமே தகவிருந்தனர் வரமுறையெண்ணில் விண்ணவரோடும். ()

வாணிலாமணியிழைத்த பொற்குவட்டினில் வதிந்தருளியதண்ட
பாணிமுன்னமா பீடமேல்மலர் கயேப்பாற்கவன்றினத்தேற்றி
யேணிலாவியபுழு கணிந்தள்ளிருளிடத் தவன்றிருத்தாளைப்
பேணினார்க் கொருவறுமை வல்வினையெழுபிறப் பினுந்தொடராதால். ()

இயக்கர்கின்னரர் சித்தர்வித்தியாதர ரிமையவருரகேசர்
பயக்குமைங்கு ரோசத்தளவெல்லையும் பலவகையி லிங்கங்கள்
நயக்குமாணிறீஇவழிபடவிருத்தலி னகரமிங்கிதை மேலோர்
மயக்கமில்லிலிங் காடவியென்றலான் மணதுமவ்வடிவாமால். (௪0)

துஞ்சல்போய் தெள்ளமுதமுண் டேழிசைத்தழனி சூழ்தருநீழற்
பஞ்சிமெல்லடிச்சசி முலைமுயங்க லாற்பனைப்புயத்தனை தாளை
நெஞ்சிநல்லவ ரருவருத்துறப்பி ஞனிகழ்வலம்புரிந் தந்தோ
கஞ்சமாதுறையின் னகர்வீறுயறக லந்தநாளவிடெற் பார். (௪க)

கண்ணகன்ற சேட்புலத்தினிற் சிகரிகள் கனாறுறக்கரங்கூப்பித்
தெண்ணரும் புனல்படிந்து நீரணிந்துருத்திர மணித்தொடைவேய்ந்து
புண்ணியப் பொலன்சினகரம்புக்கு முப்பொருளையுந் தொழப்பெற்று
ரண்ணலஞ் சரணிழலிடையொன்றி யொன்றாநிலை யரும்பதமடைவாரே.

விழுதுவிட்ட மென்புரிச்சடையந்தண ன்வியன் மணித்தடங்கோயில்
பழுதுபோக்குவோர்புதுக்குவோரிட்டிகை பரப்புவோர் புல்லாதி
யுழுது மாற்றுவோர்மேனி மாசகலுமாருலகு பூத்தருளன்னை
தொழுதகுந் திருவுத்தரீயங்கொடுத்துலக்க நன்மகவாவார். (௪௩)

அரவவேணியன் திருமுடித்தலத்திலானைந்தமு தொருங்காட்டிப்
பானருட் கடல்படிந்தினி தாடுவார்பதியிதிற் சிவநாமத்

திரவில்யாம நான்கெல்லையும் வரன்முறையெந்தைதாள் பணிந்தேற்றி
விரவுவார்க் கலாதயலவர்க்கிடங்கொலோ மேலரும்பெறல்வீடு. (௪௪)

எண்ணிலாத தொல்லிலிங்கமும் யெயருநல்லெழிற்றடங்களும்வாய்ந்து
நண்ணி யோங்குவ விந்நகரிவற்றின்முன் னான்குபுண்ணியமூர்த்தி
தண்ணிலாவிய தடங்கள்முந்நான் கபிதானமுந்நான்காக
வுண்ணிலாவு மாலிவற்றிறும் பூதெலாமுரை செயக்கரையின்றே. (௪௫)

தோணியம் புரத்தொடு பிரமாபுரந்தொல்லியற் செழுங்காழி
தாணுவெங்குரு புகலிவண்சிரபுரஞ் சண்பைமாநகர் கொச்சை
வேணுநற்புரங் கழுமலம்புறவமேர்மிக்க பூந்தராயென்றே
காணுமிப்பெய ராறிரண்டையுமுளங்கருதுவார் கதிசேர்வார். (௪௬)

நனியுரைப்ப தென்னிழிகுலத்தழிபுலானுறு மென்கொடிமென்றேண்
முனிமுயக்குற வாங்கவன்சிறுமையை முழுவதுமகன்றோடக்
துனிவகற்றி மூவறுபுராணங்களுந் தொகைவகை விரியாகத்
தனியெனக் கருள்குருவருட்குருவெனத் தந்ததித்தலமென்றால். (௪௭)

இன்னுமான்மிய மெண்ணிலகண்ணிய திசைத்தன மிருடீரப்
பொன்னொழுக்கிய புரிசடைமாதவப் பொருப்புறழ்முனிவீர்காள்
கன்னிமூ தெயிலிந்நகர்ப் பெயரியற்காரண மீராறில்,
முன்னதாகிய தோணியம்புரிவரன் முறையினையறைகிற்பாம். (௪௮)

தலவிசிட்ட வத்தியாயம் முற்றும்.

ஆக. திருவிருத்தம். ௨௱௯.

---

# தோணிபுரவத்தியாயம்.

என்னவேணி மௌலிச் சவுனகாதிமுனிவர்க்
கன்னவூர் திநகராயமுது சூதமுனிவன்
கன்னலஞ் சுவையெனக் கடவுளாரமுதெனச்
சொன்னகாதை யினிற்சிறிது சொல்லுவனரோ. (௧)

வெம்புமாயைதிரி வெவ்வினைமணிக்கயிறு சூழ்
பம்பரம் பொரவுழன்றலைபடாது பரிவால்
வம்பருமுனை மதிச்சடிலமாமுனிவனே
ணாம்பெருந்தொழி லியற்றுவனுயிர்க் கருளினால். (௨)



மறைவலாளனில் வகுத்துநெடுமாயனிலளித்
திறையுருத் திரனிலீறுபுரிவித்து வினையின்
பொறைமயேசனில் மறைத்துநிறை போதமுதல்வன்
சிறையுயிர்க் கருளுமைவகைய செய்கையிவையே. (௩)

மாசிலிவ் விறைவனாணைவழி வைகுவனதா
மாசிலண்ட நிரையெண்ணிலவை கட்கிடனதா
யேசிலாவுலகி லேழ்கடலையுந் திவலைபோல்
வீசுமூல நெடுவேலை யஃதொன்றுளதரோ. (௪)

வேலையன்னதில் விராட்புருடன் மெய்மயிர்தொறும்
பாலெலாமுது பழம்பொதி யுதும்பரமெனச்
சாலவண்டநிரை தங்கநடு நின்றனனிவற்
றேனுமண்டமித னெல்லையைவிளம்புவனியான். (௫)

தோமிலாவுலக மீரெழுமை தொக்கவிதனு
ளேமமால் வரையிலங் குமிதனைத் தழுவுமாற்
சேமநாவலுறு தீவுமது சேருவரியுந்
தாமியோசனை தனித்தனி யிலக்கவிரிவாய். (௬)

அறையுமவ் வியலிரண் டெனுமிலக்க மகலத்
திறலியென் றமுதுதீவு மயலிக்குவடிசா
றுறைதடங் கடலுமோங்கு மதனுக்கயலிலே
சிறைகுலா மிலவுசேருமொரு தீவுமுளதால். (௭)

நாலெனுந்துணையிலக் கமதை நண்ணுமதுவார்
வேலையும் புகலிலத் துணைவிளங்கு மயலே
சால்புநீள் குசைதயங்கு மொருதீவுமருகே
யேவுநெய்க் கடலுமெ[illegible]ள விலக்கமுறையே. (௮)

அதனிரட்டி கிரவுஞ் சமதீவுமது சூழ்
ததியுடைக் கடலுமத் துணைதயங் குமதன்மேன்
முதியசாகமுளதீவு மலைமோதுநிறைபா
லுததியுந் துணைதனித் தனியிரட்டியுறுமே. (௯)

மண்டலம்புதை யிருட்படலம் வாரிநுகருஞ்
சண்டபானுவுதையந் தருவதுந் தனிவலங்
கொண்டுமேல் கடல்குளிப்பது மதற்குளெனவே
பண்டைநான் மறைபயின்றவர் பகர்ந்தனரரோ. (௧௦)

மற்றதற்கயல் வயங்குவது புட்கரமெனச்
சொற்றதீவு மதுசூழ்வருபுனற் புணரியு

முற்றும் யோசனைகள் முன்னதினிரட்டி யன்வாம்
பெற்றயோசனையிலக்கவகை பேசியிடினே. (௧௧)

வேறு.

அயலி லீரைந்துகோடியகன்ற பொற்பூமியப்பா
லுயர்பதி னாயிரத்தியோசனை யாழிவெற்பாம்
பெயர்வரு மயலநீண்டபெரும்புறக் கடலினெல்லை
யியலுமோர் கோடிமேலு மிருபத்தேழிலக்கமப்பால். (௧௨)

மையாரு மிருளுலோகம் வகுத்தயோசனைகள் கோடி
ஐயயேழினோடு பத்தொன்பானிலக்க நான்கயுதமாமா
லெய்யாத வண்டப்பித்திக்கணங்கோடி யெல்லையென்ப
மெய்யார் யோசனைகளின்னவிரியினித் தொகையுஞ் சொல்வாம். ()

வளமலியம் பொன்மேரு மத்திதொட்டண்டப்பித்தி
யளவும் யோசனைகள் தேரினைம்பது கோடியாக
விளைதரு கிழக்கினெல்லை விரித்தனமேனை மூன்று
தளர்வரு திசையுமிவ்வா றகன்றனசாற்றுங்காலே. (௧௪)

தெரிவுறுமகல நூறுகோடியோசனை சேறிந்த
விரிபுவிக்குக் கீழ்தொட்டுமேல்மட்டு நூறுகோடி
துரிசறு முயர்வாமண்டமீங்கிதைத் தொலையாவெள்ளப்
புரிபுறக் கடல்பாய்ந்தேற்றிப் புகுந்ததோரூழி நாளில். (௧௫)

அலையின மலையிற்பொங்கி யண்டகோளகையை முட்டி
நிலைகுலைத் தடுக்கையெல்லா நெரிநெரித்தாற்பி னேங்கித்
தலைபடுஞ் சுழியாலெட்டுத் தடந்திசையொடுங்க வோரெண்
கொலைமதக் களிறுஞ்சாயக் குமைத்ததுமுதுநீர்க் கொள்ளை. (௧௬)

ஆழிமால்வரையு மோரெட்டாகியவரையுஞ் செம்பொ
னூழிமால்வரையு மேல்கீழுயரியவரையுமா நீர்ப்
பாழிவெண்டிரைகள் பாயப்பொடிந்தன படிந்தபல்வே
றேழிரண்டுலகில் வாழெவ்வரையு மவ்வரையின்மாதோ. (௧௭)

நாளருவலிசால் மோட்டுநாலிருதிசை யினின்ற
கோளராவின முநாளுங்கோளும் விண்ணோரும் விண்ணில்
வாளருக்குலி சனுதிமாதிரத்தவருஞ் செம்பொற்
றாளருத்தருவும் வேறுசுடர்களுமுயிரிந்த மாதோ. (௧௮)

பேர்வன பறப்பநிற்ப பிறங்கிருணிரையந் தம்மி
லார்வன நீரில்வாழ்வதத்துவ வரவமாதி



யூர்வன தவழ்வவெவ்வே றுலவிலாமனிதராகிச்
சார்தரு முயிர்களெல்லாஞ் சாய்ந்தனதேய்ந்த வன்றே. (௧௯)

கமல்நாரண னெடுங்குங் கடையினுமுதல்வ னுவா
னிமலனே யன்றிவேறுநிலையுனர்யாரே யார்க்குந்
தமரசாகரநீர் மோதத்தம்முயிர் தேம்பினாரை
யமரரென் றுரைப்பாரன்னோர் பெற்றியையறியாரன்றே. (௨௦)

சொல்விரி பொருள்கடாமெத்துணை யவத்துணைய வெல்லாம்
வல்வினைந் தழியவாங்கண்மன்னுயி ரீட்டம்யாவும்
மெல்லியமா னமாயையிடத்தவா யொடுங்கலோடு
மல்விரவிய தரலெங்குமாழிநீர் பரக்கமாதோ. (௨௧)

மின்கிளர்ந்த தனையாங் கேவிழுங்குறுமேக மென்ன
முன்குறித் தண்டந்தொக்க பொருளெலா முரித்துமாயை
தன்கண்ணே யொடுங்கிப்பன்னாட்டகைந்தன தகைதலோடும்
வன்கறை மிடற்றுத்திங்கள் வகிரணிவரதனன்பால். (௨௨)

நூக்கிய வொருவனாட்ட னுடங்குபாவையினைச்சின்னாட்
போக்கிமற் றெடுப்பான்போன்று புவனகோடிகளை முற்றுந்
தாக்கிய தலைவன்றானே தன்னருள்வலியால் முன்போ
லாக்கிய துணிந்தனெல்லாமளித் தழித்தாக்கவல்லான். (௨௩)

நஞ்சுமி ழுரகப்பூணு நகைகிலாக் கொழுந்தும்வாசப்
பைஞ்சட ரிதழித்தாரும்பாய் புலியதளுமின்றி
மஞ்சுறழ் கருமென்கூந்தன் மாதொடுமருவியெண்ணெண்
டுஞ்சருங் கலைகளென்னுந் துலங்குபொற்கலைகடாங்கி. (௨௪)

பருமையாய்ச் சிறுமையாகிப்பதங்களாய் வண்ணமைந்தாய்
நிருமலமாய் முத்தேவாய் நிகிலமாய்க்குணமோர் மூன்றாய்
யிருமையா யெழுத்தாய்நாதவெல்லையாய் வேதமாதி
பெருமைசா லொலியாய்நின்ற பிரணவந்தோணியாக்கி. (௨௫)

கரியநாரணனு லந்தண் கமலவாகனனு லேனை
யுரியநான்மறையான் மிக்காருளத்தினு ளவையாலுந்
தெரிவிலா வொளியாய்நின்ற சின்மயன்றானே தெய்வப்
பெரியநாயக னென்றோதும் பேர்புனைந்துருவமெய்த. (௨௬)

ஏறினனென்ப வெம்மானெழில்கனிந் தொழுகுமேனி
தேறின விமலமாய திவளொளிக்கற்றை சுற்ற
மாறின விருள்கள்மேனாள் மலைமகளமுதமாந்தி
யூறியஞானச்சேயா லொதுங்கய ணிருட்டுப்போன்றே. (௨௭)

பெய்யுநீர்த் திரைசுருட்டும் பிரளயவத்தி நீத்த
தையனுண் மலர்த்தாளூன்றி யருள்கனிந்தொழுக வூர்ந்தான்
பொய்யிலா மறையினீறும் பொருப்பிறை மடந்தைகண்ணு
மையிலா வுரிமைத்தொண்டர் மனமுமே யனையதோணி. (௨௮)

தோட்ட முண்டகத்துப்புத்தேள் தொழில்புரி யண்டகூடம்
பாட்டகன் றிரைநீர்ப்பவ்வப்பாயலை யலையவேற்றுண்
டீட்டமாம் பொருள்கள்யாவு மிறுதிகண்டிரங்கு முந்நீர்
கோட்டமே யூர்ந்தானன்பர் குணத்துமேலூருங் கோமான். (௨௯)

அருமைசா லறத்துக்கென்று மழிவிலையென்ற மேலோர்
பொருண்மையை விளக்கியண்டம் புறக்கடல் மடுத்தஞான்று
மிருமைசா லுயிர்கள்பன்னுளிழைத்திக லெறிந்ததெய்வத்
தருமமே வடிவாய்நின்ற தலத்தரசிதனைக்கண்டான். (௩0)

காண்டலு முவகைதூங்கிக் கரமலரசைத்து நோக்கா
நீண்டபே ரண்டமுட்டி நிமிர்பிரளயத்துஞ் செவ்வே
பூண்டதோ ரிறும்பூதுன்னிப் புவனகோடிக ளிலீதே
யேண்டகு மூலதாரகேத்திர மென்றுன்வள்ளல். (௩௧)

காலமீதாகக்கோடி கதிர்புரையுருவத்தாதி
மூலகாரணனை மாநீர்முகட்டிடைக் கண்டான்மேலைக்
கோலமாதிரமுங் கோட்டுக் கோட்சுருவேறுஞ்சோதிப்
பாலதாந் தாளத்தாரும் படைத்துள வருணப்புத்தேள். (௩௨)

ஒண்மலரடிச் செஞ்சோதி யுண்மலரென்னவாய்ந்த
கண்மலர் பதித்துநீண்ட கரமலர்குவித்து வாயாற்
பண்மலர்ப் புகழ்ச்சியோதிப் பனிமலர்த்தாள்முன் வீழ்ந்தான்
விண்மல ருடுமீனன்ன வெண்மணிமுத்து மாரி. (௩௩)

சுருக்கமில் முளரியன்ன துணையடி பணிந்துபோற்றத்
திருக்கிளர் கடைக்கண்ணோக்காற் றெண்டிரைக்கடல்வாழ்வானை
யருட்கட லாழவைத்தா னகந்தைவேரிந்துளாரைக்
கருக்கடல் வீழாதேற்றுங் கருணையங்கடலான்றனே. (௩௪)

கணத்திடை யெயில்மூன்றட்ட கண்ணுதற்சாமி பின்னர்க்
குணிப்பிலா வண்டஞ்சிந்துங் கொள்ளைநீர்வெள்ளஞ்சூழ
மணத்தபூங் குழலாளோடு மவன்பிறத்தம்பி யூடே
தணிப்பிலா தமர்ந்தானின்ன தலத்திடையளப்பில்காலம். (௩௫)

விரிதிசை புரப்பானெட்டு வியன்கணத்தலைவர்க்கேவிக்
கிரிபுரை தண்டமேந்திக் கேத்திரபாலனுதி



புரிசடை முதல்வர்சூழ்ந்து புறந்தருந் தோணிமேற்கொண்
டரில்படா துலகங்காக்கு மன்னையோடிருந்தானெந்தை. (௩௬)

முழுமலர் முளரிப்புத்தேள் முடிவுநாள் காறுமாநீ
ரழுவமுற் றிருந்தானுன்னவாசற வறந்ததன்றன்
விழியன லுண்டதோநாள் வேற்றுமை குடித்ததேயோ
மழுவலான் விளையாட்டென்றே வரம்புறுவாரி நீத்தம். (௩௭)

வணிலாத் தெய்வதங்களிறினுமோ ரிறுதியின்றிப்
பேணிவீற் றிருக்குந்தெய்வப் பெரியனாயகனுமெந்தை
தோணிமேல் வைகுமாற்றாற்றோணியம் புரமீதென்றே
காணியவிருந் ததின்னுங் காரணப்பேர்வேறுண்டால். (௩௮)

காமரு வருடைநள்ளி கலைதொலையிரவிதோற்றந்
தேமலி சிலையிற்செங்கை செவிசிதெறுதேளார
லாமெழு தினமுமெந்தைக் கணிநறும்புழுகு மன்னைக்
கேமுறு சாந்துஞ்சாற்றினெவையவர்க் கரியமாதோ. (௩௯)

பதனறு மணிவித்தென்றும் பயன்படுவிளைவுகுன்று
முதனிலம் புக்காலென்னமுதுக்குறை வறிஞர்பேணும்
விதமலி விரதந்தானம் வேள்விகள் மனுக்கள்மற்று
மிதமலிந் தொன்றுகோடியெனத் தருந்தலமீதொன்றே. (௪0)

மங்கலம் பொலியுமிந்தத் தலத்திலெம்பதத்தை வாழ்த்து
மங்கலவான்றோர் செந்தோட்டம் புயனிழலு மாழிப்
புங்கவநிழலு மந்தண்பூத்தரு நிழலுமேவார்
திங்களங் கண்ணியெம்மான் சேவடிநிழலொன்றல்லால். (௪௧)

### தோணிபுரவத்தியாயம் முற்றும்.

ஆக. திருவிருத்தம். ௩௪௭.

---

## பிரமபுரவத்தியாயம்.

பொங்காழி சுற்றவொருதோணிபெற்ற புரமான்மியத்தினியல்போ
லெங்காதன் மிக்கபிரமாபுரத்தினியலுந் தெரித்தருளென
வங்காதரத்தி னுரவோர்வியப்பலறவோ னுரைத்தமுறையே
பங்கேருகத்து முனிவன்பணிந்து பலனுண்டகாதை பகர்வாம். (௧)

மங்கும் பிறப்பினழியாதணுக்கள் வழிகண்டுமுத்தி புகுவான்
பொங்கும் படைப்புமுதலைந்தொழிற்செய் புரவென்பதோன் றுடைமையா
லெங்கும் புதைத்தபுனல்வற்ற வண்டமிசைவிக்கவெண்ணு மிறைவன்
றங்கைந்து சத்திகளினன்புவைத்து நெடுமாயைதந்து தகைவால். (உ)

நாதாதிதந்து நழுவாதமந்திரபதம்வன்ன நல்கியதனின்
மீதேகலாதி நிலநீரசுத்தவிரி தத்துவங்களுதவிப்
போதாவிரட்டை வினைசேதனங்கள் புகுமாறுசெய்து முறையே
கோதாடுமும்மை பெறுதேவர்மும்மை வினைசெய்யவென்று குறியா. (ங)

குலநான்மறைக்கு முதலோனைமிக்க குணராசதத்தின் வருவித்
தலமேறு சாத்துவிதமாகுணத்தி னடலாழிவெற்பை யருளி
வலமேறுகொற்ற மருவானைவெற்றிவளர் தாமதத்தினுதவி
யுலவாதமைத்தி னெறியாலளித்தியொழியா தொழித்தியெனலும். (ச)

அணியம்புயத்து மலரோனவர்க்குளடியே னமைக்கவடிகேள்
துணியென்ற தற்கோர்வலியில்லையெந்தை துணையுண்டெனிற் சிறுமைசா
லணுவொன்று வெற்பினுருவாகும்வெற்பு மணுவாமதற்கருமையே
பணியென்க ணிட்டபடிசெய்வ லாதிபகவாவருட்க ணுளதேல். (ரு)

மற்றின்னகூறு மறையோனையண்ணல் மகிழ்வெய்திமாயை வழியிற்
பற்றின்றியெங்கு நிறைவாய்நிறைந்தபரமொன்று நித்தமிடையே
யுற்றுள்ளயாவு நிலையாவெனுநல்லுணர்வா லுணர்ந்தவொருநீ
முற்றும்படைக்க லுறுசத்தியின்றி முடியாதுனக்குமதுவே. (சு)

அச்சத்தி தானுமெனதேவலின்றி யணையாதியானுமடைவே
யிச்சிக்கி லின்றியணையேனுளத்திலெனை யெய்துமாறுவினையைக்
குச்சித்து மூலமறையாகமஞ்சொல்குறியே மனுக்கள்வழியா
னச்சிப்பராவு மவர்பாலிருப்பனென்ப தொன்றுமறினே. (எ)

அம்மந்திரங்க ளெழுகோடியாகுமவையிற் சிறந்துளனவா
மெய்ம்மந்திரங்க ளொருநூறும்வேத விதியிற்சிறந்த வவையாஞ்
செம்மந்திரங்கள் பலவற்றிலாதி திருவைந்தெழுத் ததிகமா
லிம்மந்திரத்தின் வலிபெற்றுசெற்றியெவையும் படைத்தியெளிதே. (அ)

நந்தாமலிந்தமனு வைம்பதத்தினடை பெற்றியங்குமவைதா
மைந்தாவிளங்குபதி சத்தியாவியபிதான மலமெனு
வைந்தரமெழுத்தின் முதலீரெழுத்து மதன்மேலெழுத்து மதன்மேன்
முந்தாமெழுத்து மதன்மேலெழுத்து முறைவேகுறிக்கொண் மறையோய். ()

மூதண்டகோடி வகையிற்பிறத்தல் மூதண்டகோடி வளர்தல்
பேதுண்டுசாய்தல் வழிகண்டணுக்கள் பிணியுண்டமும்மை மலமுந்





கோதுண்டுபோக வறியாதறிந்த குணவாரிமூழ்கல் முதலா
யோதிங்கனைத்து மாமென்றிருத்தி யோரைந்தெழுத்தி லெனவே. (க0)

அம்போருகத்து முனிவன்பராவி யவைகூறுமண்ணலடியிற்
பைம்போது தூவியடிநீழனின்றுபர நாதபோற்றி யடல்சேர்
வெம்போதகத்தி னுரிதோலசைத்தவிடையூர்தி போற்றியெனையாள்
செம்போத போற்றியருளாளபோற்றிசிவ போற்றியென்று தொழுதே. (கக)

அல்லைப்பொறுத்து மயலிற்குளிக்குமளியேன் மனத்தையுருகாக்
கல்லைக்கரைத்த மொழியைப்பணித்த கனிவாய் போற்றியிமையத்
தொல்லைப்பொருப் புவில்விட்டரண்கள் துகளாய் விளைத்துமடியான்
வில்விட்டதற்கு வடுவிட்டசென்னி விறல்வாளி போற்றியெனவே. (கஉ)

பலகாலெழுந்து பலகால்விழுந்து பதமே யிறைஞ்சியருளா
லுலகாதி யுய்யவெனை யுய்யஞானவொளியாய் நிறைந்தருளுநின்
மலர்வாய்திறந்த மனுவான தொன்றை வருமாறிரங்கியருளென்
றலரோன்விளம்ப விளமூரல் கொண்டவ முதானனன்கருணையால். (கங)

கொய்யாதலர்ந்த வனசங்குவிந்து குமுதம் புதைத்தவியல்போற்
கையான்மணத்த கனிவாய்புதைத்த கமலாலயன் செவியினிற்
செய்யாமறைக்கு முதலாகநின்ற திருவைஞ்செழுத்து மனுவைப்
பொய்யார் பிறப்பினலையைக்கடத்து புணையைப் புகன்றருளியே. (கச)

உன்போலனே கர்தலமீதிறைஞ்சி யொளிபெற்ற மூலவுருவில்
முன்பூசைசெய்து தடமொன்றுகண்டு முழுமுத்திபெற்ற முறையே
நின்பூசைசெய்து வலியும்படைத்து நிகிலம்படைத்திடுதிநீ
நின்போதமென்று நினையேன்மறந்து மென்போதமென்று நினைவாய். (கரு)

குணராசதத்தினிலை நிற்றுவேறு குணமற்றிருத்தியருளுந்
துணையேறு சத்திதனூடெழுந்த சுடராலடைந்திடுதிமேல்
மணிநூல் கிடக்குமருமாவுனக்கு வகையாயுளுக்குவரைநா
ளணியேறுகற்பமுறு நாளதற்கு மளவானதைத் தெரிதியால். (கசு)

வேறு.

இயற்கைமாந்தர் குறிப்பின்றி யிமைக்கு மிமையீரொன்பதுறி
னயிற்பில் காட்டையது முப்பானமையிற் கலையாங்கலைமுப்பான்
பெயற்சிகணமுந் நான்குகணம்பேரில் முகூர்த்தமதுமுப்பான்
மயக்கிலொருநாளாம் மூன்ருய் வருநாள் பக்கமறைவல்லோய். (கஎ)

பக்கமிரண்டு மொருமதியாம் பகருமிரண்டுமதியிருது
தக்கவிருது மூன்றயனஞ் சாருந்தெற்கு வடக்குமெனப்

புக்கவயன மிரவுபகல் புலவோர்க்கொருநாள் மூந்நூற்று
டொக்கவறுபதறிஞண்டீ தொருநூற்றின் விண்ணவராயுள். (௧௮)

உம்பருகமீ தெழுபத் தொன்றாற்றால் மனுவதாமீரேழ்
பம்புமனுநாட் பகலாகப் பகுத்தநாளிலிரண்டாக
நம்பும்வருட மொருநூறு நண்ணினது கற்பமெனச்
செம்பொன் மூளரித்திருமனையிற் செறிவாயென்றான் பிறைசூடி. (௧௯)

வரிவண்டுழக்க முகையவிழ்ந்து மதுவூற்றெடுக்கு மடற்கமலத்
தெரியல் மார்பனிதழிமலர்ச் செழுந்தார் மார்பன்மொழிந்தனகொண்
டுரியசெவி நாலிரண்டானு முவட்டாவமுதுண்டுடல் சிலிர்ப்பப்
பரியுமலர்க்கணரு விதரப்பணிந்தான் விடைபெற்றெழுந்தானால். (௨௦)

எழுந்தானர் வத்தொடுமிமையா வெகினவூர்திதிகழ் சோதிக்
கொழுந்தா யொளிருந்திருமூலக் குறிக்கீசானத் திசையூடே
யழுந்தாமணி நீர்த்திரைக் கரத்தாலட்லாண வப்பேரிருள்சீக்கச்
செழுந்தாமரைப் பூஞ்சுடரேந்துந் தீர்த்தத்தடத்தைக் கண்ணுற்றான். (௨௧)

எறிக்கும்படி கத்திரடெளித்தாலென நின்றிலங்கித் தன்பெயரைக்
குறிக்குந் தடத்தீம்புனலாடிக் கொய்பூங்கலைகள் மெய்தாங்கிப்
பொறிக்கண்டிகையாற் பூதியினாற் பொலிந்து நியதிச்சடங்காற்றி
நெறிக்கொண்டரு மாமறைக்கொழுந்தாய் நின்றான்றிருமுன் சென்றானே. ()

இருளாய் வெளியாய்ப் பரபதமாயேகமாகிப் பலவாகித்
தெருளாயகண்ட முழுமுதலாய்ச் செறியாதெவையுஞ் செறிந்தபரம்
பொருளாய்ப் பசுபோதங்கடந்த புரையோருள்ளத் தகம்பழுத்த
வருளாய் நின்றபிரமேசனடித் தாமரைகண்டஞ் சலித்தான். (௨௩)

உருகியுருகிநெக்கு நெக்குள்ளுடைந்து குழைந்து மலர்விழிக
ளருவிகொழிப்பவுறப் பைந்தாலட்டாங்கத்தால் வீழ்ந்திறைஞ்சிப்
பெருகியொளிகால் சிவலிங்கப் பேரானந்தப் பெருஞ்சுடர்முன்
மருவிநறுமஞ்சனமாட்டி வழிபாடிழைத்து மலர்தூவி. (௨௪)

தென்பால் வடபால்மேல் கீழ்பால்சிகைவெஞ்சுடர் செயருக்கன்மிசை
யின்பால் விழிவைத்தைந்து மவித்திழைத்தாயிடை யாண்டாயிரமு
நன்பாலாற்றிவளியுண்டு நலஞ் சேரைந்து பதங்கூறி
யன்பாலாறு மடக்கியெந்தை யாராதனையுங் கடைப்பிடித்து. (௨௫)

கோவேபோற்றி யாதிமறைக் கொழுந்தேபோற்றி யருள்குழைக்குங்
காவேபோற்றி மெய்ஞ்ஞானக் கண்ணேபோற்றி யென்னிடும்பை
மாவேதனைக்கோர் மருந்தாகிமதிமாசகற்றி மறித்தாண்ட
தேவேபோற்றி தோணிபுரச்செல்வா போற்றிசிவ போற்றி. (௨௬)



பின்னல்மௌலிப் பெருமுனிவர்பெட்பமறையின் பொருளனைத்து
மன்னுங்குருவாய் வடநிழற்கீழ் வதிந்துபுகன்றவியல் போற்றி
முன்னமறையின் விரிவையெல்லாமுழங்குந்தவளைக் கிண்கிணிக்காற்
கன்னல்மழலை மகவுரைப்பக் காதுகொடுத்தநிலை போற்றி. (௨௭)

இனையபலவும் வாழ்த்தெடுக்குமீர்ந்தண் கமலத்திறையோன்முன்
முனைவனிமையப் பாவையொடு முக்கட்பெருமானெதிர்தோன்றி
யினையலுவந்த தளித்துமெனவேறூர்தோன்றலுன் கழற்கால்
வனையுமலர்த் தாமரையடியேன்மன வாவியினிற் பெறல்வேண்டும். (௨௮)

ஏணியாய விவ்வண்டமினிதுபடைக்கலுறு சத்தி
பேணியளித் தாட்கொளல்வேண்டும்பொருமானினதுதிருத் தொண்டிற்
கோணிலாத குற்றடிமைக்குழுவோ டெனையுங்குறிக்கொளீள
மாணிளெளியேன் பெறல்வேண்டும் வரமீகென்றான் பரமேட்டி. (௨௯)

அள்ளற் கமலத்திறையிவ்வா றறையக்குறையாவர மனைத்துங்
கொள்ளக் கொடுத்துப்பேரருளுங் கொடுத்துக்ககனத்திடை மறைந்தான்
றெள்ளித் தெளிந்தவமுதநிலாத்திசைசூழ் வளைப்பச் சுடர்கொழிக்கும்
வெள்ளிப் பொருப்பிலிவர்ந்ததெனவெள்ளேறி வர்ந்தவிரிசடையோன். (௩௦)

கதிர்கா லொற்றைக்குழைக்கிழவன் ககனத்திடைபோக்க யர்தலொடுங்
கோதிவே லலைத்துக்கயல்மருட்டிக் குழையோடெதிர்போ மழைமதர்க்கண்
மதிவாணுதலார் நிலையழகிமலர்த்தாள்பரவி யிருவருக்குந்
துதிசால் கனகப்பெருங்குடுமிச் சுடர்ப்பூங்கோயி லினிதமைத்து. (௩௧)

வெண்ணந் துயிர்த்தமணிமுத்தம் வெடிவாயாம்பல்முகைய விழ்க்குந்
தண்ணந் துறைநீர்ப்படிந்துறையுந்தடமா மதிலும்புடைதிருத்தி
யெண்ணும் பொறுசீர்பிரமதடத்தென்ன கடவுட்டீர்த்தமெல்லா
நண்ணும் படியுய்த்தளிதுளும்ப நான்குமருங்குந் தளமமைத்து. (௩௨)

விதிப்பேரண்டப் பரப்பகத்தமேல் கீழுலகு நெடுந்திசையு
நிதிச்சாகரமு நடப்பனவுநிற்கின்றனவுமோ ரிரண்டு
கதிர்க்கா வலரும்பிறபொருளுங் கண்டான்றண்டாமரைக் கரத்தாற்
பதித்தான் கடவுட்கணித்தாகப் பாரிசாதத்தருவொன்றை. (௩௩)

ஆள்வேட் டுழன்றுசெவ்வரிதோய்ந்தயிலைத்துரந்து கயலலைத்து
வேள்வார் கணையைப்புறங்கண்டுவிழையப் படர்ந்துகுழைகடந்து
வாள்போற் பிறழும்விழிகளுங்கைம்மலரும் பாதவழிச்செல்ல
நாள்வா யெழுந்தமின்போன்று நம்பன்றிருமுன்னடிப்பாரை. (௩௪)

ஒலிக்குங் கருவியைந்துமிசைத்தொழுகுவாரைச் சிறையறுகாற்
கலிக்கு மலர்ப்பூந்தெரியல்வினைக்கைவல்லாரைச் சிவகருமம்

பலிக்குங் கிழமைச்சைவதவப்பான்மையோரை யிருள்பருகிச்
சொலிக்குஞ் சுடர்ச்செந்தீபநிரைத்துகடீர் செய்கைத்தொழிலோரை. (௩௫)

பாயதிருமஞ்சனமெடுக்கும் பரிசாரகரைத் திருமேனிக்
காயபசும் பொற்கல நிறைத்தவரைக் காவலரைச்சுரபிகளை
யேயபணியிற்பழு துடைத்திடு கிற்பாரையிறையடிக்கே
தூயகருத்தானகம்படிமைத் தொழிலாலுயர்ந்த தொல்லோரை. (௩௬)

வல்லையியங்குஞ் சாரணரை மடைவல்லோரை மாகதரைக்
கொல்லவினை ஞர்மட்பகைஞர் குவளைக்களத் தெந்தோணிபுரிச்
செல்வன் முடிக்காட்டினராதி செறியுந்துகள் மாற்றுனரீரு
வெல்லையிகந்த பணிவிடையிலிக வாதொழுகுமியல்பினரை. (௩௭)

முளரிமாலைக் கவுணியர் கோதமர்முற்கலர் பாரத்துவாசர்
வளராரீத ரெனக்கிளந்தமறைக் கோத்திரத்து முனிவரரைப்
புளகமறையாகம மலர்ந்த புணரிமடுத்தமுதுகேள்வித்
தளராவாதிசை வகுலத்த ருமப்பான் மைக்கடவுளரை. (௩௮)

சேராரிணைச் செஞ்செவி புதைக்குஞ் சீர்த்திபுனைந்த பார்த்திபரைப்
பாராவறுமையிரு டிரக்கும் பானுவனைய வணிகர்தமைச்
சாராதுலனாக் கடவுளரைத் தமையொக்கலைத் தென்புலத்தாரை
யேராலுழந்து புரந்தந்தாங் கிறையேவலின் வாழ்பின்னவரை. (௩௯)

மங்குலுறங்குங் குறுங் கோட்டுவருக்கையழி சாறுவட்டெடுத்துச்
சங்குதவழுமடையுடைக்குந் தடஞ்சூழ் தோணிபுரம் புரக்குஞ்
செங்கண் விடைப்பாகனுக்குரிய செய்கைக்குடிமைத் திறலிவரை
யைங்குரோ சத்தெல்லையினு மமைத்தானிழலுஞ் சமைத்தானே. (௪௦)

வைகறுேறுமைந்து மகமாருக்குடிகள் பற்பலவுஞ்
செய்கலாற்றுவளனேங்கிச் செம்பொனுலகினெழில் காட்டக்
கைகொளுாகக் கங்கணத்தான் கடிவிழாவுமினிதாற்றி
மெய்கொள்மறை யோனுயிர்க்குயிராய் விரிந்தான் பூசைபுரிந்தானே. (௪௧)

பலநாளினைய பணியிழைத்துப் பரவுங் கமலமுனிகாணக்
குலமாமறைதேர் சிவலிங்கக் குறியூடெழுந்தின்னருள் பூத்து
நலனுலனதுபணிமகிழ்ந்தோ நாளுமெமது திருத்தொண்டிற்
புலனுயர்ந்த வுனையாரே பொருவாரென்றான் பொருவில்லான். (௪௨)

முன்னுளுன்னோர் மறைமுதல் வர்மூழ்கிக்கண்ட தடமிதனிற்
பொன்னுரமுத நிறைமதியம் புணர்சித்திரையிற் சித்திரைசே
ரந்நாள்படிந்தாரிடும் பைவினையதனிற் படியாருள்ஞானம்
பன்னுள்படைத்து நின்னுலும் படையாநிலைமை படைப்பாரே. (௪௩)



கிழமைபூண்டு மதியாறிக்கெழுநீராடில்வந்திவரு
மழலைமிழற்று மிளந்தளிர்வாய் மகப்பேறடைவார் துறக்கமிசை
முழுமாமதிவாண் முகத்தியர் தோண்முழங்குவாருஞ் சலசரமா
யொழுக விழைவாரென்னிலெடுத் துரைப்பதெவனோ பரப்பாக. (௪௪)

உறுதிபயப்ப நின்னுழையா முரைத்தவோராந் தெழுத்தையுளத்
தறனில்லவர் பாலுரையற்கவான்ற கற்பமுடிவுழிபோந்
திறனில்வருகவென மூலக்குறி யூடொளித்தான் செருக்ககன்று
மறனில்லவர்க்கோர்களை கண்ணுமாறுக் கருணைவானவனே. (௪௫)

துன்றும்பழையமூதண்டந் துலைந்த ஞான்றுந் துலையாம
லென்றும் பிரமன்றனைத்தந்து மேனைப்பொருளுந் தரலாலீ
தொன்றும்பிரம புரமிதில்வாழொளியே பிரமலிங்கமின்னீ
ரென்றும் பிரமத்தடமெனவே யெறிநீர் ஞாலத்திலங்கினவே. (௪௬)

கன்னிக்கமுகினெருத் தலைத்தகமஞ் சூற்பாளை முகங்கிழித்துச்
செந்நெற்படைப்ப விளிம்புடையச் செந்தேனுடிச்சினவாளை
பொன்னித்துறையாட்டயர் தோணிபுரத் தான்றிருமுனிக்காதை
முன்னிப்புகன் றோரெவரேனு முத்திநிலத்து வித்தாவார். (௪௭)

இன்னகடவுண்மான் மியத்தையினிது கேட்போரெழிற் புலன்சூட்
டன்ன லூர்தியுலகிலவனுயுள் வரையுமாங்கிருந்து
பின்னரிழுக்கா விழுக்குடியிற்பிறந்து ஞானப்பெரும்படையால்
முன்னைவினையின் கட்டறுத்துமோன வீடுமெய்துவரால். (௪௮)

கோட்டுமெதியந்தவழ்மாடக்குடுமி தொடுத்த கொடிநிரைகள்
நாட்டுங்கனகத்தலம் புதைப்பநகைவெண் சுதையால முதநிலா
வீட்டும் பிரமபுரத்தியலீதென்றுன கந்தையிகலெறிந்து
வாட்டுந்தவத்துச் சவுனகனே முதலோருவப்பமா முனிவன். (௪௯)

பிரமபுரவத்தியாயம் முற்றும்.

ஆக. திருவிருத்தம். ௩௬௬.

---

# திருவிழாவத்தியாயம்.

ஏற்றியலு மெந்தை பிரமாபுரியியற்கை
சாற்றிய சொல்லார முதுதஞ் செவிமடுத்துப்
போற்றிய தவர்க்கருள் புராணமுனிவேத
வூற்றியவிழா வணியறிந்த துரைசெய்வாம். (௧)

மாற்றுமகநின்ற கமதத்தின் வழியெய்தித்
தேற்றுமறைவாய் மைகடெளிந்து சிவனன்பர்
காற்றுணைபடிந்து பலகாலும் விரதாதி
நோற்றவர்களே பரமநூலை விழைகிற்பார். (உ)

ஆதிசிவலீலைகளை யார்வமொடு பாரித்
தோதினருமன்னதை யுகந்தவரும் வைத்துப்
போதமோடருச்சனை புரிந்தவரு மன்றே
சீதரன்மலர்க்கணணி சேவடியில் வாழ்வார். (ங)

எய்தரியமானிட மெடுத்துமிறை காதை
யைய்துமுணராது புல்லடர்ந்த நிலம்விட்டு
மெய்தளர் பசிக்களரின் மேவிய பசுப்போல்
வெய்துறுவர்கால னிடைமேலுறுவ தென்னே. (ச)

வாரமுறு மெய்த்தவ வரத்துமுனிவீர்காள்
பாரமுதுவான ளகுபாரிவியல் பூதச்
சாரமொடு பூதமது சார்ந்தபரிநாம
மாருமுடலெய்த வுறுமாருயிரவற்றுள். (ரு)

புத்தியொடுநல்வினை புரிந்தவர்க ளின்பச்
சுத்தவெளிமேவிய துறக்கமிசை யெய்திப்
பத்தியொளி காலெழில் படைத்தடிநிலத்தே
வைத்திடவொழிந்து புலராமலர் மலைந்தே. (சா)

ஓர்பொறியறிந்த புலனோர் பொறியினூடே
சார்தலில தாமது தனக்குநிகராக
வேர்படரு மின்பநிலையேயுணர்வ தல்லாற்
சூர்படுமிடும் பைநிலைசூழ்ந்து மறியாரே. (எ)

மைம்மலிநெடுங் கணரமங்கையர்கள் கொங்கைக்
கொம்மையெழி லாடுமிரு கோடுகளுழக்கச்
செம்மைமுகை விண்டுவிழி தேனொழுகுதண்டார்
மொய்மலிபுயத்தர் கண்முகிழ்த் தறிகலாதார். (அ)

அம்பவள வாயரணி மூரல ரலர்ந்த
செம்பதும வாண்முகவர் தெள்ளமுதின் வந்த
* கொம்பரனை யாரமுது கொள்ளமுது மேனு
ளும்பர்கடை வேலையமு தும்பருக லோவார். (கூ)

* கொம்பரனையார் கலவி கொள்ளுமது மேனுள் என்பதும் பாடாந் தரம்.



வெம்புதுளி வேர்வையறு மேனியிசை வானு
வம்பவிழு மைந்தருவின் மாநிழல் வதிந்து
பம்புமிசை யைங்கருவி பல்குமிசை யுண்டுந்
தம்புல நயப்பொடு தணப்பர் பலகாலம். (கo)

நாகமொழி நாள்கள்பதி னைந்தென விமைப்பார்
சோகமுறு வாருயிர் துறக்கமு மிழப்பார்
மோகமுறு தீவினை முயன்றுபெறு பூத
தேகருறு மாநிரயமுஞ் சிலதெரிப்பாம். (கக)

வாஞ்சையுறு தீவினைஞர் வம்மென மறித்துப்
பூஞ்சிகைய வெள்ளெரி புதைந்த நிரயத்தே
நாஞ்சிலொ டொறுத்துமெரி நாந்தக நிறைத்துந்
தாஞ்சமன டும்படர் சவட்டலொழி யாராய். (கஉ)

வறுத்தமணல் கீழுமணல் மாரிதலை மேலும்
பொறுக்கவழி யிட்டடியி னூசிகள் புதைத்துஞ்
செறுத்துலரு பங்கியொடு தீயெழ விழித்துந்
தறிப்பருடலின் றசை தகர்ந் துதிர வன்றே. (கங)

துடிப்பவொளி யாடெரி துளும்புசுடு பாளங்
கொடிற்றிடை யிருத்தியெறி குந்தமிசை யுய்ப்பார்
கடிப்புன லிடைத்திரி கயற்குலம் வளைத்துப்
பிடித்துயி ரகற்றிய புரட்டர்களை யம்மா. (கச)

கைப்படு குடம்பையுறு புட்கவரு வாளைத்
துப்பெரி விலங்கொடு துவைப்ப ரயல்வாழு
மைப்புருவ மங்கையை மணந்தவரை வெந்தீச்
செப்புருவ மங்கையொடு சேரவணை விப்பார். (கரு)

நோதக விலங்குகளை நூல்வலையி லார்க்குங்
காதகரை ஞாளிகள் கனன்றெயிறு கவ்வப்
பாதமடி யொட்டிநுதி பாயவிழி செந்நீர்
போதர வுறுத்துவர் பொருப்பனைய தோளார். (கசா)

சார்நிலை பெருதுயிர் தளர்ந்தழு விலங்கைக்
கூர்கருவி யாலுடல் குறைத்தமட வோரை
வேர்மறலி வீரர்தன் மெய்ம்மயிரி னென்றுக்
கோர்தசை படப்பட வுரித்தரிதல் செய்வார். (கஎ)

மின்படு சடைப்புனிதன் மெல்லடியை விள்ளா
வன்பர்க ளெதிர்ப்படி னடித்துணை தொழாரை

வன்புறு விழிக்கெரி மணிச்சுரிகை யிட்டுத்
துன்புறு தடக்கைகடுணித்திடுவர் வாளால். (கஅ)

நாதன்முது காதையை நயப்பொடு விரும்பாச்
சாதகர் மனத்தர்தலை காதொடு தெறிப்பக்
கோதற மலைந்து சதகோடியுரு மென்னத்
தூதுவர் புடைப்பவவர் சொல்லியலு மற்றே. (கசு)

வள்ளலடி யார்தமை வருத்துன ரனுக்கத்
தெள்ளளவு மேவரிசை வார்மறை யிசைக்கும்
பிள்ளைமுனி யால்வலி பிழைத்தமை வழுக்கா
துள்ளவ னுரைப்பதை யுரைப்பதெவ னேயோ. (உ0)

மழுக்களெறி பட்டுதிரவாரிமிசை பாயப்
புழுக்கள் குடையப் பதைபதைத்துடல் பொருரா
லெழுக்க லடியாலழலெரிச்சிகையினுல்வெங்
கழுக்கடை யினு ளளவில்காலம் வதையுண்பார். (உக)

செக்கி னுழல்வார் திரிகையிற்சுழலுவார் தீப்
புக்கயருவா ருறுபுலாலழிகுவாரால்
முக்கணமலன் பழையமூவறு புராண
மெய்க்கதையினைப் பெறவினுவு மறிவில்லார். (உஉ)

வன்றொடரினிற் கழுவில் மாமுளிலவத்திற்
கொன்று மெழுவித்தூடுவென் றமர்குமைப்பக்
கன்றிய பசுங்கனனல்காரெயிறு காட்டி
நின்றலறுவார் கொடியரீணிரைய வாணர். (உங)

நீர்நசைபெருது தசைநீர்பெருகியங்கட்
சோர்பவ ருயிர்க்கு துவிதூ தருவழ யுண்டோ
காரெலியை வாயொடுகவர்ந்துதறுபூசை
யாரழினு மெள்ளளவதற்குதவி யின்றே. (உச)

காந்து துயரன்றியொருக்காலு நலமின்றித்
தேய்ந்து நரகத்துறுநர்செய்தியிவை யின்னு
மேய்ந்துயிரி னேறுமிரட்டைவினை தம்மாற்
போந்துபய னுண்ணும்முடல் பூதபரிநாமம். (உரு)

வேறு.

இப்பூத பரிநாம யாக்கையினை யிருவினையின்
வைப்புறு சதிலயத்தால் வரப்பெறினும் பொருப்பகமுங்



கைப்பூறு வருங்கூவற் கடறுடைய நாடுமொரீஇ
யப்பூற வளனூறு மணிகெழுநாட் டுறலரிதே. (உசு)

வெண்ணிணத்த வெயிற்றெயின ரிழிகுலமு மீன்படுக்குங்
கண்ணிரைத்த வலைஞர் கழிகுலமு மகன்றொருவிப்
புண்ணியத்தொல் குலத்தினிடைப் புகவரிதா மதிற்புகினும்
பெண்ணொழித்துப் பழுதொழியப் பெறுதலு மிக்கரிதன்றே. (உஎ)

இன்னணமே சென்னிறத்த வெழிற்பவளத் தடம்புலத்திற்
பொன்னணிமுத் துருக்கனைய பொரிபரந்த வமையத்து
மின்னலுமொக் குளும்போன்று வீயினும்வீய்ந் திடுமிலையேற்
பின்னரும்வெண் ணெயிற்றிரண்டு பிறந்திடவும் பெறுமதுவே. (உஅ)

கூன்புறத்த யாமையுருக் கொண்டறினு மறுமின்றே
யூன்புறத்தி லுறுமமையத் தொழியினுமாங் கொடிநாபி
யீன்புழைக்கு ளிரதமடுத் தெழினிமெழு முழுமதிபோற்
றுன்புரத்தி லுதித்தளவே சாயுமது தணந்திடினும். (உகூ)

விரிநிதிய மிரவலர்பால் வீசிப்பேர் புனையுழியு
மிரியுமகன் குளத்துமலரென வளர்ந்துமையாடி
முரியவுமா முருகெறிபழுதுணர்கேள்விகடுறைபோய்
வரிநெடுங் கண்ணியருருகமாயு மதின்மாயாதேல். (ஙo)

பஞ்சிபுனை செம்பதுமப்பாட்டிசையக் கிண்கிணிக்கால்
வஞ்சியர் தோரணலம்பருகி மல்கியநாட்பலசனமு
நெஞ்சுருகி யழன்றுசெங்கை நெரித்தலற வுருத்தெழுந்த
செஞ்சிகை வெங்கூற்றனுகச் சிதையுமிது திறம்பிடினும். (ஙக)

மழலை மொழிச்சிறுவரொடு மாழாந்து மூப்பலைப்பக்
கழலுறுப்பி லுரையாடிக்காய்பிணி வெம்புலிபாயக்
கிழவனகன் றொருபிணமாய்க்கிளைக் கவைநாவலைத்தயிலு
மழல்கதவும் புறங்காட்டி லணையுமது வொருதலையே. (ஙஉ)

வெள்ளிடையின் விளக்கமெனவிள்ளுபரிதனிலைமை
யுள்ளியுணர்ந்தவர் வாளாயொழிப்பரோ வொருகணமுங்
கிள்ளைமொழிப்பாக னிசைகிளக்கவுங்கேட்கவு நமர்கா
ளுள்ளதவப் பேறிதனி னுண்டுகொலோ வுயிர்க்குறுதி. (ஙங)

அளக்கரிய தவப்பேற்று லழுக்கறநல்லான் வயிற்றிற்
கிளக்கரிய பலநூறுகிடைக்கில் மறையவனுவா
னிளக்கமுற வதிற்பரமனியல்கேளா ரிழுக்குட்டம்பு
துளக்குமரப் பாவையன்றே தோன்றிடினுந் தொழுகுலத்தே. (ஙச)

தொழுகுலத்தாரேனு மொருதோடுடையான் றிருக்காதை
முழுமதியினெடுங்கேளார் முகனோக்கக் கிடைத்தவினை
யெழுகொளி வெம் பருதியழலுதகமறையவர்பசுக்கள்
மழவிடையாதி யகன்மொற்றுவரால் மதிவல்லோர். (௩௫)

வாலாமைப்பிறவி யதின்மழுவலான்புகழ் கேட்டல்
மேலாராதனை யிழைத்தல்மெய்யடியா ரடிபோற்ற
லேலாதேலென் னுறுதியிதுகேட்கவிரும்பு முமைப்
போலாரே யுளராவார் பூதலத்துமீ தலத்தும். (௩௬)

பின்னுமுனிவரர் கேட்பப்பெருந்தவத்துக் கயமுனியாற்
றுன்னுமறை யெழுதுமுனி துணையடிக டொழுதமுனி
மன்னுமலர்க் கமலமுனிமதிமிலைந்தமுடி முனிக்குப்
பன்னுபிரமாபுரத்திற்பணித்தவிழா வளனுரைப்பாம். (௩௭)

திரியுமிருட் குறும்புடைத்ததிங்கள் முளைகிடந்திமைக்கு
முருகலர் வேணியன்மகிழ முதன்மதியின் வளர்மதியின்
விரிநிலமுங் கீழ்மேலாவிரிநிலமு முணரமதக்
கரிமுதுகி னெந்தைவிழாக்கடிமுரச மிரட்டுதலும். (௩௮)

உரைதரு வேதியர் முன்னுவுள்ளவர்க ளெள்ளருஞ்சீர்
வரையரு தொல்லுருத்திரர்வா ழுலகமென மகிழ்தூங்கி
விரைமல ராளரசிருக்கைவீதி மனைமாலைதொறுங்
கரையறு பல்வளனூட்டிக் கடிநகரமெழில் புனைவார். (௩௯)

கற்பாரு மடந்தையருங்காளையருங்கை தூவார்
பொற்பாரு மலர்த்தொடையற் பொலிந்துறுங்குப்பைகள் களைவா
ரெற்பாரு மணியலகாலெம்மருங்குந் துகள்விளக்கி
நற்பூழியுள் ளடங்கநறியபனிநீர் தெளிப்பார். (௪0)

வருங்கொடியேற் றென்றென்பார்மான்றலை நாளெனவுரைப்பார்க்
கொருங்குவகை தலையுய்ப்பாரோர்தின மோருகமென்பா
ரருங்கடிகாணிய வென்றேவலர்விழியு யகலமுமே
மருங்குதுடித்தன வென்பார்மனவெழுச்சியொடு நிகழ்வார். (௪௧)

சுதைகொடு மத்திகைபுனைவார் தோரணங்கள்பல நிரைப்பா
ரிதமலிகுங்கும மெழுகியெரிமணித் தெற்றிகள்புனைவார்
நிதிமணி யோவியம்பொறிப்பார் நிறைகுடமும் பாலிகையும்
விதமலியும் பளிக்குமணிவேதிகைக டொறுமமைப்பார். (௪௨)

பூவணைத் தண்புனறெளிப்பார் பொற்றிரள்கால் பத்திபுனை
காவணத்திற் பழக்குலையகதலி கமுகொருங்கமைப்பார்



தூவணத்த் சுடர்நிரைபொற்றுளங்கொளி யாடிகள்பதிப்பார்
மாவணத்த பாவைபெறுமணி விளக்கினிரை நிறுப்பார். (௪௩)

தண்ணளிக்கோர் வரம்பாயதலைமைமறைப் பொருள்விரிக்கு
மண்ணலடியவ ரிருக்கை யவிர்மணிப்பீடிகை சமைப்பார்
சுண்ணமிறைத் தெம்மருங்குந்துயல்வரு பூந்தொடையசைப்பார்
வண்ணமணி நித்திலமுமரகதமாலையுஞ் செறிப்பார். (௪௪)

கோட்டுநிதவனா முகத்திற்குங்குமமேரடைக ளணிவா
ராட்டுபரியணிக ளமைத்தைங்கதி யுமியறெரிவார்
பூட்டுமணித்தே ருதையப்பொருப்புறழத் திருப்புனைவார்
நாட்டுரு பொற்கலமேந்தி நவமணித்தீவகமிடுவார். (௪௫)

காசறையுங் கற்புரமுங்கமழமணிக் கலனேந்திக்
கோசிகமென் கொம்பரெனக்குயிலின் மொழிந்தயிலின் விழித்
தேசறுமெவ் வகையுயிருமிரங்க மணியாழ்வருடி
வாசமனைதொறு மடவார்மங்கலங்கள் பலபுகழ்வார். (௪௬)

அருட்கட்லைம மறைக்கிழவர்க் கறுசுவைநால்வகை யமுத
மொருப்பட வங்கினிதளிப்பா ரும்பர்பிரான் பழவடியார்
திருக்குறிப்பி னெறிநின்றதெள்ளமுத மடுத்திடுவா
ரொருத்தரின்மு னொருத்தரின்ன வோகையினிலமுந்துவரால். (௪௭)

வேறு.

இவ்வா றெங்குங்களிசிறப்பவீர்ந்தண் கமலாசனத்திறைவன்
சைவாகமச் சுப்பிரபேதஞ்சாற்றுமியல் தோராற்றலினுற்
செவ்வா ரழற்காசினத்தாலுஞ் செம்பொனாலுந்திசை பொதிந்த
மைவானிருள் சீத்தொளியு மிழுமணிமண்டபமொன் றலங்கரித்தான். (௪௮)

பவளம்பழுத்து மரகதத்தப்பசும் பாசிலையிட்டொளிமுத்தந்
திவளும்பாளை வெண்பொன்னுற்செழித்த கணைக்காற்கமுகநிரீஇத்
துவளுங்கனகத்தா றரம்பைசூழ விருத்திநீடிய விட்
புவனமலர் மீனனையமுத்தின் புல்லார்மாலைப் பட்டங்கசைத்து. (௪௯)

செம்பொற் சினையதருக் குலங்கடிசைதோறான்றி யிருளுடைக்கும்
பைம்பொற்படி மக்கலந்தூக்கிப் பைம்பூந்தென்றல் புறந்தவழு
மம்பொற்சிறு சாளரந்திருத்தியரிவாயதரச் சுடர்பரப்பி
விம்பப் பொகுட்டுக்குறுத்த முளைவிரைப்பாலிகைபற்பல நிறைத்து. (௫0)

வானின்றிழிந்த விருநிதியுமணியும்பொருத்தியலை யுயிர்த்த
தேனின்றிழி பூங்குழன்மடவார்செங்கைக் கோலம்பெறவளைத்துச்

கானின்ருெளிர் சாமரைதோட்டிக்கயல் கண்ணடிமென்கொடி முரசு
தானின்மலர் பூஞ்சுடர்கிறைநீர்த்த சும்போடெண்மங் கலந்துலக்கி. (ருக)

வெளிறுபனிநீர் குங்குமநீர் விரைமான்மதஞ் சாந்தொருநான்கா
மளறுமெழுகி யகம்புறமென்றறியாப் படிகச்சுவர் தோறுங்
களிறும்பிடியுமறிப் பிணவுங் கலையுங்கோட்டிக் கனகநிறத்
தொளிறும்பாவை துணைக்கரத்தி லொளிமாமணிச் செஞ்சுடரேத்தி. (ருஉ)

தாமமாலை கற்பகப் பூந்தருவின் மாலைசுவராற்றி
யோமமாலை மந்திரநூல் யோகமாலை நறியவிரைத்
தூமமாலை யேனையவுந் தொடுத்தமாலை மயனியற்று
மேமமாலை விழாவிறைஞ்ச வெழுந்தார்மேல் கீழிருந்தார்கள். (ருந)

மென்றுகிண நீர்முடைமாரு விரலார்கணிச்சிப் பெருந்தடக்கைக்
குன்றுபுரை தோயுருத்திரர்கள் கோடியமைந்த பதினொருவர்
சென்றுதிரைநீ ரெறிமுகட்டிற் சிலைமத்தெறிந்த மலர்க்கரத்தாற்
கன்றுகுணிலாக்கனியுகுத்த காயாமேனிப் பசுந்துளவோன். (ருச)

ஓராயிரங் கண்மலர்பூத்த வுருவத்தொருவன் முதலெட்டுப்
பேராகியமாதிரத் தலைவர் பெருகத்திறலேழ் மருத்துக்கள்
சூராதபர்தாமாறிருவர் துளிக்குமமுத கலைத்திங்க
ளாரார்விழியன்னைய ரெழுவராயுள் வேதமருத்துவர்கள். (ருரு)

சித்தரியக்கர்வசுக்கள் மணிச்சிரத்து நாகரரமாதர்
நித்தர்வடுகர் வேதாளர் நிருதர்யோகர் கந்திருவர்
வித்தியாதரர் நாரதன் சனகன் வியாதன்புலியன் பதஞ்சலியோன்
வைத்தவசந்தன் குறுமுனிவன் வருட்டமயனம் பருவங்கள். (ருசா)

மதிசூழ்பக்கம் பகலிரவுவாரி நதிகளருவரைகள்
விதியைம் பூதந்திக்கயங்கள் வேதாகமங்கள் திருவாணி
முதிர்மாதவத்துள்ளவர் பிறரு முறையே தத்தமூர்திமிசைக்
கதியாலனைந்தாரயனுற்றுங் கடியார்வீதி முருகாரூர். (ருஎ)

எழுந்தசிலர் பிரமபுரத்தியல் மேற்கருத்தருருகுபுனல்
பொழிந்த விழியர்பணிவேட்கும் புலவரொடும் போந்தலர்மேலோன்
பழங்கணிக்குஞ் சிவபெருமான் பாதம்பழிச்சி யெம்மடிகேள்
குழந்தைமதியேனிழைக்கும் விழாக்கொள்வாயென்றின் னருள்பூண்டு. (ருஅ)

குவளைக்குறுங் கட்பிறைக்கோட்டுக் கொழிக்குங் கரட்த்தழைசெவிய
கவளக்களிற்றைங் கரன்பூசைக்கடன்களாற்றி மறுகுதொறு
மவிர்தத்தகுசாந்தியு மாற்றியடரங்கு ரத்துவினை முடித்துப்
புவனப்பெருமான் றலைசிறப்பப்போற்றும் பெருமான் றலைநாளில். (ருகூ)



எடுக்குஞ் சமயத்துறைதோறு மேற்றம் பாசுபதமென்று
மடுக்குந் திருத்தொண்டுடையார் மாட்டடையாதன மும்மலமென்று
நடுக்கும்பவத்துக் கொருமருந்து நன்னீரென்று மோனமுத்தி
கொடுக்கும் பெருமான் பிடித்ததனிக்குணவெள்ளேற்றுக் கொடியேற்றி. (சாo)

இருமங்கல தூரியமியம்ப விசைமங்கலஞ் செய்தனையசிவ
தருமங்கலந்தமறை முதல்வன் றகைசாலன்பி னருள்பூத்த
மருமங்கலந்த விதழியினுன் மனத்தாரறிந்தவளகேசன்
றிருமங்கலத்தினெழில் புனையச் செம்பொன்மழைக் கீட்செலவயந்தான். ()

வாதத்துறையும் பரசமயவழூக்குத் துறையுநீத்தொருதன்
பாதத்துறையன் பினர்க்கருளப் பாகத்துறையும் பூவையொடு
நாதத்துறையு நாதாந்த நவிற்றுந்துறையு மளப்பரியான்
வேதத்துறையின் முறைபிறழா வேள்வித்துறையின் றலைவந்தான். (சாஉ)

வேறு.

சந்தைப் பெருமறைமுந்தைத் திருமொழிதருமுந்நூ லவனொருபொன்னூல்
பந்தத்தொழின் முதலர்ராதனை சிவபாராயணர் செயவருவான்முன்
கந்தப்புரிகுழல் விந்தைக்கிளிபணி கயலார்விழியுமைமயில்காணத்
தந்தித்திருமுகனந்தக் குகனிவர்தகை செய்யொளியொடுமெழில் செய்ய. ()

ஓராயிரவனை பேரோதையின் முதிரோதக் கடலெனநாதிப்பச்
சீரார்கரமிசை நேரேநிரைகொடுசென்றே பலகணநின் றூதப்
போராதயலயல் பூதத்தலைவர்கள் பெருமங்கல வொலியெழுவிக்க
வாராருமின மொருகோடிகளெனவாணன் குடமுழவொலிபம்ப. (சாச)

வானத்தவரிசை பலதுந்துமியொலிமட்வார் நடவொலி கடமாவின்
தானப்புனலொலிதாரைத் திரளொலிதாளச் சதியொலிமணிவீணை
கானத்திரளொலி பலபல்லியவொலி கல்லென்றுறுதிசை செல்லச்சூழ்
ஞானக்கடலொடு சூரற்படைகொடு நந்தித்திருமுனிவந்திக்க. (சாரு)

மகவானுயர்தரு மலர்சிந்திடவெதிர்வருணன் பனிமழைநனிபெய்யப்
பகலோன்கலை மதிபளிதச்சுடர்நிரைபணிமாறின ரிருபுடைபோதத்
தொகுமாரழலிறை தூபந்தரவொருதோழன்றமனிய மலர்தூவ
நகைகாண்வரு முனிவரர்வாழிகள்சொலநதி நாரியர் கவரிகள்வீச. (சாசா)

நீடஞ்சலிபுரி மாரன்பரிவொடுகிறைமாலிகைதர நிறைமன்றி
னாடங்கணன் முனமாடக்கண்ணிரையணி வீசணிகொளவகிலேசன்
சேடன்பண மணியடருஞ்சுடர்கொடு திசைநாலினும் வளரொளிசெய்யக்
கோடம்பெறுகடல்மதிபோலலர்குடை குண்டோதரன்முறை சொண்டேக.

ஞானக்கொடிபுணர் களிஞலையமுனி நலியாதிறையருள்வழிநிற்பச்
சேனைக்கொடியடலெகினக் கொடியிடிசெறியுங்கொடியடு சிலைமாரன்
மீனக்கொடிபல சேவித்துடன்வர விடையின்கொடியவை நடுவாக
வானத்தெழுதர மகதித்திருமுனி மணியாழிசை செவியமுதூற. (௬௮)

படகஞ்செறிகிணை யொளியாகுளிவயிர்பதலைக்குல மடல்கெழுமொந்தை
துடிதுந்துமி முழவடுசெல்லரியிசைதொகு தண்ணுமைவகைபல பொங்கி
யடருங்கடலென வெவையுங்குளிறிடவரன்வந்தனனொ ருகளிறின்ற
பிடிவந்தன ளெனவொலிதந்திசையொடுபீலிக் குலமவையாலிக்க. (௬௯)

கண்ணன் கரமலர்நண்ணும்பொழுதொருகரபங் கேருகமலர்வைத்துத்
தண்ணஞ்சுடர் மணிமானத்தினிலுயர்தானத்தவர் தொழவினிதேறிக்
கண்ணம்புயமலர் மலரக்கரமலர்குவியப்பல முனிவருநாளும்
வண்ணந்துதிசெய மணிமாநகர்வலம்வந்தாளெளிமையின் வாராதான். (௭௰)

மாமாரிக ளெனவடியாருருகணமணி நீர்பொழிதர வடநூலின்
பாமாரிகள்விரி திக்கெட்டினுமறைபயில் மாமுனிவரரியலோதத்
தேமாரிகள் மூழுமணிமாறிகளெறி திரையார்கலிதரநிறை விண்ணோர்
பூமாரிகள் பொழிதருமாலயமது புக்கானெவரினு மிக்கானே. (௭௧)

வடிவம்பொலிவழ கொழுகுந்திருமுகவனசம் பலமலர்பலசெம்பொற்
கொடியொண்சுடர் நிரைபணிமாறிடவருள்கூறுந் திருமுன்னோர் நின்றோர்
முடிமண்டல மிசையிருசெங்கரமலர்முகிழ்ம்படி யரகரவென்றே
யடிகண்டவரவர் தொழமண்டியவொலி யதிருண்டது பகிரண்டம். (௭௨)

மாலைப்புரி குழலுமையோடெழுகொளிவளருஞ் சினகரமதிலெய்திக்
காலைப்பவனியு மனம்வைத்திணையனகனாதிர் வளமலிமறுநாள்வா
யேலக்குழலொடு பூதப்பரிமிசையிலகிப்பவனியு முலவிச்சீர்
மூலப்பழமறை யோலிட்டவனொருமுன்னுளென் வருமந்நாளில். (௭௩)

கோனைப்பெருவரை திரியப்பொருதினாகுமுறக் கடல்வருமொரு புத்தேள்
யாணர்த்திரு மலர்போலிக்கற்பகமிசை யிமையோர்மணிமுடி யடிதோயக்
காணப்பவனிசெய் தோணிப்பரனொளிகாலா ரழல்கொடுகாலாநாள்
மாணத்திருமணி மானத்தெழில்பெறவந்தானுறு வலிசிந்தாதான். (௭௪)

இறைவேலனைய கண்மடவார் நடமிடவிகலாரிர வொருபகலாகத்
துறைதோறொளிவிடு முடிசேரமரர்கள் துதிபேரொலி விரிதிசைமூட்ப்
பிறைவாணுதறிரு நிலைநாயகியருள் பின்றுணுடன் வரவைந்தாநள்
மறைநாவலர் தொழவலம்வந்தன னொருவடமாலெனு முயர்விடைமீதில். ()

அரவார் மணிமுடியுரவோனுறுதினமாறிற் பொருதிறல்வேழத்து
மிரவாதுயரிய கனாயானது தருமேழிற் புனைகயிலாயத்துந்



துரகாதிபனிலு மிருநாலெனவருதொகை நாளிடை நகர்வலமாகப்
பிரமாதியர் பணிசெயவந்தனனொரு பெண்பாலவளொடு மொன்பானுள் (௭௬)

அரவப்பெருமணி சுடரக்கொடிநிரையடர் துந்துமியொலிகடல் பொங்கத்
தரணிக்குலவரை பரவத்திசைதிசைதடவித் தளநிலைபுடையொற்றக்
குருமைக்குடை பலமிடையத் தலைபுனை கும்பந்தினகர விம்பம்போ
லுருவத்தனநெளி நெளியப் படர்வதோர்சூழிக்கிரி நிகராழித்தேர். (௭௭)

மதியேறிய வழியறியார்களையு நல்வழியேறிட நுவல்மறைவாசிக்
கதியேறிடவுமை பதியேறினன் முதுகலைகற்றவர் புகழ்நிலையத்தேர்
பதிநாயகமதில் வலம்வந்துறு நிலைபயிலுற்றுயர் சினகரமுற்றே
விதிபேர் புனைதடநீர் நல்கினன்மறைவித்தானவ னொருபத்தானுள். (௭௮)

ஞானத்தவர்களும் வானத்தவர்களு நளிஞலய முனிதடமாடி
யேனைப்பகிரதி குலபாலகர் பணியிசை மண்டபமிசை பதினொன்றோ
மானத்தினமதில்வளர்கங்கண னடிமலருந் தொழுதுபினொரு தோணித்
தானத்தினுமலர் தூவித் தொழுதனர் தண்டாவரு ளமுதுண்டார்கள். (௭௯)

உரகங்களினியல் கரகங்கணமும் வில்லுமிழுங்குழைகளுமணிநூலுங்
கரகண்டமுமழகொழுகும் புழுகணிகனகாசல நிகரியதோளும்
வரகஞ்சுகமொடுவளரும் பயிரவவடிவம் புனைமலை வடுகேசன்
சரணந்தொழுதனர் விடைகொண் டவரவர் தந்தம் பதியிலணைந்தாரால். ()

பிறவும் பலபலபணியும் புரிதருபிரமன்றனையருள் பெறவைத்தே
யுறுநின்பதமென விடைகொண் டகிலமு முதவுஞ்செயலினில் முயல்கின்று
ணிறையின் றிருமுருகிதுவென்றன னுயரிசையேபுனை தருவசைதீர் நூல்
முறையின்படி புகலீரொன்பதினொடு முன்னூலையு முணர்முனிசூதன். (௮௧)

## திருவிழாவத்தியாயம் முற்றும்.

ஆக. திருவிருத்தம். ௪௪௭.

---

# பூதமோசனவத்தியாயம்.

கொழுவிவண்டின மலமருஞ் செழுமலர்க் கோயிலாளுனை புத்தேள்
முழுதினுற்றிய பெருவிழாவொருவழி மொழிந்தன மினியோர்வெங்
குழிவயிற்றழ லெரிமயிற்பசிய கட்குறியதாட்டெறும்பூதப்
பழிதுடைத்தொரு மன்னவனன்னெறி படர்ந்ததும் பகர்கின்றும். (௧)

கடிவருங்கமழ்த் தலைதொறுங்கவிழ் தலைக்கருவிரற் ருன்மந்தி
படித்மாற்று நீடருவியந்தடவரைபரந்த மாளுவ்தேயத்
தடல்சினம் பொருவாளரியன் னவனெண்மதிமரபுக்கோர்
கொடுமைறுப்பிறந்த தெனப்பிறந்தவன் கொலை விரோதனென்பான். (௨)

நிலைவழங்குதன் குலப்பெரும் புகழெலாநீடொளிதருந் திங்கட்
கலைவிழுங்குவாளரவென விழுங்கியகருஞனத்துற றீயோன்
பலகைநால்வகை வன்னவல்லாடுவான் பகலிடையிரவெல்லாங்
குலவிநால்வகை வன்னவில்லாடுவான் கோதையரகலத்தே. (௩)

அறங்கடிந்து வெவ்வினை களைவித்திநல்லார்வமென்களை போக்கித்
தெறுஞ்சினப் புனலூட்டுபுவேலியாய்ச் சிற்றினம்படக்கோலி
யுறும்பவப் பயனடைந்தவ னுயிர்க்கெலாமுழி வேங்கூற்றன்று
ணிறங்குபுள் விலங்கிடுபுறங்காடென விழுக்குடையுதரத்தான். (௪)

கோலிழுக்குறவைம் பெருந்தீவினை குயிற்றிவெம்பொருள் யாவும்
வேலிருந்தடமுழித்த வாட்கண்ணியர் விடயமேற் செலவுய்ப்பா
னூலிழுக்குறூர் மகத்தழலவிந்துக நுவலருந் துயர்காட்டி
மேலழற்றுவதிவ னடுசினத்தழல் மிக்கவா வயிற்றெல்லாம். (௫)

வெள்ளிவெண்டிரை முகட்டெழும்விடமென வெண்மதிக்குலவேந்த
ருள்ளிவன் பிறந்தரசியலிழுக்கினை யொன்னலர்புறங்கூறக்
கள்ளுங்காமமுங் கொலைகளும் புலைகளுங் கனிந்தொருதாய்பெற்ற
பிள்ளைபோலிவன் வளர்ப்பதேபெற்றனன் பெற்றிலன் பிறிதொன்றை. (௬)

மானிரப்புறு சிறுபுலப்பயன்களும் வயக்கரி நிலைநாடித்
தானளித்திடிலடுபசி கெடுமெதுசார்ந்து புக்குணில்வேலி
யானதென்னினும் வாலினுங் காலினுமறிந்து வாய்புகலின்றிப்
போனதாமதுபோன்ற தவ்விறைமகன் புவியெலாம் பொலிவற்றே. (௭)

வளையுமெல்லணிவாரொடு துறந்துமேல் வரவரத்தலைசாய்த்த
புனைகலன்கழிமங்கையர் கொங்கையிற் பொலிவுபோய்ப் புல்லென்று
கனைகரும் புயல்வறப்ப மாநிலமெலாங் கலிபரந்தது தேர்ச்சி
வினைஞரின்மையாற் கோடழிதளனென வீறழிந்தனன் வேந்தன். (௮)

விடையதீப்பிணி வெதுப்புநல்லருயிர் மெலியவாயுளுங்குன்றி
யடையச் செல்வமுமரும்பெறலரசும் வேற்றரசு கொண்டேமாப்பக்
கடையிற்போந்தெழுகார் புரைபகட்டின் மேற்கனன்று கட்கடைதோறும்
வடவைத்தீயுகவந்த கூற்றுவன் பார்வலையிடைத்து வக்குண்டான். (௯)

நுதியயிற்குல மழைபொழியாறுபோய் நுவலருநிரையத்தே
கொதியழற்சுட வெண்ணில்பல்காலம் வெங்கொடுமையாற் கோட்புற்றுப்



பதியதங்ககன்றரில் மிடைவிந்த மென்பருவுளைத் தடஞ்சாரற் (௧௦)
கதியடைந்தன னவுணனாய் விடுக்குமோ கழிவினைத்தொடர்ம்மா.

பேதுசெய்து பல்விலங்கெலாயாழிய பிலத்துவாய் புகப்பெய்து
மோதுமந்தணராருயிர் வவ்வியுமொண்டொடியார்க் கொன்றும்
தீதுபூத்தலர் நெஞ்சினன்வைகலுஞ் செய்கொலைத் திறத்தாலே (௧௧)
காதுமுத்தலைக் காலனுமுயிர் கொளுங்கை வினைகைதூவான்.

வைகலுங் கொலையயின்றவாயவுணன் முன்வையகக் கொடுங்கோன்மை
செய்கையிற் சிறிதறனிழைத்தனன் கொலோதே மறைப்புள்ளார்க்கும்
பொய்கையான வாங்கீரன்வாழ் பாசிலைப்புரையுள் புக்கறவோனைக் ()
கைகவர்ந்து வாய்மடுப்பனென்றெளித்தனன் கண்டனன்றவக்கோமான்.

கரந்திவண்புகுங்கள் வனியாரை நின்கயமையாலெமைவாட்டி
யுரந்தை வெம்பசிதணிப்ப வந்தனைகொலெம்மடிகளார் நும்முன்னோர்
பரந்ததொல்லுயிர் பருகுமாலுதிர நீர்பருகும் வித்தகரன்றே (௧௩)
தரந்தெரிந்திலாயகலுதி யென்றனன் சதுமுகன்வழித்தோன்றல்.

அகல்வதுன்னுயி ரருந்துவதெனது வாயன்றி நீபலவாளா
புகல்வதென்னை யென்பொலிவெலா மறையவர் புதுநிணப்பொலிவன்றே
பகரலென்று கண்பொறியுகச் செறிமயிர்ப் பங்கியங்கியிற்காண (௧௪)
விகல்நெடுங்கரமெடுத்தொரு கூளிபோலெய்தலுமுனி கண்டான்.

கண்டுபொள்ளெனக் காலமூன்றையுமுணர் கட்வுண்மாமுனி தெய்வக்
குண்டிகைப்புனல் விதிர்த்தவன்றன்மையுங் குடிப்பிறப்பையுங்கூறி
மண்டுமிவ்வுருவே கொடுதிரிகெனமற்றவன் முரட்சாபங் (௧௫)
கொண்டுபொழிவாயவுணன் வல்லுருவுபோய்க் கூளியாகினனன்றே.

சிரகரீரது தெளித்தலுஞ் சாபமுந் தெளிவுவந்தனபோலு
முரவனேயுனைப் பிழைத்தநா ளிப்பழியொழிப்ப தெங்ஙனமெந்தாய்
விரவுநீர்க்கடல் வெதுப்புறிலாங்கதைவிளாவு நீர்பிறிதுண்டோ (௧௬)
குரவனேயிது பொறுக்கெனக்கரு நெடுங்குன்றின் வீழ்ந்ததுகூளி.

திருகுவெஞ்சினத் தடலயிராவதத்தேவனும் பழிபூண்டான்
கருநிறப்பசுங்கொண்டலும் பவம்பல கண்டனன்றெருகைகாணூர்
முருகுயிர்த்த பூங்கொன்றையான் றெண்டர்வாய் முனிவுபெற்றனனென்று (௧௭)
லொருவ னெய்துதல்வியப்பமன்றென முனியுன்னினனஃதுய்ய.

எமது தாபதப்பள்ளி புக்கனையுனக்கிப் பெரும்பழிநீத்து
விமலமாகுமாறுணர்த்துவன் கேண்மதிமிக்க தெக்கணதேயத்
தமலனுதரம் பெருகிய திருவனீளணிகெழு சோணாட்டி (௧௮)
விமிழ்தடந்திரைப் பொன்னிநீருண்டதை யெய்துதியதன் மாடே.

வட்க்கினிற் பெருங்குடக் கினிற்குறும்பலாவழிந்தசா றிழிந்தாருய்த்
தடக்குரம் பினிற்பரம்பினில் வேலியிற்சாலியிற் புறஞ்சூழ்போய்க்
கிடக்கவாடகப்புலத்தினின் மரகதக்கிளரொளிக் கொழுந்தேய்ப்பப்
படப்பைநாறுகள் வீறுசெய்தோணியம் பழம்பதியதுகாண்டி. (௧௯)

அற்புதன்றிருவுளத்தது முத்தி வீட்டகத்தது பரஞானச்
சிற்பரப்பொருண் மூன்றது தோன்றுறுசேகொழிப்பது மாயை
யுற்பவந்தரும் பொருளெலாமயனொடு மொருங்குலப்புறமூழிக்
கற்பம்வென்றது கருதியார் கருதவகாட்டுவ தம்மூதூர். (௨௰)

தாளதாமரைத் தாக்கணங்குறையுமத் தனிநகரதுபுக்காற்
றோளருவரியா வணியந்தணன்றுணையடிப் புணைபற்றிக்
கோளருவிழி பிறந்தையார் கலிதனைக் குப்புறுங்குணமிக்கான்
வாளருமணி வேணியான் காலவமாமுனி தனைக்காஸ்பாய். (௨௧)

தயங்குமம் முனிமறை நெறிபுரிதரு சத்திரப்பெருவேள்வி
முயங்குமெல்லையினிரந்தனை நிற்றியேன் முனிவனுகுதி யொன்றுற்
பயங்கொள்பாரிடப் படிவமும்பழவினைப் பளகுநீக்குவன் றெல்போய்
வயங்கரா வெனப்பொலிகுவை யென்றனன் மறைமுடிப்பொருள்வல்லான். ()

கோதகன்றவன் றிரு மொழிகரிந்தலைங்கூழ் முகத்தினிற்பெய்த
சீதமாமழைகடுத்தலாற் செவியினுஞ் சிந்தையிற்களிகொண்டு
பூதரங்களுங் கடறுடைக்கடங்களும் பொருதலைக்கான்யாறும்
பாதவங்களுங் கடந்தவாசியின்றிசை படர்ந்ததுகரும்பூதம். (௨௩)

பாரகத்திருமடந்தை மேலணிந்த பொற்பண் புரைசோணாட்டிற்
பேரகன்றிரைப் பொன்னியாற் றடைகரைபிறங்கு தீரத்தின்மாடே
காரகிற்கொழும் புகைதவழ்மனைதொறுங் கடிமுரசுறங்காத
சீருலாம் பிரமாபுரஞ் சேர்ந்தது சிவபதந்தனிற்சேர்வான். (௨௪)

கேழில்நான்முகன் பிரளயநீத்தமேற் கிளர்ந்ததோணியின் மீதே
கோழிளம் பிறைக்கண்ணியானுறை திருக்கோயிலின் குடக்காக
வேழ்விவேட்டுயிர் வேதவாணிபர் நடுவிளங்குகாலவனென்னுந்
தாழ்விலா முதுமாதவக்குன்றனுன்றன்னை நோக்கிய தாங்கண். (௨௫)

புகரில் மும்மை யாயிரத்து நான்மறை மொழிப்புலமை யோர்புடைசூழப்
பகரு நீணிலப்பதிதொறு நதிதொறும் பணிந்தனன் வலம்போந்து
புகரில் பொன்னிநீராடி யெந்தோணிவாழ் புண்ணியனடிபோற்றி
யகனுறும் பொருளியாவையுஞ் சுரபியாலமைத் தெரிவளர்ப்பானை (௨௬)

இருதகோசிகனங்க சத்துருவிறல் கெழுஞ்சவுபரிவேதத்
தெரிசியாதிமா முனிவரோடளவளாய்த் திண்டிறற்றண்டீசன்



வருபதஞ்சலி புலிமுனி திருநந்தி வானவனருள்பூண்டு
குருமுகத்தழல் முழங்கு முக்குண்டமுங் கோட்டியசெயலானை. (௨௭)

யுதிர்ந்தபூவெனப் பலபொரி நெய்விரராயூப வாயழற்பேணி
யதிர்ந்தமாமணி யிரட்டுறமனுவழியாகுதி வகையாற்றி
முதிர்ந்ததெய்வத வெண்ணிரண்டிருத்துவை முறைமுறைபணிவானை
யெதிர்ந்துநின்றதாற்புகா யெயிற்றுரகம் வாழிருஞ்செவிப் பெரும்பூதம். ()

கரிந்தகையெடுத்தலம் வரவுயிர்ப்பினிற் கருவரைக்குலஞ்சாய
வெரிந்தகுஞ்சியி னழல்விழிசுழற்றி யாண் டெதிரியபூதத்தைத்
திருந்துமாறிருதினமுமாகுதி வினைசெய்து பன்மூன்றுநாள்
வரும்பிறு சதபனமெனுமாகுதி வழங்குமாமுனிகண்டான். (௨௯)

புடைகலந்த தொல்லுறுவருமெறுவளிப்புணரியினிடைப் பட்ட
வுடைகலம் படுமாந்தரினிரியலிட் டோடினரிதுகாணு
விடையம்வென்றவ னிங்கொரு பாரிடமெய்தினனெனவந்தோ
விடையிலிம்மகம் பிழைக்குமே யெனக்குழைந்தினைத லுற்றனன் பலகால். ()

இனையுங்காலவன் படரடச் சிறுமுனிக்கேற்ற கூற்றுவன்சாய
முனையுங்காலவன் கஞ்சுகன் செஞ்சரண் முளரியையுளப்போதிற்
புனையுங்காலவனெனக்கிடர் வருவது பொறுப்பனோவெனப்போற்றி
நினையுங் காலவன்முன்னர் முப்புவனமு நீண்டகாலவன்போற்ற. (௩௧)

வேறு.

ஆடுமணிகுஞ்சியு மகோரமுகமுந்துடியுமங்கையு முகந்ததடியுங்
கோடுமணிகஞ்சுகமு நஞ்சுரகமுங் குழைகுலுங்குமிருகாது மறைநா
றோடுபுனை செங்கரமுமங்கி யொளியுங்கிரிவிலோசனமு மொண்புழுகுமா
சேடுபடுமேசருருவினையத்தினனெடுஞ் சயில தெய்வவடுகேசனருளால். (௩௨)

ஐந்துபடுதுந்துமிகளுங் குணில் பொருந்துழனியண்டமுக டெங்குமதிரக்
கந்தமலர்வந்தமரர்சிந்த வெதிர்முந்தியகணங்கள் புடைகொண்டுமிடைய
நந்துகள் முழங்கவிசை கந்திருவர்பம்பவொலி நண்ணுபலசின்னநிரைகள்
வந்தனனரன்பசிய கஞ்சுகதரன் கடவுள் வந்தனனெனுந்துதிசெய. (௩௩)

சூலமுதல் மூவறுபடைக்கலமெடுத்து நிறைதூரியமியம்ப மறையோர்
நாலுமறை யோலமிடநாலிருவர் காரியர்கள்ஞாளிமிசையேறினர் வரப்
பாலலைம கோததியினீறுபுனை மேனியர்பணிந்தன ரணைந்துபரவக்
காலவனிருந்தமுது வேள்விமலிசாலையது கண்டருள வந்தருளினுன். (௩௪)

நேசரணஞ் சரணமுத்தியடியார்க்குதவு நித்தியநிர்வாண சரணம்
வாசசரணஞ் சரணமாதியிடையீறுதவிர்மான சிவஞான சரணந்

தேசசரணஞ் சரணயோகசனகாதியர் தெளிந்தகுருநாத சரண
மீசசரணஞ் சரணமென்றுமுனி காலவனுமேவருமெழுந்து தொழுதார். (௫௫)

செம்மனு மவன்பணியுமம்முனிவருக் கருள்செயுங்கட்டமையான்முனிவிர்கா
ளும்மகமுடிப்பளவு மியசமிவணிருத்துமெனயோகதல மீதமர்தனு
மெம்மடிகளுக் கரியதென்னையிதுவேள்விபுரி யேழையடியே மருளவோர்
பொம்மலுரு பூதமிவண்வந்ததென நின்றதொருபூதமது மாதவனொடே. ()

என்னையு யிரஞ்சும்வினைகண்ணியுளபூதமென வெண்ணலையிரங்கி யடிசேர்
முன்னையொரு தாண்முளரியந்தணன்மகன்றரு முரட்பழிப்படைத்துளனியா
னன்னவர வென்னையெனில்மாளுவ நெடும்புவியிலாய்மதிகுலத்தி லொருவே
னுன்னரியதீவினைசெய்மன்னவன்விரோதனென்னூழ்வினையுருப்பவுயிர்போய்

காலபடர்கொண்டு நிரயத்தினிலழுத்தினர் கழிப்பவரு சேடமதனால்
மாலிருநெடுங்குடுமி விந்தவனாவாயடர்வனத்தினி லரக்கனுருவாய்க், கோவுரு
மெறும்பு கடையானைமுதலானவை குறைத்து நுகர்நாளிலொருநா, ளாவும
னல் பொங்குமெனகட்டிநிரைகொள்வனென வங்குமுனிவன்புரையுளில். ()

பாரிடவுருக்கொடுபடர்ந்தவனைநங் கவருபான்மையினையன்னமுனியாங்
கீரனெனை யிவ்வுருவொடேதிரிகெனப் பழிகிடைத்தன னிரங்கியவனே
யோருகதியுண்டு பிரமாபுரியில் வேள்விகளுஞற்றுமுனி காலவனுழைச்
சாருதியொராகுதி பலன்றருவனிப்பழி தணந்திடுதியென் றருளினான். (௫௯)

மற்றவன்விடுப்ப விவணுற்றனனுனைப்பரவ வந்தவழியிந்து மௌலிக்
கொற்றவனையும் பரமமுத்தரையுமென்விழி குளிர்ந்திடவெதிர்ந்த னனியா
னுற்றபழி விட்டகல நற்கருணைவைத்திடுதி யூனவடிவானசிறியோர்
குற்றமவையெத்துணையிழைத்திடினுநற்றவர்குணத்தொடு குறிக்கொளுவரால்.

முந்தையியலுந் துருவிவந்தவியலும்பட மொழிந்தபணிகூளிபெருமா
ற்கந்தமுனிமேதகு பிராதசபந்தனிலொராகுதிபலன் றருதனு
கிந்தையுறு பூதவுடலந்துலைய வானமிசைநீளொளியின் மாளுவபிரான்
வெந்துறு களிம்பகலவேறுபடுசெம்பொனென வீறுபடநின்றனனரோ. (௬௧)

ஆயிடையுதித்தகதிர் ஞாயிறெனவிட்டபுலவராதரவினுய்த்தவொருதேர்
மேயினன் முளைத்திகிரிமாயனிடு சட்டையணிமேனியனை முட்பரவியுந்
தாயினு முயிர்க்கினியகாலவனடித்துணை தனக்குமலர்கொண்டு தொழுதுந்
தீவினையகற்றிய விரோதன்வழுக்கறு சிவானுபவமுற்றனனரோ. (௬௨)

மாளுவபதிக்கருளு மாமுனியுமத்தகையமாமக முடித்துவிமலன்
றளினைபழிச்சி வழிபாடுபுரியக்கருணைதா னுருவமானபரமன்
கோளற விழைத்தவனதியாகநிறைவுற்றது குறித்தமையுளாத்தியெனவு
நாளுமுனடிக்கமல நீழலில்மிகக்குலமி னுனினிதிருக்கவருள்வாய். (௬௩)



மாதவர்களோது பிரமாபுரியிதற்கயலில் வாழுனர்தமக்கு மடல்சேர்
பூதமிடி நோய்வறுமைகோள்பகை பசாசமிவைபோம் வழிபுணர்ந்தருளுவா
யாதிமுதல் வித்தகவெனுமுனியுரைத்துள வனைத்தையுமளித்து முனிவோ
ரேதமறுதத்த நிலையேறவருள்செய்திறைவனேறின னிருந்த சிகரம். (௬௪)

அட்டவடுகத்தலைவ ரப்பதிபுரந்தரவமைந்தபரிசோ முனிவர்கோன்
முட்டலில்மகத்தொழில் முடித்தபரிசோ குறள்முரட்பழிதுலைத்தபரிசோ
சட்டையணிவித்தக னிருந்தபரிசோ வுறுதலத்தியல்விளங்குபரிசோ
சுட்டவளவில்லையென மாதவகணங்களொடு சூதமுனியெய்தினனரோ. (௬௫)

## பூதமோசனவத்தியாயம் முற்றும்.

ஆக. திருவிருத்தம். ௪௯௨.

---

# ஸ்ரீகாளிபுரவத்தியாயம்.

---

மைம்மலி பசுங்கட்கூளி வன்பழிந்துலைந்து முத்திச்
செம்மரு ளடைந்தகாதை தெரித்தவன் றில்லைமோடி
யிம்மணிநகர் வாய்நோற்ற வியலையுந்தெரித்தவாறே
யம்மவீண் டரியதேனு மறைகுவா மறிந்தவாற்றால். (௧)

கொடிமுகி றுழாவுமாடக்கொழுமணிக்குப்பை வீதி
முடிவிலா முனிவராற்று முழுமறைச்சடங்கும் பன்னு
ளொடிவில் பேரறமுமோவாவுற்சவப்பொலிவு மொன்று
வடியர்மாட் டுவகைதோன்றவளவில் பொருளான் மேனாள். (௨)

அருவமா யுருவமாகி யருவுருவந் தானொன்றாய்
நிருமலமாகி யெங்குநிறைந்து சொற்பதங்கடந்த
பொருவிலா வொருவன்பொன்னம் பொதுவினில் முதுவர்போற்றக்
கருணைமா நடனமொன்றுகாட்டுவா னுட்டம்வைத்தான். (௩)

வைத்தனு மிமையச்செல்வி வடிவினில்வாய்ந்து நீண்ட
மெய்த்தலை வேற்கண்மோடி நின்மலன் றிருமுனெய்தி
யித்தலை குனித்தவெந்தைக்கிது நகைப்பாலதென்று
வத்தனை யிழித்தாள்பேதைக் குறியினையறிவிப்பாள் போல். (௪)

பிறைவளை மடவார்க்கென்று னிலையமாடவருக் கென்றும்
புரைபடு மன்றேயாடிற் புகலுபசற்சனத்தோ

டையங்கம் பிரத்தியங்க முபாங்கமென் றுரைத்தவாடல்
வரையறு விகற்பமெல்லாம் வல்லையேல்வருதி யென்றுள். (ரு)

என்றனு மிசைந்தவாறே யிசையர் இருவிழியிலாதான்
றன்றடி பிறத்துளானுந் தளர்நடை யியற்றுவான்போ
லன்றியல் வென்றிதோல்வி யவையுளார்தெரிப்ப ரென்றுக்
கன்றிய வையையாடக் கண்ணுதலாடல் செயதான். (சு)

எழுதொனுக் கிளவித்தொன்னூலத்தொலி தழங்கவெண்ணீற்
றொழுகொளி வாணன்றெய்வ வொண்குடமுழவ மார்ப்ப
[illegible]ண ரூரகவேந்து முனைவர்நகங்க டோறும்
விழிமலர் பூத்தவேங்கை வேந்துநின் றேத்தெடுப்ப. (எ)

ஈரிருடுமிப் புத்தே ளேந்து பொற்றளம்பேணக்
கார்புரை யுருவத்தண்ணல்கனை துடி யிரட்டஞானப்
பாதிமகரவீணை பரித்தனளிசைப்ப வானத்
தோரிரு சுடருமாங்கண் வேய்ங்குழலொலிப்ப மாதேர. (அ)

இறைதரு நந்திசெங்கை யின்னொலிமுழவமோங்க
முறைதருஞ் சுருதித்தீந்தேன் முனிவரோ ரிருவர் பெய்ய
வறைகழ லமரர் வெவ்வேறமர்ந்து பல்லியந்துவைப்பப்
பொறைமலி யன்பர்செங்கட் புளகநீரருவிகால. (கூ)

வேறு.

பிறவருத்த மசுவபாதம்பிறத்துருத முபத்துருதம் விளம்பமேரு
விறலுபகாளனம் பிறசாதனமனுதவிப்பிரமம் வலமிடச்சுற்றிலகுதீர்க்க
நிறைகவுடம் பின்னமீற்பின்ன நேமிநிவ்வருத்தமகமேரு நேத்திரப்பூ
வுறைகுறுக்குப்பார்வையாகாசப்பார்வையுபபின்னம்புட்கலாவருத்தத்தோடும்.

குணிப்பரிய பலபரதத்துறைகளியாவுங் குழகனுவந்தாடும் வண்ணங்குன்
றுவென்றி, தணிப்பரிய தெறுஞ்சினத்துக்கடலந்தானைத் தாருகனைப்பொரு
தழித்தாடானுமாட, மணிச்சடிலப் பெருமுனிவர் வானோரேனோர்மதிமருளக்
கதிரொளிகால் வடிவமொன்று, கணிப்பரிய காலமவைசெல்லக் கொண்ட
கண்ணுதறன் றிருவுளத்தோர் கவ்வுகொண்டான். (கக)

வேறு.

சிட்டகோடி நின்றிறைஞ்சுசெம்பொன்மன்ற நடுவனோர்
நட்டமாட வென்றுகொண்ட கம்பனம்பொன் வடிவுதான்
விட்டபேரொளிக் கரங்கள்வீசி யூழிமுடிவினிற்
பட்டவாழியிற் கிளர்ந்தபானுகோடி யொத்ததே. (கஉ)



உச்சியங்கியு ரறுபங்கி யுடனழன்றமுயலகன்
பச்சைமேனி வெரிந்நெளிந்துபடி யனந்தன்முடியுகப்
பொச்சையங்குலஞ் சுழன்றுபுவிகுலுங்க வவிரொளிக்
கைச்சரோ ருகங்கள்சென்று ககனகூடமுலாவவே. (கங)

இட்டமார்பி னுத்தரீயமேமவெற்பினருவி போற்
றொட்டுமீது துயல்வரச்சுடர்க்குழைக்கண் வெயில்வரப்
பட்டவானுதற் பகீரதிப்பெண்ணுடல் பயிலுநீள்
வட்டவார்சடைக் குலங்கள்மாதிரம் புதைப்பவே. (கச)

அரவமந்தரம் பிணித்ததாமெனத் திரண்டதோ
ளூரகத்துங்க வலையமாடவுபைய பாதமவையிலோர்
சரணபங்கயந் தராதலம்பொருத்தி வலமலர்க்
கிரணபுண்டரீகம் விண்கிழித்து மீதலம்பவே. (கரு)

தொடித்தலங் கடித்த பைந்தொடிக்குலம் புடைக்கவும்
படித்தலந் துடிப்புறும் படிக்கெழுந் துடிக்குலந்
தடுத்தியம் படைக்கவுந் தடுப்பருந்திடத்து நின்
றடிச்சிலம் பொலிப்பமன் றிலைய னுடல்செய்வனால். (கசு)

உய்யுமாறு செய்யுமின்ன வூர்த்ததாண்டவத்தி லேழ்
வையமாட மேருவாதி வரைகளாட நாடகஞ்
செய்யலா மெனப்படர்ந்து திருலாய வாதகூ
றையை கண்டு நாணமாட வையனுடல் செய்வனால். (கள)

மையளாய கண்டன்மற்று மண்ணும்விண்ணு மினையடி
துய்யபோ தலத்தினின்று தூண்டுமின்ன தாண்டவந்
தையலா யுன்னுடலோடு சமதைகோடியோ வெனப்
பையநா ணெதிர்ந்த வல்லி பக்கல்மிக் கெழுந்தவே. (கஅ)

நீணிலத்தி லன்றிமேனிவந்து தாளெடுக்குமக்
கோணி யண்ண லாடுகின்ற கொள்கை யொடுங்கி வெள்கியே
நாணியங்கம் வியர்வரும்பி நகையொடுங்கி முகிழ்விரற்
றுணிளங் கிளைத்து வஞ்சிதலைகவிழ்ப்ப வவையுளார். (ககூ)

குழகனுடு பாதமின்று கூடவாடு கிற்பனென்
றழல ரங்குமீதுவெண்ணெய் யாயபாவை யாட்லோ
அழலுமாட லாடியின்றுடைந்த துன்ற னட்டமெனக்
கழகமாமுனிக் கணங்கள்கழறி யொன்று நுவல்வரால். (உ0)

கூனுடைப்பிறைத் துகிர்க்கொடிப்பிரா னிடத்துவாழ்
நீனிறக்கொடிக்குள் வந்தநின்னையாது முன்னலா

ஞனவன்றனைப் பிழைத்தியாதலா லழுக்கிலா
மேனியுங்கறுக்க வுன்றன்வென்றியுங் கறுத்ததே. (௨௧)

நஞ்சுயிர்க்கு முரகவாய் நடுக்கரங் கொடுப்பதூம்
வெஞ்சினந் தணித்தலின்றி மேன்மைஞானம் வருவதூங்
துஞ்சுகற்பிணித் திருந்துறைக்கடற் கடப்பதூங்
தஞ்சநெஞ் சொருப்படாதுதக்கமுத்தி யடைவதூம். (௨௨)

அதிதியர்க் கருத்தலானகத்திருந்து வாழ்வதூ
முதிர்மறைப் பழக்கமின்றி முடிவினைத் தெரிப்பதூ
மதிமிலைந்த வரதனோடு வருகவாட வருகவென்
றெதிரினாடநீ குறித்தெழுந்ததூ மிழுக்கரோ. (௨௩)

நுண்ணியற்கை யாயநூல்கள் நூறுகோடிபழகினும்
பெண்ணியற்கை போவதன்றுபேதைநீ யகந்தையா
லண்ணலைப் பிழைத்தபாவமகலுமாறு மற்றவன்
கண்ணருட் கிடைக்கிலுன் களங்கம்விட் டிகக்குமால். (௨௪)

நீரகத்தெழுந்த சேறுநீரகத்தொழித்தல் போற்
போரகத்தி லாடகப்பொருப்புவிற் குழைத்தவன்
பேரகத்திநின் றிவண்பிழைத்ததீமை யவனருட்
காரகம்பிடித்திநீ கடத்தியென்று கூறினார். (௨௫)

முழுதொருங் குணர்ந்ததொல்லை முதுவர்சொன்னவிதியறிந்
திழுதையன் செய்வினைவிலங்க விறைவனன்பு புரியுமோ
வொழிவதென்று பெறுவதென்ற வுணர்வறிந்த துணையிலான்
குழைகடந்த விழியைநெஞ்சு குழையவென்று மொழிகுவான். (௨௬)

பாவமென்பவற்றின் மிக்கபாவநின் புறத்திலே
மேவநின்றதிது கடக்கும் வினையமொன்று நினைத்தியேற்
பூவளஞ்செய் தோணியம்புரத்திலெம் பதத்திலே
நீவணங்கு கென்றளிப்பநின்ற மோடிநன்றெனா. (௨௭)

வேறு.

பவளமுருக்கும் புரிசடையான் பணிகொண்டெழுந்து புனைகலன்க
டிவளுமலர்ப்பூங் கொம்பரெனத் தென்பாலணைந்து பெண்பாகங்
கவரும்பாகன் பதிதோறுங்கதிர் வால்வலைமுத்தலர் தூவிக்
குவளைவிழிக்கும் புனற்பொன்னி குடைந்தாள் வடபாலணைந்தாளே. (௨௮)

மாநீர்த்திரையின் வெடிவாளைமடைவாய்க் கருங்காற்குரு கிரியத்
தீநீர்க்குரும்பைக் குலைசிதற்றுந் தென்னவனஞ்சூழ் தோணிபுரித்



ஆநீர்மணியாடகத் தசும்பிற்சுடருந் திருக்கோபுர நான்கு
வேநீருங்கண் ணெதிர்காணவிழித்தா ளிடரையொழித்தாளே. (௨௯)

மணக்குங் கமலவாவிகளும்வரி வண்டிமிர்தண்டலை பலவு
மிணக்குங் கனகத்தனிமறுகு மெங்கும்வலங்கொண்டிடு கிடையை
யணக்குமிரு பொற்குடம் வணக்குமதுபோல்மதி வாணுதலுடலை
வணக்குமொரு பொற்குடமிருந்த மரனக்கோயிலகம் புக்காள். (௩௦)

கதியாவர்களும் பெறவழங்குங்கடவுட் பிரமத்தடமூழ்கி
விதியாநியமச் சடங்காற்றி வெண்ணீருடிக் கலைமகடன்
பதிநாயகனைப் பணிவாள்பொற்பணிந்து மூலப்பதி புகுந்தாள்
கொதிவேலனுக்கிக் கயல்மருட்டுங்குடங்கைக் கடங்காத்தடங் கண்ணாள். ()

பண்டாட்கப் பேரவையினின்ற பரமவெளியாகிய குறியைக்
கண்டாள்மலர் மஞ்சனமாட்டிக் கனிந்துபூசைக் கையாறு
கொண்டாள் பவளக்கொடிபோலக் குழைந்தாள்கருணைக் கொழுந்தேற
ஆண்டாள் மேலைத்தடங்கோயி லுற்றாளெண்டோள் பெற்றாளே. (௩௨)

வேயாவாவின் கணங்குவித்தவிபுதாதியர் மற்றெவரெவர்க்கு
மாயாமயத் தோணியிலிருந்து மாசையகற்றுந் தேசிகனைப்
போயாயிடைப்புக் கிறைஞ்சியொரு பொன்னஞ்சிகரத் தென்னையரு
டாயாகிய கஞ்சுகனடியுந் தலைமேற்கொண்டாடவுங் கொண்டாள். (௩௩)

குருக்கும் பிறைவாணுதலபின்னோர் குளிர்நீர்த்தடம் பொற்றளிமேல்பா
லிருக்கும்படி கண்டதிலாடியிறைகோ ளிலிங்கமொன் றிருத்தி
யுருக்குங்கருத்தா னருச்சனைகளோவா துற்றவதனி னின்றும்
பெருக்குங்கருணைக் கடலனையபெருமான்வந்தான் பெருமான்மேல். (௩௪)

மாலைக்குழல்சூழ் முகத்தியொடும் வல்லேறூர்ந்த நல்லோனைக்
கோலைப்பழித்தவிழி யருவிக்குளிப்பத்தாழ்ந்த கொடியனையாள்
மேலைப்பவத்தின் பொறையிழித்து வீழ்ந்தாலெனத்தாண்மிசை வீழ்ந்து
சோலைக்கிளிகள் மருளநின்று துதித்தாளருளை மதித்தாளே. (௩௫)

மறையோனறியா தருவனாயாய் வானங்கடந்து மேனிவந்து
நிறைவாளாக்கி நறைமாலைநீட்டக் குனிந்தவியல்போற்றி
நறைமாமலர்கோ விறைமாரனகையாருருவம் புகையூட்டிக்
கறைதீரிரதிமனங் களிப்பக்காத்த கருணைப்புகழ்போற்றி. (௩௬)

வேணிமுடித்த பெருந்தவத்து மிக்கார்தமக்கு மிக்கான
காணிவனத்தி லரனுருவங்காட்டி நடந்தகதி போற்றி
யாணமலிதாய் வரும்வழிபார்த்தழுதகுலிக் கன்னையெனப்
பேணியெழிலார் பெண்ணுருவம்பெற்று நடந்தநெறி போற்றி. (௩௭)

என்காற் ப்றவையுருக்கொடு மானிடவாளரியி ணிகறடிந்து
தண்பூமடந்தை மங்கலநாண்டகையாளளித்த நகைபோற்றி
பண்பாவலர்சூழ் மணிமன்றிற் பரமாவுனதுதிருமுன்னர்ப்
பெண்பேதமை யாலியானிழைத்த பிழையைப்பொருக்குமருள் போற்றி. ()

பலவுமினைய துதிகூறிப்பணிமாதாசைத் துணிவாய்ந்த
நிலவுபெர்திந்த சடைமுனிவனெஞ்சமெனையே லுனைத்தொடர்ந்த
பலபாதகத்துந் தலையாயசிவநிந்தையு மாபாதகத்தா
விலகுங் களங்கவினையுமகன்றிடுதி யான்முன்னெழில் பூண்டே. (௩௯)

செம்மாந் தணந்தவமூலையிற் சேயிழாய்நின் றிருநாம
மிம்மானகர்க்குநீ வழிபாடியற்றக்குயிற்று முருவினுக்கு
மைமாசகன்ற தடத்தினுக்கு மலிந்தோங்குசுவித் தடம்படிந்தோ
ரெம்மாநிலத்து மெமைப்பிழைத் தவதிபாதகந்தீர்த் திலங்குகவே. (௪0)

புடைக்குஞ்சிறை வாரணங்கூயபுலரிக்காலத்துன் பெயரைப்
படைக்கும் பதியீங்கிதைமுக்காற் பகர்ந்தோரகந்தைவினை யனைத்துந்
துடைக்குந் தலத்துந்துடைப்பரிய தொல்லைச்சிவ நிந்தனைமுதலா
யடைக்கும் பவங்களெவையுமொரீஇ வமலராக வாயிழையே. (௪௧)

தெரிசறினத் தித்தடமூழ்கிச் செயதென்புலவர்கடன் முடித்தோர்
துருசுபொதிந்த விருவினையின் றுடர்ப் பாடகல்வார் கார்த்திகையாம்
புரியுமதியிற் கதிர்நாளிற்புக்காடுவரே லெவ்வினையும்
பரிசியாம லொழிவரிந்நீர்படிந்தா ரடித்தாள் படிந்தாரும். (௪௨)

மண்ணு மணிச்சுட்டரடணிந்த வாதனினையவரங் கொடுத்துப்
பெண்ணு ரமுதம்பணிகுறியிற் பெருமான்மறைய விறற்காளி
பண்ணார்பல பல்லியந்துவைப்பப்பனிநீர் மழையின்றளிதமெனக்
கண்ணார்கலவ மயிலாடுங்கனகமணி மன்றினிற்புகுந்தாள். (௪௩)

வேறு.

இழைதவழ்கொம்மை வனமுலைக்காளி யிறைஞ்சலாற் காளியம்புரியென்
றழகியவொருபேரிந் நகர்க்குற்றதன்றியுங் காளிதனெனுமோர்
புழையெயிற்றுரக வேந்தனூர்க் காளிபுரமெனும் பேருமன்றுளதெ
னுழையதட்போர்வை முனிவர்கேட்டு வப்பவுறுதவச் சூதனுண்டுரைப்பான். ()

தொழுதகுகற்பிற்காசி பன்மகிழுந் துணிவறுவினதை தன்பாலன்
பழுதறுமமாரளித்த தொல்வலியாற் பலவரிக்கொடுஞ் சிறைபுடைத்துக்
குழியெயிற்றழலும் பசிகெடவெறிநீர்க் குரைதிரைவளாக மேலடல்சேர்
முழுமணிச்சுடிகை மொட்டராவினத்தின் மொய்யுயிர்படுத் துணுங்காலை. (௪௫)



மாயிருஞாலத்தரவெலாம் பறவைமன்னவரு ருத்தொருபகலே
நீயெடுத்துண்ண வாற்றலமடியேம் நித்தமோருணவுநீ விரும்பித்
தாயினும் புரத்தியென்றலுமுறையே தரத்தரநுகர்ந்தனனிருப்ப
வேயினவனந்தனுதி வாளரவவிறைவரிற் காளிதனென்பான். (௪௬)

வேந்துபுள்ளினுக்கோ வெனக்குமோ வுணவைவீசுமாறென்னை யென்னூறு
காந்துவாய்படைத்து மெலிவனோ வென்னுக்கனைந்துதன் சுற்றநின்றிரங்கப்
[illegible] புகுந்துழியும் புவிபலபொதிந்த சேவடியை
யேந்துபொற்றோளான் முறையினாலடை [illegible] நின்றேற்றான்.

குருமணிச்சுடிகை நாகராவேறுங் கொடுஞ்சிறைக்கலுழனுஞ்சீறிச்
செருவிடையுடன்று வரையொடுவலைபோர் செய்தென [illegible] கலங்கக்
கருவரைசுழல விருசுடர்திரியக் கடுஞ்சமம்புரிந்துழிக் கொடுங்காற்
பொருசிறையடிக்கும் வரிநகம்படைக்கும் போயினனுறு வலிபுயங்கன். (௪௮)

ஈட்டிய வலிசாய்ந்த கிபதிமேனுளெய்தருஞ் சாபமொன்றடைந்து
தோட்டிவாயுவனத் திறைபுகாயமுனைத் துறையினோர் மடுவினிற்கரந்தான்
கோட்டியமலர்த்தாளண்ணலங் கண்ணன் கொன்றையந் தீங்குழலிசைத்துக்
காட்டியபசும் புற்கறித்தவானிரைகள் கண்டனயமுனையின் மடுநீர். (௪௯)

புனல்விடாய்த்தயருவுகளு மான்கன்றும் புனிற்றிளங்கோக்களும் பெருநீர்
மனவிடாய் தணியப்பருகலுமுயிர்போய் மறிந்தனவிரை சுனைகிடப்பக்
கனைகடல் முகடுகிழியமத்தெறிந்த கண்ணனுங் காரிநீரென்று
வனையது தெரிவானிறங்கலுமவனை யணங்காரவளைந்ததையன்றே. (௫0)

அரும்பெறற்சித்தி யெட்டினுமகிமா வானதையுன்னினன் பெருகப்
பெரும்பொறியரவந்தளர்ந்தது பிணிக்கப்பெற்றில தாங்கவனணிமா
விரும்புகழ்ச்சித்தியெண்ணினன் சுருங்கியெறும் வலிவாலடித்திவர்த்தான்
பரும்பொறிபரந்தநொள்ளைவெள்ளெயிற்றுப்பள்ளவாய்ப்பாந்தளின்றலைமேல்.

ஆயிரம்பகுவாயனந் தனிற்பதித்தொன்றாகிய படந்தொறுமுகைத்துத்
தாயினன்பௌரி பிடித்தனனடிப்பத்தலை தொறுந்தகர்ந்திழி செந்நீர்
வாயிழிகளை நீரிரண்டினுமாலை வயங்கலவ்விரணியனுரம்போற்
போயினபடங்க ளமரர்கோவாகப் போராரியாகினன்புனிதன். (௫௨)

விரிந்தவாயரவத்திறைவனுமெலிந்து விடுதிநீவிடுதி யெய்யாமை
புரிந்தனனினது புண்ணியநாறும் புனைகழல் பொறுத்தலானுன்னைத்
தெரிந்தனன் மலர்த்தாள் பரித்தவனறையச் சிதைந்தனனின்னடியடியேன்
டரிந்தமாவாற்றேனென்றலு மிழிந்தவண்ணலு மவனவாவறிந்தான். (௫௩)

கடுவெளிபுடைக்குமடு சிறைக்கலுழன்கதத்தினுற் பெலத்தைநீங்கியதாங்
தொடுகடற்றுறந் தீண்டுற்றது முணர்ந்தேந்து தித்தநீயலமரேலுனக்குப்

படுவனபகர்தியென மருதிடந்த பண்ணவனுரைத்தலுமென்பால்
விடுவதுவெகுளி தன்னையீண்டுண்டேல் வேண்டுவவுண்டெனக் கரைந்தான்.()

கேழ்கிளர் கமலத்தடங்க ணயனியேன் கிளைஞரைப்பிழைத்தகாதாமு
மாழ்கடல் வரைப்பிற்கலு ழனுக்குடையாவாற்றலுமெய் துமாறருள்கென்
றாழ்முறை பழிச்சவுலகொருங் கீன்றவுந்தியா னுளமகிழ்பூத்துத்
தாழ்தடம் பணைசூழ்தோணியம் புரியிற்சதுமுக னுடியதலத்தில். (௫௫)

வரன்முறையாடிப் பிரமநாயகனை மஞ்சனமா[illegible]தூய்ப்
பரவினையெனில்நீ விழைந்தனவாதி பரம்பரனருளுவ னென்று
வரவனைச்செல்வன் விடுப்பமற்றவனு மந்தணீர்ப் பொன்னிபுக்காடிப்
பிரமமாதடத்தின் மூழ்கியானுடைய பிஞ்ஞகன்றிருமுன மிறைஞ்சி. (௫௬)

குழகனைவேதக் கொழுந்தனைஞானக் கோமளந்தம்திருங்கலை யழகிக்
கழகனைமலர்மஞ் சனமுதற்பொருளா லருச்சனை வினைமுடித்தாதி
முழுமுதல்போற்றி முக்கணுபோற்றி மூவெயில்முருக்கிய நுதற்கண்
மழுவலாபோற்றி யிழுதையேனரந்தை மாற்றருள்போற்றியென் றிரந்தான்.

இரந்துதாமரைத்தாள் வணங்கராவரசை யிறைவனுமகிழ்ந்து நின்பூசை
நிரம்பினபெறுகோ வரம்பலவென்ன நின்மலாவெனமனச் செருக்கி
னரந்தையுங்கிளையை யிகழ்ந்ததீவினையுமஞ் சிறைக்கலுழனுக் குடையா
நிரந்தரவலியு நின்னடிபிரியா நேயமுந்தருகென நிமலன். (௫௮)

கூறியபலவு மளித்தனமம்பொற் கொடிமணிவீதி யிந்நகர்க்குத்
தேறியநின்பேர் விளங்கவுமளித்தாந் திருமனைக்கிழத்திய ரொடுநீ
யீறளந்தறியா வளனெலாநுகர்ந்துன் னிறுதியிலெம்முழை வருகென்
றுறுதாழ்வேணி யந்தணனுமையோ டாலயக்குறியிடை யடைந்தான். (௫௯)

கொடிநிழல்கவித்த நெடுமனைமுகட்டிற் குடுமிமா மயிலணைந்தாடு
மொடிவறுவளஞ்சேர் தோணியம்புரியா னுடையவன்விடைகொடு தான்வாழ்
கடிநகரெய்தி வாளராவெவையுங் களிப்புறக்கலந்தன னிருந்து
பொடியணிபுயத்துப் புண்ணியன்கமலப் பொன்னடிநீழலிற் புகுந்தான். (௬0)

கறையணற்பகுவாய்க் காளிதனுலுங் காளியெம்புரியென வொருபே
ரிறைகெழுஞாலத் திலங்கியதிதன்சீ ரேவரேதெரிவுற நோக்கி
யறைகுவரென்னு வருட்கடன்பூண்ட வறுதொழில்முனிவ ரருவப்ப
முறைதெரிவேதத் துறையறிசூத முனிவரன்கனிவுற வுரைத்தான். (௬௧)

ஸ்ரீகாளிபுரவத்தியாயம் முற்றும்.

ஆக. திருவிருத்தம். ௫௫.

---



# வெங்குருவத்தியாயம்.

பொன்றரும் புகழ்க்காழி யம்புரியியல் போற்றி
மன்றமா நகர்வெங் குருப்பேர் புணர்வரவை
வென்றிமா தவன்சவு னகர்க்குரைத்த தொல்விரவி
லின்றறிந்த வாறியம் புவாமொரு வழியெடுத்தே. (௧)

வெறிமலர்க் கமலா லயன்பதி யிடைமேனாட்
டெறுசினத்து வாளவுணர் வந்தடி தொழுஞ்செருக்கா
லுறுமனக் கொடுசென்ற நாளயன் வெகுண்டொழிப்ப
மறுகிவீழ்ந் தனன்கிழக்குறப் பிருகு வின்மைந்தன். (௨)

தானவன் புகுந்துற் றதுசது முகன்றருக்கு
மானவென்றி வேல்நிரு தருக்குரைத்து வானவர்மேற்
றுனையோடெழீஇ வெஞ்ச மைந்துடங்கிய சமைந்தா
னனகாலையில் மகதியாழ் முனிவ னுண்டணைந்தான். (௩)

முனியையா தனத்தி ருத்திநல்விழுத்தகு மொழியா
லினியகூ றியகவி முகநோக்கின னெழாய
முனிவராட்சியை முண்டகன் பதவியை நின்பொற்
புனிதமில் லவரெய்து மாறெவ்வழி புகலாய். (௪)

தெரிவைசெய் வினையா டவனெய்து றுந்தேயத்
தரிய வல்வினை காவலனெய்து மாணுக்கன்
புரியுவல் வினைகு ரவனெய்துறுமரோ புகலுன்
பரிவிலார்வினைபற் றினனின்னை யும்பளிங்கே. (௫)

கோறல்வல் லவர்கொழுந் தசையூணினர் வலைவாய்ப்
பாறலம்புவெம் படையினர் தருமநூற் பழக்க
மாறன்மிக் கவரின் னவர்புன் மதிவளரத்
தேறல்செய் குருநீ யெனினுன்னிலார் தீயார். (௬)

இழுக்கிளோர் பொருள்வெஃகி யாறிரட் டியாண்டளவு
மொழுக்கினூசிநூல் கட்கிமை யுடற்குயிர் போலம்
பழத்த பண்பிலாத வனுமப்பதகனுக் கொருசொல்
வழுத்தினனுமே கிறையமேற் பயிரென வளர்வார். (௭)

குரவன்மே லவனுயினுங் குணமிழி சீத்தை
விரவுசீடனுய் விடினவன் கெடுவது மெய்யே

யுரியதெண்ணிலாவா யிடையும்பர் களுண்ணப்
பரியுமா ரமுதங்கனத் தூக்கவப்படிபோல். (அ)

ஒட்பமிக்கநீ யுன்னுடை யிழுக்கினுலோரெண்
கட்பிராறுலக் கன்றுகிழுற்றனே கவ்வேல்
விட்பசும் பிறைமிலேந்தவன் பூசையான்மேலோ
ருட்பதங்களுமுலவதி சிலனேடொத்தே. (௯)

என்றிரங்கி யைம்பதத்தையுமரு ளியிவ் வண்டம்
பொன்றிறுங் கெடாவொருபிரமாபுரிப் புனிதன்
றன்றிருப்பதம் பணிதியென்றளித்தனன் றணந்தா
னென்றுமின்னிசை மகதியாழ் முனிவரனொருசார் (௧௦)

மகதிவல்லவனருள் கொடுமொடீன் கொடிகள்
பகல்செய்வானவன் பரிக்கெதிர் வீசணிபரப்பு
மிகலில்காளியம் புரிபுருந்திரணிய கருப்பன்
புகாறுந் தடந்நீர்ம்புனலாடினன் புகரோன். (௧௧)

விரவுபற்பலகடன் முடித்தணிமணம் விரிக்கும்
வரமலர்ப்பிரானுட்டிய தருநிழல்வதிந்த
பிரமநாயகனடிப்பராயருச் சனைபெருக்கி
யரவணிந்தவனயல் வாசியினையிலகத்துள். (௧௨)

தெய்வலிங்க மொன்றிருத்தியாராதனைத் திறம்பா
தைவகைப் புலனடக்கியம் பலத்திறைமுறைப்
பொய்யிலாவுயிர்த் துணையை நாத்தழும்புறப்போற்றி
யெய்ய வாங்கணைய ளவையாமியத்திசையெய்தி. (௧௩)

நந்நூலாந் திலோகளிநட மொன்றுதன்றுமத்
தைந்துகொள மிட்டணி கெழுகங்கையாதிய நீர்ச்
சிந்துமான் மியமெவையுமுய்த் தாயிடைத் திருத்தி
யிந்து சேகரன்றன்னை யிசீடத்திறுமிறைஞ்சி (௧௪)

பொறிபுலா திகளவித்து முக்குறும்பையும் புறங்கண்
டறிவினுலறியா தறியறிவன் மாட்டறிவைப்
பிறிவறக் கலந்தாழ் சருகருந்தியும் பெருநா
ளொறியுமேல் வளிபருகியுந் தவம்புரியிவன்முன். (௧௫)

பருதியாயிரங் கோடியிற்பா யொளிபரப்பிச்
சுருதிநாயக னுலகெலாந் தொகுத்த சிற்றுதாத்
தருமநாயகி யொடுமெழுந்தருளலுந் தாழ்ந்தா
னருவியென்ப தோர்பொருளினை யலர்விழிகாட்ட. (௧௬)



தருஞ்சுந்தரச் சச்சிதானந்த பாண்ட ரங்க
பெரும் பிஞ்ஞக பிரளய விடங்க வென்றேத்தி
யிருபதம் பணிந்துருகிய பிருகுவை யெம்மா
னொருவ ராற்றுரு வருந்தவ மகிழ்ந்தன மொழிவாய். (௧௭)

விழைந்த வென்னென வெண்ணிலா வழுதொளி விரிக்குங்
குழைந்த வெண்பிறைக் கண்ணியாய் தயித்திய குருவாம்
பழங் கணக்குறு பவுத்திரப் படிவமு நின்பா
லழுங்கல் செய்கலா வார்வமுந் தருகெனவ மலன். (௧௮)

நம்பி யிந்நகர்வியப்பதிந் தெனைப் பணிநலத்தா
லம்பர் தேசிகன் சமத்துவம் பெறுதி யென்றுதவி
வெம்புருத மல்மிருத சஞ்சீவன விஞ்சை
யெம்பிரா னவன்பெறும் வகையுதவின னெழுந்தான். (௧௯)

தன்றுடைப் பெயரி லிங்கமு டெம்பிரான் சாரப்
பொன்றுடைத் தவமெய்திய கவியும் விண்போனு
னன்னவன் பெருந்தடத்தினி லன்னவன் றினத்தின்
முன்னியாடுநர் கனவினும் வறுமைநோய் முன்னர். (௨௦)

தலையிற்கோமய வறுகொடு வெள்ளி நாட்சார்ந்து
துலையிலாடுநர் துலையிலா வினையெலாந் துலைவார்
அலைவளாக மேலிருசுடர் நிலையும் நாளளவு
நிலையுமே தருபுகழொடு நிலவுவர் நெடுநாள். (௨௧)

தலையுவாவிலித் தடம்படிந் தருங்கடனமைத்தோ
ரலைவிதென்புலத்தவ ரொடுங் கயிலைவிட்டகலார்
கொலையும்வாள் விழிப்பிணி குருபிணி முதற்பிணியால்
மலைவிலாரொரு தினமதிற்படி யினுமாதோ. (௨௨)

விருப்பினுற் *றயித்திய குருப்பணிய வெங்குருவா
யிருக்குமிந்நக ரன்றியுமெருமை யேறுகைக்கு
மொருத்தனுறும் வெங்குருப் பெயரிப்பதிக்குற்ற
விருத்திதன்னையுங் கேண்மென முனிவரன் விரிப்பான். (௨௩)

வேறு.

ஆறுசேர்ந்தசடைமுதல்வ னருளானைத்திறநாடி யறியாரெட்டைக்
கூறுதிசையதிசைக் குணமந்தாடு நாகரெல்லாங்குழுமி மேருள்

* இப்புராணத்தில் அசுரகுரு பூசித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. திருக்கடைக்காப்பு—திருவெழு கூற்றிருக்கையில், "வெங்குருவிளங்கினை" என்பதற்குத் தேவ குருவினால் பூசிக்கப்பட்டதென்று உரையிருக்கின்றது. இங்ஙனமிருக்கின்றமையால் உரைக்காரர் புராணத்தின்படி யெழுதியிருக்கப் பிற்காலமொன்றைப் பார்த்தொன்றெழுதினவர்கள் பிறழ்ந்தனரோ யாதோ தெரியவில்லை.

நீறுடினெய்மிதந்து முடைநாறிப்புடைதோறு நிணச்சேறுடிப்
பாறுமொய்விலைவேல் பரித்தாடுமெறலியடப் பரித்தார்மன்னோ. (௨௪)

அரும்பெறல் யாக்கையைவரைவானயலவன்கைத் திட்டாணியதனைப்பற்றி
வருந்தியுறவரையா முனிழுந்தமெதன விழுந்துகடுமெழலியூர் போய்த்
திருந்துமனையெரி கதுவத்தணிக்கு மருங்கூவல்மூன்னே செய்காலாற்று
திருந்தழுவாரென நிரையந்திருந்தழுவார் மறலிதன்னை யிணையச்சொன்னார்.

மூவாவின்ன முதருந்தித்துறக்கமிசை யரமகளிர் முகிழ்மென்கொங்கை
யோவாதுபுல் லுனருமண்ணகத்திற் பலபோகமுறுகின்றாரும்
தாவாயின்னண மிருப்பவெம்முனைமுயினின் கிளைஞர் தண்டஞ்செய்ய
வாவாவிங்ஙனமாற்றோந் தறுகண்ணுமென் செய்கோமனியே மென்றார். (௨௬)

சமிக்கரியமுள்ளறைந்து மூசிமிசைச்சவட்டியுஞ் செந்தழல்வாய்ப் பெய்து
மமிழ்த்தழலூட்டியுங் கூடத்தேர்ச்சியும் வாச்சிகளாடி யொறுத்தும்வேறாய்த்
துமித்ததுணிகூட்டியும் வெம்புழுக்களொடு கழுக்களிடை சோரச்சோர
வமிழ்த்தியுமிவ்விருத்தியிலே விளிவற்றோயெவரிடத்து மளியற்றாயால். (௨௭)

ஒருத்தரின்முந் தொருத்தரிவ் வாறுற்றிய பேரோதைவளி யுயிர்க்கநூறு
திருத்தியழல்பொருத்திய செஞ்சுடர்ப்படையாற் செவித்துளையைத்துளைத்தாற்
போன்று,கருத்திளகிக்கண்பனிப்பக்கையறவுமீ தூறக்கவன்றகூற்றன்,பெருத்
தவினைத் தொடரறியாதுரைக்கினு மிவ்வுரையெனக்கோர் பிழையாமன்றே.

நல்வினையின் பயனுகர்ந்நாளிலெலேயுன்னினரோ நன்மைநீங்கி
யல்வினையின் பயனுகரச் சுளித்தனராலவரவலவறிவை நீக்கித்
தொல்வினையின் றொடரறியுமறிவை யறிவுறுத்தும்வழி தொடுப்பனென்று
வெல்வினையின் முடைத்தருமனடற் பிரமாபுரம்பணிய மேவினானால். (௨௯)

கண்ணடருங் கழைக்கரும் புதுவைத்திழிசாறெரித்த புகைக்கருங்காரென்று
வண்ணலங்கட் சிறைமயில்களாலு மலர்ச்சோலைகளு மகன்று வேதப்
பண்ணலங்கொள் பழம்பாடல்முனிவர் பணிசினகரத்திற் பதுமத்தண்ண
லெண்ணலஞ்சேர் தடமூழ்கிப் பிரமீசன் றிருமுனம் வீழ்ந்திறைஞ்சியேத்தி. ()

கருநீர்மையறவெறியுந் திருமூலப் பரஞ்சுடரிற்கனிவாலந்தண்
பெருநீர்மஞ்சன மாட்டியருச்சனையின் றுறைமுடித்துப் பிறழுந்தீபத்
திருவாராதனையாற்றி யாணர் முகைவிரிந்த தடஞ்சினையதெய்வத்
தருவாரு நாண்மலர்தூய்த் தடக்கைமுகிழ்த் தேத்திசைத்தான்றருமமூர்த்தி.

வேறு.

அந்த மறைகாணு தாதியிடையீ றிகந்த
சுந்தரமாய் நின்றிலங்கு தோணி நிலைபோற்றி
தோணி நிலையூர்ந்துசுலவுங் கடல் புதைத்த
பாணி நிலைகண்ட பகவாநின் றாள் போற்றி. (௩௨)



சாயைமறை காணுத் தாவரவிழுப் பொருளாய்
மாயமயத் தோணியின்மேல் வந்தநிலைபோற்றி
வந்தநிலையான் மலரோன் முதலெவர்க்கும்
பந்தமறுத்தாளும் பகவாநின்றாள் போற்றி. (௩௩)

வேறு.

படாதலவுருகியின்ன பலதுதிகளெடுத் தேத்திப் பணிந்தசெங்கோற்
கடவுண்முனமடலேற்றிற் கயிலைமிசையிவர்ந்த தெனக்கதிர் வேலுண்கண்
மடவரலோடெழுந்தருளி மறலியுளமகிழ் பூப்பமைந்தாவின்று
விடரகலவிழைத்த பணிமகிழ்ந்தன நீவிழைந்தனகேளெனவெங் கூற்றன். ()

புண்ணிய நின்னடிக்கமலப் போதினிலென்னுளக்கமலம் புனைதல்வேண்டுங்
கண்ணிநிரையத் துயிர்களெனைநோக்கி யிணையாமற்காத்தல் வேண்டு
மண்ணுமிருவினைத் தொடரினிருபயனு மவ்வவுயிரறிதல் வேண்டு
நண்ணியமரநக ரிதற்கு நின்னடியேன் பேரேறநல்கவேண்டும். (௩௬)

நடுவனிவை யிசைத்திரப்ப வடுவகிரினெடியவிழி நாரிபாகன்
கடுவினையின் பயனுயிர்களறியுமறி வளித்தன நீகவலேல்கண்ணிற்
படுவனகண்ணினையறியாதாடியெதிர் விழித்தறியும்படி போலுன்ற
நெடுமுக நோக்கியவளவேயவரவர் தந்தீவினையை நினைத்துநொந்தே. (௩௭)

இருவினையுமொத்தி முதற்கிடர்வினையா முயிர்க்ளிவையிகப்ப வேண்டி [கை
யொருவினையைத்துறக்க மிசையுய்த்தகல விற்றிடினுமரோ வொன்றையுன்
தருவினையானிரைய மிசைசவட்டி யொழித்திடுமோ மித்தகைமைத்தால்வெங்
குருவெனப்பேர் புணர்ந்தனை நீபணிந்தமையாலிந்நகர் வெங்குருவாமன்றே.

பொன்பழுத்தமணித்திதலைப் பொறிபழுத்த புளகமுலைப் பூவைபாக
னன்பழுத்துமறமகற் கிவ்வருள்பழுத்து விழுத்துளியி னகத்துப்புக்கான்
பின்பழிச்சியொருதருமன் தன்பதத்தினினிதிருக்கப் பெற்றானென்று
முன்பழிச்சுமுனிவரர்க்கு முறைபழிச்சினான் கலைகள் முழுதும்வல்லான். (௩௯)

வெங்குருவத்தியாயம் முற்றும்.

ஆக. திருவிருத்தம். ௫௯௨.

# காகமோசனவத்தியாயம்.

மங்கலம்பொலிவு மிந்நகர்க்கு மாண்டகு
வெங்குருப்பெயரியல் விரித்து வெங்கொடி
யிங்கிதினுயர்ந்தது மிசைப்பனென்றருட்
புங்கவன் புகன்றது புகலுவாமரோ. (௧)

முச்சகமிசை நிலாமுயங்க முன்னைநா
ளெச்சமிலிந்திர திருவுமெய்தினோ
னச்சமிலடல் விகடாங்கன் கன்னியர்
குச்சமென்புவிப் பொறைகொண்ட தோளினன். (உ)

தெறுகலியிருள் கெடத்தெண்ணிலாவுமிழ்
நெறிமதிக் கவிகையினிவந்த காட்சியான்
றுறுவலியொன்னலர் துதைந்த சேகரப்
பொறிமுடியுழுதெழும் பொன்னந்தோளினன். (ங)

சுகமழையுய்த்த வானவர்க்குத் தூமமென்
மகமழையுய்ப்பவன் வாரிநீத்தநீ
ரகனுறுகயலெனவவனித் தொல்லுயிர்
சுகனுறமனுநெறி துலங்குங் கோலினன். (ச)

பொறையினி விரும்புவிபொற்பின் வேனில்வேள்
கறையறுங்கனுடைக்கலவிக் கெல்லைநூன்
முறையினிலறமகன் முரணுந் தெவ்வர்கைத்
தெறைவரைமீதுலாஞ்சின வெள்ளேறனன். (ரு)

பொன்னடி மருவலர் புகழ்ச்சிபாவல
ரன்னசீர் மறையவரானை நீணிலந்
தன்னருளாதலர் சாற்றுமுப்பொறி
முன்னவன்றமர் கொளமுறைமை செய்யுநாள். (சா)

ஆழியொன்றுருட்டிநீ டவனிமங்கையை
வாழிரும் புகழ்ப்படாம் வனைந்தகோமக
னாழொளிமாப்படுத்துலவு வேட்டமே
லேழுயர்களிற்றினு னெழுந்து சென்றனன். (எ)

வலைஞருமண்டமர் கடந்தமள்ளருங்
கொலைஞருமறவருங் கூர்ம்பல்ஞாளியு
மலைமுரி கடலென வாரத்தானையு
மிலையயில் மன்னருமியைந்து சூழ்வர. (அ)

மொய்யுறு வெரிநிடைமுகந்த கூன்சிலை
யெய்வுறு கணைக்குமுன் னெய்துகூந்தலங்
கொய்யுளைப் பரியிவர் குமரன் சேனையால்
மையல்மா வுழிதருவனத்தை முற்றினன். (கூ)

தலைத்தலை யெறிவலைவிசறித் தானையை
நிலைத்தலை நிறுவிவேலெறிந்து நீளெயி



றலைத்தலை ஞாளியினுரப்பிப் பல்லியஞ்
சிலைத்தலும் விலங்குக டிரண்டுமொண்டவே. (க0)

கார்க்கடமுதுகடல் கறைகள் வைகறை
வார்ப்படை சல்லிய மாசரஞ்சாயகம்
போர்க்கணைக் கதிர்களாப்புரவி யொன்றுவா
பார்க்கிறை யிருளடுபதங்கன்போலு மால். (கக)

அவையிலோர் கேழல்கையகல மன்னவன்
கவையறு கவிழ்குரக்கலி மாணிழிந்
தெவருநின் றலமரவெண்ணில் காவத
நவையறு கருங்கழல் நாலவோடினன். (கஉ)

பெருந்தகை மற்றதைப்பிழைபயில் வேல்கொடு
தெரிந்துயிர் கொண்டனன் சேனைவேறுவே
றிரிந்தனவுச்சிவா யிறையொன்றாழ் படக்
கரிந்தனனடிபசி கன்றறவெம்பினன். (கங)

பொருபசி யகஞ்சுடப் புறத்தென்றாழ் சுடக்
கருதிய தனிமகன்கண்ணுற் றுனுயிர்
வெருவரா நடையினன் விமலன்வெள்ளிநூல்
மருமன் மேதாதிதி மடத்தினெண் புகை. (கச)

துருவியாண் டேகலுந்தோமில் மாதவன்
திருமுகங்கையி னின்மலர்த்திச் செல்வனை
வருதியென் றரும்பெறல்வாழி கூறினன்
குறிசிலும் வரன்முறை கூறினனரோ. (கரு)

செங்களம் புனம்படத்திரிந்து நால்வகை
யங்கமு மென்பெயரடைய யானொரு
வெங்கருங் கேழல்பின்மேவி நுன்னிழைத்
தங்கவந்தனன்பசி தணிப்பவெண்ணியே. (கசா)

அறைகழ லரசரேறனைய கூறலு
மறைவலா னென்றவமாண்ட திவ்வுழி
யுறைதியென் னிறநதுளோர்க்கூட்டும் வேள்வியின்
றுறைமுடித் துன்பசிதுடைப்ப னென்றனன். (கஎ)

துடைப்பது பசியெனிற் றுண்ணென் றின்னுறைப்
படைத்தருள் பின்னெனல்பரந்த வாரழ
லுடைப்புறு முறையுளாங்கொரு விவேறொரு
புடைச்சிறு துச்சிலைப்போற்றல் போன்றதே. (கஅ)

துலைமணி நாவெனத் துலங்கு கோன்மையான்
மலர்தலை யுலகருள்மதலை கேட்டியால்
புலனுறு மறையவர்ப்போக்கி யேனைய
குலனுனுங்கால் மகங்குறையு முண்மையே. (௧௯)

ஒழுக்கமும் வழக்கமுமோங்கு தண்டமும்
வழுக்கற நாடினைவழுக்கொழுக்கினு
விழுக்கினர் தமைத்தெறுமெந்தைக்கிச் செயல்
வழுக்கென முனிசொலவரசன் சீறியே. (௨௦)

புழுங்கி யெய்துழையரைப் புகுத்திவெண்பலி
யுழந்திடுகருணைநல் லோசைமென்றுவை
யழுங்குற வவ்வியுண்டரசு தேக்கறிந்
தெழுந்தனன் முனிவெகுண்டினைய சொல்லினுன்.

(௨௧)

அருங்கடிமனை புகுந்தயின்ற வேள்வியை
முருங்கினை பலியினமுகந்த காக்கையி
னிருங்கடி நகர்புகாதெரிவெங் கானிடைக்
கருங்கொடி யாகெனக்கழறி நீங்கினுன். (௨௨)

முனைவனல்கிய முரட்சாபமுண்டு வெங்
கனையிருட் காரியாய்க்கவிகைக் காவலன்
றுனைவினு ழுழன்றனனென் னிற்றூயவ
ரினையறு தவவலிக்கேற்றம் யாவதே. (௨௩)

ஆபதனுண்டி போயலறு காகமாய்ப்
பூபனும் பன்னிரு வருடம் போயபின்
மாபதன் கோதமனென்ற மாசறு
தாபதனுறை தவச்சாலை நண்ணினுன். (௨௪)

நண்ணனு மழல்வினைநடத்தி நண்பகல்
பண்ணுறு பலியிடுபகவன் கண்டனன்
விண்ணிமிர் சிறையொடும் வெடித்தவார்ப்பொடுங்
கண்ணுறுழல் காரகில்வாய் வெங்காக்கையை. (௨௫)

மேலத னியற்கையும் வேட்டமேயதுஞ்
சிலமர முனிவரன் செய்தசாபமுஞ்
சாலையினிடைத்ததுந் தன்னுட் கண்டனன்
காலமூன்றையு முணர்கடவுண் மாதவன். (௨௬)

முனிவனைக் காண்டலு முன்னராக்கமுந்
துனிபடு மிவ்வுருத்துடர்ந்த வாற்றையு



நனியுணர்ந்திறை மகன் ஞானவாரியை
மினியெனக் கருளென விரங்கியேத்தினுன். (௨௭)

பேமுறு மொருகரும் பிள்ளைவேந்தியை
யேமுறவுரைத்தலு மிதையத் தெண்ணிறு
ளூமுறு முனிவழி நலியவாழியான்
றேமறுத்துயரிய தொல்லைக் காழியை. (௨௮)

வார்ந்தகாவிரி முதலுறுநி மாதல
மோர்ந்தன மவற்றின் மிக்குபவ்வாளியிற்
கூர்ந்தநூற் கும்பனுந்தானுங் கோட்டிய
வீர்ந்தடத்தினி விரண்டிலிங்க முள்ளதை. (௨௯)

ஆலுமாமறை யவர்பிழைத் தலாதியுஞ்
சாலநூறிய விதிதடங் குலாய்தைக்
காலுலாங் திசையின் முக்கணையி னெம்பிரான்
வேலினூற்றிய தடம்விளக்க நின்றதை. (௩௦)

கருதுபு மன்னவ கவலல்மாகநாள்
மருவிய தெம்மொடும் வருதிநின்னுடை
யொருவிழிப் பவமின்னே யொழிப்ப நின்றுகொண்
டருண்மலி பொன்னிபுக் காடிமேலவன். (௩௧)

வேறு.

சேட்டிளஞ் செவ்விவாய்ந்த திண்கழைகுதட்டுமேதி
பாட்டினங் தும்பிபாடப் பரிசிலாக்குதவுவாரிற்
காட்டிமாமருத நீழற்கண முகிழ்ந்துறங்குமந்தண்
கோட்டநீள்காழி மூதூர்க்கொடிமதிட் கோயில்புக்கான். (௩௨)

மாகநீர்ப்படிந்த மேனிவனச நீர்த்தடத்திலாட்டி
நாகநீர் வேணியெந்தை நற்பதம்பரவிச்சூலத்
தேகநீர்த்தடத்து மாடியிரும் புனறெளிப்பவெங்கட்
காகநீருருவ மாறிக்ககாவலன் பொலிந்தான்மாதோ. (௩௩)

சிறுவரையடைந்த மாசுதெண்டிரை யனையநீர்மை
யுறுவரையடைந்தாற் றீர்வதுண்மையே யிவணின்னீரின்
மறுவரையொருவ னுடிவருடமீராறு நீங்காப்
பெறுவரையனைய மாசைப்பிரிந்தனன் றெறித்தநீரால். (௩௪)

பின்னெடுங் குணக்குன்றன்னபெரு முனியிறும்பூதெய்தி
யன்னெடுந்தகைக் கோனாந்துபதத்தையு மளிப்பவன்றன்

முன்னெடுஞ்சாப நீங்கமுனிவரன் வேள்விமுற்றித்
தன்னெடுந்துயர் விண்டென்னத் தன்றுயர்விண்டான்வேந்தன். (௯௫)

முத்தலைத்தடம் புக்காட்டி முரட்டடங்கரையினூடே
பைத்தலையரவவேணிப் பரமனைநிறுவிப் போற்றிப்
பித்தலைத் தென்னையாண்ட பிரமநாதனையும்வாசத்
தொத்தலைந் தருமென்கூந்தற் சுந்தரிதனையும்போற்றி. (௯௬)

ஆனமுதைந்துஞ் சேதாவளிநறும் பாலுந்தேனு
மேனவுமாட்டிப் பன்மாமலர்க ளேய்மையமீன்ற
பானலங் கண்ணியோடுபணிந்து ருக்குமம்பகர்ந்த
மாநலங்கொண் டெம்மாற்கு மணமுருகாற்றினனே. (௯௭)

சந்ததம் விழவுகாணத் தரும்பொருள்கோடிநல்கி
நந்தியூர்பகவன் கோயில்நற்பணி பழுதுபோக்கி
மைந்துறவிரித்து தாவாவல்லிருட் பிழம்புசீய்க்குஞ்
செந்தழல் விரிக்குஞ் சோதித்தெய்வதமணி யொன்றீந்தான். (௯௮)

நிருமலபோற்றி குன்றுநித்திய போற்றிஞானக்
குருபரபோற்றி யொற்றைக்குழைவலாய் போற்றிமேனு
ளருமையாழியான்மா லலர்விழிகவர்ந்து தெண்ணீ
ரிருமணிச் சூலத்தாலென்னிரு விழியளித்தாய்போற்றி. (௯௯)

போற்றியென்ற மலன்காழிப் புண்ணியனிச்சைபூண்டு
சிற்றவேரரிந்த தெய்வமுனியையும் பணிந்துசெவ்வே
தூற்றுசீர்முகில் பெருதசெந் நெலிற்றுவண்டுகெண்கள்
நாற்றிசைபரப்புந்தொல்லை நகர்வயினடைந் தான்மன்னே. (௱)

பின்னிருங் கூந்தனல்லார் பெருங்களியமுதமாந்தித்
தென்னிசைவளர்த்துந் தெவ்வர்சேண் முடிபணிந்துநேமி
யிந்நிலத்தேர்ச்சிமேனு மிறுதியி னிறுதியில்லான்
பொன்னடிநீழல்புக்கான் பொருந்தலர்க் கடந்தவேலான். (௱௧)

காகமோசனமாமின்ன காளியம்புரத்தியாரேனு
மேகநா ளரைநாள் யாமங் கண மரைக்கண மிருந்தோர்
நாகமாலிகையான்றொல்லை நல்லுலகடைவதல்லாற்
போகபூமியினும் போய்ச் சார்ந்தடைவரோ புகலினம்மா. (௱௨)

மெய்ப்படுமெண்ணெ யெள்ளும் வெண்ணெய் தீம்பாலுங்கட்டி
துப்படுசோறு மூரற்றொகுதி நல்லெனவுமாகா
வப்பரிசறத்தாற் காளிபுரத்தவதரித்துளாரு
மொப்பிலியாவரல்லா லுற்பவத்தினராகாரே. (௱௩)



பன்னியகாக நீங்குமெறுபவம் படைத்தலாலே
பொன்னிரு ழுந்தண்காழிபுனற் சென்மபுர மென்றோர்பேர்
மன்னியதென்று னெண்ணில் மறைபலவடித்த கேள்வி
துன்னியமுனிவன்றனைத் தொழுமடி முனிவன்றானே. (௱௪)

## காகமோசனவத்தியாயம் முற்றும்.

ஆக. திருவிருத்தம் ௱௪.

# புகலிவத்தியாயம்.

விண்ணிய லுருவக்காரி வேற்றுரு வமைந்து தோணி
நண்ணிய வொருவன்றனை நண்ணியதுரைத்த மேலோன்
புண்ணியப் புகலியாய பொருளையுந் தெரித்தவாறே
கண்ணிய வறிவுகொண்டு கழறுவான் கருதினேனால். (௧)

அறந்தலை பணிப்பநீதி யரசுகோல் கோடநீண்ட
மறந்தலை யெடுப்பநான்கு வருணமு மருண்டு தத்தந்
திறந்தலை கலங்கமாதர் செயிரறு கற்புநீங்கி
யிறந்தலைப் படப்பொல்லாத விருட்கலிபரந்து மேனாள். (௨)

பரந்தவன் கலிப்புத்தேளைப் படிறுடைக் குறளைநாலி
னரந்தை மந்திரத்தாற் பல்லோ ரழுகணீராட்டி யெள்ளிச்
சுரந்தபொன் மலரிற்பேதைக் கோயிலுட் சூட்டிக்காம
நிரம்பமு தருத்திப்பூசை நீணிலமன்னனாற்ற. (௩)

மானநூல் மறையோர் யோக மகளிராலவிந்த வேறு
தானமெண்ணில வேட்டங்கைத்தழலும் வீறழிந்தவாக்கி
லானபொய் யுரையால்வாழ்த்து மாசிகளவிந்த பல்லோர்
போனகம் பயில்வால்வேதம் போற்றலும் விந்தமாதோ. (௪)

தொழுகுலந் தவர்மாழாப்பச் சுருதிநூற்றுறைகள் யாவு
மிழிகுலத் தவன்விரிக்கு மிறையில்லை வினைகளில்லை
முழுவதுந் தானேயென்று மொழிந்துமுற் றுணர்ந்தார்போல
விழுதைகளொடு செம்மாக்கு மிகம்பரமில்லையென்றே. (௫)

அரிவைதன் கொழுநன்கேட்ப வாய்மதியுறுத்து மன்றான்
றெரிவில வதற்குமைந்தன் றெருட்டுறுதெருட்டுங் காலை

யுரியதன் றெனமறுத்தா லுணர்விலியஞ்ஞையின்னும்
பிரிவிலன் மருந்திற்றீராப் பித்தனென் றெள்ளுமாங்கே (௬)

மறப்பது குரவன்வாய்மை மடுத்தினி தின்பவேரித்
துறப்பது பெரியோர்கேண்மை தொடங்குவவிடும்பை சூது
சிறப்பது கயமைச்சூட்சி செய்வதுகாமப் பைங்கூ
ழிறப்பது கடவுட்பூசை யிசைப்பது புலனிற் கோட்டி. (௭)

வற்புறு மகங்கடேய்ந்து மழைவளஞ் சுருங்கி மாதர்
கற்பிகந் தான்பாலஃகிக் காசினிபொய்த்துத் தேயம்
பொற்பழிந் தொழுக்கமாறிப் பொய்கொலை களவு காமம்
பற்பல களியாட்டாடப் படர்கலியாடு மந்நாள். (௮)

புறக்கொடுங் களைகள்மொய்ப்பப் புலம்புறு பைங்கூழ் போன்று
திறப்படு முலகமெங்குஞ் செறிகலிபுதைப்ப நோக்கி
யிறப்பருந் துயராலோர்சா ரிருந்து தன்னிலம்பா டுன்னி
யறப்பெருங் கடவுளுள்ளத் தாரஞரெய்தினனே. (௯)

ஆடகக் கொடிமென்சாய லன்னையோடமர்ந்த ஞான
நாடகக் கொழுந்தை வெள்ளிநகத்திடைப் பரவிப்போந்த
மாடகப் பருதிபற்றல் மகதியாழ் முனிவனந்த
நீடகங் குழையாநின்ற தருமனை நெறியிற் கண்டான். (௧௦)

என்கொலோ தருமப்புத்தே ளீண்டிருந்தனை நின்சேதி
மின்குலா மேனிவாடி மெலிந்தனை யிளவெண்மூர
லுன்குலா முகத்திற்காணே முற்றதுசொற்றி யென்ன
நன்குலாந் தருமச்செல்வனனி யீதுணாக்குமன்றே. (௧௧)

முன்னுக மதனினான்காய் மொழிந்தபின் னுகத்தின் மூன்றாய்ப்
பின்னுக மதிலிரண்டாய்ப் பிறழுமிக் கலியிலொன்றாய்ப்
பன்னிய வறங்களின்ன பாங்கிலேதாழத் தாழ்ந்து
மன்னிய தாள்கடேய்ந்து வருந்தினேன் வருந்தினேனால். (௧௨)

கலியிடைச் சுருங்கியொற்றைக் கால்கொடுதிரிக லாற்றேன்
வலியுடைத் தாளோர்நான்கும் வரும்வழி யருளுகென்ன
மெலிவினை யறிந்ததெய்வ வீணையங் கிழவனீண்டே
நலியலைத் தருமவென்று நகைமுகமலரச் சொன்னான். (௧௩)

களித்தபுள் விலங்குதம்மிற் கனிவுகூர்ந்தீன்றதாய்தம்
மளித்தலைப் பிரிந்தஞான்றே யயலெனத் திரியுமாபோற்
சுளித்தலை யில்லோயுன்னைத்தோய்ந்தநா ளுன்னுள் பொச்சாந்
தொளிந்தாள் கலிநாளல்லா லுன்னில்வே றுண்டோகூறாய். (௧௪)



பொன்வலி காட்டும்வேணிப் புண்ணியனுளத்து வந்தாய்
நின்வலி நீயுங்காணாய் நிகழ்த்துமுன் னுகத்திற்குன்றா
மன்வலித் தவமாசாரம்வளரருள் மெய்ம்மை மல்க
வுன்னுடை நான்குதாளாயுற்றன நினக்குவேந்தே. (௧௫)

அதுவழி யுகத்தாசார மருள்மெய்ம்மை மூன்றுமோங்கக்
கதுவுபொற் றாளோர்மூன்றிற் கவின்றனைமற்றை யூழி
பொதுவுடைக் கருணைமெய்மை பொலிந்திடத் துணைத்தாள்பெற்றாய்
முதுகலி மடங்கல்மெய்யே முயங்கவோர்தாள் பெற்றாயால். (௧௬)

மெய்யொன்றே நின்றவாற்றால் விரிசுடரிரண்டுஞ் சொல்ல
மையொன்று புணரிநிற்கமன்பதை மலைந்துதம்முட்
பொய்யொன்று முள்ளந்தேறப் புகன்றுகுருறவு காணக்
கையொன்றுமழல் சான்றாகக்கண்ணுவப் பலவுங்கண்டாய். (௧௭)

ஆதலினொருதா ளுற்றாயணுக்கள் செய்வினைக்கீடாக
மாதொருபாகன் றந்தவகுப்பலாற்கலி வேறொன்றோ
நீதுயருறுவா யல்லைநிகழ்ந்துள பரதகண்டத்
தோது தென்றிசையிற் பொன்னியுத்தர திசையினூடே. (௧௮)

வாரட மிடைந்தகொங்கை மடநல்லாரோடும் வைவேற்
சூரடமெலிந்த விண்ணோர் துதைந்தனர் புகலால்மூதூ
ரோரடர் புகலியென்றே யிலங்கியதிறுதி வேலை
நீரடவிழியா தொன்று நின்றது நீயுங்காண்டி. (௧௯)

அனையதி லெம்மானோர் மூன்றருளுருப் புணர்ந்தான் றன்னை
நனைமலர்கொடு தூய்ப்போற்றி நான்குறு தாளும்பெற்று
வினையற விலங்குகென்று விடுத்தலும் வீணைச் செல்வன்
புனைகழ லிறைஞ்சிப் போந்தான் புண்ணியவுருவத் தோன்றல். (௨௦)

வேறு.

தருமாதி தருந் தருமத் தொருவன்
றிருமாதுறை செம்பிய நாடணுகிப்
பெருவால் வளைவீசு பெருந்துறை நீர்
வருகாவிரி யாடினன் மாடுறவே. (௨௧)

வடபால் மயில்வால் சிறைவீசிய கா
லடல்வேல் விழியார் மணி யூசலசைத்
துடனாட வுலாவரு தண்டலைசூ
ழிடனார் பிரமாபுர மெய்தினனால். (௨௨)

பொன்னு ரெயின் முற்றிய பொற்றளி வாழ்
தன்னே ரிலிதாடொழுதாய் மறையோன்
முன்னூ தட்த்தினின் மூழ்கி யதன்
பின்னுதனருச் சனைபெட் புறவே. (௨௩)

வழிபாடு வழாது முடித்தயலே
மொழி தாருவி னீழலின் முக்கணனைப்
பழிபோ யதனும முறப் பயில்வித்
தொழியாதிரு தானமு முண்மையினால். (௨௪)

வந்தித்து வணங்கினன் மாவருடம்
பந்தித்தொரு நூறுளர் கால்பருகிச்
சந்தித்த தவந்தருமன் செயலா
லந்திப் பிறை வேணிய னவ்வுழியே. (௨௫)

முகிலூர் குழன் மின்னொடு மூவிலையா
ரிகல் வேலொடு மெய்தவு மீரடிமே
லகலாத வருத்தி கொடாய் மலர் தூய்ப்
புகவீழ்ந்து புகழ்ந்து பணிந்தன னால். (௨௬)

பணிகின்றவன் மேனிகளைப் பணிதோ
யணிசெங் கையினீவி யருந்தவனீ
தணியெவ் வரமுந் தருதுந் தருமா
பணியென்ற பணித்தொடை யானெதிரே. (௨௭)

உன்மா னடியுள்ள மிருந்த தெனு
வென்மா முறுகெய்தவு மீரிருதாட்
சொன்மா வலிகொண்டு சுமக்கவுமுன்
பொன்மால் விடைபோல் வலியுந் தருவாய். (௨௮)

என்றின்ன வீரந்தவரம் பலவும்
பொன் றுன்னுபொலன் சடையானுதவி
யென்றுந் தனி யேறுருவாயுறையென்
ரொன்றுங் கரமுச்சியில் வைத் தறைவான். (௨௯)

செம்மா மறையுஞ் சிவ கண்டிகையு
மெய்ம்மான் வெண்ணீறு மொனாம் பதமு
மிம்மா றுடைநின் னொடைமைந் திவையே
யெம்மோடொரு தன்மைய வென்றறிநீ. (௩௦)

வேறொன்றும் விளம்பல மெய்விரத
வீறும் பதமைந்து நிறைந்துளவ



னேறும் பொறையன் பிறனிற்கவரான்
வீறுஞ் சிவபூசைகள் மேவுழியும். (௩௧)

அரசோடுதுழா யணிகூவிளமா
னிரைவேத நெடுந்தளி சந்தமட
முறைநூல்விரி வேள்வி யுளுற்றுழியும்
வரைமாது வதிந்துவிளங்குகநீ. (௩௨)

நீயேவ நெடுந்தவ மாமவையே
நாமேவுவ நம்மருள் கொண்டுலகந்
தாமேவ விளங்கும ரோதகையால்
யாமே வுலகெங்கு நிறைந்தமையால். (௩௩)

இவணீசெயு மிலிங்க மிதைப் பணிவார்
பவமாறுக பாய்பரிமேதபலன்
றுவமோ டினிதெய்து கதூயொளிவிட்
டவராளுக நங் கயிலாயமதே. (௩௪)

பெருமாடை புனைந்தவர் மா வருணன்
றிருமேவுக செய்வழி பாடுடையா
ரொருகோடி மகப்பல னுற்றுமணந்
தருமாதியி னெய்துக சந்ததமே. (௩௫)

வெடிசந்த மிறைப்பவர் மிக்கமகம்
படியொன்றுப வுண்டரிகப்பெறுவ
ரெடியிங்ங னிருப்பினு நோதகவற்
றடியந்த மிலாவுல காளுகவே. (௩௬)

நடநாதனிவ் வாறருணல்கி யுகந்
தடலே றுருவானவன் மாமுதுகிற்
படநாகனை யான் விழிபற்றியநீள்
மடலார்வன சங்களை வைத்தனனால் (௩௭)

இடையிற் கொடியோடினி தேறியபொற்
சடைமுத்தனருட் கொடுதன் னுருவோர்
விடைபெற்றவன் மேலும் விடாவிடையேற்
றடையத்தனரும் பதமுற்றனனால். (௩௮)

பரிவார்தருமன் பணிபண்ணவனுந்
தெரியாநிலை சென்றனனென்றுலவா
விரிவார்முது வேதவியாதனருட்
பிரியாமுனி பேசினன் மாசறவே. (௩௯)

## புகலிவத்தியாயம் முற்றும்.

ஆக. திருவிருத்தம். ௯௭௫.

# சிரபுரவத்தியாயம்.

பரவுகொடுங் கலிநலிய மெலிந்துயிர்பதறி நெடுந்தருமன்
சரணமடைந்துள நெறியிவையிங்கிது தனிலொருவன்பணியச்
சிரபுரமென்றொருபெயரின் விளங்கியதிறனும் விளம்புவனென்
றுரவன்விளம்பிய கதையையுணர்ந்ததி லொருவழியிங்கறைவர்ம். (௧)

அமரரும் வெம்பியவசுரருமந்தர வருவரைகொண்டெறிபா
லிமிழ்திரையுந்தியின்னடுதெறி சந்திரனிடுமுரகங்கயிறுய்த்
தமரநெடுங்கடல் குமுறவிரும்புவி தகர்படவெண்டிசையுந்
திமிதமிறைந்திட வமுதம் விழைந்துறுதிறலினருங் கடைநாள். (௨)

சுலவுதடங்கடலல மரமண்டியசுடுகடு வெங்கறைநீர்
அலர்மகளேந்தரு முழுமணிவெம்பரியடுகரியும் புவிசூழ்
நலனுறுமங்கையர் சுரபிகள்வந்து பின்னரைதிரைதஞ்சலிலா
திலகுமருந்தென மமுதமெழுந்ததிலெவரு மகிழ்ந்தனரால். (௩)

எழுமமுதந்தனையிரு முதுபந்தியினினிது பகுந்திடுமா
றெழுகியவன்பினின் மமையுறமும்திருவுருவ வெழுந்துணர்வால்
முழுவலிதுன்றிய நிருதருமுண்டெழிமுரணி முடிந்திலரா
யழிவறுவெஞ்சமம் விளையுமிவ் வஞ்சரை யடுதிறமெங்கனென. (௪)

மதிவதனம் புனைதிலதமும்வெண் பிறைவரிநுதலுங்குழையோ
டெதிர்பொருதுந்துணைவிழியு மருங்கொடியிடையுநறுங்குழலுந்
திதலையரும் பியவிளமுலையுங் கொடுதிருவளர்பெண்கொடியா
யதிர்செய்சிலம் பொலிகுமுறநடந் தனனசுரர்மயங்கிடவே. (௫)

குறுநகைவெங்கய லெறிவிழிபொன்புனைகுவி முலைகண்டிவளே
யுறுகநியென்றுகண்ணிணை பதியுண்டவருணர் வுமழுங்கியிடத்
தெறுவியொர்செங்கையி லமுதொருசெங்கையில் வரும்வகைசென்றிமை
யோர்,' முறையினிருந்தகை நிறைய நறுஞ்சுதை முதல்வனிடும்பொழுதில். ()

வேறு.

அங்கிலையேமயங்குனரி லடற்சயிங்கி கேயனென்பா னமரர்பந்தி
தன்னிலிருசுடர்க்கிடைவேற் றுருக்கொடுபோயிருந்தமுதந்தனைக்கொள்காலை
மின்னுறுமாழியன்கதிர்வா னவர்குறிப்பாற் றெறுவிகொடு விசைத்துவீசப்
பின்னரவன்றலைதுணிந்து விசையினில்வீழ்ந் ததுகாழிப் பெறுவீதிக்கண். (௭)



அவ்வெழில்வீதியின் கீழ்பாலொரு குரோசத்தளவி லனையவெய்யோன்
வெவ்வெழில் யாக்கையும் வீழ்ந்ததிருகூறு மமுதமுண்ட வியப்பினுலு
மிவ்வெழிற்காழியை யடைந்தநலத்தாலு மிருபாந்தளி றைவராகிச்
செவ்வியொடுபணிகுவரா லன்னவரின் முடிக்கூற்றுத்திறலோ னிப்பால்

வேறு.

நோதகவித்துணை நானடையத்தனி நோனலரிற் பிழைகூ
றுதவமிக்க திவாகரனைத் தெறுமாறு நினைத்திமையோர்
நாதனையிப்பிர மாபுரிமுத்தனை நாலுமறைச் சிகைவாழ்
பாதனையர்ச்சனை பேணிவலித்தெதிர் பற்றியமுற் றறிவால். (௯)

நீடலகைக்குழூ வார்கண்முகிழ்க்கினு நீள்கண்முகிழ்த் தறியா
வாடவிசைப்பல தூரியமிக்கொலி யாலயமுற் றலரோ
ரேடலர்பொற்றட மூழ்கியருட்பிர மீசனடித் துணைமே
லூடுருகிப்பல பூசைமுடித்தய லூதைநிலைத் திசைவாய். (௧௦)

மாணுறுமோரிரு கோலளவாயொரு வாவிசெய்தா யிடையோர்
தாணுவையாலய மீதுசெய்தோரிரு தானமு மேன்மையினு
லாணமருவழி பாடுடை யானசையாமலை வாயழல்வா
யூணிலியாய்வளி யூணுகர்மாதவ மோவறவா டினனல். (௧௧)

கார்படுநாளையி லேவெளிமேலொரு காவினிலே நிலையா
வோர்பனிநாளையி னீரிடைமூழ்கிநல் யோகினிலே யுணர்வாய்ச்
சூர்படுமோனவ வேரறவீசு சுகோதய வாரியிலே
யார்படுநேயம றுதருளேபொரு ளாயுறைவா னெதிரே. (௧௨)

பனாயொடுபக்கலி லிலகமலைக்கிளை பகர்விடையிற் கரமேல்
வரதமழுப்படை பொலிதரமுக்கணும் வலியவளைப் புயமா
றுரகமணித்தொடை யசையமுகத்தரு ளொழுகவரிச் சிலைவேள்
முரணையகற்றிய பிரமபுரிக்கிறை முதல்வனு தித்தனனே. (௧௩)

எந்தையெழுந்தமை கண்டிருகண்களி னும்புளகந் தருநீர்
மூந்தவுடம்புகு ளிர்ந்திருசெங்கை முகிழ்த்துமு குந்தன்முனோர்
சிந்தையுகந்து குழைந்துபொதிந்த செழுஞ்சரணங் களின்மேல்
வந்தனையுந்துதி யும்பலதந்து வருந்தி யிரந்தனனல். (௧௪)

எஞ்சலிலண்ட ரினஞ்செறிபந்தியி னின்பமருந் துணநான்
செஞ்சுடர்வெண்சுட ரின்குறிகண்டு தெரிந்துநறுந் துளவோன்
வெஞ்சினமண்டிய ரிந்திடவிங்குவி ழுந்தனனின் பணியா
லஞ்சனனென்கண் விரும்பியிரங்குவ தொன்றுளதெம் பெருமான். ()

புரைபடுமுற்பழி தரினவரைப்பழி புரிவதெமக்கி யல்பால்
நரைதிரையற்ற தெள்ளமுதமெடுப்புழி நலிவுசெயுஞ் சுடரா
மரையரவர்க்குளவ் விரவிதனைத் தெறுமடலை பணித்தியெனு
வரைபொருவப் பொருகரியுரி யுத்தமன்மனமலரப் புகல்வான். (கசா)

வேறு.

பொறிபுலாதிகள் புறக்கடை கண்டொரு புனைதாள்
நிறுவிமாதவ மிழைத்துளார் நின்னிகர் யாரே
யுறுதியின்னதே லளித்தன முன்னுட லாய
வெறுள்செய்வாளரா வேந்தனுந் துணைபடைத் திகலால். (கஎ)

இயலு நள்ளியோடாளரியிருசுடரமைய
முயலுமால்புகர் சேயமறையோன் சனிமுறையே
யயலயற்களையிரண்டிறுமமை வருமமைந்த
வியனுலாவிய சோதிசக்கரத் திருவீரும். (கஅ)

வருடையாதிபன்னிரண்டினும் வரன்முறையெதிரே
பொருவிராகு கேதுக்களாயேழினேழ் பொருந்தத்
திரிதிரீருவாவொழிந்த நாட்சுடர்களைத் தீண்டு
ரொருபதத்தினோர் மீனிலோர் வீட்டுறிலிருப்பீர். (ககூ)

துத்தியம்புரிந்தருஞ் சிரந்தவம்புரி தொடர்பா
லித்திருப்பதி சிரபுரமாக விவ்விலிங்கம்
பத்தியாற்பணிந்தித் தடம்படிந்துளாரோரெண்
சித்தியெய்து கவுளத்தழுக்காறு கடிந்தே. (உ0)

என்றுநல்வரமளித்து மையவளொடுமேற்றுக்
குன்றிவர்ந்தவன் மறைதலுங் குழகனதருளா
லன்றறுக்கை பெற்றரும்பதம் புக்கிருசுடர்மே
லென்று மின்னணம்படங்கொடு மறைத்தனரிருந்தார். (உக)

முறுக்குகோட்டுமானிரலை தண்டுதியமுடிமேற்
செறித்ததாள் மடக்குண்டெனச் செழுஞ்சுடரிரண்டுங்
குறித்ததம்முடை மொழியினாற் சுடுவிடங்கொழித்துப்
பொறித்தமா சுணம்படக்கதிர்ம ழுங்கினர்போவார். (உஉ)

கொள்ளை வெள்ளெயிற்றரவர சிரண்டொடுங்குழுமா
வெள்ளல்போயகோளொன் பதாயெனவிவண்வதிந்த
வள்ளறன்செயலுரைப்பரி தென்றனன்மறைநூற்
றெள்ளுமாமுனியிணையடி தொழு முனிச்செம்மல். (உங)



மன்னிரும் புயறவழ்கொடிமாக மூடறுக்குங்
கன்னியாரெயிலுடுத்த பொழிற்காழிமாநகரத்
தென்னையாளுடையான் முனமிக்கதைபடித்தார்
பன்னிவேட்டுளாரிருவருமின் பவம்படியார். (உச)

சிரபுரவத்தியாயம் முற்றும்.

ஆக. திருவிருத்தம். கூசாசா.

# குருத்துரோகமோசனவத்தியாயம்.

பிறைவா ளெயிற்றுரு ராவண்ணனல்பெருஞ் சிரப்பே
ரிறைமா நகர்க்குற்றதுகூறி யிதற்குளரசன்
குறையால் வருதீவினைபோயது கூறுகின்ற
நிறைமாதவன் சொல்வழியானு நிகழ்த்துவேனால். (க)

பூவாளிதாழப் பொறியட்டவர் நேமிவாய்ந்த
தேவார்வனம்வாழ் திருமாமுனிச்செல்வர் மேனாள்
மூவாயிரஞ் சிவகாதையின முனை மிக்கார்
தாவா தவ வருட்குருதனையொன்று விறுதல்செய்வார். (உ)

மஞ்ஞுரு மைம்பால்வனவல்லி மணந்தகோவு
நஞ்சூர்களத் தானடியேவல்செய் நந்திதானு
நெஞ்சூரருட் டேசிகனின்னொடு மூவரன்றே
தஞ்சூருலகுக் குருவென்ப தலத்தின் மிக்கார். (ங)

கவனம்படு பல்லுயிருங்கதி காட்டியுய்ப்பான்
சிவகண்டிகை யுந்திருநீறுமெழுத்தோ ரைந்தும்
புவனந்தொறு மாரழலாடிபுணர்த்ததேபோற்
றவனம்படு மெம்முழைநின்னையுந் தந்தவாற்றால். (ச)

ஆசானியல்பும் பிழையாதடியேன்செய் மான்பும்
கூசாதவனைப் பிழைத்தான்படுகோறு மெல்லா
மாசானது பாறிடநின்றிருவாக்கி னின்று
பேசாவிடி னெவ்வழி யுய்வது பேதையேங்கள். (ரு)

எனவாதரந் தோடிவைகூறிய சவுனகாதி
முனிவோருவப்ப முகிழ்வாணகை பூத்தசோதிக்

கனிவாய்மலர்ந்து கருணைக்கண்மலர்ந்த தொன்னூற்
றனிவார்கலியன் னவனின்னனசாற்ற லுற்றான். (௬)

நன்றேயிவணீர் வினவுற்றது ஞானவாசா
னென்றேபிர மீசனையெய்தி வியம்பவெல்லா
வொன்றேயெனினு முணர்ந்தாங்குரை செய்வனென்னாக்
குன்றே குணத்தான்குரவோ னியல்கூறுகின்றான். (௭)

தோளாமணி போற்றெருழுதொல்குல மேவியீன்ற
கேளாரிரு தெய்வதபூசைகிடைத்து வேதத்
தாளாலுயர் வைதிக சைவமுந் தாங்கியெம்மாற்
காளாகி நின்றானவனென்ப வறிந்தவாசான். (௮)

காரன்னவீகைக் கதிரன்னநுவற்சி வான்றோய்
நீரன்ன தூய்மை நிறைகோன்முறையன்ன நீதிப்
பாரன்ன வாற்றல்பணிமால்வரை யன்னதோற்றஞ்
சீரன்ன நோன்புதினையன்னதொல் கேள்வியாய்ந்தே. (௯)

நடையே பலவங்கமுநல்க நவிற்றுமன்னா
னிடையே பலதெய்வமு மெய்தவியம்புமாதிக்
கொடையே யிருமைப்பயனுந்தரக் கோதிலான்கண்
கடையே வினைப்பாடறுத்துக் கதிகாட்டுமேலோன். (௧௦)

நன்மார்க்க னோம்பதத்தோடறு நான்கும்வல்ல
சன்மார்க்க னாற்றுந்தழலன்றரு மாதியோதுஞ்
சொன்மார்க்கன் வெண்ணீறொடு கண்டிகை தோய்ந்த வுண்மைப்
பன்மார்க்கன் முக்குற்றமு நீத்தபழிப்பில் மேலோன். (௧௧)

இவனேகுரவோ னிவனன்றியு மானமுன்னோ
னவைநீர் விரதன்சிவவாக்கிய நன்குணர்ந்தோன்
சுவைநீரமுதீப வனச்ச மகற்றுந் தொல்லோன்
புவிமேலிருவருங் குருவெனப் பொருட்டுணிந்தார். (௧௨)

ஐயந்திரி பொன்றிலாதாயறத் தாறுகூறி
மெய்யென் றுயிர்போற்பலமன்னுயிர் மேலுமன்பு
செய்யுந்தகையால் வழிபாடுடைச் சீடனுக்கே
கையொன்று நெல்லிக்கனிபோற் பொருள்காட்டல் வேண்டும். (௧௩)

காலம்புனை கற்பனையிற்கனிந்துயிர்க்கா
யாலம்புனை நீள்முடியைந்து முகத்தினின்று
நாலைந்து மெட்டு நயந்தோதிய ஞானநூல்க
ளோலம் புரிகிற்பன முப்பொருளுண்டு மாதோ. (௧௪)



பதியென்று தொல்லைப்பசுவென் றடர்பாசமென்று
துதிகின்றமூன் றி லுயிரோடுறத்தோய்ந்து தோயா
வதிபன்பதியா மவனாருளொன்றை யென்றும்
பதியும்பொருளே பசுவாமிவை பன்னின்மன்னோ. (௧௫)

மாமாயை மாயைவினையாணவமே மறைப்பே
யாமாமிவை பாசமனாதியருட் பெருங்காற்
போமாலருளும் புணரப்புணர்கின்ற வின்பத்
தேமாறொளியே பொருளென்றனர் தேர்ச்சிவல்லார். (௧௬)

விளியா விருட்டைவிழுங்கிச் சுருங்காவிரிந்த தீப
வொளியா தவனோடொருவாதுற வுண்டதேபோற்
றெளியாமலப் பாழிருள்சீய்க்கு மோர்தெய்வ ஞான
வொளிகாரணத்தேவ னொளியோடுறவுண்ட தண்மை. (௧௭)

இவ்வாறுயிர்கட் குயிராம்நெறியெங்கு மொன்றாய்ச்
செவ்வாய்த் தெளிந்தோரறியா தறிசித்தாகி
யொவ்வாவொரு பேரொளியென்ப வுயர்ந்தகாழி
மொய்வாய் வரைமேலமருங்குரு மூர்த்திதானே. (௧௮)

அல்லார் மிடற்றானணியால நீழற்கீழன்று
சொல்லாது சொன்னபொருட்பாடு தொகுத்துணாக்க
வல்லானருட் டேசிகனன்றியு மற்றோர்தெய்வ
மெல்லாரையும் வீடெளிதுய்க்கு மதியாதுகண்டீர். (௧௯)

மண்ணங்கறி சோறமைத்துண்டம காரின்யாமே
யெண்ணும் பிரமமெனக்கூறி வீணராதி
கண்ணுங் கயமைத்துறைஞர்க்கிது காட்டலாகா
நண்ணும் பருவத்தவர்க்கீது நவிற்றலாமால். (௨௦)

அருகித்தரு பஞ்சடாகுண்டிகை பேறலாகா
பெருகிப்பயில்வார்க் குதவாமடற்பெண்ணை போன்று
தருநற்கிலைகா யுதவாமுடைத்தாழை போன்று
முருகிப்பணிவா ரொழித்தல்லவர்க் கோதலாக. (௨௧)

இருளொன்று தன்னைத்தெரிக்குந் தெரியாவிருட்டாய்
மருளுமல வல்லிருட்சத்திருகா ரமாக
வொருவுஞ் செயலாகுவதோது றுகாரமாகக்
குருவென்ற சொற்குப்பொருளீது குறிக்கொள்வீரால். (௨௨)

வேறு.

ஏதமில்லைய குரவனையடுத்தாங்கிரவினும் பகலினும்விள்ளாக்
காதல்மீக்கூர முன்னொடும்பின்போய்க் கைவிடாதுடலிடை நிழற்போற்

கோதகல்மனத்தாற் குணத்தொடுபழகிக் குறிப்பறிந்தொழுகியுள்ளவர்மாட்
டாதுலர்போன்று மாசிளஞ்செல்வரடுத் துழியிளையவர் போன்று. (௨௩)

வெருவருமுளத்தன் பொழிவழிபுலன்கள் விடுக்கிலாவிரதன் வெந்தழலென்
றருமநூலறிஞ னிருமுதுகுரவர்தம்மடித் தொழும்பின்யாண்டும்
பொருவருங் குரவன்மக்களிலொருவன்போலுமென் றெண்ணலான்பொறை
யன், பருவமோர் நாலையியற்றுறும்பருவம்பயின் றவன்படிறுதீர்மொழியான்.

பாசிலையரம்பை யீர்ந்துணிதழல்வாய்ப் படிந்தனபருவமுங் கவைநா
வீசியதழல்வா யிந்தனத்திரளை வீழ்ந்தனபருவமுங் கரிகள்
மூசியதழல்பெய்தன் பருவமுமிம்மூன்று மற்றுரழல்முகத்தி
லாசியல்பஞ்சிபோன் மெனும்பருவமடுத்தவ னெடுத்தமாணக்கன். (௨௫)

தொலைநிலைதுன் னீளிருவினையொத்துத் துடக்குறுமிப்பருவத்துக்
கலைபலதேர்ந்து குரவனீரடியைக்கைகொடு வினைக்கடல் கடப்பான் [ல்
மலைவில்கண்டிகையு நீறுமைந்தெழுத்தும் வனைந்தமாணவன்றிறத்தொருசொ
லுலைவறவளித்த குரவனுமவனுமுறுவரால் வீடுபேறொருங்கே. (௨௬)

மூவெயில் படுத்தானடியனைப் பணிதல்முதல்வ னாராதனைவிரும்ப
லாவலிற்புரித லிறையடிபணிதலான்றவொப்பிலி புகழ்கேட்டல்
பூவலர்கண்ணீ ரரும்பமெய்சிலிர்த்தல் புண்ணியன்பணிகொடுண்ணுத
லோவறுபணியோ டெண்வகைப்பத்தி யொழுக்கிலார்க் கோதுதலிழுக்கே. ()

பூதகாரியத்தி னெழுவெயிலொளியைப் பொருண்மிசையுற்றலாற் கண்ணுற்
பேதறக்காண்டலரி ததிலரிதாய்ப்பிரிவிலாதுயிர்க்குயிர் தானாய்
வாதமுங்கடந்து குணங்குறியகன்று வரவுபோக்கிறந்த பேரொளியைப்
பொதமேற்காட்டுங் குரவனதடியேபொருளெனார்க் குணர்த்தலும்புரையே.()

உதகநீத்தமுதுன் னோதிமம்போலவுறுதியை யுணர்த்துமென் கிளிபோல்
நுதலியபெருமைக் கடைப்பிடித்தாங்கேநுவன்றுமொல்லொளியுணரேற்றி
னிதனுவல்போற்றி யுணர்ந்துமேற்கோளி லேக்கறவெய்தியுங் குரவன்
பதமலர்நிழற்கீ ழின்னணம்பயிலாப் பதகருக்குரைப்பது பழுதே. (௨௯)

அடுத்தவாணகையன் குரவனினிருப்பொன்னுச்சையி லவனவன்பொருளை
யெடுத்தவனவன்சொல் மறுத்தவனெதிர்போயிருக்கை யீந்திறைஞ்சலான்
வன்சொல், விடுத்தவன் றுயில்வோன்பேதைபொய்ச் சர்ப்பன்வெகுளியன்
விரகியனெனச்சொற், படுத்தவர்திறத் தொன்றளிப்பது களர்வாய்ப்பட்ட
வால்வித்தினும் பழுதே. (௩௰)

கூன்குரங்கெறியும் விளங்கனிகல்லாற்கொள்பவர் போற்குரையாது
தான்குளகருந்து மாட்டின்வெவ்வேறு தலையுழலாதொரு நிலைக்கண்
மான்கொளுமான்போல் மாணிடம்வாய்ந்து வள்ளலேதனது குற்றேவல்
நான்கொள வந்தானென்றொருங்கென்னு நலமிலிக்குரைப்பது நவையே.



மானமாதவத்து முனிவிர்காளாசான் மலரடிபிழைத்தமாணக்க
னீனமானிரையத் தெய்துவன்பரமற்கிழைத்த வல்வினைபெரிதேனு
மானவன்றலைப்பானவ னருள்பிழைத்தவருவினை யமலனுமகற்றுன்
றுனதுதெரியக் கேண்மினோமேனாட்டன் னருட்குரவனைப் பிழைத்தோன்.

கழைமுகந்தொடுத்த தேனிறுலிழியக் கனைமிசை வைத்ததாளலவன்
னுழைவளைப்பெருகா தளிக்கருஞ் சேற்றிஞெண் கதவடைக்குநீர்வேலிக்
குழைமுகம்பொதிந்த மழைமலர்ப்பொங்கர் குலுங்கிய கலிங்கநாடளிப்போன்
முழைபகவிடிக்குஞ் சிங்ககேதனத்தான் மூரிவேல் மன்னவர்மன்னன். (௩௩)

அன்னவனொரு நாட்பரிமகமியற்றுமாதாத்தினில் வெகுசுருத
னென்னுநீள் குலத்துக்குரவனைத் தொழலுமெழின் மகவின்றியிவ்வேள்வி
யுன்னரிததனாலாண்டினில் மகப்பேறுறுகுவை பரிமகம்யானே
நின்னகமகிழ முடிப்பனென்றுரைப்ப நிருபனும் பழவினைச்செருக்கால். (௩௪)

அயனுடையிரதிதா முனிமுதலவந்தணர் பலரொடுங்குழுமி
முயலரும் வேள்விதுடங்கினனிழைப்ப முனிவனு முனிவுறுதெறிநீர்க்
கயமலர்ப் பொதுளுங்கமழலந்துறைசேர் கனைதிரை துங்கபத்திரையாற்
றியனுடைவசிட்டன் பாசிலைப்புரையுளெய் தினனளவ்ளாயிருந்தான். (௩௫)

தேசிகன்றருசொல் மறுத்தலின்வேள்விசிதைந்து வானவரவிதேய்ந்து
காசினியதிபனுயுளும் வாளாகனாகது வெங்கதம்சினப்பகுவாய்
மூசியதழற்கண்மறலிவெந்தூதர் முரண்வலை யீர்த்தனர் தூர்ப்பக்
கூசிருள்புதைந்த நிரையவாயெல்லாங் குளித்தன னயுதமாண்டெல்லை. (௩௬)

நிரயவெந்துயரிற் குளித்தவன்பின்னர் நீள்பனிமுயங்கு கோட்டிமய
வரையகந்தனில் வேதியப்பெரும் பேயாய் மண்டியபசியடச்சுழன்று
னுரைபடுந் தீயோரிடத்திலோரு றப்பிலுறுமலர்க்குரவனைப் பிழைத்துப்
புரைபடுந்தீபோல் யாண்டுமெப்போதும் புக்குழிப்புக்குயிர் சுடுமே. (௩௭)

வைகலும்பசியா லூனுறக்கின்றிவானுயாரசிலைநுதிநீர்க்
கைகலனகவெடுத்து வாய்மடுத்துங்கனன்று வெவ்வழல் சுடக்கரிந்து
முய்வகனுகி முன்னைநாளறியா துஞற்றிய வினைப்பயனோர்ந்து
செய்குறைநினையாக் குரவனைநினைந்து தேம்புவானினையன தெரிவான். ()

மெய்யெழுத்தியக்கு முயிரெழுத்தேபோல் மெய்புகுந்தெனை யசைத்தாண்ட
வையவென்னுயிரே யிழுதையேன்றனை நீத்தனைந்தவெவ்வுழிய றிந்திலன்யா
கையர்நோத கவுற்றிழைப்பினும் பெரியோர்காப்பது சரதமின்றெளியே [ன்
னுய்யுமாறெதிரோ போதராயென்னிலொழிவருந்து யரமென்றொழிவேன். ()

பெருகுகண்ணிரயத்தயுத மாண்டாகப்பேதுறு துயரெலாமனையா
னொருகணத்துறு நோய்க்கினை பெறுதாவியுருகியு ளெட்டியிர்ப்பெறிந்து

மருவினைத் தொட்டாலுலகல மருவானரற்றிய வோசைபுக்கதுவா
வொருதனிமுளரிவானவன் சிறுவனுறையுள் புக்கிருந்தவன் செவியுள். (௪௰)

செவித்துணைபுகலு மெழுந்தமாமுனிவன் செயிரறுமேனி தோயிளங்கால்
குவித்தகையலகைத் தலைவன்மேலுறலுங்கூருணர் வெய்தியைம்பொறியு
மவித்துளார் முடிதோய்ந்தளிரடி மேலடுத்தடுத்திறைஞ்சி வல்வினையாற் [ன்.
கவித்தவென்னுருவைத் துடைத்தியானுய்யுங் கதிதனைத்தரு கெனக்கரைந்தா

மாசறுதவத்துக்குரு முனியவன் கொள்மம்மர் நோயகலுமாமதித்தா
னாசறுபாதகண்டமேற் பொன்னியகல்வயற் புகலியம் பதிவா
ழேசறுவடமேற்றிசை யினிலிருகோலெல்லையிலிராகு முன்னமைத்த
வாசநீர்த்தடத்தை யதிபவமாதிமாப் வந்துலைக்குமாமருந்தை. (௪௨)

பின்னெடுந்தகையை மருளலை யென்னாப் பெருகுவாய் பருகுநீரளித்து
நன்னெடுந் திவசமொருபதினைந் தினளிபுனற்பொன்னிநாடனாகி
யந்நதியாடிச் சிறுபசுங் குழவியடு பிணிக்கருமருந்தயிலுந்
தன்னிருதாய்போலதன் வடக்காகச்சார்ந்தனனிரு வினைசாரான். (௪௩)

தெளிநிலாவிரியமுகிழ்த்த வாய்முளரிச்சிறைப்படு நாகிளஞ்சுரும்பர்
வளரொளிப்பரப்பி வைகறைவிளக்குமா னவனரசியல்புரிநா
ளொளிவரமருவார் சிறைவிடுத்தென நின்றிரங்குநீர் வேலிகள்சூழ்ந்த
வொளியெயிலுடுத்த காழியாளுடைய வொருத்தன்வாழ் திருத்தளிபுகுந்தான்.

மரைமலர்க்கிழவனாடிய பிரமமலர்த்தடங்குடைந்து பூங்கொன்றை
விரைமலர்வேணிப் பிரமநாயகனை விதிமுறைபூசனையாற்றிக்
கரைபொருதலைக்குமிராகு முன்கண்டகடிமலர்த் தடம்படிந்தனனீ [தோன்.
ருரைமனுவழியாற்றெளிப்ப முன்னுருவோ டோங்கினன் மடங்கலேறுயர்த்

பொங்கழல்கட்டுமுறையுறழ் படிவாய்ப்பொரியனைக் கருநெடும்பனைந்தா
ளங்கவல்லலகை முரனிரும் பாகவறவனோர்சித்தர்கோவாகத்
துங்கவல்வினையின் காளிமம்படுநீர்த்துவலையாங் குளிகையினுருவச்
சிங்ககேதனத் தோன்செம்பொனிற் பொலியச்சித்தநீராயதத்தெளிநீர். (௪௬)

முழுமதிமுகமு மொளிகொளிநகையு மொய்மணிச் சுடிகையுமுரணார்
கொழுமணிமார்பு மெழுவுறழ்தோளுங்குடைக் கடனிறுக்குநீள்கரமுஞ்
செழுமலர்விழியும் வேனில்வேளனைய செவ்வியும்வாய்ந்து முன்றேய்ந்த
கழுதுருவகன்று கலிங்கர்கோன் பொலிந்தகாட்சியை யாவரேநுவல்வார். ()

நன்னகர்முழுது நலனெடுத்தேத்தநளி தடம்படிந்துமேற்கரையிற்
பொன்னவிர்கடுக்கைப் புரிசடைமுதல்வன் பூசனைவரன்முறையாற்றித்
தன்னருட்குரவன் முடிப்பமுன்பரிமான்றருமகப் பலனுமாங்கெய்தி [தான்.
யொன்னலர்க் கடந்தமுழவுறழ்தடந்தோ ளொளிறுவேல் மன்னவன்பொலிந்



சூட்டழல்முகத்துப் பாட்டுருமுருக்குந் துளங்கொளிக்குலிசவேலென்ன
நாட்டுறுகுரவர் பிழைத்தவெவ்வினையை நகர்வயினிழந்தவனிரட்டைக் [துச்
கோட்டுவெண்பிறைதாழ் வேணியற்களவில் கோடிபொன்னடியுறைகொடுத்
சேட்டிளம்பருதித் தெரியல்சூழ்மார்பன் திருமுனமிறைஞ்சினன் சென்றான்.

கன்னியந்திங்கட் டெரிசனாளன்நீர்க்காவலன் படிந்துபார்முழுதுந்
தன்னியலாழி யொருதனியுருட்டித் தவலரும்வீடுபுக்குறலா
லின்னிலத்தன்னுளத்தடம் படிவாரிடராறுத்திகலறநூறி
புன்னியபொருண்மையாவையு மெளிதேயுறுவர் வீடுறுகுவருண்மை. (௫௰)

குருத்துரோகமோசனவத்தியாயம் முற்றும்.

ஆக. திருவிருத்தம். ௭௪௧.

# சண்பைவத்தியாயம்.

தன்னிகரிலொருமுனிவன் முடங்குளையாளரிக்கொடியான்றணப்பில்வெந்நோ
யிந்நகரிலகற்றிய வாறியம்பியொருகடவுண் மணியினமக்குமார்பிற்
பொன்னியலுந்திகிரியினான் பழிகழுவிச்சண்பை யெனப்புனைபேர்வாய்ந்த
வின்னியலைமுனிவவிரித் திசைத்தவழியளியேனு மியம்பலுற்றேன். (௧)

மெய்ம்மலியுமறம் பலவுந்தலை நிறுவிக்கறங்கு திரைவிரிநீராடை
மொய்ம்மலிமாநிலமுழுதும் பொதுநீக்கியை வரையுமுறையினாட்டி
மைம்மலியுநறுங்கூந்தற் பொதுவியர்தோண் மணந்துவடமதுரையாளும்
பொம்மலணிவண்டிமிருந் தண்டுளபப் பசும்படலைப் புனிதன்மேனாள். (௨)

வீங்குமொலிமுரசுயர்த்தாற்கரும் பெறல்வேள்விகள் பலவும்விருப்பினாற்றித்
தாங்குலேப் பொறையனைத்துந் துடைத்தொருதன் பெரும்பதத்திற் சார்வா
னென்னணி, யீங்கெமதுகிளை யுரிமையாதவரெண்ணிலரிவணீண்டிருப்பின் மே
லைத், தீங்குபயக்குறுமிவரைத் தெறினுலகம் பழிக்குமெவன்செய்துமென்பான்.

வன்மணியுமம் புயத்தாடனமணியும்முழந்து மணிமார்பனிவ்வா
றின்மணியும் பருவரையோரெட்டையும் வட்டுருட்டுமுரத்திளைஞர் தம்மை
முன்பணியப்பதத்திலுய்ப்பான் மனமணியுமமையத்து மூரிமோட்டுக்
கன்மணிவெந்தலை நாகத்தின்மணியை விழுங்குறுநாள் கண்டதன்றே. (௪)

காண்டலும் விண்டொடு புரிசைவடமதுரைமா சனங்கங்கைநீராழி
மூண்டதெனவயக்களிறு மயக்குழூவும் வியக்குமணிமுடித் திண்டேருந்

தூண்டியருட்கடலனைய சாரணர் கோசலனாதி துறவோர்சூழ
வேண்டரு பூந்திரைசுருட்டும் பிரபாதநதிக் கரைவந்திறுத்தவன்றே. (ரு)

பழமைமறைப் பொருடுணிந்த பண்ணவரோடுபாகப்பனி நீராடுங்
கிழமைகொடுபோந்தவரில் வல்லுவணப்புள்ளூர் திகேணம்மாக்கள்
குழைபுலநான் மறைக்கிழவர்தொழுகுல வாய்மையும் புறவுநோக்கியேனோர்
குழுவுமியவருக்க நிலையறிதுமெனமனத்துறு கோள்கொண்டு சூழ்வார். (சு)

தம்மிலெழிற்சாம்பனுக்கு மணிவளையு மணிகலையுந் தரித்துவாசக்
கொம்மைமுலை பொருத்தியடிவயிற்றின் மடக்கசைத்து நறுங்கூந்தல்வாரி
யம்மலர் மெல்லடிபெயர்ப்பவந்தனர் போலவையினிலுய்த்தாரே பெண்ணே
விம்மகடன் கருநிலையோர்ந்துரைத்திரென வடிநிழற் கிழிறைஞ்சுமேல்வை. ()

அனலூட்டிப் பின்னுகருங்கபில முனிவனெறிபாலலை யுட்டோன்றி
மனவேட்கையழுக்கின் மிசைவைத்துள தீதெனநெடியோன் வழியின்மாக்கள்
கனலூட்டுங்கயமையராய்த்திரிந்தனரென்றறிந்திவள்பாற்கரும்பொன்வாய்ந்த
தனியேற்ற பெருமுசலமதனில் வருமுமக்குலகிற் சரியவாழ்க்கை. (அ)

முதுமுனியிவ்வண மளித்தமூரட்சாபவலியினிலோர் முசலமாங்கே
கதுமெனவந்தடி நிலத்திடிபொருவ வீழ்ந்ததரோ கதிருஞ்சோதி
மதியுமெனு மிருகுலமுமற்றையுவாவினில் விழுங்கி மதுகைப்பாந்த
ளதுகுலமும் விழுங்கமணிப்பட மொடுக்கிப்பெருந்தரையிலிழிந்தாலென்ன.

குருலக்கைவிழ வெருவித்துகள் படுத்திநீரில் விட்டதுகட்கொவ்வொன்றாய்க்
கோரையயில்வாளுருவிற்கிளைப்ப மடம்படும்வலக்குணத்தாலொவ்வொன்றே
ரொருவர்க்கோ ரொருவர்பற்றின ரெற்றினருயிர் போயுலர்ந்தார்மண்மே
லாரொருத்தன் வல்லவன் கைப்புல்லுமாயுத மென்பதறிவிப்பார்போல். (க0)

வெறிக்களி வண்டிசைமுரலும்புண்டரிகப் பெருந்தடங் கண்விமலன்கேளாக்
குறித்தமுறைமுடிந்ததெனவறக்கடவுள்வலிபாடிக்கொடியசாப, மறித்தெனை
யுந்தொடருமிதுதொடைப்பினுமாறுதினியான்வளைவாய்க்கோட்டுப், பிறைச்
சடிலத்திறை மலர்த்தாளருச்சனையாற்றுடைப்பனெனப் பெரிதுமோர்ந்தே.

சகரர்குலந்துகள் படுத்ததழல் விழியந்தணன்முனிவாற் சாம்பனாதி
நிகரில்வலிதரும்புதல் வருலந்தவினை தொலைந்தகலநிறைநீர்ப்பொன்னி
யகல்வயல் சூழ்பிரமபுரத்தடிகளருச்சனைசெய் தருளாலன்னான்
புகரில்முனித்துவமடைந்தான் யானுமதுபணிவனெனப் போந்தான்மன்னே.

இடிமுரசக்கொடித்தானை புடைநிறுவிப் பூமடவாரிருவர்சூழக்
கொடிமுகிலேய் மணிமாடக்காளிபுரத்தானுடையான் கோயில்புக்குக்
கடிமலர்வானவன்றடந் தோய்ந்தருநியமச்சடங் காற்றிக்கடவுட்கங்கைப்
பிடிபயிலுநெடுவேணிப் பிரமீசன்றனை யொருபாற்பேதையோடும். (கங)



பனிமலருங்கற்பகப்பூந் தனிமலருங் கொடுந்திரைவெண்பசும் பாலாழித்
தனியமுதுங்கனியமுது மானைந்துந்தேனூறுஞ் சாந்தச்சேறும்
பனுவல்மரபுளியாட்டி நனிவழிபாடாற்றியருட் பகவன்கோயி
லனில்திசையினில்முக்கோ ளளவையினிற் கிளரொளிகாலாழிதன்னால். (கச)

ஒல்லொலிநீர்த்தடங்கண்டு செல்லரிக்கட்டிருமனை யாரோடுபுக்காட்டி
அல்லலறுத்தமலவுருவடைந்தனனே புயலுருவத்தருட்கண்ணீர்சாய்த் [மூழ்கி
தொல்லையில்வெண்புயலுருவிற்பொலிந்தனனேவெனவெண்ணீற்றொளியின்
மல்லல்வளர் கண்டிகையுமைம்பதமு முவந்திறைதாள் மனத்திலூன்றி. (கரு)

பற்பலவாமுதுகடவுட்டீர்த்த மமைத்தாழியின் பேர்பகர்ந்துஞானத்
தற்புதநீடொளியிலுள மிருத்தியாதிருபருவ மருநோன்பாற்றிச்
சொற்பதந்தீரரு ளுருவப்பரஞ்சுடரை முப்போதுந்தொழுவான் முன்னர்ப்
பொற்பமருநறுங்கடுக்கைச் சிகழிகையானக மகிழப்போந்தானன்றே. (கசு)

ஆரணமாய் மறைமுடிவா யளப்பரியபேரொளியா யளவைகாணாப்
பூரணமாய்வரவுபோக்கிறந்த பெருங்குணக்கடலாய்ப் பொருமாலேற்றின்
வாரணிந்தபுளகமுலைக் கொடிபுணரப் புணர்ந்தெதிரே வயங்காநின்ற
காரணகாரியங்கடந்தவொரு பொருளையிரு விழியுங்களிப்பக்கண்டான். (கஎ)

பணிந்துமிசையேத் தெடுத்துப்பாடியுமூடிய விருளைப்பறித்ததாளை
யணிந்துமலர்விழியருவியாடியு முன்பரவுமடலாழிவேந்தைத்
துணிந்ததவமகிழ்தனநீ விழைந்தனகேளெனவமலன் சுடர்வாய்பூப்பத்
தணிந்தமனத்தளிதூங்கத் தவரைநகர்க்கிறைவனிது சாற்றுகின்றான். (கஅ)

அலகிலுயிர்க்குயிராயதனிமுதல்வா நின்னடிக்கீழடியேன்மைந்தர்
பலருமுலப்புறக்கபில முனிமொழியால் வருமுசலபழிவாட்கோரை
யுலகிலெனைநலியாதுமுசல சேடத்தாலென்னுடல்கூடெய்தி
மலர்பொருமுன்றுண் மறவாநிலைதருதியென விரப்ப மழுவாளண்ணல். (க௯)

ஆயிரவாயரவணையிலறிதுயில்வோ யஃதளித்தேமகலாதென்று
நீயிவரோர்கலையுருவினிலை பெறுகவரட்சண்பை நினைத்தொடாது
தூயவலிபெறுமிவ்வூர் சண்பையெனவிளங்குக வென்றருளித்தொல்லை
ஞாயில்படும் தடம்புரிசைநகு மணிமாலையம்புகுந்தா னங்கைபாகன். (உ0)

போரவுணக்கடல்கடந்த வொருதிகிரிமலர்க்கரத்துப் புனிதன்பின்ன
ரேரகலாமணிவீதிக் காளிபுரிக் குத்தரத்திலிருகுரோசத்
தோரகத்திலொருகடவுட்டடமது கண்டவலிருகோட்டொரு வெண்டிங்கட்
டாரணியுமறைக்கொழுந்தை யிருத்தியருச்சனை புரிந்தான் றவத்தின்மிக்கான்.

அங்கதிலெண்ணருங் கோடியருந்தானம் வீசியிறையடிமை மாறாப்
புங்கவர்தாமுளமகிழ நிகழ்வித்த வொருபறவாப் பூவைவண்ணன்

பங்கமில் சிருணர்வறிந்து பேருவகைமீதாடப் பரிவுள்ளாட
வங்கணுயிரம் பருவமாடினனவன் பணிகொண்டாடினனே. (௨௨)

ஒற்றை நெடுங்குழைக்கிழவனுவந்து வாந்தரலானுமொரு கோட்டங்கைக்
கொற்றவன் மெய்த்திருநாமம் பெறலானுமாய் பசும்பொன்கொழித்துவாய்ந்த
கற்றைநெடுந்திரைத் தடமிக்காசியினிற் சிறந்ததனாற் கலசத்திங்கள்
முற்றிலுமங்நீர் படிந்தார்முற்றிலும் வல்வினையகன்று முத்திசேர்வார். (௨௩)

முப்பகலங்நீர்படிந்து முத்துறழ்வாலரிசிபெய்து முக்கண்வேணி
யப்பனடியார்க்களிப்பினேரரி சிக்கோர்பருவ மருவித்தண்கோ
டொப்பறுதென்கயிலையில் வீற்றிருப்ப ரெழுத்தோரைந்து மொருக்காலோதி
லெப்பெரியதவங்கடோறு மொருகோடி கணித்தபலனெய்துவாரே. (௨௪)

ஒருமாசித்திங்கள் வருமுழுத்திங்கடனிலாடி னுரவோர்சாப
மருமாசுவினை பலவுமரன்பாதமறிய விரிந்தகலுமேனாட்
பெருமான்மின்னொடுமிருந்து கயிலையிற்கற்பகத் தருக்கட்பேச முன்னந்
திருமால்கொள் ளைம்பதத்தையித்தடத்தில் விரிப்பவரே சீவன்முத்தர். (௨௫)

நவலருந்தேசிகனருளாற் பிரணவத்தோ டாறெழுத்துஞ் சாரவெட்டுப்
பவவிருளைத் துடைப்பவர்க்கும் வேண்டுமிடம் வினவுதிரேற் பகருங்காலை
நுவலரியவருட் குரவனெதிர்ந்துழியே சாலுமெனநுவல்வாரன்றிச்
சிவபெருமான்முளைத்துழியுமுனிவர் முதலமைத்த பிரதிட்டைக்கண்ணும். ()

காசிபிறயாகை கயைதிருச்சயிலங்காளத்தி காஞ்சிதில்லை
யாசில்மயூரங்கழுக் குன்றருணையிடைமருதுகுடமூக் கையாறு
வாசமலிபழமலை வெண்காடுகடவூர் வேதவனங்கோடிக்கா
வோசைபெறு கோகரணமிவற்றினுமைந்தெழுத்தையினிதுரைக்கற்பாற்றே.

விரித்தபலதலந்தோறுங் குருகுபெயர்க்குன்றெறிந்தோன் வேழக்குன்றை
யுரித்தபிரானேவல் புரிதிருநந்தி சிட்ரிவருபதேசித்த
பரித்திடலாம்பிரமபுரத் தொருமுதல்வன் குருவடிவம்படைத்து வாய்மை
தெரித்தசிவாசாரியமர் புரமெனலாமீண்டுரை செய்திறத்தைக் கேண்மின். ()

சிவகுலவேதியர் முதலீரிருவருணத்தவரு முபதேசஞ்செய்யத்
தவறிலருட்டேசிகராய் வயங்குவர் மற்றவரடிக் கீழ்த்தாழ்ந்துளோரு
நவமணிதோயிருஞ் சுடிகைநாகராப் பசுங்குருளைநகுமதாணிப்
பவனுலகந்தனிலெய்திப் பழிப்பரும்வீட்டின்ப நலம்பருகுவாரே. (௨௯)

மெய்ப்போதமிலரேனுங் காளிபுரத்தாளுடையான் விமலர்வேட்ந்
தப்பாதுவணைந்தன ரேல்ஞானிதனக் கூணிழைக்குந்தகையரேனு
மப்போதவருட் குரவராங்கவரே யீங்குரைக்கோரையமுண்டே
லிப்போதேசென்னிதெறித்திப்பாரின் வீழ்ந்துபுரண்டிகெமர்தோ. (௩௦)



துளக்கருஞ்சூள் புகன்றதெனதுளச் செருக்காலன்றடி நாட்டொடுநீர்வேலி
வளப்பெரும் பாரணிபுயத்துக்கடவு பதிக்கித்தலத்தோர் மனைக்கட்டீஞ்சொற்
கிளிக்குறுமாமடக் கிளியொன்றைந் தெழுத்தாலிருட் படலங்கிழியவோதி
விளக்கருந் தீவினையகற்றி விடுத்தலினால்மக்கள் வலிவியப்பாமென்றே. (௩௧)

குருவுருவாயிருந்து விதிகொடுப்பவனுங் கொடுத்தவிதிகொண்டு போற்றத்
திருவுருவாயெழுந்த சிவலிங்கபரம் பானுமுளந்தடுத்தாட்கொள்ள
வருவுருவாயமைந்ததொரு சங்கமனுமோரிடத்தில் வைக்கக்கண்டும்
பெருநிலமேலிதையறியார் விளக்கிருந்தும் தீக்குழலும் பித்தராமால். (௩௨)

பூதானமிவணளித்தாற் புண்டரிகன்றானமுமென் பூவைநல்லார்
மாதானமிவணளித்தார் வனமாலிதானமும் பொன்மறைவல்லார்மாட்
டியாதானுமிவணளித் தாருருத்திரதானமும் பெறலாவியல்வாழாம
லாதானமிவணிழைத்தா லாதியிடையீறிலி தானடைவரன்றே. (௩௩)

குலைத்தலைநெட்டிலைத் தாழைக்குமரியிளங்குடப் பசுங்காய் கொலையமாநீர்
துலைத்தலைவாளைகள் வெடிபோந்திருப்புகலி வியப்பனைத்துஞ் சொல்வான்புக்
காற், சிலைத்தலைவானுதற்பணைசேர் திருத்தன்விரித்திசைப்பதல்லாற் சிறியே
னென்னில்,மலைத்தலையுமறிவென்ருன்வாதராயணனிருதாள்மறவாமேலோன்

## சண்பையத்தியாயம் முற்றும்.

ஆக. திருவிருத்தம். ௭௮௯.

# கொச்சையத்தியாயம்.

பச்சையந்துளபத்திருமறுமார்பன் பழிவிடச் சண்பையென்றொருபே
ரிச்சையினியன்ற வாய்மையீதாதலிதிலொரு முனிவரனிறைஞ்சிக்
கொச்சையென்றுறுபேர் புனைந்ததுஞ் சவுனகாதியர்க்காரருள் கொழிக்கு
நிச்சயமுனிவன் விரித்தவாதொருத்து நிகழ்த்துவா மொருமருங்கெடுத்தே. (௧)

தாமரைத்தெரியல் நான்மறைக்கிழவன்றனைநிகர் முனிவர்தம்பெருமான்
மாமறைப்பொருடேர் வசிட்டன்மாதவம்போல் வருமுனிசத்தியன்பால
நாமருட்கடன்பூண்டா ரழல்வேட்குமாரணத்தறிரு னெவ்வுயிர்க்கு
மேமமார்குணத் தோனணியுறழ் தவத்தானியல் பராசர முனிமேனாள். (௨)

ஆடகக்கடுக்கை யலங்கழைவேணியந்தணன்பதிகள் பற்பலவு
நாடருங்கடவுணதிகளும்படிந்து நனந்தலையுலகெலாம் வலங்கொள்

டேடவிழ்கமலத் தண்ணலம் பொலன்சூட்டெழினலமிறைகொளநறைவாய்ப்
பாடல்வண்டிமிருங் கவுதமையாறும் படிந்தனனிடும்பை நோய்படியான்.(௩)

இமிழ்திரைசுருட்டுங் கவுதமையாடியிரும்புனல் கட்குமாறெண்ணிக்
கமழலந்துறைக்கணோட முய்ப்பவளைக்காணலனுயிடைக் கண்டா
னமிழ்துறுமொழியுந்தமிழிளந் தென்றலசையினு மொசியுமென்மருங்கு
முமிழ்கதிர்ப்பூணுங்குமிழ் பொருங்கண்ணுமுடையதோர் வலைமடவரலை. (௪)

மடவராலின்னீரோடமுய்க்கு நர்யார்மற்று நீவல்லையேலின்னே
கடவுதியெனனு மக்களாயிரவர்கலந்துழியன்றி யிந்நாவாய்
விடவரிதெனவேற் படைபொருதடங்கண் மெல்லியவுளைப்பவாயிரவ [ன்.
ருடனுறுபொறையீண்டமைக்குவன்கணத்தேயொண்ணுதல்விடுகெனவு ரவோ

கோலொருதலையுங் குடமொருதலையுங் கூன்புறத்திமிலிருதலையு
மேலவனிருத்தி மச்சகந்திப்பேர் மின்றொடுதானும் வீற்றிருந்து
சேலுலாந்திரை நீர்ச்செல்வுழிமுனியைச் சிவனெனநோக்குருவடிநாட்
பாலலோசனத்தாற் றெறுபழிமீட்பப் பகழிகடேர்ந்தனன் படைவேள். (௬)

மாரவேள்வாளிக்குரனழிந்தயர்வான் வலைஞர் தந்திருவினைநோக்கிச்
சூரரமகளிரெழினலங்கனிந்த சுடரிழாய் தெய்வநீராற்றுட்
பேரலைகடத்துமோடமீதென்னைப் பெருவலியனங்கன் வெஞ்சமத்து
நீரலைகடத்துமோட நீயல்லானேடினுமில்லை நீணிலத்தே. (௭)

குறுநகைநிலவாலிருட்களிறது போங்குறுநடையனத்தின் மின்கொடிபோ
மிறுமிடையரவாற்றென்றலந்தேர் போமிணைமுலை நேமியாற்குடைபோந்
தெறுசிலைப்புருவத் தடுசிறைப்பரிபோந் தீவிழியுருத்திரனுதல்போற்
பொறிநுதல் விரித்த சிந்துரத்தெழிலாற் போர்மதனுண்மையும்போமால்.(௮)

இடைக்கணேயெழுந்துந் தலைக்கணூர் மருங்குலிளைப்பநின்றெழுமுலையின்னே
யுடைக்குநீடிரை நீரோடமூர்ந்துழிமுன்னூற்றமின்றியுந் தனிவாளா
விடைக்கணேயுறுவேற்கிரங்குறு வெனினுமிரங்கிவந்தடைந்துளோர்க்களித்த
லடைக்கலநூலினியற்கையே வேலையகத்தினும் பெறலருமமுதே. (௯)

பழித்தபண் கொழித்துமழலைவண்டுழலும் பங்கயப்பொகுட்டினிதமர்ந்த
முழுப்பெருங்கிழத்திமுதல் மடவாரைமுறைவகுத்துன்னையும் வகுத்தா
னெழிற்கனிந்தவர் கண்டனையவர் வெள்காவெண்ணியோ நான்முகனுள்ளத்
தழுக்கறுமையினோ நின்னியல் மணத்தையழிபுலா லாக்கினனணங்கே.• (௧0)

தேம்படுமெறிபால் முதுபயோததியிற் றேவர்தெள்ளாரமு தருந்தித்
தாம்படுமிறப்பொன் றொழிந்தனரல்லாற் சரமதன்போர்துலைத்திலராற்
காம்படுகளைழவார் சிலையலர்பாய விடையிலேமுறிய மிக்கலகத்
தோம்புநின்கனிவா யமுதுறுதெவ்வா றுய்யுமாறைய நுண்ணிடையாய். (௧௧)



உருவிலி வாளியொருங்குறப்பாய்ந்த வுரம்படுபுண்முகங் குளிர
விருமுலைப்புளக வேதுகொண்டொத்தி யிலவிதழ்வாய்மருந் தூட்டிக்
குருகணிகரத்தா லிருகுறப்பிணித்துக் குறைவறுபுதுமணம் புணர்ப்பிற்
பொருவிலிக்கணமேயானுமுன் னுடலைப்புதுமணம்புணர்த்துவன்பொன்னே.

குழைபொருதலைத்த விழியினுமழலைக்குயில் பொருமொழியினும் பைம்பூ
ணிழைதவழ் சிகரமுலையினுமதியோ டிகலியநுதலினுமதியோ
யழல்படுமெழுகும் வான்மணலெக்கரலைத் தலைப்பொருமுதுநீத்த
துழைபடுகளையு மெனவுடைந்திவ்வாறுருகிய வொருவனோடரிவை. (௧௩)

என்னைமாமுனி யீண்டியம்பியதென்னு வெழுமதிமாதினற்குணமுந்
தன்னையேநலிய நகைமுகங்கோட்டித் தாழ்குழற்சிறுபுறஞ்சாய்த்து
முன்னையாயிரவர் பெரும்பொறையுய்த்த மொய்ம்மலிமாதவத் தொன்றால்
தன்னையேபுணர்வார்க் கிழிகுலத்தறியாடமுலை முயங்கவுந்தருமே. (௧௪)

ஊன்படுவலைஞர் காவலனெந்தையுணர்ச்சியு மறிந்திவன்பெருநீர்த்
தான்படுபுலன் கோடிரண்டினுமாக்க டைந்தனர்திருவுள மறியேன்
வான்படர்யாழோர் புணர்ச்சியினின்னை மணக்கவுமியைந்தனன் மாறு
மீன்படுமுடைபோய் நறுமணங்கமழ வித்தகாதருகெனப் பணிந்தாள். (௧௫)

அற்றமில்முனிவ னதுகணத்தொருதன் னுற்றலாற்பணிகொடு கவித்துப்
பற்றருந்தெய்வ மலர்மணமளித்துப் பரிமளகந்தியென் றனையாள்
முற்றருங்குரும்பை முகிழ்முலைகுழைய முகமணைத்தாகரமிறுகப்
பொற்றொடிகறங்க நறையிதழூறைப்பப் பூங்குழ லலமரப் புணர்ந்தான்.(௧௬)

பூங்கலைதிளையா வுரவர்தந்திலகன்புயவரை நாகமாவிழிகள்
வாங்கரும்புளக வனமுலைமலையா மற்றிருவோருளமார்வ
மாங்கணின் றீர்ப்பப்பெண்ணலங்கனிந்த வரிவையந்தடங்கடலன்று
ணீங்கருமின்பக் கலவியாரமுதை நிறைமுனிகளித்தனை யன்றே. (௧௭)

மெய்யிரண் டெரொன்றெனநடுவாய் மேலிருவருநலந்திளைப்ப
நெய்யிருங்கூந்த னெருங்குபூண்முலைபால் நேமியான்கலையெழில் வாய்ந்து
மையறுதவமு மனுவும்வேள்வியு நான்மறைகளுமுறைகளு முயிர்கட்
குய்யவந்துதிப்ப நிகரில்பேரெழிலாலுதித்தனன் ஒருபெருந்தனயன். (௧௮)

தனயன்முற் றுணர்ந்தான் மனமலர்களிப்பத்தயங்கலும் வயங்கெழிற் றையல், முனைவனை வணங்கிமுன்னைமாணெழிலு முருகுலாமழவையுந்தருகென், றினையமேலவ னவ்வெழிலினையருளி யிம்மகவேண்டுமேல்யாண்டு, நினைவுழிவருவனிவனை யீண்டளிப்பினின்றுடைக் கன்னிமைக்கிழுக்கே. ()

அங்கைநீ ரிறைப்பமுன்னெழில்வாய்ந்த வரிவைகேளாய்வலைவினைஞர், மங்
கையென்றுன்னேல்யாழ்வல்லோர்குலத்தோர்வசுவெனுமிறைமகன்றேர்மே

லங்கண்வான்வழிக்கொண்டிவ்வுழிமேனுளனைந்தவனருமனைக்கிழத்திக்
கொங்கையை நினைப்பவிளகியதாகிக் குடிஞையினடுவண் வீழ்ந்ததுவே. (௨௦)

வெடிகொண்மீ னென்றுவீழ்த்தவீரியத்தை விழுங்கலுமதன்வயிற்றோன்றிக்
கடிபுலால்வினைஞர்மனையிடைவளர்ந்தாய் காலமூன்றையு முணர்த்திறனு
லடியியலறிந்து னிளமுலைவேட்டேனுதலினலமரேல் நின்னிற்
படிபுகழைவர் முடிபுனைக்கையும் பல்குமாவுன்னுழைப்பாவாய். (௨௧)

மோட்டரு முடிமேற்கிடந்த நீராடைமுழுநில மொருபுயத்தேந்து
மீட்டுதொல் புகழான்சந்தனுவெனும்பேரிறைபுணர் சத்தியவதியாய்த்
தீட்டுமால்வென்றி சித்திராங்கனையும் விசித்திரவீரியன்றனையுந்
தோட்டுவார்குழலாய் நீயினிதீன்றுதுலங்குவர் மற்றவர்வழிநாள். (௨௨)

திருத்தகு குலத்துமடநல்லாரிருவர் செங்கைபற்றின ருயிருவப்பப்
பெருத்ததொன் மரபுக்குறுமகாரின்றிப் பேதுறுமேல்வையீண் டளித்த
வொருத்தனா லனையாரிருவரும்பாண்டு வோடுவிழியில்லியைப் பயந்து
விருத்தியால் வழியேபாரதப்பெரும்போர் விளையுமேலுணர்குவை மின்னே.

என்னமாமுனிவ னன்னவட்கோதியென்னெழிற் குரவனைக்கொடுபோய்
நன்னெடுந்தகைசால் வெதிரிகாச்சிரமம் நண்ணினன்மூள மதியிமைக்கும்
பொன்னவிர்வேணிப் புனிதனுரருளாற்பொறிக் குறும்பெறிந்தமாதவத்தீர்
கன்னிகர்காமியெனப் பராசரனைக்கரைந்தனரன்று தொட்டுலகோர். (௨௪)

ஆன்றமைகேள்வி முனிவனுக்கிழிவென்றறையு ரீரலைகடற்றோய்ந்து
தோன்றினுமுவருட் டோய்விலாமீன்போற் சுந்தரமின்றி யெவ்வினைக்கு
மேன்றவனிறைவ னொருவனேகெடுப்பானெடுப்பவன் றடுப்பவனெவைக்குஞ்
சான்றவனெனமெய்ப் போதமுற் றமலன்றாளிணைக்காள்வினைப்படலால். ()

அளிவினையுளத்து முனிவரன்சிறு நாணடைந் தனுரெய்தின னந்தோ
விளிவினைமுனியு மெய்துமோவென்னு விரட்டுறக்கருதலீர்யாண்டுந்
தெளிபொருட் டிரத்தோரையமுந்தெளியாத் திரிபொருட் டிறத்திலோர் துணி
வும், விளிவருநிரயம் பயக்குமாவுலகில் விரகிலரிகழறோணுது. (௨௬)

கோதகல்குணக் குன்றனையவனினையகொச்சையை யகனுமாறெண்ணிச்
சீதவான்பொன்னித் திருநதியாடித் தேனினமுரன்றுதா தருந்திப்
போதலர்பொதுளிக் கருகினெய்த்திருண்ட புனைகுழற்றிருநிலை யழகி
மாதுபாலொருவன் மனமகிழ்பூத்தமணிமதிட் காழிவந்தடைந்தான். (௨௭)

கடையளந்தறியா வளமலிமாடக்கடிமணி வீதிகள்வலங்கொண்
டிடைவளர் முருகார்விழுபணித் தளிபுக்கினவளை நித்திலமிறைப்பப்
புடைநிலாவளைக்கும் பிரமமாதடத்துப் புண்ணியப்புனல்படிந்தெனையா
ளுடையகாரணனை விதிமுறைவழிபாடுழுவ லன்பொடுமினிதாற்றி. (௨௮)



அண்ணலங்குடுமி யாடகமானத்தணியகோணத்தி லேடவிழ்பூங்
கண்ணியங்கொன்றைப் பராசரேசுரனைக் காதலினிருத்தி யாயிடையோர்
புண்ணியக்கூவ மிருத்திநாத்தழும்பப் புகரிலம்பத முறைபோற்றி
நண்ணருந்தழல்வா யாறிருபருவநற்றவ முற்றுறவிழைத்தான். (௨௯)

புனிற்றிளந்திங்கட் புரிசடைமுனிவன்புகழ் பராசரமுனிக்கருள்வான்
பனிக்குமென் கமலப்பாடகமுளரிப் பைங்கிளியொடு மடலேற்றின்
முனிக்கண மிறைஞ்சக்கருணைவார்ந்தொழுகு முகமலர்முகிழ்நகை பூப்பத்
தனிப்பரஞ்சுடரோன் வருதலும்விழிநீர்ததும்ப மெல்லடிமிசை படிந்தான். ()

உருகிமெய்யரும்பித் தழுதழுத்தவசமொடுப்ராய் மலர்கடுயவனை
முருகியல்வேணி முதல்வனுமகிழ்ந்து முன்னியதென்னெனமுதல்வர்
பருகியுன்னருளே பொருளெனப்பெறுமென் பாலிடரெய்துமோவெளியே
னிருநிலத்தொருபேர் கன்னியர்காமியெனுங்கொடு வரய்தணிக்கெனவே. ()

குறுநிலாவிரித்த சிறுபிறையலங்கற் குழகனுங் கொச்சையினகன்று
பெறுவரமளித்தோமுனிவரேத் தெடுக்கும்பெருந்த கையாதியிந்நகர்க்கு
முறுபெயர்கொச்சையென வகன் ஞாலத்தோங்குகவென வொருங்களித்து
மறுவிலா னமைத்தகுறியினில் மறைந்தான்மாசற வயங்கினன்முனிவன். ()

தேன்மதியடுத்த முழுமதிதினத்துத் தீர்த்தமீதாடியாயிடையிற்
கோன்மதிமிலைந்த பராசரேசுரனைக் குளிர்மலர்தூயடிபணிந்து [கால்
நீண்மணிவிதை நெல்லளித்துளோ ரொவ்வோர்நெற் கொருபருவ நீடொளி
காண்வரும்வனப்பிற் கயிலைமால் வரையிற்கண்ணுதலுருவு பெற்றிருப்பார். ()

அபன்மனைவிழைத லூனவூன்மிசைதலருநறை மடுத்தலான்றவரை
நயனிலகூறல்மனையிளங் கொடியைநாளலா நாளிடைப்புணர்தல்
கயமைசூழ் வினைகளெவையும் விண்டாதிகமலனீடுலகி னூற்றெட்டுப்
பயனுறுகுலத்தோடுறைகுவ ரிக்கூவல்படிந்துநற்றுனமொன் றளித்தோர். ()

துலைமதியாதிதகர்மதியாதி சுலவுமீரயனம் வெம்பாந்த
ளலர்கதிர்தொடுநா ளிவற்றினீராடி யரியதென்புலச் சடங்காற்றி
யுலைவறு மெண்ணீரிறைத்துளோர் மேல்வீட்டுறுகுவ ருகமொருநான்கின்
மலையுறுகலிக்கட்டானமே யெவைக்கும் வலிதெனமறைவழங்குதலால். (௩௫)

றுவலருங்கடவுண்மான்மிய மிதற்கேநோக்குறி னளவிலையடிநாட்
பவனிகர் முனிவன்கொச்சை போயதனுற்பராசர் கேத்திரமெனும்பேர்
கவினுமிந்நகரம் புனைதலாற்குலமேகாரண மின்றுசெய்வினையா
லுவமணி லுயர்வுந்தாழ்வும் வந்துறலாலொழுக்கமேவிழுமி தென்றுணர்வீர்.

அள்ளிதழ்முளரி வானவன்றனைநோண் ணலஞ்சுருதி யாழ்முனியுந்
தெள்ளிய நுமக்கிங்கிது புகல்யானுஞ் சேயரிபார்த கட்கணிகை

யெள்ளியயயிறுவாய்ந் தனமேனுமிறைவனை வழிபடுந்திறனு
லொள்ளியரேனும் பேர்வாய்ந்தனமென்ப வுறுவிர்காளெனவ வருரைப்பார்.()

எந்தைநின்வரவொன்றிசைத்த தெஞ்செவியிலேறில தெவ்வகையுயிர்க்குந்
தந்தைநீயென்றேயெம்முளம் பெறலாற்சாலவு மெம்மனேர்க்குனைப்போற்
சிந்தைமாசகன்றருரவர் யாரென்னச்சேகறு முகமனன்குரைத்தார்
முந்தைநூற்குருதமுனிவரனவர்பால் முகமலர்ந்தொருகதைமொழிவான்.(நஅ)

## கொச்சையத்தியாயம் முற்றும்.

ஆக. திருவிருத்தம் அஉக.

# கிளியுபதேசித்தவத்தியாயம்.

ஊழிமுதன்மூப் பொடுங்கு தவத்துரவோன் பணியக்கொச்சையென்ற
காழிநகர்க்கணொருபான்மை கற்பநாளிற்கவுடேசன்
வாழியொருபைங்கிளி மூலமனுவொன்றளிப்ப வினையகன்ற
பாழியயலும்பண்ணவர்கோன் பகர்ந்தமுறையிற் பகர்கிற்பாம். (க)

முரசுறுயிலாமணி முன்றில்முடித்தேர் மிடைந்தகொடித்தானை
யரசுவணங்குங் கொடித்தலையி னவனிபொதிந்த கவிகையினன்
பரசுமவரேயன்றி யொருபகையொன்றிலதாற் சமர்வேட்டுக்
குரவுமலர்த்தோட்டின வடங்கர்க் கோவிதாரத் தரசனென்பான். (உ)

திரைநீருடுத்த பெருவயலுட் செங்கோலெருவிட்டங்கார்வந்
துரைநீர்பாய்ச்சிவேழ் விமுதற் குறையாவேலிபுறங்கோலித்
தரைமேலிடும்பைக் களைகடிந்து தருமப்பைங்கூழ் தலையெடுக்க
நிரையாளரிமன் னுழவனெனநெடுநாளினிது புறந்திடுநாள். (ந)

மற்போர்துடங்க வேழிசைத்தேன் வளர்ப்போர்பொழிய வாதிகடஞ்
சொற்போர்தழங்க முடித்தாமந்துணைத்தாள் சூட்டமெருவலர்பூம்
பொற்போர்குவிய நீடுலகம்புரப்போர் பணியத்திணியிருள்சீத்
தெற்பாய்மணிமண்டபத் தொருநாளிருந்தா னரசர்பெருந்தகையே. (௪)

இருந்தவமையத் தருந்தவநூலியன்ற நடையன்றேலுடையான்
வருந்துபசிய னுறைந்துமாறுமொருவ னன்பகல்வாய்
விருந்தினெதிர் புக்கோர்கடிகைவேலை யிறந்துபணியாமற்
பருந்துசுழல் வேலவனிருப்பப்பட்டர்ந்த முனிவனடந்தனனுல். (ரு)



நெடுந் தாபதனைப்பழித்த வினைநெருப்பா ரழலாற் கவுடர் பிரான்
கொடுந் தாண் முதலைக் குண்டகழிக்கோடா ரெயிற் சத்தியவதிப் பேர்
தடந்தேர் நகரந் தரசிருப்புந் தானைத் தலமு நித்திலமு
மடெந்தூரிய மார்த்தெழு கடையு மடலையடைந்த பிதிர் வனம்போல். (சு)

ஆசொன்றனை யாவருந்தியா மனையாண் மனையானுறையு ளன்றி
வாசங் கழகங் கல்லூரிமாடமரங்கு படைச் சாலைக்
கோசமரணம் பலதெற்றிக் கொடுங்கைச் சுருங்கைப் பணிச்சாலை
தேசம்பெறு பட்டறைம லர்மென் சேக்கை பலவுஞ் சிதைந்தனவே. (எ)

கவைநாவலைத் தவழற் சிகையாற் கடிமாநகர் பொற்புறனு மறிந்
தவையால் வருவாய்ப்பலசுருங்கி யருநோயாற்று மருமருந்தைச்
சுவையாதியை நீத்தின்பமொறீஇத் துய்த்தான் பிடக நெறிபிறந்த
நவையா லதன்பேறிழந்தான் போல் நாளு மீட்டும்பொரு ளிழந்தான். (அ)

ஆனவறிஞர் வெறுத்துழியு மளவில் சிறப்பாமது மெய்யே
மேனுளடைந்த கடவுண்முனிவினை லெம்பிறப்பொன்றே வறியன்
மானுபரணன் கவுடர்பிரான் மற்றைமுனிவன் மனம்வெறுப்ப
வேறோர்பலரு நகையாட வெல்லாம் வறியனுயினனுல். (கூ)

அணிவேலுண்கட் டிருவனையாரலமந்துருக வறிவிலியாய்ப்
பணியாவாற்ற வாளுழவன் பக்கமளவு மறையலகைப்
பிணியாலலமந் துளந்திரிந்து பெரும்பேதுறுவான் றனையளிக்க
மணிமாடகத்துப் பிணிகுரலார் மகதிமுனிவ னுண்டடைந்தான். (க0)

பனியிற்றிரிந்த பதுமமெனப் பனவப்பேயால் முகந்திரிந்து
குனிவிற் றடங்கை மாறுதொட் கோவிதாரத் துவச னுற்ற
துனியைத் துடைப்பனெனப் போந்ததொன்மை முனியை நன்மையுளங்
கனியப்பதும மாலினியாங்காவற்கிழத்தி யெதிர்கண்டாள். (கக)

கண்டாளிறைஞ்சி மறைமுனிவன் கமலத்தாடோய் நறுந்துளிநீ
ருண்டாள் பசும்பொற்கலந்திருத்தி யுவட்டாவ முதப்பத னடிசில்
தண்டாமரைப்பூங் கரத்தூட்டித் தரளம்பொருவப் பெருவிழிநீர்
கொண்டாள் கருணைக்குன்றனையகோதில்முனிவன் வினவுறுங்கால். (கஉ)

புரைதீர்கற்பின் வட்புலத்துப்புத்தேள் மின்னனுள் முனிமாட்
டுரைசால் மூரற்றருபலனு ளொட்பமடைந்து வாளுழவன்
விரையார்கமல முனியனைய வீணைமுனியை நனிபேணித்
தரைதோயடிக்கீழ் முடிசூட்டித் தாடோய்தடக்கை முகிழ்த்தலுமே. (கந)

இன்னநாளி லெமையுணராதிருந்த வாறேயி யறிரியா
முன்னைநாளி லொருமுனிபா விழைத்துளதோ முடிவேந்தே

யுன்னையறியா மறையலகை யுருத்தவாற்று லெனவுயிர்கட்
கன்னையனையா யிழைத்துளனென் றாசுகூற வவன்கூறும். (௧௪)

ஆரரவமுதாய் நிறைபரத்தோடாவி யிருத்தியோரெட்டுக்
காரார்கருமஞ் சித்திகளுங்கணியா துணர்ந்த சிவயோகம்
பேராவறிஞ ரருவருத்துப்பெயர்த்தபொருளை நிலையென்றே
தேராவெளிற்றுச் சிற்றறிவிற் செருக்கினாய் நீயென்செய்தாய். (௧௫)

வேறற்றெழுந்த பரஞ்சுடரைவெளியில் வெளியை யொளிக் கொளியை
தேறத்தெளிந்த சிவயோகிசேர்ந்த தானஞ்சிவதான
மூறற்றெறிநீர்க் கங்கை முதலொன்பா னதியுமாடுகின்ற
பேறுய்ப்பது தானவரடிக்கீழ்ப்பெய்த புனலோர்த் துளியென்றே. (௧௬)

விருந்தினெதிர்ந்த யோகிதனைவிளைவிற் போற்றுதில்லறத்தி
னிருந்தவொருவன்செயு மறங்களெல்லா மிழைப்பன் மற்றவனைத்
திருந்துபூசைசெயின் முனிவர்தேவர் சனகாதியர்வசுக்கள்
பொருந்துமூவர் முதலியரைப் பூசையும்பூசைப் பலனடைவான். (௧௭)

இமைக்குங் காலங் கொன்றையினு மிரட்டிகாலங் கூவிளத்தூஞ்
சமைத்தகடிகை யிலிங்கத்துந் தார்வேந்திடத்தோர் மாத்திரையு
மமைக்குங்காலம்நின் றெவையு மாக்கியளித்துத் துடைத்தருள்கூ
ரிமைக்காத னெக்காலும் யோகியிடத்தேயுறைதலினால். (௧௮)

மேருவாதிபுல் லீறாய் விரிந்த வுயிர்களுடன் சாரச்
சாருமதிதிக் கிடாபுரியிற் சகலவுயிர்க்கும் புரிந்தவினை
சேருமனையாருளமுவப்ப வெவையுமுவக்குமெனத் தெரியா
தோருஞ் செருக்கால் மறையலகை யுற்றுயுணர்வுமற்றுயால். (௧௯)

வெள்ளி யடுக்கலிறைஞ்சிய யாமீண்டென் மனையிலனமிசையத்
தெள்ளியறியு முணர்வடைந்தாய் சிறுமலகை பாறும்வண்ணம்
புள்ளியலவனூறு செயபூம்பொதி யம்புயம் வேசியர் கலவை
யள்ளல்மூலை நேர்வயற்புகலி யடைவா யிட்ரு முடைவாயே. (௨0)

வழுக்கூனுகர்த விழிவயிறல் மதுவாய்மடுத்த லயன்மடவா
ரெழிற்காமுறுதலதிதித வறியற்றலாதி வினையும் விண்ணோர்
குழுக்காவலன் முன்னிறைஞ்சி யருட்குரவர் பிழைத்த வினைகெடல்போ
லிழுக்காதொழியு முனதிடரு மிரியல் போகு மொருதலையே. (௨௧)

கோலமலரோன் றடமாடிக் கொச்சை யிடையார் திறத்தேனு
மூலமனுவேட்டால நிழல்முதல்வன்றிருமுன் கணித்தவர்க்கே
மாலும் பிரமகத்தி முதல்மாற்றல் வகையா லிதற்கிதென
நூலிலறியா வினையனைத்து நாறு மிதுசத்திய மறிநீ. (௨௨)



நன்னர் முனிவனிது கூறி நடப்பவவன்றுடொழு தரசன்
கன்னல்விழிசாறடும் புகையைக்கமஞ் சூன்மழையென் றிளஞ்சூட்டு
வன்னத்தடங்கணெடுந் தோகைமயில்களாலு மலர்ச்சோலை
யன்னப்பணைசூழ் புகலியின்மாடணைந்தா னெல்லை பணிந்தானே. (௨௩)

இடங்கூர்நறுஞ்சே யிதழ்க்கமலத் தெழிலோதிமம்பார்ப் பிறைகொள்ள
நுடங்கா ரழற்கண்ணு மடந்தை நோற்கின்றமை யொத்ததுகண்டா
னடங்காப்பொறி யைந்தடக்கி வெண்ணீறுடி யசைவற் றிருப்பார்போ
னெடுங் காலுறைத்துக் கண்முகிழ்த்து நிற்குங் குருகி னிலைகண்டான். (௨௪)

நீறுதாங்கு மெய்யன்பர் நேர்ந்தபோது நெறிக்கெதிரே
சோறுதாங்கி நிற்பவர்போற் சுமந்த மலர்க்கேதகிகண்டான்
நீறுதாங்காச் சிவசிவவென்றேத்திக் கருவேரரிமினெனக்
கூறியாண்டும் பலரறியக்கோலப் பூவைச்சொலக்கண்டான். (௨௫)

தண்ணீர்நிலைநின் றொருதாளிற்சதுரானனன் செய்யருந்தவம்போற்
கண்ணீரரும்பியவனுறையுங் கமலந்தானுஞ் செயக்கண்டான்
விண்ணீர்மதிமேலினுங் கழுத்தின்விரியைம்புயலு முறச்சுதைதோய்
தெண்ணீர்மாடங்கறைமிடற்றுச் செம்மனுருவந்தாக் கண்டான். (௨௬)

துயிலாவறமும் பனுவல் மறைசோரா வொழுக்கும் பாதிலன்றிப்
பயிலாவுணர்வு மைம்பதமும் படர் கண்டிகையு நீறுமின்றி
யியலாவடிவும் பத்தி நெறியிகவா நடையுமிழித்தல்புலா
லயிலாவெருகு மீன்குத்தாவலகார் குருகுமவன் கண்டான். (௨௭)

சொன்னதலத்தை நோக்கிமுடிதுளக்கியவனித் தலங்கனிந்த
மன்னுதலத்தோடொக்குமெனல் வழுவாமதிகமீதெனலா
லன்னதலத் தொவ்வொருவுவினமைந்த வொருவனனையதன்றி
யின்னதலத்தின் மூவுருவத்தியைந்தவாற்றுலெனநினைந்தான். (௨௮)

ஆழிகுழித்தவழிதூர்க்குமன்னலார் மெல்லிழைகிளரப்
பாழிமதுமால் வயக்களிற்றின் பருத்தாள்கிளைக்கும் வீதிபுக்கு
வாழிவலங்கொண் டிழிகண்ணீர் வாராவருவான் செவிமிசைநல்
லூழினியன்ற வைம்பதத்தி னுசா லொலியொன் றுற்றதுவே. (௨௯)

உற்றகாலை வாளுழவனோரேருழவன் றாற்றுமுகில்
பெற்றவொலி கொண்டுவந்ததெனப் பெற்றகளியால் வியப்பெய்திப்
பற்றியேகுமந் நெறிக்கட்படருங் காஞ்சி விலைமடந்தை
முற்றுமனைக் கணன்னவொலி முழங்கவுணர்ந்துள்ளகம் புகுந்தான். (௩0)

கருவித்துகிரால் விளைந்தசிறுகால்வாய்க் குடம்பைநடுவெணிருங்
துருவச்செந்தார் மடக்கிள்ளை யொளிவாயினிலிம் மனுமிழற்றத்

தருமச்சுகதேசிகனடிக் கீழ்த்தாழ்ந்ததனிவேனிருபன்போ
லொருமைப்படத் தாழ்ந் துபதேசமுற்று னுறுதிபெற்றனே. (௩௧)

கூட்டுச்சுகமன்றளித்த மனுக்கொண்டான் வீணைக்குருக்கள் சொன்ன
வீட்டுச்சுகமு மெய்தினன்போல் வியந்தா னயந்தாரொடு முன்னை
நாட்டுற்றுளதன்கோளனைத்து நவின்றனுவந் தாலயம்புக்குத்
தோட்டுக்கமலால யன்புனலுட்டோய்ந்தா னிட்டைக் காய்ந்தானே. (௩௨)

பலகட்டுரைப்ப தென்னையினிப்பைம் பொன்போன்று கவுடர்பிரா
னலகைத் தழல்பாய்ந் துருகுதலு மந்தீஞ்சுருதி மகதி முனி
யிலகப்புகன்ற வுரைக்குறட்டா லெறிநீர்ப்பிரமத் தடத்துய்ப்பத்
தலைமைப்பசும்பொ னுருவடைந்து தணிந்தானலகைத் தழலென்றால். (௩௩)

அதுபின் னியதிச்சடங்காற்றி யணி நீறணிந் தைம்பதமோதி
முதிருங் கடவுண்மணி யலங்கல் மொய்ப்பவளைந்து முலைதிறந்து
மதுவங்கறங்குமலர்க் கொன்றைவரதன் வழிபாடியற்றியண்டம்
பொதியுமொரு சிற்றுதரமலைப் பூவைதனையும் போற்றிசைத்தான். (௩௪)

ஓதப்புணரி புறங்கோப்பவுலகத் துலையா நிலைநாடி
நாதப்பெருந்தோணியி லிருந்த நம்பன்றிருத்தாண்மலர்பணிந்து
சீதக்கமலத்தடங் கண்ணன்றிணிதோல் போர்த்தமுடைமாறப்
போதப்புழுகு புனைவடுகென் புனைதாள்பணிந்து வினைதீர்ந்தான். (௩௫)

புரிநூன்மார்ப ரகமகிழப் பூமிதானங் கோதானம்
வரிவேல்விழிக் கன்னியர்தான மற்றுங் கோடிதான மெல்லாம்
விரிவாலாற்றி நித்தவிழா வியப்பாலாட்டித் தொண்டுபல
பரிவாலாற்றிப் பணியுமிழ்ந்த பருதிபோல் முன்னுருவடைந்தான். (௩௬)

மன்றல்கமழுமகன் பொதியில்வடித்த தமிழை முடிக்கொடுபூந்
தென்றலிழிந்து புறந்தவழுஞ் சிறுசாளரத்து நெறிமாடக்
குன்றுநிரைத்தமணி வீதிக்கொச்சை யகன்று பதிபுக்குத்
துன்றுமரும்பல் வளநுகர்ந்து துணைவனமலத் தாளிணை சேர்ந்தான். (௩௭)

வள்ளத்தமுதிட்டூட்டி யுரைவருத்துக் கிளியே யருட்குருவா
யுள்ளத்துணர்ந்தவதிதிதவ ரொழிந்தாலதன் சீருரைக்கவற்றோ
கள்ளப்பொறி யைந்தவித்து நெடுங்காலந்தவிர்கண் ணுற்றுனரும்
வள்ளற்பெருமான் புகலியிலோர் மாத்தோடொவ்வார்மதிக்குங்கால். (௩௮)

கன்னிமணிவண்டிசை முரன்றகார்கொள் வணங்குந் தடஞ்சோலைப்
பொன்னினதி வானதியாகப் பொலன் கற்பகத்தினிலங்காட்டுஞ்
செந்நெல்வயல்சூழ் காளிபுரிச்செம்மல் மனுவை யம்மவொரு
வன்னியுரைத்ததிது வென்றான் வன்னிவளர்க்குமுனி சூதன். (௩௯)

## கிளியுபதேசித்தவத்தியாயம் முற்றும்.

ஆக. திருவிருத்தம் ௩௯.

---

## வேணுபுரவத்தியாயம்.

அரசு தேக்கெறி வேலினாற் கிஞ்சுக மிரங்கி
பரசு தொல் மனு நல்கிய புகலியம் பதிக்கே
விரவு வார்சடை முனிவரன் மன்னரும் வேணு
புரமெனும் பெயர்புணர்ந்தவர் புகன்றமை புகல்வாம். (௧)

பண்டை மன்பிரபாகரன் மக்களி னிரட்டைக்
கொண்ட பர்மனுஞ் சூரனுந் துணையொடு குழுமி
மண்டருந் தவம் புரிந்து பாரிடங்க ளாய்வருநா
ளண்ட சாரதச் சாபமுண் டரசுர ரரவர்தாம். (௨)

ஏயபதுமனுஞ் சூரனுமோருரு வெய்தி
யாயகாசிபனிடத் துவந்தாடல்வெவ் வலியாற்
பாயவல்லிருள் விழுங்கமாரபதி புரிக்கு
நாயகன்றனைப் பொருதுவானீகுரு நண்ணி. (௩)

மடங்கலேறிநல் லொருபதினுயிர மதுகை
யிடங்கலந்த தோட் பதுமனுஞ் சூரனு மிவரோ
டடங் கியைந்தவெஞ் சேனையு மும்பர் தொல்லுலக
மடங்கலுங் கவர் வானமராட்டின ரடிநாள். (௪)

அண்ட வாணருந் தானையு மார்த்துடன் போர்ப்பக்
கொண்டலூர்தி யாண்டெழுதலுங் கொடியவர் சேனை
மண்டி யார்கலி யொன்றொடொன் றேற்றெனவானம்
விண்டுபோழ்பட விளைந்தது கொடுஞ் சினவெம்போர். (௫)

தளர்வுயா துரக் களிற்றினந் தாளடித் தூள்போ
யளைந்ததாரண னவனியை யடல்வரு தினிகள்
கிளர்ந்துபூசலிட் டரப்பிய பேரொலி கெழுமிப்
பிளந்த தண்டமுங் கலந்தது கிளப்பரும் பெரும்போர். (௬)

படவமாகுளி வெள்வளை சல்லரி பணவங்
கடமுழாத் துடிபணை வயிர்கா களங்குளிறித்
தடவு மொல் லொலித்துழனியால்வீ டுணர் தவத்துக்
கடவுளோரு மென் செவித்துணை புதைத்தனர் கரத்தால். (௭)

குழையின் காறுமுள்வாங்கிய கடுஞ்சிலைக் கொடுங்கோல்
மழையின் வீசினர்வானவர்வடவையிற் பொங்கித்

தழையு னோன்சிலை குழைத்து நாண்டெறித்து வெஞ் சரங்கள்
முழைகொள்வா யருமழையெனப் பெயர்ந்தனர் முறையே. (௮)

தலையைச் சிந்துவ புரவியை முருக்குவ தடக்கை
மலையைக் கீறுவ மன்னரை யரக்குவ வரிக்கைச்
சிலையை நூறுவ தேர்குலஞ் சிதைப்பன தெவ்வர்
நிலைமையை மாற்றுவ புலவர் வெஞ்சிலை பொழி நெடுங்கோல். (௯)

முடிபிளப்பவு முரசினைப் பிளப்பவு முனைந்தோர்
கொடிபிளப்பவு மந்தர கணநிலை குலுங்கும்
படிபிளப்பவு மூர்த்திபி லுருத்தெழும் பலகா
ரிடிபிளப்பவு மீர்ப்பவு நிருதர்கை யிருங்கோல். (௧௦)

வில்லி னொளிகளிற் றினம்பிளிரொலி வியன்றேர்ச்
சில்லி வாயொலி தழங்கிய வாயொலி செருவில்
வல்லி யம் பெருங்குழு விடைமறிக் குழாமென்னப்
புல்லி னகநிலத்திடைத் தயித்தியர் பொடியாய். (௧௧)

காலமின்னது செல்லுழித் தானையங் கடலைக்
கூலமாற்றுகச் செம்புலமடுத்ததைக் குறியா
வாலமென்ன நின் றழன்றுதன் றுனையோ டடர்ந்தா
னீலமால்வரை நிகரியநிறத்து வெஞ் சூரன். (௧௨)

அடல் முழங்கு செந்தழல் பொறிவிழியின னலைநீர்க்
கடல் கிடந்தன தானையன் காசினி வயிற்றுக்
குடல் கிழித் தெழுகுன் றுழை தோற்றத்தன் குதித்தான்
றடவு வெஞ்சினத் தமரர் வாருதியின் மந்தரம் போல். (௧௩)

கரங்க ளென்றும் வெங் கரியென்றும் பரியென்றும் கருதார்
சிரங்க ளென்றும் வெங் கோலென்றும் வேலென்றுந்திணிதோ
ளுரங்களென்றும் வேறறிவுரு தொரு தனித்தேர்மேற்
சரங்கள் கொண்டெழுமுகிலெனப் பெய்தனன் றருக்கால். (௧௪)

ஊறுபட்ட புண்ணீர் பட வும்பரா யொறுத்து
வீறுபட்ட வெஞ்சூரன்மே லுருமென வெகுண்டு
நீறுபட் டெவெறிந்தனன் முதிர்ந்த வெண்ணீ றற்றுச்
சேறுபட் டமர்மதமலை யுகைத் தெழுந்தெனவன். (௧௫)

நெருக்கி வார்சிலை குழைத்துமிழ் கணைகளை நேரே
யொருக்கி யாயிரங் கோடி தானவர் முடியுருட்டிப்
பொருக்கெழுங் களஞ் செம் புனலாறுகள் புதுக்கிப்
பெருக்கமேற் பிணப் பிறங்கலே பெருக்கினன் பிறங்க. (௧௬)



விண்ணிற் றாவியும் வெற்பினில் வீசியும் விரிநீர்
மண்ணிற் சிந்தியு மருமத்திலுறுத்தும்வாய் நுழைத்துங்
கண்ணிற் காணரு நிருதர்வெம் படையெலாங் கவிழ்த்தான்
பண்ணிற் றுக்கு வெள்ளை லயிராவ தப்பாகன். (௧௭)

நெற்றிமேற்சில நிறத்தின்மேற்சில முறநெடுந்தோட்
சுற்றின்மேற்சில தொடுகரமேற்சில துரப்பப்
புற்றின்மேற்செலு மரவெனக் கொடுங்கணைபுகலாற்
கற்றி வீழ்ந்தனர் தயித்தியர் கழலினங் காய்போல். (௧௮)

திவசமன்னதிற் சூரன் வெந்தேரையுஞ் சிதைத்துத்
துவசமுந்துமித் தடுபரிக் குலத்தையுந் துணித்துக்
கவசமுங்கிழித் தவனிருஞ் சிரத்தையுங் கரத்தா
லவசமுற்றிட வரிந்தனன் குலிசவே லதனால். (௧௯)

கணங்கொ ளிந்திரன் கடிந்த வெஞ்சூரன் மாயையின
லிணங்குபது மனையெய்தி யீருருவு மோருருவாய்
மணந்து சூரபத்மாவென நின்றனன் மகவான்
புணர்ந்த வாகை கண்டுடைந்தன னுறுவலி போனன். (௨௦)

விரிந்தநுன் சினைத்தொன்மரமிவர்ந் தவன் விழினுந்
திரிந்துமச்சினை யிடைப்பிடித்தேறுமச் செயல்போற்
பரிந்தவாலவ ருலப்பினு முயர்ந்தனர் பாவம்
புரிந்த புல்லியோ ரிறந்தவ றிறந்தனர் போனர். ௨௧)

போனகாலையிற் சூரபத்மனைப் புறங்கண்ட
வானவில்லிதன் வாகையு மற்றவன் செருவி
லூனமெய்தினன் றேல்வியு நோக்கி யேறூர்ந்த
மானமில்லி தன்னடியவ ரொருவரை வகுத்தார். (௨௨)

குன்றவார் சிலையா னடிபணிந்து வெங்குலிசன்
வென்றிபெறினா னிவனஃ தின்மையான் மெலிந்தா
னென்று மெப்பிரா னருள்கடைப் பிடித்தவர்க் கேற்ற
மொன்றுமோ பொருள் மும்மையு மவர் திறத்துறலால். (௨௩)

புரையறுந் தமிழ்த் தென்றலங் குழவிவாழ் பொதிய
வரையில்வாழ் சிவயோகியர் சமனீர் கடக்கக்
கரைபழாமையேழ்தினம் வரங்கிடந்தனன் கார்போ
லுரை செய்மேனிய னென்னில்மே லுரைக்கவு முளதோ. (௨௪)

வரித்த வேணியா னடித்தொழும் பால்வரும் வலியைப்
பரித்திலா னிவனுதலிற் பரித்துளர் வாகை

தரித்திலானெனப் பலகொடு வாயொடுந் தவத்தோர்
தெரித்த மூதுரை வீழ்ந்தது தயித்தியன் செவிக்கே. (உரு)

அகன்ற கேள்வியார் நுவன்றதை யகனுறுகடவுட்
புகன்றதாமெனப் புலன்கொடு சூரபத்மனுமா
றிகந்தான் குலக்குரவனை யிருபத மேத்திப்
பகர்ந்தவைம்பதம் பெற்றனனுறு வலிபலிக்க. (உசு)

நீறுதோய்ந்த செம்மேனிய கண்டிகை நிலவும்
வீறுமா மணிக் கோவையன்விமலன் மெய்யடியார்
தேறுமாகம நடையின னெம்பிரான் திருத்தொண்
டேறுநெஞ்சினன் புகலிவாயணைந்தன னுவப்பால். (உஎ)

## வேறு.

குமுதவாயவிழ்க்குமமுதவாய்த்திங்கட் கூன்புறங்கொடிநிரைதட்வுஞ்
சமுகநீண்மாடக்காழியம் பதிவாழ்தனிமுதற் கோயில்புக்கலரோ
னிமிழ்தடம்படிந்து பிரமசாயகன்றனிருசரண் பணிந்துசேயொளிவிட்
டிமிழெறிநாப்பணளப்பருங் காலமுறையுண் டுறுதவமிசைத்தான். (உஅ)

இழைக்குறுந்தவங்கண்டஎழற் பொலிமேனியெம்பிரா னன்புபூத்தவன்முன்
றழைப்பசுங்கழையாய்முளைத்து நல்லிலிங்கத் தனியுருக்கொண்டு மற்றதன்கீ
ழுழைப்பெருஞ்சங்கத் தீர்த்தமொன்றுதிப்ப வுதவினன் கதழ்சினச்சிறுகட்
புழைக்கைமாவுரியிற்பவளமால்வரைமேற்புயல்தவழ்ந்தனைய பொற்புயத்தான்.

எழுந்தபாசொளிவெள்ளிலைத் தலைவேணுவிலிங்கநேரக் குற்றவாகிருதன்
பொழிந்துகண்பனிப்பக்கரமலர் முகிழ்த்துப் புளகமுற்றகமெகிழ்ந்தவசத்
தழுந்தியானந்த வாரியுட்டிளைக்கு மளவையிற் கனைகழுலெயங்குந்
தொழுந்தொறுமடியார்க் கெளிவருங்கருணைச் சோதிவானவனெழுந்தருள. ()

பாய்விடையூர்ந்து பசுங்கொடிபுணரும் பவளமால்வரையினிற் பொலிந்த
தூயவணிணைத்தா மரையடிபணிந்து சுந்தராபோற்றிமாலயன்பால்
மீயுயர்கடவுட் குன்றெனமுளைத்த வியப்பெனவிதியிலேன்
மாயிருந்திறலார் வேணுவாய்முளைத்தவரதனேபோற்றி யென்றிசைத்தான். ()

எத்தெடுத்திறைஞ் சுமனையன்மாட்டருள் கூர்ந்தெனையாளுடையவன் கரு
பூத்துனக்கியன்றகேளென மறைதேர்புங்கவ *ரச்சுத னுதி [ணை
வாய்த்தம்மன்னுயிர்க ளெவற்றினுமாயா வலியுமிவ்வண்டகோடிகளைக்
காத்தல்செய்வலியுங்கிரிலாவலியுங்களிந்தருள்செய்யோனக்கனாந்தான். (ஙஉ)

அரன்பொருளுரைத் தரங்கைவார்சடையானவனுவந்தனவளித்தொருநீ
வரம்பெறுவேணுவுழைப் பொலிசங்கமாதட மீதுபடிந்திடுவோர்

* விண்டுவை யச்சுதனென்றது ஆட்டினை யசமென்றதுபோலும்.



நிரந்தரவலிபெற்றோங்குக வருநாள்நிமிர்கடம் பணிபுயத்தொருவன்
கரந்தொடர்வேலாலெம்முழைவருகக்கடையிலென்றிணையிலான்மறைந்தான்

தொல்லைநாட ... வரமடைந்து துயர்விளைத்தானென வரத்தா
ரொல்லையேசூர பத்மனுமபருறுபத மொறு...
மல்லன்மாஞாலத் துதிக்குநாட்காறும் வவ்விவாழ்ந்தனனெனில் மேல்கீ
ழில்லையேயெம்மான் திருவருட்கென்னு விருந்தவன்மற்றுமொன்றிசைப்பான்.

பீடுறுதோற்றத் தாடகக்குடுமிப் பெருந்தனித்தோணியம் புரிக்கே
யீடுறுவேணு புரமெனும்பெயர்தா னின்னுமோராற்றினு லியைந்து
நாடுறுகாதை கேண்மினோநமர்காண குபுகர்முகத்தொரு நான்கு
கோடுறுமயிரா பதப்பெரும்பாகன் கூத்தியராடலின் மேனாள். (ஙரு)

பாலுழந்திருக்கு மமைதியிலெல்லாம் வல்லதன்குரவனுண் டணைந்த
காலுறவணங்கா நிலையறிந்தனையான் கவன்றயலேகெனு மகவான்
மேலுறுபெரும்போர் நிருதராலுடைந்த வேதனைவேதனை வழுத்தி
யோலுறவியம்பத் தேசிகற்பிழைத்த வுறுபழியெனவய னுரைத்தான். (ஙசு)

உரைத்துழிக்குரவன் றனைவரக்காணு வுறுதவக்காசி பன்போன
வரைக்கிணையாற்றல் விசுவரூபனைத்தன் வழிக்குருவாக்கியோர் வேள்வி
யுரைப்படவளர்ப்ப மற்றவனிருதர்க் கூட்டலுமவனையொள் வாளா
லரைக்கணத்தரித்த சதமகன்செயலை யறிந்தனனவனுடைத் தந்தை. (ஙஎ)

அறிந்தவனொருதீ வேள்விசெய்தொருவா ளரக்கனைவிடுப்பவ னவன்மா
றெறிந்ததோள்விருத்தி ராசுரனெனவந் தேற்றலுஞ்சீற்றவெள் ளானை
யுறுந்தனிப்பாக னவனையும்வாட்டியு பயதேசிகனையும் பிழைத்துச்
செறிந்தவல்வினைபோல ரக்கனைச்செகுத்த தீவினைத்தொடரட மெலிந்தான்.

மெலிந்தவன் முன்னராழ்கடற்குடித்த மேலவனெய்தி யவ்வினையை
யிலங்குநீர்விரி மண்ணரிவையர்தருக்களிவையிடத் திறக்கிவானுரிமை
நலம்பெற நளிநீரலம்புதண்பணைசூழ் நகுமணிமாட நீள்காழித்
தலம்பணிகெனத்தண்டமிழ் முனிவிடுப்பச்சதமகனது குறித்தெய்தி. (ஙகூ)

தேவியல்வேணுவழி பிடித்திழிந்து செம்பொனுரெயில் புடையுடுத்த
மாவியத்தளிபுக்கயன்றட மாடிமழுவலானருச்சனை முடித்துப்
பூவியல்பொலன்றுளடிக் கடிபணிந்து புரந்தரனிரப்ப மற்றவன்முன்
கோவிடைப்பாகனினி தெழுந்தருளிக் குறைவிலாவாரருள் கொழித்தே. ()

குன்றிருஞ் சிறகரொருங்குறவரிந்த குலிசவேலொருவநின்விணைக
ளின்றிதிலெம்மை யிறைஞ்சலினொழிந்தா யீண்டுநீவேணுவாலிறங்கி
நின்றதால் வேணுபுரமென விவ்வூர்நிலவுகவென்றகன் கோயிற்
பொன்றிருஞ்சடையான் மறைந்தனன் வேணுபுரமெனப் பொலிந்ததுமூதூர்.

தாதளாயறுகாற் பேடிகைமூாலுந் தருநிழற்காவலன்முன்போ
லேதமொன்றில்லாவமருலகாட்சி யெய்தினனினிது வீற்றிருந்தா
ஞதலாற்காழிபுரத்தியலெல்லா மந்தணீரித்துணைஞான்று
மோதினேனலனேனுன் முகத்தொருவனேநினு மொ--மி ,ு வயனம்ற. (சஉ)

உம்பர்வாழ் கடவுணிதிகளோரிரண்டு முறுதவமாற்றியிங்கர்க்குத்
தம்பெயரிரண்டும் புனைந்திறைகோயிற்றலைக் கடைக்காவல் பூண்டுலகின்
விம்பவாண்முகத்தின் விழித்தவாமிடிநோய் விலக்கவேளாண்மையும்பெறலா
னிம்பரேசங்க நிதிபுரம்பதும நிதிபுரமென்பது மிதையே. (சங)

விழுப்பநீளெல்லை யைங்குரோசத்தும் விண்ணவராதியர்பணிந்து
வழுத்தியவிலிங்கமணற்குழூவாக வயங்கலாலடிபடலாகா [தோ
செழித்தபொற்சிகரிசெய் நிலத்திறைஞ்சிற்றிருக்கறப் பொருப்புவிற்குழைத்
னெழிற்புனைபுகலிக் கெய்தலாமன்றியிது பெருரெய்துவதிழுக்கே. (சச)

வைகலொன்றேனும் பூந்தராயிருந்தோர் மஞ்சனப்பொருள்சிலவளித்தோர்
செய்கலன்கவிகையிடி மூராசாடைசெய்துளோர் பெரும்பயனென்னோ
துய்கவாநிரியொன் றெரிமணிச்சுடர்க்குத் தூண்டிஞேரிழைக்கொருபருவ
மைகவர்மிடற்றோன் கயிலைமால்வரையில் வதிவரென்றருமறைவகுத்தால்.

தத்துநீர் வேணிப்பிரமநாயகற் குத்தக்கவின்றூரமுதொருக்காற்
பத்தியாலூட்டிலாயிரம்பருவம் பண்ணியபலனுெருங் கடைவார்
சித்திரையாடிப் பிறப்பின் மஞ்சனநீர்திருமுடிக் காட்டினர் தமக்கு
முத்தியேலது மற்றையோர்போக மூவுலகத்தினு ,பிலையால். (சசு)

மண்ணிடங் கொள்ளவைங்குரோசத்து மல்கியவிலிங்க மிக்கலிநாட்
கண்ணிடங்கொள்ள விளங்குருததனூற்காழி மாநகர்வியப்பெல்லாம்
பெண்ணிடங்கொள்ளு மொருவனேயறியும் பெற்றியையன்றி யென்னனையா
ரெண்ணிடங்கொள்ள வழுத்தரிதென்றுனே தமில் சூதமாமுனிவன். (சஎ)

வேணுபுரவத்தியாயம் முற்றும்.

ஆக. திருவிருத்தம். கூ0எ.

# கழுமலவத்தியாயம்.

கட்வுண்மரகதப் புரவிகுரத்தாலேற்றக் கருவிமுகில்விழுத்தியங்குஞ்சோலைவாய்ந்த, தடவுமலர்க் கோட்டினிருவுடைந்துசெங்தேன் சாறுபடச்சேறுபடுமெவயற்சூழ்காழி, யிடனுடைய வேணுபுரமெனும்பேர்பூண்ட வியற்கையிது



கழுமலமென்றிவ்வூர்க்குற்ற, வடைவும் விரித்திசைப்பனென முனிவர்கோமானறைந்ததையு மொருவழியீண்டறைவன் மாதோ. (க)

தூகளகன்ற பெருங்கேள்வி மறைதேர்வாழ்க்கைத்தொழிலு ரோமசனெனும்மோர்பகவன் முன்னாள், அகலிடத்தா ரழலாடிதலங்கடோறு மரும்பெறல் மாதவமுயன்றுமளப்பி றெண்ணீர், புகலரிய கடவுணதிபடிந்துமாயைப்புணர்ப்பகன்றவெறுவெளியுட் டேங்கித்தூங்கா, நிகழுநிராலம்ப சிவஞானந்தனை நேர்படாதுளமுருகி நிற்குநாளில். (உ)

கன்னியிளம் பெடையளியுந்துளிக்குந்தெய்வக் கற்பகநாண்மலர்நறைவாய் கவர்ந்துண்டாடு, மன்னியபூஞ்சுரும்பு மிமிர்வான்றேய்சோலைவளர் புக்லிப்பதிபரவவருவானுள்ளே, தன்னியலும்பசுபோத மகன்றுமேலாந் தலைவனருட்போதம் வருந்தரத்தாலார்வந், தன்னிமன மொருப்படுவோனயன்றடாகந்தோய்ந்து பிரளையவிடங்கற்றொழுது போற்றி. (ங)

நஞ்சுபொதிமணிமிடற்றுக் கஞ்சுகேசனளினமலர்த்தாள் பரவிநகைவெண்கோட்டுப், பிஞ்சுமதிகிடந்திமைக்கும் பெருநீர்வேணிப்பிரமீசனடிக் கன்புபெருக்கிநல்லா, னஞ்சுமமுதோரைந்து விதியாலாட்டியருத்திவழிபாடாற்றியடியேற்குன்றன், செஞ்சரணமுளரியைவிட் டஞ்சல்செய்யாச் சித்தநிலைபெறவருளிச் செய்வாயென்று. (ச)

காற்றிசையி னினிதிருந்ததிங்கண்மாலைக் கட்வுளடிக்கருச்சனையின் கட்மையாற்றி, மாற்றருமைப்புலனுடுக்கித் தோணிமேயமழவிடையந்தணன்றிருத்தாண்மனத்தில் முன்னி, யாற்றலுறு குணங்கரணம்புறவ மெட்டாவற்புதசீடொளியொடும்புக்கழுந்திப் பன்னு, ஞேற்றுடலம்வாட்டிய போறிஞன்முன்ன நுனையெயிற்றுப் பணிமாலை நுடங்கமாதோ. (ரு)

கங்கைநதிவேணியு முக்கண்ணுமான்றகறை மிடறும்பிறைமுளையுங்கரங்கணன்கு, மங்கையொருபாலு மணிகிளர்முன்னூலுமறிமழுவும் பெறுகருணைவதனப்போதுங், கொங்கடருங்கொன்றையும் வெண்ணீறுமார்புங் கொலையுழுவை யதளுமணிக்குழையுமாயன், பங்கயாண்ணிய மலரும்பொலிய வாதிபகவனெழுந்தருள முனிபணிந்துகண்டான். (சு)

அருமறைநாயகபோற்றி ஞானவல்லியாருயிரேபோற்றி முக்கணமலபோற்றி, நிருமலமாயுலககாரணமாயம் பொனெடுவரையிலிருந்தவனே போற்றி நேமித், திருமகனையனலை யடுகனையாக்கொண்டசிவபோற்றி நீறணிதிண்டோளாபோற்றி, பெருகுசராசரவுயிர்கட்குயிராய்நின்ற பெரியநாயகபோற்றி யெம்மான்போற்றி. (எ)

ஓவருமைந்தொழிலுடையாய் போற்றியோகருளத்திலெழுபரஞ்சுடரேபோற்றி மாயன், பூவயன் போற்றியபாதகாலகால புண்ணியமங்களமேனிப் புனிதர் போற்றித், தாவருமான் மழுவணிகைத் தலத்தாய்போற்றி சங்கிர

சேகர காமதகனபோற்றி, மேவுபகனெனுங்கதிர் கணிடந்தாய்போற்றிவிறல் வேங்கையதள் புனைந்தவிமலாபோற்றி. (அ)

செக்கரிளஞ் சடைமுடியாய்போற்றி நீண்டசெம் பொன்வரைச்சிலைவளைத்த நம்பபோற்றி,யக்கரவமணிந்ததிருவரையாய்போற்றி யாரணநாரணன், றேடற்கரியாய்போற்றி, பக்கமலிகுறட் பூதப்படையாய்போற்றிபாய்திரை வெவ்விடநுகர்ந்த பரனேபோற்றி, திக்கெவையுமம்பர மாயுகந்தாய்போற்றி சிவஞானகுருமுதல்வா போற்றியென்றே. (கூ)

என்புருகமயிர்பொடிப்ப மொழிதள்ளாடவிணையடிப் பூங்கமலமிசையிரங்கியேத்தி, யன்புருவாநின்றனை யுன்போலன்பராருளர் நீமகிழ்ந்தன கேளளித்து மென்னப், புன்பிறவிப்பிணிதணிக் குமருத்துவாநின் பொன்னடியைப் பிரியாத நன்னர்ஞான, நன்புலனென்றிட வடியேற்களித்தல் வேண்டுமாத வெனப் போதமுதல் நம்பன்கூறும். (க0)

மம்மரறுத்தருள்யாமு நீயுநின்னைமருட்டிய மாயையுமலமும்வினையுமோர்ந்து, மெய்ம்மையுணர்வது ஞானமதுதான்றொல்லைவினைப் பாடொத்தழித்தோன்றுந் தோன்றுங்காலை, யெம்மருட்சத் தினிபாதமியையத் தோன்று, மெமதருளேயுனக் குரிமையென்றுந் தோன்றுமம்மலமைந்துமொரு நாமுநீயுமனுதியென வறிந்திடுதியறிவான்மிக்கோய். (கக)

இருமாயைநீங்கியசத்தினி பாதந்தானிறைசரிதையாதிகளை யிழைத்தார்க்கன்றி, மருவாதுநாமியற்றுந் தொழிலோரைந்து மன்னுயிரின் பொருட்டாகுங்களிம்புமூடி, யொருவாதசெம்பெனமாம்லத் தாற்றம்மையுணராதெம்மையுமுணராதுயிர்கள் யாவும், கருமேவிமுன்னையிருவினைக் கீடாகக்கறங்கெனநின்றுழலுமுறுகதிகாணமல். (கஉ)

பருவமதுகன்னியுழைப்பாரா நின்றபதிபோலப் பசுவினதுபருவம்பார்த்துத், தருதலினாற்பசுபதிநாமுயிராங் கன்னிசரிதைமுதல்வழிநான்குந் தகைசால்கேழ்வன், பெருமிதநல்லிசை கேட்டலவனையெய்தும் பேராரதனை முடித்தல் விழியாற்காண்ட, லொருமையுறத்தனை மறந்துகலத்தல்போதுமுணரினெமதளவிலின்ப முண்ணுமாறே. (கரு)

இயற்கைநிறந் திரிந்துறுபன்னிறங் கடாவுயிருந்தீபளிங்குச்சிபடு மிரவி முன்னே, மயக்கமறவிளங்குதல் போற்புலன்கள்மூடிமருண்டவுயிர் நமதருளைமருவித்தத்தஞ், செயற்கையுறுபசுகரணச் செய்கைநீங்கிச்சிவகரணத் தெமையுணர்ந்துதிளைப்ப தல்லா, லயிற்பிலெமதைந் தொழிலையியற்றமாட்டாவலகையுடையுறுப் பினர்போலிமையுமன்றே. (கச)

ஓதறுகேவலசகலசுத்த மூன்றினுணர்வுமலி சுத்தவுயிர்க்கொழியவேலைப், போதுயிர்கட்கருளாற்ற விளங்காதுற்ற பிணியறியுமருத்துவன்போல்



வினைநாமீய, மீதுநுகராணுக் கன்மலவழுக்கைஞான விரிபுனலாற்றுடைத்தன்றிவிய நீர்நீத்த, மோதுகடற்புனலேனுங் கழுவலாற்றமொய்த்த புலம்பகைகடந்த முனிவரேறே. (கரு)

ஈட்டியனவிழித்தளவே யொழிந்தவேனையெடுத்தவினை யுடலோடுமெதிர்நாளெய்தக், கூட்டும்வினை யெமையுணருந் திறத்தால்மாயுங் குறைவறவேகுறியாது குறித்துச்செவ்வாய், நாட்டுறுபலபொருடொறு நாமியைந்தவண்ணநயப்பதுவேஞானமென நல்கியாங்கே, யோட்டுபுனல்விழி யருவியொழுகாநின்றவுரோமசன்பாற் பின்னருமொன்றுரைப்பானண்ணல். (கசு)

மாற்றரியவெமது திருவாக்கினாலுன் மலங்கழுவ விளங்குதலாலிவ்வூர்க்கென்றுஞ், சாற்றரியகழுமல மென்றகுநீயுந் தானிழற்கீழெய்து கெனத்தன்டேன்சிந்திக், கீற்றுமதிக்கோடுழக்கமுகைவாய் விண்டகிளரொளிய கடுக்கையந்தார்கிடக்கும் வேணிக், கூற்றடுதாண் மழவிடையூர்குழகன் செம்பொற்கோயிலிடைமறைதலொடுங் குணக்குன்றன்னான். (கள)

பாசமலவலிகடந்து கலாதிமாறிப்பட்டகரணம் குணம்பொறிகள் பலவுஞ்சாய்த்து,நேசமதிநினையாது நினைந்துஞான நீடொளியிலொன்றியொன்று நிலைமைத்தாகி, மாசகல்பேரானந்தவாரி தோய்ந்தமாமுனிவனிதையிதனை வரைந்தோர்கேட்டோர், தேசுபெறவிளம் பிடுவோரெவருஞானச் செல்வரெனவீற்றிருப்பார் சிவன்றருள்பெற்றே. (கஅ)

கொள்ளைவரிவண்டுழக்க முகைவாய்விண்ட கோகனகத்தடம் பொகுட்டிற்பொலன்சூட்டன்னங், கள்ளவிழிப்பெதும் பையர்காற்சிலம் பினேங்கக் கருங்களமாரங்கிதெனக் கணிக்குமாநீர், வெள்ளமுநு தடத்தெழுந்த வெடிவாய்வாளை மிடற்கமுகமடல்கீறி விரிதேனூட்டு, மள்ளல்வயற்கழுமலத்தினியவிதென்றுனருங்கலை நூற்றுறைகடந்த வறிஞர்கோமான். (ககூ)

## கழுமலவத்தியாயம் முற்றும்.

ஆக. திருவிருத்தம். கூஉசு.

# புறவத்தியாயம்.

சிறையாருமலம்பகைசெற்று முனித்திலகன்சிவஞானபதம் பெறலான்
மறைவாணர்துவன்றியககாழி கழுமலமாகிய வாறிதுமேலிதுதான்
குறைநாடுகபோதநிறைக்கொருவன்கொழு மேனியரிந்தெழில் பெற்றிடலால்
முறையேபுறவப் பெயருற்றதுவுமுனி புங்கவனோதியவாமொழிவாம். (க)

விரையார்தரு கொன்றைநறுந்தொடையான் வேடங்களினீடு கருத்துடையா
வரையாதருங் கடிவார்முரசம்மாருமல் முழங்குகடைத்தலையான் [ன்
புரைதீரருணன்குல தீபமெனப்புனைமாமுடியானனை நாளினெடுந்
திரையாடைமடந்தை மணாளனடற்சி விசக்கரவர்த்தியெனுந்திறலான். (உ)

மலையொத்த தடம்புயமுஞ் செயமுமலரொத்த விழிக்கடையுங்கொடையுங்
கலையொத்தகுணத்துறையும் பொறையுங் கடலொக்க நிதித்தனமுங்கயமும்
துலையொத்த சமத்துவமுந் தவமுந்துகளற்றமனத் தருளுந்தெருளு
முலசேத்தசரித்திரமும் பரமும்முடையான் மனுநீதிவரம்புடையான். (ங)

காலந்தொறுமாமழைமாரி கொளக்கலைவாணர் மகிழ்ந்துபொன் மாரிகொளச்
சிலம்புனைநூல்வழி தீவளையச்சேரும் புகழோரெழுதீவளையக்
கோலொன்றினிரும்பு வியேவல்செயக் கோவூர்தியடிக்குளமேவல்செயச்
சால்பொன்றியசென்னிகுலம்பொலியத்தன்னோர்குடைகொண்டுபுரந்தருளுள்

அனையான்முதுவேள்வி செயக்குறியாவகிலத் தலகோடியினுத்தமமாய்
முனையோகிகள் ஞானிகள் வாழிடமாய் முத்தாபமுருக்குவதாய் மறுமைத்
துணையார்பவ நூறியருட்டருமத்துணையாயதிபாவ மொழித்திடர்தீர்
புனைமாதவசித்தி விளைக்குமெழிற்பொலி காழியுள் மந்திரிமார்களொடும்.(ரு)

தானைக்கடல்சூழ் வரவெய்தியயன் றடமூழ்கியருட்பிரமேசனை மெய்
ஞானக்குருவைத்திருமாவுரிசேர் நகுகஞ்சுகனைத் திரிபுரசுந்தரியைச்
சேனைப்புயலன்னவனன் பினொடுந் தொழுதன்னகரத்தின் வடக்கயல்சூழ்
மானத்துரவோர்விதிநூல்வழியே மகமொன்றுதுடங்கிய வெல்லைதனில். (சு)

ஆதிக்கயிலாயவரைப் பெருமானரசன்புரி நீதியுமாறறமுஞ்
சோதிக்கநினைந்தம ரேசனையுஞ்சுடரோனையுமுன்னினன் மற்றவரு
நாதித்தகறங்கருவித் திரள்சூழ்நகுவெள்ளியடுக் கலினந்திபிரா
னோதிப்புகு விப்பநுழைந்தெனையாளுடையானடிகண்டு பணிந்திடலும். (எ)

முன்னிற்பவர் தம்மொடுமெம்முடையான்முறையாலருள்செய் திருவீருநெடும்
பொன்னித்திருநாடுறு காவலவன்புகழ்மிக்கபுகார் நகரத்ததிபன்
சென்னிப்பெருமா னுலகம்பரவுஞ்சிவி செய்மனுநீதியைமூதலகோ
ருன்னித்தெரிவான் மனம்வைத்தனனீருடனிக்கணமே தெரிவித்தனைவீர்.(அ)

என்றுதி பரம்பரனல்குதலாவிமையோ ரிறையுந்தழல்வானவனுஞ்
சென்றூர்பல தெய்வமகன்றுகளிச்சின வாளையெழும்புனல்நா டணுகிக்
குன்றாமுறைநீதி செய்வேனுழவன்குறியாத வுருக்கொடுகூடினமே
லின்றேநம தெண்ணநிரம்புமெனா விருவோருமறைந்துரு மாறினரால். (கூ)

சேனத்திறை வானவனுஙிவரச்செங்கட் புறவங்கியுமாய் வெருவா
மானக்கொடி சூழ்திருமாநகர்வாய்மனு சேகரன்வேள்விசெய் சாலையினிற்



கூனற்புறவாலிரார்ந் தலறுங்குரலோடுமொடுங்கி யடைந்துநெடுந்
தாளுக்கடலொத்துள மன்னர்பிரான் சரணேசரணென்று விழுந்ததுவே. ()

வீழுஞ்சிறுகட் புறவுக்கருளால்வெருவே லொருபோதுமெனக் கருகே
யாழுந்துயர் விண்டினிதாயுறைகென்றபையந் தருமவ்வுழிவெவ்வியகட்
போழுஞ்சிறு துண்டமொடும்பொருமிப்புறவெங்ஙனமென்றொருகங்கமுமே
லேழுண்டவயக்களி றன்னவன்முன்னெய்திச்சில வெய்யவுரைத்திடுமால். ()

அரசேயுயர்சோழர் பெருந்தகையேயளியேனொடு வெம்பசியாறிடுமோ
ரிரைதேரியவந்தக போதமரோவின்னே தருகென்னலுமன்னர் பிரா
னுரைசாலுயிரேனு மளிப்பதலாலுன்றஞ்சமெனப் புகுமோருயிரைத்
தரையாள்பவ ரீவதுநேர்குவரோதருமத்தி னெறிப்படுதன்மையினால். (கஉ)

தண்டாரவனீதுரை செய்தலொடுந்தணியா வெனிரும்பசிதீர்புறவைக்
கொண்டாயென் வயிற்றெரிமண்டியடக்குடர் வேவதுனக்கழகோசணமு
ணுண்டாகவடுக்க விரங்கினையோ வூனுண்ணவிரும்பினுனக்கரிதோ [னே.
கண்டார்பொருள் மன்னவர்கொள்வரெனிற் கங்கத்தினுமுண்டுகொல் காவல

வெருவுற்ற புறவெனநாடியநின்விழியா லழியும்பசிகொண்டொருபா
றுருகுற்றதெனத்தனி நாடிவிழுக்குளதோவுனதாள்புவி மன்னுயிர்போன்
மருவுற்றனயானயல் வேறுளனோமற்றொன்றினை யொன்றடமாமலரோ
னிருமித்தவிரைக்கிடை யூறுசெய்தானீதிக்கிதடாது நெடுந்தகையே. (கச)

போர்க்கென்றிரு மன்னுயிர்பொங்கியெழிற்புற மின்றுமகிழ்ந்திடலன்றியுமே
பார்க்கின்றவர் சிறுவரோவவர்போற் பார்வேந்தர் பொருள்களெனின்பலவாய்
வேர்க்கின்றன நின்னுலகத்திலையே விழிகண்டதொறுப்பரெனிற்பசியாற்
கூர்க்கின்றவெனக்கு மோராறுதுணைக்கூறென்றுயர்பாறு புகன்றதுவே. ()

வெம்பாறு புகன்றதுமன்னர்பிரான் மிளிர்செஞ்செவியேறி வியப்பமுறீஇ
யம்போருக வாண்முகவன்புகல்வான் பைம்புகுமோருயிராருயிர் போல்
நம்பாதரமிக்கது காணிடர்கூர்நனிநோய்பட வந்துளதேலதனுக்
கைம்பூதவுடம்பி லிடந்தருவாராரோபுகல்வீரமுடைப்பறவாய். (கரு)

பாருள்ளவுயிர்க்குடல் யானெனவேபராவத மென்னடிபற்றிவரச்
சூருள்ளுபுரீயுமடுத் தனையாற்சுடுவெம்பசியாலுயிர் போகறியாச்
சாரும்புறவன்னது நீபருகித்தன்னுருயிர்போமினி நீவிழையிற்
றேருந்தசையேனு மிறந்துபடார்ச் சேணாருமுதேனும் வழங்குவனால். (கஎ)

சோராவமுதுந்தரு தன்மையனிதொல்லூனை விரும்புதலன்றியெனக்
காராவமுதென்னெனமன்னர் பிரானயலோருயிரைக் கொலைசெய்திலனென்
றோருடலூனிடுவன் கவருந்திறமெங்ஙன மெள்ளமகிழ்ந்தபருந்
தோராதுறுவிற் புறவுக்கிணையொத்திட வுன்றசைதந்தருளென்றதுவே. ()

பாறங்கனமோதலு மீதுமென்பப்பல்லோருணவுள்ள தெலாமுதவா
தாரென்றுகவர்ந்ததன மேனியின்மேலருளற்று முனிந்தனனேவலரும்
கிறண்டமுளைப்பிறை வேணியினன்கிளருஞ் செயலோவயலொன்றுளதேர்
கூறுண்டதனீதியினிற் சிறிதுங்கோடாமை குறித்தனனேனிருபன். (கக)

மறைவாயிருவானவரும் பலமாமறைவாயிருவான வருங்கணயத்
துறையூபதலத்தருகா நெடுந்துலையொன்று நிறுத்திமதிக்குடையா
நிறைவேதியராதியர் போதியல்கண்ணிணையாரிமை மூடியிரங்கவெழுந்
துறைசாயவிடுத்தொரு பூமுகவாளுருவிக் கொடுநின்றுபினெண்டிரலோன். ()

மண்ணுள்பவர்மாதிசையாள் பவர்மாமலையாள்பவர் வார்கடலாள்பவர்நீள்
விண்ணுள்பவர்யாவரும் வெய்துறவோர்வினைவெங்குருதிக் கணரும்புறவைப்
பண்ணாருதட்டிடையிட்டு முறைப்படியேயடிதொட்டு மிடற்றுவரைக்
கண்ணூர்தசைமற் றொருதட்டிடையே கைவாளினரிந்துசுமத்தினனால். (உக)

கோலேரியவூனிடு தட்டொருபுட் கொண்டேறியதட்டதுகீழுறவே
மேலேறுதல்கண்டடலேறனையான் வேறுந்தசையில்லெனமெய்யினையான்
சால்பேரியதாரணியெங்கணுமோர் சமமேறவிருந்தியல் செய்வதெனப்
பாலேறுதன்னுகமோடேறியதைப்படிவித்தனன்மெய்பொய்யெனத்தெரிவான்.

மெய்யோடுதிறம் பொழியக்கழிபோல் வெற்றென்பு நரம்புதுலங்கிணைப்
பையோடுகெழிந்துமுன்னு மியல்பிற்பயில்கின்றவனு வியைவைத்ததுதான்
மெய்யோமனுநீதிகொலோவெனையாள்விமலன்செயலோவரசன்பொறையோ
வையோவிவனெப்பவர் முப்புவனத்தாரோவினிமேலு மின்னுளினுமே. (உங)

மண்ணஞ்சினமாதிரமஞ்சினநான் மறையஞ்சினமாதவ நோன்மைகொடா
ரெண்ணஞ்சினயாகதலத் தழவோரினமஞ் சினவிண்டைமலர்க்குடிவாழ்
பெண்ணஞ்சவுமஞ் சலனுகியறம்பிழையான் விரதத்தையறிந்தியமன்
கண்ணஞ்சினவந்துகரந் துறையுங்கணுதிபனும் தனியஞ்சினனால். (உச)

அப்போதுபருந்திறை வானுலகத்தவருக் கிறையாகிவிளங்கமலர்க்
கைப்போதுபொழிந்திமையோர் மகிழக்கடிவார் முரசங்களியங்குளிறச்
செப்பேர்முலைமங்கையராடல் செயத்தேசாதிபர் நின்றுதொழத்துலையின்
றுப்பேறியதட்டினிறங்கி யெழிற்சேருளார் மணியன்னவனின்றளவே. (உரு)

உலகத்தறியாதவருந் தெரிமானுன்னீதியையா திதனேவலினு
விலகத்தெரிவித்தனனிந்திரன்யா னிவனுந்தழல்வானவன் முன்னொருநாட்
டலைபெற்றதநீசி வென்னெனன்புதனைத் தருகென்னவருந்தவனீதலுமே
நிலைமைக்குலிசப்படை பெற்றனன்யானின் னெப்பவனன் னவனேபுகலாய்.

புரமட்டபுராதனனின் னருளிற்புக்கேமொருமுப் புவனத்துளும்வா
ழரசர்க்கரசானபெருந்தகையே யழிபட்படநின்மேனியை நீள்கழுகிற்



பரமுற்றபசுங்கொலையைச் சிதறப்பஞ்சேலுதறிச் செஞ்சேறுபடுந்
தரமிக்கவயற்புகலிப் பதிவாழ்தலைவன்றர நீவலிகொண்டிடுவாய். (உஎ)

வேறு.

என்றுபுகன் றீர்வாளினரிந்ததசையாவையு முன்னியல்பிற்கூடி
நன்றுபொலிவுறப் பொலிந்துவாழ்தியென மன்னனுமனமைவாய்ந்து
குன்றினிருசிறகரிந்தோய் நீர்வேட்கை மிகயுடையேன்கொடுத்தியென்ன
வன்றுபுறவினைநோக்கியைங் கரன்காவிரிப் புனல்கொண்டளித்தியென்றான்.

ஆங்கதுசென்றகன்கரையையலகுகொ டுய்ப்பவலங்குதெண்ணீ
ரேங்கொலியின்வர லோடுநிருபன்னநீர் பருகிவிடாயிகந்தான்விண்ணி
லோங்குதருக்காவலனு மனலோனுந்தம் பதியினுற்றார்மண்மேல்
வீங்குசிறைப்புறவுகொணர்ந்தளித்தலினற் புறாநதியாய்விளங்கிற்றன்றே. ()

இவ்வாறு நிகழ்ந்தபின்னர்வேள்வி வினைத்துறையாற் றியிமையவெற்பாற்
றெவ்வாறுகடந்த பரன்றிருவளிதெனவுன்னித் திணிவெண்கோட்டு
மைவார்ந்தமதமலையானப் பெருஞ்சுற்றமுந்தழுவ மதுகைத்தானை
யெவ்வாறும்புடைநெறுங்கத் தோணிபுரம்பேணியவென் றெழுந்துபுக்கான்.

தேராழிகுழித்த நெடுந்திருவீதிகடந்தமலன் செம்பொற்கோயி
லேராழிமகன் மகன்செய்தீர்த்தமதுபடிந்து கடனெருங்கே யாற்றி
நீராழியிளம்பருதி நிகர்நிறத்துக்குருபரனை நிமலையோடும்
பாராழியன்பினொடும் வணங்கிமலைக்கொழுந்தி னடிப்பதுமம்போற்றி. (௩க)

கைம்மலையீருரிபோர்த்த பிரமீசனிருபாதங்-கணிந்துபோற்றிச்
செம்மலர்த்தடக்கையினாற் றூநறுமஞ்சனமாட்டித் தெய்வச்சாந்து
மெய்ம்மலியானைந்து மமுதோனாந்தும்வினையுள வெவ்வேறுமாட்டி
யம்மலர்கொண்டருச்சனை யின்றுறைமுடித்துப்பரிவொடுமின்னமுதூட்டி.

வாசநறுந்தூமமெடுத்தலங்கு சுடர்கிளைகாட்டி மலர்கவேி
நேசபரம்பரவமல நித்தியதத்துவஞான நிமலமூல
பாசவிமோசன வாதிபகவவெனவக நெகிழப்பணிக்கண் வார
வேசகலுமயிர் பொடிப்பப்பணிந்தான் முன்னுயிர்க்குயிராயிருந்தானன்பால்.()

மறுவறுவெள்ளியங் குவட்டில்மழைபுணரும் பொற்குவடுவந்தாலென்னக் [றி
குறுநகைவாணுதற்கூந்தற்கொடியுடன் வெள்விடையிவர்ந்துகோமான்றோன்
யுறுபொருளுள்ளியதுதவும்வள்ளியோய் நின்வழிபாடுவந்தோமெண்ணம்
பெறுதியுனக்களித்துமென மதிசூடியெதிரரசன் பேசுமன்றே. (௩௪)

தென்றலந்தேர்க்காளை யெழில்கவர்ந்தநுதல்விழி யழகர்திரைநீராடை
மன்றல்நிலம்பரித்திறுதி வருநாளுன்னிருதாளிலவாவும் ஞாலத்

தென்றமிசை விளங்கியரும்புறவினுக்கூன் கொடுத்தனைவந்தேத்துமிவ்வூர்
பொன்றலரும் புறவமெனப்பொலியவு மீங்கருளுகெனப் புகன்றுபின்னும், ()

கோதில்லருங் குணக்குன்றேயளியனுக்காய்ப் புறவுதங்சகுளிநீர்த்தெய்வச்
சிதநதியிலாடித் திங்கடனிலீரொன்பான்றினத்தில் வெற்பன்
மாதரசோடெழுந்தருளி மன்பதையுந்திடத்தீர்த்தம் வழங்கிமூழ்கிப்
போதருவோர்க்கிருமையினும் புத்தியுமுத்தியுந்தகைசால் புதல்வர்ப்பேறும். ()

தண்ணளியான் மகிழ்ந்தருளியைம்பெரும்பாதகமுப்பாதகங்களாதி
யண்ணவிருமுது குரவர்முதலோராயிகழ்ந்த வினையனைத்து நீக்கி
யெண்ணரியசித்திகளுங்கொடுத்தருளுகெனவேண்டவிணர்ப்பூங்கொன்றைப்
பண்ணவனுங்கவைகளளித்தெழுந்தருளினன்விடைமேற்பசும்பொற்கோயில்

வரங்களலகிலபெற்று மனமகிழ்ந்துவிரிந்த பழமறைநூற்கேள்வி
நிரந்தரவேதியர் திறத்துநிகரிலடியவர்திறத்து நிறைபொன்மாறி
சுரந்தெழிலியெனவீசி நால்வகையகடற்றுனை சூழ்ந்துபோத
வரந்தைதணித்தெழில் கணிந்தவரசர்பிரான் திருநகரமணைந்தான்மன்றோ. ()

முடங்குளைவாளரி யணைமேலிருந்துபுறந்தருமொருகோன் முறைநடாத்தி
யடங்கவவாவலிகவர்ந்து நால்வகையபேரறமு மளியாலாற்றித்
தொடர்ந்தபுகழ் நிலைநிறுவிநிலவணிவேணிய னடிமைத்தொண்டுபேணி
நடங்கிளரும்பிரமேசன் பதம்புகுந்தான்சிவியெனுமோர் நாமவேலான். (௩௯)

புறவவத்தியாயம் முற்றும்.

ஆக-திருவிருத்தம். ௩௯.

---

# பூந்தராவத்தியாயம்.

இன்னநீரெழில் முன்னியோர்புறவின் பொருட்டரசெய்தலான்
மன்னுமாநகர் புறவமாகியவாய்மையீதில லாதிநாட்
பொன்னுலாவிய மார்பனுந்தொழு பூந்தராயெனவாய்ந்தபேர்
தன்னைமாமுனி சொன்னவாறொருதன்மையோதுவ னுண்மையே. (௧)

காற்றினுஞ்சுடு கனலினுங்கடைநாளில் வந்தெழுகாலவெங்
கூற்றினுங்கொடி யானெடுங்கடல் கொப்பளித்துமிழ்வாயினு
னூற்றல்வானவருயிர் பிசைந்துணுமயிலின னடினுவிலோ
ரேற்றமண்டிய விரணியாக்கனெனுங் கடுந்திரலவுணர்கோன். (௨)



அண்டவாணரோ டொன்றுபோர்செயு மந்தநாள்வலி யிந்திரன்
சண்டவார்படை மண்டவாவிதளர்ந்துபோ யவுணன்கருங்
கொண்டலூர்தியு மமாரும்பெறுகோளிலாவலி வீறெலா
மண்டலந்தொறு மேதழைத்திடு மாதவத்திறலா மெனு. (௩)

மானவேள்வி விதித்தளிப்பனமாமனுக்கள் கணிப்பன
தானமிக்கவர் பாலளிப்பனசாறயர்ச் சிவிளைப்பன
வானவிவ்வற னுவிருந்திறல்ாருமும்பர்கள் வீற்றப்
பூனலந்தனை யான்முகந்தயல்போவ னென்பது வவ்வியே. (௪)

ஏதமிக்குள பாதலத்திடை யெய்மையைத்தரு காகவோர்
மாதலத்தட லோனொளித்தலும் வானவர்க்கிறை யாதியோ
ரோதர்க்கர புலாலொழுக்கக லாதசக்கரபாணிதன்
பாதமுற்றடியே மனத்திடர்பாறுதற்கருள் கூறெனு. (௫)

எற்குலாவு துறக்கமீதிலெமக்கெலாமொ ரிடுக்கணுய்ப்
பொற்கண்மேய வொருத்தனுடமர் புக்குமேலுமெமைக் கொல்வான்
வற்கநீடற மிக்கபாரைவகுத்தபாதலம் வைக்கயா
மொற்கமேலின மைக்குமாமுகிலொக்குமேனி மலர்க்கணாய். (௬)

என்றுநேருற நின்றதேவரையிங்குநீ விரிரங்கலீர்
வென்றுமீள்குவ னென்றுமன்னொடு விண்ணுநீளியவெள்ளியங்
குன்றுபோலொரு பன்றியாயுறுகோளன்மேவிய பாதலத்
தொன்றுமாறொடு சென்றுவெஞ்சின மூக்கினின்றெதிர் தாக்கினுன். (௭)

தாக்கிவந்தடர்கேழல் மேலொருதண்டுகொண்டு நிசாசரன்
றாக்கிமோத மருப்பினுலது தூளிபட்டுக நூறியே
மேக்கொடுங்கரு நீலவெற்பினைவெள்ளிவெற்பது பாய்தல்போல்
மாக்கடுந்திற லவுணர்கோன்மிசை வாய்ந்தவல்லுளி பாய்ந்ததே. (௮)

மிக்ககோடுகிழிக்க மார்புவெடித்து வேறுபிளப்பதாய்ச்
செக்கர்வான மெனக்குலாய சிவந்தசோரி புறந்தரத்
தொக்கதேவர் வலக்கணென்ன வரக்கன்மேனி துடிப்புறப்
புக்கதூதுவர் கைக்குளாருயிர்போயினுனெதிர் மேயினுன். (௯)

பள்ளவாயனை வெல்லவாகைபடைத்துஞால வரைப்பெலாம்
வெள்ளையேனம தொண்மருப்பரிமேலெடுத்தலும் வானுளோர்
கள்ளுறுமலர் மாரிபெய்துகரங்குவிப்ப வகத்துயாய்த்
தொள்ளைசேருணர் வெய்திவேறினை சொல்லுவாரினி யில்லையே. (௧௦)

பீடுகொண்டுமி யாடல்மாமயிலூர்தி யந்திகல்பேசியோர்
கோடுகொண்டருள் போதமுஞ்சில கூறியங்கழவேலைவாய்

வாடுபென்றியும் யோகுணர்ந்துபின்மாயிரும்புவி யாவையுஞ்
சேடன்வெந்திற லாயிரங்கொள் சிரத்துமீதிலிருத்தலால். (கக)

மன்னியெங்குமிமிர்ந்தபல்லுயிர்வளைவிலாதன வளைபடப்
பின்னிரும்பழி துன்னிநின்றபெருத்தகேழ லுருத்துறந்
தென்னிருங்கடவுட் பராவியிகப்பனிப்பழியென் றெழுங்
கன்னிமங்கல வின்னியங்கிளர்வாழி வந்தனளூழியான். (கஉ)

பால்கருங்குயில் வீணைபைங்கிளிபாகுமென்கனி பூவைதேன்
கோல்கரும்பிழி சாறெனுஞ்சுவைகூசநீ நிரைபேசுவார்
மேலரங்கனி லாடல்பொங்கணிவீதிகண் டெருசோதிவா
ழாலயந்தனி ஞானன்றடமாடினன்குட மாடினான். (கங)

பேறதுங்கடன் யாவுமன்பொடு பேணியைம்பத மோதிவெண்
ணீறுகண்டிகை மேனிகொண்டுநிலாவிளம்பிறை வேணியான்
வீறிலங்கிய பாதபங்கயமேலருஞ்சிவ பூசைநா
லாறுகொண்டடை வேவணங்கலுமாழ்தடங் கடலாழியான். (கச)

கோமளக்கொடி பாலுறப்படர்கோடுடைத்தனி யேறுகைத்
தேமவிற்குழை சேவகப்பெருமானடுத்தலு மீதிலா
மாமறைப்பொருளே யெனக்கருள்மாதவப்பொருளே யெனாப்
பூமலர்ச்சரண்மேன் முடித்தலைபோதம் வைத்தலுமாதிதான். (கரு)

செருமுகம்படு நிருதர்பொங்குயிர்த்தின மருந்தியதிகிரியா
யுருகியிங்கெமை வழிபடுஞ்செயலுவகை கொண்டனையொருவனீ
கருதுகின்றன தருதுமென்றருள் கருணையங்கடலடிவிடா
தருகுநின்றிருநில மடங்கலுமமுதுகொண்டவ னறைவனுல். (கசு)

அனகநினதடியவரை யிடர்கள்செய்தவனிகயர்தர நிருதனோர்
கனகவிழியனையழிய முரணியகடுவலுளியென வடையயான்
பனகமுடியி லென்னுலவைநுதிபடுபடியை நிறுவலுமளவிலா
வினியவுயிர்பல நலியவருவினையெனையு மருவினதிறைவனே. (கஎ)

வீந்ததீவினை தீர்ந்துபோதர வேண்டுநீள்புவி நோன்றலாற்
பூந்தராயென நான்செய்பூசனை பூண்டவூர்பெற வேண்டுமோ
லாய்ந்தநான்மறை யேந்தலேயெனவாண்டுகூறிய மாண்பெலா
மீய்ந்துதாண்மிசை வீழ்ந்தமாயனை யெழுகெனுவருண்மொழியினுல். ( )

பின்னரும்பல் வரமளித்தொருபேதைபங்கினன் மூதெயிற்
பொன்னலங்கிளர் கோயிலூடுபுகுந்தபின்னர் முகுந்தனுந்
தன்னரும்பத மெய்தினனுயர்தவமுளீரென மறையெலா
முன்னருந்துறை கண்டுளானடிமுளரிசூடி மொழிந்தனன். (ககூ)

பூந்தராவத்தியாயம் முற்றும்.

ஆக. திருவிருத்தம் கூஅச.



# மஹாவரவுவத்தியாயம்.

வேந்தராமுடிமேற் பாரைவிடுத்தமால் வினைவிண்டேகப்
பூந்தராவானதொல்லைப் புனைபெயரொடு முன்னுன்கு
வாய்ந்தபேர்த் திறனும்வேறுமான் மியம்பலவுமுன்னித்
தோய்ந்தவாலறி ஞாங்கட்குதனை யிரந்துசொல்வார். (க)

பருதியென்றுதையஞ் செய்யப்பாயிருண் மாயமல்லாற்
கருதருமவிச்சை யென்னுங்கங்குலு மாயவற்றே
வொருவனின் னருளால்யாண்டு மொழிவுறு வுளத்துமாயை
யிருளையுந்தடித்தாய்ஞானத் திரவிநீயெங்கட் கென்றார். (உ)

பன்னெடுங்கால நோற்றபடிறுதீர் தவம்பழுத்தாங்
கின்னெடுங்கானத் தெம்முன்னெளிவந்தாயொளிருங்காழி
நன்னெடுநகரினுப் பண்ணகுமணிமுயங்குங் கோட்டுப்
பொன்னெடுங்குன்ற முற்றபெற்றி யென்புகல்வாயென்றார். (ங)

வியனுறுகாந்தந் தன்னில்விரிவுறக் கிளத்தலொன்றே
வியலுமூவறு புராணத்தீற்றுறு பிரமாண்டத்தி
அயலுடையுபரிபா கநவிற்றுகேத்திரகாண்டத்து
முயர்மலைவரலாறெல்லா மோதுமென் றுரைப்பார்மேலோர். (ச)

அருணமாமணிசெய் மோலியாரியர் வறத்தந்தன்னிற்
கருணையங் கடலன்னுனோர்காலவித் தென்னும்வேந்த
னிருநிலமுழுதுந் தந்தையென முறைபுரக்குநாளிற்
பெருகொளிமகப் பேறின்றிப்பேரனு ருற்றுனன்றே. (ரு)

அறிஞாமகப்பேறெய்து மந்நெறிபணித்தீரென்ன
வுறுவர்சொல்வழியால் வேள்வியுயர் தவந்தானமாதி
பெறுமுறைபுரிந்துமைந்தர் பெறப்பெரு தழுங்கித்தேர்ச்சித்
துறைவர்பாலரசபாரஞ் சுமத்தினன் வனத்திற்புக்கான் (சு)

அவனுரோமசனென்றோது மறிஞனைவணங்க வன்னோன்
கவலகி லாது வந்த காரியம் வினவ மைந்த
ரிவணறமெண்ணில்செய்து மெய்திலேனென்ன வெம்மான்
றுவளருங்கயிலைக் கோடுதொழத் தருமகப்பேறென்ன. (எ)

இழுதையேனென் செய்தாலுமெய்துமோ வெந்தைநீயே
தொழும்வகை யளித்தியென்னத் தோமிலானரசைநால

முழுதுடன்காக்கவேவிமொய் யொளிக்கயிலை யெய்திக்
பழுதறுதவங்கனேற்ருன் பரனுமாங் கவன்முன்னுற்ருன். (அ)

கருதியதுரைத்தியென்னக் கனைகடலுலகிலுள்ளா
ரிருமையுமகவுமெய்த விருவகைபொன்னி நாப்பன்
குருமணிக்கயிலைக்கோட்டோர் கோடுறை தரவும்ஞானத்
திருவொடு மிவண்போல்வாசஞ் செய்யவும்வேண்டுமெந்தாய். (கூ)

என்னலுந்திங்கட் கண்ணியிமையவன் காற்றின்வேந்தும்
பன்னகவரசுமேலோர் பகலிகல் விளைப்பரந்நா
ளன்னவர்புரிதுங்கற் பத்தவனியாம் வருதுமென்ன
வின்னறீர்ந்தன்னுட்காறு மிருந்தனன் முனிவனிப்பால். (க0)

மாமலிமார்பன் வேதன்வானவற் கிறைவனேனை
நாமமாதிரத்துச் செல்வர்நகுமிரு சுடர்ப்புத்தேளி
ரேமுறுமகதிவல்லானிமையவர் பிறருமெம்மான்
ஞேமிலாவெள்ளிவெற்பிற் ருெச்கனர் மிக்கதொன்னுள். (கக)

தொக்கவரவரில் வீணைத்துறைவலான் பகுவாய்தோறு
மைக்கறைவிடங் காலஞ்ஞூற்றிரட்டி மாமவுலியானைப்
புக்கதொல்வலியா லீரேழ்புவனமும் பரிக்குமின்னை
யொக்குநர்யாரே யென்னுவுகந்தனன் புகழ்ந்தவாயான். (கஉ)

சேட்டிளங்கதிரை நக்கதிருமணிப்பணிக டோழன்
பூட்டினுமுவகை வொல்லாப்புனிதனின் கிளையைவேணிக்
காட்டினும்புயத்துவேயுங்கலனெனப்பரித்தவாற்ரு
லீட்டிலுன் பெருமைபூண்டாரேவர் முப்புவனத்துள்ளும். (கங)

திவவியாழ்முனிவனிவ்வா றுரைத்தலுஞ் செருக்குமீக்கொள்
பவனனெஞ் சழுக்காறுள்ளிப் பருவிழிசிவந்துவாளா
விவனையேவியந்தாய் மேலோயிவன் முதலெவருமாயா
வுவமைதீருயிர்ப்பு நல்குமொருவனு மிருக்கவென்ருன். (கச)

அதுபொழு தலவைவேந்து மணங்கரா வரசும்வெம்போர்க்
கதுமெனப் பொருவானென்றுங் கருத்துடை யொருத்தன்வல்லே
முதுமதி வல்லசேடன் முன்னருற் றென்னேநின்னை
யிதுபுகன் றிழித்தானுதை யிறைவனென் றினையசொன்னுன். (கரு)

இயங்குவ நிற்பவென்றே யெடுத்தபல் லுயிர்கட்கெல்லா
முயங்குநான் பொதுவனேனு மூற்றுநின் னுடலுக்காவி
நயந்துதான் றருதலின்றி நகுமணிச் சூட்டராவென்
றியங்குமா றெங்ஙனென்று னெறழ்வலி யாலவேந்தே. (கசு)



வரையிடைப் பிணித்தஞான்று மறிகட லிடத்தங்காந்து
புரைவிடங் கொழித்துமுக்கட் புனைவடுக் காணவைத்தான்
மரைமலர்த் திருவின்கேள்வன் மாணெழில் மழுங்கச்செய்தா
னிரைகதிர்க் கடவுளோரை நெருக்குவா னென்றுஞ்சொன்னுன். (கஎ)

கொல்லினுங் கொடியனேழு கோளினுங் கொடியகேண்மை
புல்லினுங் கொடியவற்றுட் போகினுங் கொடியன்மிக்கா
ரல்லினும் பகலினுந்தாம் வையகத் திருந்துதன்பேர்
சொல்லினுங் கொடியனென்று சொல்லினன் செல்வனென்ருன். (கஅ)

பாப்பர சதனைக்கேளாப் படரொரி பொறிப்பப்பாரார்
நாப்புடை வளையானன்று நன்றரோ சுழலுங்காற்றின்
மூப்புடை வலிமற்றென்னு முரணிய ஞாட்பினுற்ருல்
வார்ப்புறத் தெரிப்பன்போர்க்கு வல்லையே வருதியென்ருன். (ககூ)

வருவியென் றுரைத்தலோடு மரைமலர்க் கிழவனன்னுன்
பொருமொலிக் கிறைமுன்போந்து பொறுப்பனு னென்றுநின்னை
யுருவிலி யென்றுந்தீயோ டுறவென்று நெறியொன் றின்றி
வருபவ னென்றுமொன்பான் வாயினும் புகுவாயென்றும். (உ0)

முள்ளிரி முளரிச்செம்மல் மூதுல கடைந்தகங்கை
யொள்ளிழை யுத்தரீக முலடத்துமஞ் சனையென்ருேதும்
வள்ளைவார் குழையைவன்பால் மருவியு மரானூருங்
கள்வனீ யென்றுஞ்சொன்னுன் கட்செவிக் கிறைவனென்ருன். (உக)

வேறு.

சுருதிநூல் முனிவனித்துறையெடுத்தறை தலுஞ்சுடுசினப்பொறி விழிக் கடையினிற் றெறிபடக், கருகிமாதங்க மூதண்டவேதண்டமுங்கணமுடைத் தொகுதியுங்கதிர்களுஞ் சுழல்படப், பெருகுவானிடியுகத் துருவினமாவடுவுறப் பிலம்வெடித்திடவரைக் குலம்வெடித்தலம்வரத், துருவுநாரத னுளத்தளவிலா மகிழ்வரத்தோள்புடைத்தன னெடுங்காலுடைத் தலைவனே. (உஉ)

உலவையந்தலைவனிங்ஙனம் வெகுண்டெழுதல் கண்டோதுமாமுனி யுரைக்கோதிஞ லெரிமணித், தலைகளாயிரமுடைச்சேடனுங்கூடிவெஞ் சமர் விளைத் திடமறுத்த மராத்தலையினிற்,புலன்மணிப் படமெடுத் தரகருக்கிறைவ விப் புனைமணிப் பஃறலைக்குவடுறக்கவியுருத், தலைவளித் தலைவலிக்க கனவெ ற்பினிலுனக்கமர்வலித் திறனிலப்புதைதிறத் திடுகென. (உங)

[illegible] பருவருஞ் சமரதற்கிசைவுறச் சேடனுயிரபணத்தாட காசல மதிற், குறைவறக் கொடுமுடித்திரள்புதைத் திடநெடுங்கோடைவா னவன் விசைத்தாடலாலருகினிற், பிறவரைக்குலமுதற் சருகெனத்திரிதரப் பெருக லைப்புணரிநெட் டலைவிரித்துலகடத், தறுமலர்த் தருமுதற்றருவினம் பொடி படத்தூளியாகி யனகேழுலகுமேலுலகுமே. (உச)

பத்தெனும் பெயருடைத்திறல்வளித் தொகையினிற்பட்டுயிர்ப் பொழிய
மற்றனைவுயிர்ப் புகளெலாங், கொத்துடன்குழுமியத் தடவரைப்புடையினிற்
குவடுசூழ்வரவடித் தவனியீடழியவு, நத்துறும்பொறிபுலத் திடைமனத்தினை
விடா நண்ணுகேவலமகன் றெண்ணுவரம்வெளியினிற், சித்தொடொன்றிய
வுயிர்ப் பத்தியின்றிறனெனச் சேடன்விட்டிலன்மறைத் தாடகக்கிளையையே.

அதுகணத்தமரரிந்திரன் வசுத்தலைவரோடகிலவானவன் மூனைத்திகிரி
வானவன்முதற், பதைபதைத்துறு வளிப்படை யினிற்றடையுகப்படியென
ப்படிபிடிப்பதனை விட்டொழியவே, விதிர்விதிப்புடைவளிக் குறைசெயிற்ப
மூதெனுவிரிதலைப் புவனமுற்றிலு மெடுக்குறுமலைத், தெதிரறப் பொருபணத்
ததிபனைத்துதிதுதித் தெமைமதித் திதுபொறுத்திடு கெனப்பகருவார். (௨௬)

உலகனைத்தையும்விற்றுறு மனுக்களையும் வைத்துறுபடத்தினி லெடுக்
குறுமுனக்கிணையெனப், பலருமொத்தில ரெனிற்சலசலப்புடைய விப்பவன
னெப்படியுனக்கினை பெறக்கடவனே, நிலமிசைப்பொறைபொறுத்தவர் பொ
ற்ப்பவரெனுநிகழுமிச் செயலினலகல் வரைக்குலடெலா, மலர்பணிப்படமு
றப்புதைபுதைத் தவையிலோரணிகுவட்டினை விடுத்திடுவதுத்தமமரோ. (௨௭)

நீவிடுக்கெனமுதற்றே வருற்றனைதலா நீடுயிர்க்கணமெலாமீட்றத் திரித
லா, ஞுய்வினைத் தெளிபொருட்டோயு முற்றறிவினலன்றனன் தன்படத்
தொன்றையங்ஙனவிடக், கோவிடற்றமனியக்கிரியினிற் பலகிளைக்கோதி
லாவெள்ளிவெண்சேகரந் தன்னிலொன், றுவலிற்கடுவளித்தேவிடந் திடவ
ணித்தாய் முதற்கிலை விழுந்ததிலுறுங் கிளையெலாம். (௨௮)

கதிதருந்திரிசிராமலையெறும் பீசுரங்கமலையோக மிடைமருதநாகேசுர
மதிகசிந்துருணிமாநகரமாணிக்க வெற்பாவமாநதிகுடக்கான தண்காழிபொன்
பொதியுமாமிழலையோடெண்ணுபன் னொன்றெனும்புரியிலத் தொகையுடைக்
கிளைவிழப்பெருகுநீர், குதிகொளுஞ்சடையினனருளினிற் குருகினங்கொண்டு
சென்றனபெருந்திண்டிறற் கிளையையே. (௨௯)

## வேறு.

இறைவனருளாலதுகாலத்திகல் வெங்கணங்கள்குரு கினத்தின்
சிறையினிவர்ந்துசெலக் கடவுட்டிருமாமுனி ரோமசனும்வர
நறைமென்மலர்ப் பூம்பொன்னி யிருநதி யிறைப்பண்முத்தமிழின்
றுறைமல்கி [illegible] பூம்புனற் [illegible] தொல்லைநகர்ச் சிறைக்கனவால். (௩0)

இறுத்தகாலை முனிவர்பிரானிருகண்களிப்பப் பகைஞர்வலி
பறித்தவடிவேற்கால வித்தைப்பணிவித்திட மற்றுங்கவனுங்
குறித்தவிமையவரை யளித்தகோதையொடும் வீற்றிருந்தாலங்
கறுத்தமிடற்று னினிதுறையுங் கயிலைக்குவட்டை யெதிர்பணிந்தான். (௩௧)



குழலினுவி கிளைதொகுத்தகொண்டலனையான் மிகப்பரவி
மழலைமொழிமென் கிண்கிணிக்கால் மகப்பேறெய்தி யகமகிழ்ந்து
சுழலும்பொறி போக்கறவெறிந்ததோமின் முனிவனடிபோற்றிப்
பழகுந்துதிசெய்தவ னுவப்பப்பலவாற்றுனு முபசரித்தான். (௩௨)

மதிவான்குவடங்கது காலைமறைந்துநிற்க வன்சுதையாற்
கதிர்வான்சடிலச் சிவகணமுங்கதவெஞ்சிறையங் குருகினமு
முதிர்வானவரும் பல்லுறுப்பின்முகந்தோ றமைததமணித்தசும்பு
விதிநூன்முறையுனினி தமைத்தான்வேலை ஞாலத்தவர்போற்ற. (௩௩)

பசும்பொற்கமலத் தயன்றடத்துப்படிந்து பிரமேசனுக்கெழில்கூர்
அசும்புமணிப்பொற். கலனிலங்கவவிர்பூணுடை யிருநிதியம்
விசும்புமிடை மண்டபமுதல்வெவ்வேறமைவித்திரவி யெனத்
தசும்புமிளிர் மாளிகைநகரஞ்சார்ந்தான் முனியாயிடையிருந்தான். (௩௪)

மற்றுமொரு நான்முகக்கடவுள்வாழ்நாளிறுமோர் பிரளயத்தின்
முற்றுங்குடிலைத் தோணிமிசைமு திருஞானத்திருவினொடுங்
சுற்றுஞ்சடிலத்தனி முதல்வன்சொன்ன கட்வுட்கொழுங்குவட்டி
ஆற்றங்கிருந்து முதுநீத்தமொடுங் கவுளத்தினினி துன்னி. (௩௫)

அடவேற்றரசுக் கருணைக்கமளிப்பவதுபேருருக் கொண்டு
கடைவாய்நாவிற் றடவந்துகடைநீர்நோக்கி யுரப்புதலு
முடனேகரைக் கண்டங்கியபின்னொரு மூவரைத்தோள்வள மிடமு
னிடனுல்வருவித்தவர்படி கவிலிங்கத்தருச்சித்தனர் போற்ற. (௩௬)

போற்றுமவர்முன் சிவஞானம்புகலுங்குரவன் படைத்தளித்து
மாற்றும்வரங்கள் வரன்முறையே வழங்கவனையாரவை புரிந்தார்
சேற்றுவயற்காழியி னமர்ந்ததெய்வக்குவட்டைக் கயிலையைப்போற்
றீற்றுமதிவேணிய னிருந்தான்கண்டைத் தடங்கட்கிள்ளையொடும். (௩௭)

## வேறு.

தலத்தவர் சிதைத்தொழ சார்ந்துமென்றுபின்
செலப்பெறு திருந்தவர் தீயநெஞ்சர்தென்
புலத்தவர் சாபமும்பொறுவர் போற்றுவார்க்
கிலைப்பொழு தொழுக்கெனு நியமமென்பவே. (௩௮)

ஒழுகொளிப் பொலன்குவட்டுச் சிமால்வரைக்
கழுமலத்திருத்த லாற்கடல்விளாகமே
லழல்வினையந் தணீரன்றுதொட்டதிற்
கெழிலுலாங் கிரிபுரமென்று மோர்பெயர். (௩௯)

இணர்ப்பசுங் கொன்றையானிறைவிக் கின்னருள்
புணர்த்தலினு மாபதிபுரமென்றே மதிற்
கணத்தனைக் கணத்தளவிருப்பிற் காலனும்
பிணக்குறா னகலும்வெம்பிர மகத்தியே. (௪0)

தேசொடு விளங்கியதெய்வக் குன்றிதை
யோசனை யகனிலத்துவந்து கண்டுளோர்
காசினித் தலமெலாங் கண்டமெய்ப்பல
னாசறவருவி மேஃடைவர் முத்தியே. (௪௧)

காளிகேசுரன் பிரமீசன்கஞ்சுக
னீளிரும்பார சரகிமலன் றோணிவா
ழாளுடையொருவ னென்றரனையுள்ளுவார்
மூளுமைம்பாதக முருக்கியுய்வரே. (௪௨)

புள்ளரு நறும்பொழிற் புகலிவாழுமிவ்
வள்ளல்பே ரைந்தையு மனக்கொடெண்ணினோர்
வெள்ளநீ ரலகைதீவேங்கை வெந்திடர்
கள்வராறலைப் பிவைகடப்பர் திண்ணமே. (௪௩)

தொடுத்தபே ரெயில்கிளர்தொல்லைக் கர்ழியை
யடுத்தடுத் திறைஞ்சினோரனக ராகிவெங்
கடுத்திகழ் மிடற்றினான் கயிலையெய்திமெய்
நடுக்குறு நடுவனார்நண்ண லாமையால். (௪௪)

அணங் குறுமறலி காமாதியாயவெங்
குணங்களைத் தூதராய்க் குறித்தவ்வூருளோ
ரிணங்குசெய் நிலத்துளோ ரெந்தைகாழியை
வணங்குறு திடர்செயவகுத்த பான்மையால். (௪௫)

முன்னருந்தீவினை முயன்றமூவர்தா
மிந்நகர் தொழுவெளிதெய்தற் பாலரோ
பன்னருந்தவம் பலபண்டுநோற்றுள
நன்னர்நெஞ் சுடையரே நணுகும்பான்மையார். (௪௬)

தாவரும் புலப்பகை தணர்ந்தவித்தகர்க்
கோவருமின்பவீ டுதவுவானிதின்
மூவடி வெடுத்தது முற்றுமின்னக
ராவலோமற்றவ னருளின் பெற்றியோ. (௪௭)

ஆதலான் முனிவிர்கா ளந்தண்காழியை
யோதலாற்றகைத் தெனவுணரற்பாலதோ



மீதலாமியம்பவு மினிதுகேட்கவு
மாதவமெய்தினும் வாழ்வுமெய்தினேம். (௪௮)

இனைய மான்மியந்தனை யெழுதுமேட்டொரு
மனைவயி னிருக்கினம் மனைக்கண்வாழுநர்
வினையமிக் கறிவனால் விரிவெலாமுணர்
முனைவராகுவ ரவர்முகங் கண்டாருமே. (௪௯)

மடனுறு மகந்தைவேரறிந்தமா மறைக்
கடவுளர் முகத்தினிக் காதைகேட்டுளோர்க்
கிடரறு நினைத்தவையெய்தும் வல்வினைத்
தொடரறு மருமறைத் துணிவிதாமரோ. (௫0)

கைதவங் கடந்துளீர் கடவுண்மால்வரை
யெய்திய வியப்பமீதென்று மும்மலத்
தொய்யலை யொழுக்கினுற்றுடைத்த சூதனார்
தெய்வமா முனிவரன் றெறிந்துகூறினான். (௫௧)

மலைவரவுவத்தியாயம் முற்றும்.

ஆக. திருவிருத்தம். ௧0௯௫.

# ஆபதுத்தாரணவத்தியாயம்.

அன்னந்தட மன்னும்பணையணி காழிபுரத்திற்
பொன்னங் கிரிமுன்னஞ் செறிபொருளீதென முனிவ
னின்னுந் திறல்வடுகேசன திகல் பேசியநெறியே
யென்னெஞ் சினிலியலுந்திறனினி யோதுவனினியே. (௧)

வண்டாடுநறுங் கொன்றை மணக்குஞ்சடைமுதல்வன்
றண்டாமரை யடிநல் கியதாவாவலி தன்னாற்
பண்டாட்கவுல கத்தவர்பதம் வவ்வியமதுகைத்
திண்டோளிரணியனென் றொருதேவாந்தகன்மேனான். (௨)

முகிலொன்றுநிறத் தாரொடுமுத்தேவர் பெரும்போர்
நிகழெங்கணு மேருதுதன் னெடுநாமம்வளர்ப்போ
னகிலம்படுமிவ் வண்டமுமல்லாது புறஞ்சூழ்
பகிரண்ட முமிவனானை பரிக்கும் படியாள்வான் (௩)

பொருப்பெட்டையு மருப்புக்கிலர் பொருப்பெட்டிஞெடிப்பான்
நெருப்பைக்கறை விழிக்கட்சின நெருப்பிட்டு றவவிப்பா
ணிருப்புப்பிணை தடக்கைத் தலத்தெடுத்துப் பிலத்தினில்வாழ்
சருப்பத்தையு மரைக்கச்சென்த் தரிப்பானுலகரிப்பான். (௪)

காற்றும் படுபுனலுஞ் சுடுகலனும் பொருவிலனுந்
தோற்றுந்தலைவரை வென்றவர்தொழில் முற்றுமிழைப்பா
னேற்றுஞ் சுடரிருவோர் மணியெழிலூர் தியினூர்வான்
கூற்றுங் குலைவுறவாருயிர் கொல்வானிகல் வெல்வான். (௫)

மூலக்கட னீராடியுமுதுபாதலமகளி
ரோலக்கமடுத்தும் பகலுவனைத் தலமதுபோ
மேலத்தருநிழல் வைகியுமிரவிற் சதுமுகன்வாழ்
கோலப்பசியுற்றுந் துயில்கூர்வானிடர் தீர்வான். (௬)

மொய்யார்கலி கடையப்புகுமுழு மத்தவனேதுங்
கையார்கலதயா மென்பதுகதையோ சதிருலவும்
பொய்யோடொளி யிருமால்வரை பெருமால்வரையனையான்
மையாடியநாளிற் புனைமகரக்குழை யெனவே. (௭)

ஏமத்துண வமரர்க்கிடு மெழுதாமறையவர்செய்
யோமத்தவி யெல்லாமவருருவாகி மடுத்தான்
வாமப்பழை மறைநூல்வழிவல்லார் பொழுதெல்லா
நாமத்திரணி யாயநமநமவென்றிட வைத்தான். (௮)

பெண்ணிற் புகலாணிற்பெருகிடியிற் சுடுபடையா
மெண்ணிற் பலபுகலிற் கறையிருளிற் செறிமனையுட்
கண்ணிற் பிறவெளியிற் சுடர்கனலிற்படர் புனலின்
மண்ணிற் பிறபொருளின்னுயிர் மாளானடுதோளான். (௯)

பாரார்புவி மேலாரிருள்படு பாதலம்வைப்பா
ராராருமிவ் வசுரன்றுணையடி யேந்தியமுடியார்
நாராயணவெனு மன்புடைநன்மைந்தனை யல்லாற்
பாராயணமது செய்வதுபதகன்கொடு நாமம். (௧௦)

இவ்வாறுலகீ ரேழுமிடுக்கண்செய் வலத்தால்
வெவ்வாளவுணன் பின்னருமிடலெய்திய மடல்சூழ்
செவ்வாரிசமுகை கிண்டியசிறைவண்டிசை மிரலுங்
கைவார்திரை நிரைபொன்கொழி காவேரியின் வடபால். (௧௧)

வினைவேரற நினைவார் பணிவெண்காடதன் வடமேற்
புனைசாரினி லொருதோணிபுரக் கீழ்திசையாங்கண்



நனைவார் மலர்விரைமென்சினை நகுவில்வவனத்தே
தனைநேர்குரு வருளாலொருதனி வேள்விதொடுத்தான். (௧௨)

ஓராயிரவெள்ளப் புடையொடுசூழ்தர நடுவே
சாராவொருகொடு வேள்விசமைக்கின்றதை நிருதன்
சூரால்வடவெற்பூடு துணுக்கப்படு விண்ணோர்
பேராழியி னுன்முன்புபுகன்றுவி கரைந்தான். (௧௩)

மஞ்சேயொளி மணிமேனியன்வா னீரிணிமேனீ
ரஞ்சீரென முதுபொன்வரை யதன்மேல்வரு புயல்போற்
செஞ்சேவல் வயப்புள்ளிறைதிணி தோண்மிசையிவரா
வெஞ்சாதிரணியன் வேள்விசெயெல்லைக் கணடைந்தான். (௧௪)

அற்றத்தினி லுலகஞ்சுறவலை யஞ்சுறவடபா
லொற்றைக்கிரி வெடிபட்டுகவுரு முக்கணமுதிரத்
தெற்றித்தனி யெட்டிற்கிரிதிசைமாறிட வசைதீர்
கொற்றச்சிலை வரிநாணொலி கொண்டானுலகுண்டான். (௧௫)

உலகுண்டவன் வனையுஞ்சிலை யொளிருங்குண வொலியாற்
கலகம்பெரு கொலியென்றடு கனகன்படை யுடையப்
பலரும்பல தலைசிந்தியபடி கண்டுபின்னெடியோ
னலருங்கையி லொருசங்கினையார்த்தானுடல் வேர்த்தான். (௧௬)

இரிந்தார்சிலர் பொடிந்தார்சில ரிடிந்தார்சில ரிகல்போய்ப்
பரிந்தார்சிலர் முடிந்தார்சிலர் படிந்தார்சிலர் துளபப்
பெருந்தாரவன் விரைந்தூதிய பிறங்கோர்வளை வொலியால்
முரிந்தார் சிலர்கன கன்புறமுனைந்தார் படையெல்லாம். (௧௭)

ஊழித்தலை யெழுமார்கலி யொக்கும் படையுக்கிப்
பாழித்தலைமத வெங்கரி பரிதேர் முதலிரியக்
கேள்வித் தலைவல்லார் நிலைகிழியக் கதழெரிகால்
வேள்வித் தலையழி குற்றபின் வெளிவந்தனனிருதன். (௧௮)

கடலோடெதிர் கடலும் படுகாரோ டெதிர்காருந்
தடமால்வரை யொன்றோடொரு தடமால்வரை தானு
முடல் போரது செயுமாறென வோராழிநெடுங்கைச்
சுடரோனெ திரடலானமர் தொடுத்தான் முரணடுத்தான். (௧௯)

வெடிவா யொலிதோள் கொட்டியவிறலாரொலி சிலையின்
றுடிவாயொலி யடுவாளிகளொடு பேரொலி விசையக்
கொடிவாயொலி யிருவோரிகல் கொடுமே ரொலிகளினு
லடிமாதிர மதயானைகள் செவிடேறினவவையே. (௨௦)

மாயன் சிலைபொழியுங் கணையவுணன் கணைமாற்றத்
தீயின் சிலைபொழியுங் கணைதிருமால் கணைநுகரப்
போயண்டமு நிலனும்படர்திசையும் புகை புகையக்
காயுங்கடுவலி வெஞ்சமர் கலந்தாரெதிர் மலைந்தார். (௨௧)

அழன்றார் கணையரிந்தார் புறமகன்றாரெதிர் புகுந்தார்
கழன்றார் விழிசிவந்தாரிரு கறங்காமென வொருங்கே
சுழன்றா ரதிவிசைவாளிக ளேர்த்தாருடல் வேர்த்தா
ருழன்றா ரிருவரும் வெஞ்சமரோ ராயிரவருடம். (௨௨)

அவ்வாயிர வருடஞ்செலவ மராடியு மழியா
விவ்வாளவுணனை வெல்லுவ தினியோர் திறமென்னா
மைவான் வழிமுதல்வன் புகவதுகண்டு வலத்தால்
வெவ்வாயவுணனு மன்றமர் வென்றேனென வென்றே. (௨௩)

தனியோதிய மகனோடொரு தனையாவிது கண்டா
யினியேனுமென் னொருபோதனை யிசையென்றலும் வசைதீர்
கனிவாய் மகனுலகுக்கொருகத்தா வவனைத்தா
னனிநாரணனே யென்பவனுனென்றிட லானான். (௨௪)

வேறு.

என்றலும் வாளவுணன்வெகுண்டெயிறதுக்கி விழிசிவக்க விமைகடையத்
தன்றுபுயந் துடிப்பநிலைகுலைகுலைய வலம்வந்துசுரர்க ளேங்க
வன்றுசினத் திடித்தெழுந்துநின் கடவுளெங்கணுள னவன்யாரென்ன
வென்றுமுளன் றூரும்பிடத்துந் தூணிடத்துமாயனெனவிசைந்தான் மைந்தன்.

அளந்தவனுண்டறைதலொடுமொருகோடி யசனியிடியறைந்தா லென்னத், துளங்கொளிய மணிகடகத்தடக்கை யெடுத்தறைந்தவன்மூன்றுண்ணென்றோதை, கிளர்ந்தது போரண்டமுடிகிழிந்ததுதீயவ னாரம்போற்கீறீத் தூணம், பிளந்ததுமானிட மடங்கல்பிறந்ததுவானவர்க்குநலம்பிறக்கமாதோ.

அண்டர்கோளகை யதிர்த்திசையதிர்ப்புகையுமிழக் கண்ணரிமாவாகிச்
சண்டமாருதக்கரத்தால் மடித்தலமிட்டிரங்கீறித் தாழிப்பேழ்வாய்
மண்டவாரிழிகுருதி மடுத்துமடுத்தவுண னுயிர்மடுத்தான் வாயாற்
கொண்டல்பொன்மணி நிறத்துக்கோகனகம் போலலர்ந்தகுளிர்பூங்கண்ணான்.

வானென்றுமயன் முதலாயெறும் புகடையுயிரிலொன்றான்மடியான்மேனி
தானொன்று முகமொன்று மெழுந்துகடைத் தலைநாப்பண்டகுமாலைக்க
ணானென்று முதிர மரியருந்தியுயிர் கவரமடிவுற்றபெற்றி
நானென்று நினைக்கவுறுந் தெய்வமொன்று நினைத்ததென்று நயமாமாதோ. ()



சுடற்கணகத்துகள் சிதறவடற் கனகனுடற்குருதிச் சுவைகண்டாங்கண்
மிடற்குருதிக்களியெடுத்து விண்ணையுமண்ணையுநலிந்து வெறியாட்டாட
வடக்கருமானிடமடங் கலருந்துயராற்காளிபுரத் தணைந்துவேதன்
முடைத்தலை கொய்வடுகேசனிடத்தமரர் முடிசாய்த்து முறையிட்டாரால். ()

ஆயிடையெம் மிறையருளாலடல் வீரபத்திரனோ ரட்டபாதத்
தேயெனுமாத்திரையின் முரட்சரபவுருவெடுத்திகல் மானிடத்துச் செங்கட்
சீயமறப்புடைத்து தறிமுடிதகர்த்து முன்னுண்டசெந்நீரெல்லாம்
வாயினிடைமடுத்தகல மறிந்ததுமானிடமடங்கல் மறிந்தகாலை. (௩0)

அள்ளிதழ்த்தாமரைப் பொகுட்டினரசிருக்குந் திருமடமானது கண்டோடி
முள்ளெயிற்றுப் பணிமாலைமுயங்கிய தோள்வடுகனடிமுளரிசூடி
யெள்ளுலவு மெண்ணெயென வெவ்வுயிர்க்கு முயிராயவிறைவகண்பார்த்
தொள்ளிழைமங்கல நெடுநாளோங்கவெனக் கீங்கருளெம்முடையாயென்ன.

பொன்னொழுகு கற்பகப்பூங்கொம்பரெனத் தென்பிரம புரத்துமேல்பால்
மின்னொழுகு முக்கோலமட்டெல்லையினிற் கடுக்கைமலர் விரிபூங்கானில்
மன்னிரவித்தடத்தயலா திருபருவமருந்தவஞ் செய்மலர்மான்காணத்
தன்னிகரில் வடிவோடும் வடுகேசன் பேருவகை தழைப்பச்சென்றான். (௩௨)

இருக்கோலஞ் செயுமிருதாயெழிற் கோலமலரின் வீழ்ந்திறைஞ்சச்செய்யா
ளருட்கோலமுடைய பிரானணிக்கோலமாலை முன்போலளித்தான் மேனாட்
டிருக்கோலம் புனைதலினாற்றிருக் கோலக்காவெனவித் தெண்ணீர்ஞாலத்
துருக்கோலந்துடைப்பவர் தாமெக்காலுந் தொழுமூரொன்றுளதுமாதோ. ()

அவ்வழியம்பெருமானையடலாழித் தடங்கரத்தானலர்கடுவேக்
கைவனசமுகிழ்த் திருகண்டுளிதூங்க வொளிதூங்குங் கழற்றாள்போற்றி
யிவ்வடியேன்மடமகற்றி யெடுத்தாண்ட பெருங்கருணையிறைவாபோற்றி
தெவ்வடுபோரிலைச் சூலந்திரித்துலகம் பரித்தருளுஞ் செல்வாபோற்றி. (௩௪)

நிரையிதழ்த்தாமரையானும் யானுநெடுமொழிபேசி நிற்பவேத
னரைமுடி கொய்திகலறுத் தென்னிரைமணிமாநகர்போந்து நகுங்கைவேலால்
வரையகலந்துறந் தெனதுவடிகுருதிமுடிநிறைய மடுத்தவாறே
தரையினுமானிட மடங்கலுருவிடந்து குருதியுண்டசரப்போற்றி. (௩௫)

முன்னுமெனை மறித்தாண்ட மூதருளால் முடங்குளைமான் முரணைவென்று
மின்னுமெனக் கிரங்கினையேலிதனுரி நின்றிருமேனிக்கியையவேண்டு
மன்னுநினத்தின்னருளைவழியடியேன் கடைப்பிடித்துவாழவேண்டும்
பொன்னுலவுமதிட்காழிப்புண்ணியனேயென நெடியோன்போற்றிவீழ்ந்தான்.

அருமணிச்சுட்டரவணை யிலறிதுயில்கூர் பவனிவ்வாறறையவேத
னொருமுடிகொய் மணிநகத்தால் நரமடங்கலடிமுடிதொட்டுரித்துமீக்கொண்

டிருன்முடியவெழும்பருதியென வொளிருமலாக் கணிந்தானிமைக்குங்கோட்
டுத், திருமுடியில் வீற்றிருந்து கருமுடியவினைகடியுந் தேவதேவன். (கஎ)

கோபத்துசரமடங்கல் விளைத்ததனி தடைத்தலினாற் குறையாதென்று
மாபதுத்தாரணனென்றுயினனிவ்விருங் கதைதானருட்டதீசி
மாபத்தியொடு மருகற்பழித்த கொடுந்தக்கன் மனமம்மர்நீங்கத்
தீபத்தின்விரித்தவனுக்கருமறையின் றெளிவிதனைத் தெரித்தான்மேனாள். ()

சேணிலத்தில் வடுகேசன்றிருமலையை வணங்குனருஞ் செம்பொன்வாய்ந்த
நீணிலத்தார்பரவமுத்தி நெடுநிலத்தில் வீற்றிருப்பார் நிகழுமன்பு
பூணுமரும்புகர்வாரத்தழ கொழுசுப்புழுகவன் மேற்புனைந்துளோர்க
ளோணிலகுநிலமனைத்துந் தமதடியிற் படுத்தியரசியற்றுவாரே. (ககூ)

ஆரத்தே தொழுகுனர்க்குமுத்திகொலோ வெனவுயிர்கள் சேராவண்ண
மாரத்தாழ் திருமார்பனரிவையொடும் வில்வவனத்தணைந்து மேல்பால்
நீரத்தாழ் வயற்காழி நெடுவரையைப்பணிந்துருகி நின்றுனிந்தச்
சீரைத்தானுறலாலே திருநகரியென்றொருபேர் சிறந்ததவ்வூர். (உ0)

வேறுமளப்பில்பெருமை வினவவுமோதவு முடியாவியப்பாலந்தண்
சேறுபடுவயற் காழித்திருமலைவாழ் மலைக்கொழுந்தின் றிறனீதென்று
றுமிட்டாந்துமகன் ருதியிடையீறிலிதாளகத்துட்பூண்டு
கூறுமறைத்துறையறிந்த சூரவனடிக்கடிமைபுகுங் குணக்குன்றன்னான். (உக)

## ஆபதுத்தாரணவத்தியாயம் முற்றும்.

ஆக. திருவிருத்தம். கஎசு.

---

# கழுமலநதிவத்தியாயம்.

தாற்றிளங்கமுகின் சூற்பழுங்கழுத்துத்தமனியப் பாளைவாய்கிழியச்
சேற்றெழுவாளையேற் றெழுங்காழித் திருமலைக்கொழுந்தினை தியற்கை
போற்றியமுனிவன் கழுமலமெனும்பேர்ப் புண்ணியத்தீம்புனற் பொன்னி
யாற்றினதியலுஞ் சாற்றுவனென்றுங்கறிந்த வாறொருவழியறைவாம். (க)

கனைத்துவண்டி மிருமலர்த்தடஞ்சினை யகற்பகாடு காவலன்
முனைக்கடுந்தானை துளிப்பரும்வலத்து மூரிவெஞ்சூரனல் மேனாள்
வனத்துளபொருளுந் தனித்தனிதுறந்து மாற்றலனுகிவேற்றடங்கண்[ந்தான்.
மனைப்பொலன் கொடியோடருட்பெருஞ்சூரவன்வாய்மையான்மண்ணகத்திழி



கரைக்குறும்பெறிந்த திரைத்தடந்தோறுங் கதிர்வளைவயிறுளைந்தீன்ற
நிரைக்கொழுந்தாளநெடுநிலாவிரிக்கு நீள்வயல்விளிம்புசூழ் வேணு
புரத்திலானுடையான்றிருந்தகுமலர்த்தாள்போற்றினனிருப்பநெய்த்திருணட
விரைக்கருங் கூந்தற் சசிழுலைவியக்கவிருப்பினுற் றருச்ருவாளவுணன். (௩)

காற்றினுங்கொடிய கடுநடைத் தாதச [illegible] கூய்மலருலகின்
மாற்றவர்கடந்தல [illegible] ஜுவன்மனையிளங்கொடி தனைவவ்வி
வேற்றுவேறறண்டமெவற்றினுந் தருவிவிரைந்தளிரதம்மென விடுப்பக்
கூற்றினுங்கொடியார் விசிம்பிடைதேடிக் குரைகடல்வைப்பினிற் குதித்தார்.

நீந்தொடைமகதித் திருமுனியனையார்செய்தியை வெய்துறக்கதங்கா
லேந்துகோட்டயிராவதப் பெரும்பாகனிருக்கை புக்கியம்பலும்வெருவிச்
சாந்தணிந்தோங்குந் தமணியத்தகும்பிற்றங்கிய தடமுலைச்சசியோ
டேய்ந்துருமாறித் திரளுரும்பசுங்கண்ணுறுகழை யுருவெடுத்துறைநாள். (ரு)

காலையும்பகலுங் கங்குலும்புணிவான்காழி காவலன்பணிக்காகச்
சோலையுந்துணர்ப்பூந் துடவையும்பெறுவான்றுளியழ முனியடைந்தமையான்
மாலைவெள்ளருவி வரைச்சிறகறிந்தவானவன் படருறுமேல்வை
மேலைவானின்று மண்ணகத்திழிந்த வீணையங்கிழவனென் றுரைப்பான். (சு)

மஙிருங்குடுமி விந்தமொன்றுறுமான் மணிவரையள்ளிருள் விழுங்கு
மேன்றுங்கதிர்சூ ழாடகக்குடுமிமேருவோடிகலியோ ராழி
யானுமேழ்பரிமானூர்தி வானவனையந்தரமுகட்டடி யியங்கா
தோலுறந்தடுப்பனென நிவந்தகல்வானுறுவளி யடைந்ததையன்றே. (எ)

பொருகடலுடுத்த விரிநிலயனைத்தும் புதையிருள் விழுங்குபுபுலர
தருமறைக் கிழவருங்கடனிறுத்தற் கலரியோனின்மையால்யாருந்
தெருமரலுறுநாள் விரிநிலாவெறிக்குஞ் சேயுயர்வெள்ளியங்கிரிக்கண்
முரிதிரைகுடித்தமுனிவரனுணர்ந்து முக்கணற்கக்கண மொழிந்தான். (அ)

கருதலர் புரந்தாளெழத்தனி நகைத்தகண்ணுதற் சாமியா[illegible]
கருவரையடக்குமூரனுமேழ் நதிகளவற் [illegible] யபான்னியுமருளித்
தெரிதமிழ்முனியை விடுப்பமற் [illegible] ஞ் சிரகமேற்றீம் புனலேந்தி
விரிகதிக்க [illegible] முத்துயர்ந் தவிந்தமால்வரையுறவருங்கால். (கூ)

அத்தலைமாயாபுரத்தில் வெம்முனைசாலருந் திறற்கிரவுஞ்சனெனுமோர்
மத்தனுந்தருவன்மண்ணொடு விண்ணுமறைத்துமால் வரையெனநிவப்ப
வுத்தமமுனிவன் பற்பலவழிபுக்குழன்றுமன்னெறி பெறுதொருசார்
பித்தரினிருப்பக்கதமுறையிலிற்றும் பெருமழைபுயத்தனன் கொடியான். (க0)

நிலம்பக விடித்துவலஞ் சுழண்றெழுந்த நீனிறமுகில்பொழி மாயை
யலங்கெட றுனித்தோனேதியி னுனைர்ந்தாங்கவுணனை யருவரையுருவாய்த்

தலந்தனிற் கிடத்தினின்னையுங்கேண்மைத் தாருகன்றன்னையும் வேலா
விலங்குபூண் முருகனெறிய நீர்முடிதிரெனவெகுண்டுரைத் தயலகன்முன். ()

பாசடைப்பது ...ள்ளியிற்பவனப் பரட்டடிச்சூட்டன பரப்பை
யாசறுத்தரங்கத் தடங்கையாலாட்டி யளிபுனற்றவனை தாலாட்ட
வாசமெல்லிலஞ்சித் து... ...ஞ்செவிலி மகவெனவளர்க்குநீர் வேலிக்
காசிமாநகரை யிறைஞ்சிவெய்யவனைக்க... ...ல்வ...யவண்டுலைந்தான். ()

ஆண்டுநின்றறவோன் தென்றிசைப்போறயர்வுழி யள்ளிருள்பரப்புந்
சேண்டொடுகுடுமி வரைத்தடந்துருவித் தெறிவிலனிதுகொலோ கதிரோ...
றாண்டுதேர்மறித்த வரையெனக்கருதித் தாங்குவெள்ளருவிதாழ் முகட்டின்
மாண்டகுகரத்தா னழுத்தமண்ணொடுபோய் மறைந்தது மாலிருங்குன்றம். ()

மண்ணகத்தழுங்கும் வரைதனக்கிரங்கி மறித்திவண்வந்துனக் களிப்பா
மெண்ணலையெனத் தென்றிசைபடர்நெறிக் கணிகலுடையசமுகி யீன்ற
பண்ணவர்படிவத் தவுணர்வில்வலன்வாதவியாம் பதகராலமைத்த
வொண்ணறுங் கருணைவாசநெய்யடிசி லுண்டவராவியு முண்டான். (கச)

உண்டவனிருண்ட கொண்டல்கண்படுக்கு மோங்கல்சூழ்கொங்குநாட் டொருசா, ரண்டநாயகன் றுளருச்சனையாற்றி யரும்பெறற்பொன்னிமா நதிப்பொற், குண்டிகைதனை வைத்திருந்தனனன்னீர்குணருமா ணைங்கக் கன்றை, வண்டடங்கரத்தான் வணங்குகவென்று மறைமுனியுரைப்ப ...ன வர்கோன். (கரு)

முருகுவாய்மடுத்து வரியளிமிழற்றுமொய்மல ரிலஞ்சிசூழ்காழித்
திருவனீள்குடுமித் தென்றிசைச்சிகரித் திருக்கடைவாயிலி னிருத்திப்
பெருகுநீரனைய நிறைகடாங்கவிழ்க்கும் பிறைமருப்பொருதனிக் களிற்றைத்
தருவுலாமலர் தூய்வரன்முறைபரவித் தாட்டுணைபழிச்சி நின்றவன்முன். (கசு)

வீங்குகோட்டிமை யப்பனிவரையுயிர்த்தமெல்லியல் சுணங்கணிக்கருங்கட்
கோ...மாயமுதமுலைப் பிடியீன்றகுஞ்சரக்கன்றெதிர் தோன்ற
வீங்கெனையளப... ...ந்தருடோன்ற லென்னுயிராதி மன்னுயிர்கள்
தாங்குவான்மலையமுனி கமண்டல... ...ருகெனச் சதமகன்றாழ்ந்தான். (கஎ)

தாழ்தலுமஞ்சேலென்றொரு வல்வாய்த்தடஞ்சிறை... ...ருவாயர்ந்து
வீழ்பனிமுயங்கு கொங்குநாட்டொருசார் விரிதமிழ்திருமுனிக் காகத் [போற்
தாழ்புனல்விளிம்பி னிவந்துமாசெறிந்தோ னங்கைகள்புடைப்ப வஞ்சினன்
கீழ்திசைகாட்டிச் சிரகநீர்கவிழ்த்துக் கிளந்தனன் றொடர்ந்ததுபொன்னி. ()

வேறு.

மீதுறமலர்கெழு செயலையுந்தருவும் விசையொடுதொடுதிசை திசைசிதறப்
பூதறவுடல்கிழி குடரெனவிடமுமிழ் பொறிமணியரவுக ணெளிநெளியக்



காதுறுமடுபுலி கரடிகளிடையிடைகடமைகளொடு மிருகரைபுரள
வாதுவர்விடுபரி நிரையொருதிரையொடு வருமொருகழுமல முதுநதியே. (ககூ)

மீனிரைவிழியொடு நுரையணிதுகிலொடு மிளிரொளிவளையொடு மிளிர்தரளத்
தூநிறநகையொடு கொடிமறுகிடையொடு சுழிபடுசுழியொடு நிகழுமறற்
பூநிறைகுழலொடு குமிழ்கொடுமுலையொடு புதுமலர்முகமொடு முதுதிரைநீர்
மாநிலமகள்பெறு மகளெனவெழில்பெற வருமொருகழுமலமுது நதியே. (உ0)

ஆறலையெயினர்கள் வரிசிலையெறிகவணுகணைபடு சிறுகுடிவிடறித்
தூறியசிறுதலை முசுவொடுவெசிகலைதுறுமிய முளிசினைமரம் விசறி
யேறொடுமுருகமில் களிறதுபிளிறிடவெறிதிரை நிரையிருகரைபொருத
மாறடுவெளவன திருநிலமலர்தரவருமொரு கழுமலமுதுநதியே. (உக)

பண்டுளபரிகரை விரிதிடரிடுவெதுபடுதிடர்களையவ லிடுவெதுநீள், விண்டல மதிபுனை முதலுறைபதிதொறு விரிவளைமணிமலர் பொழிலதுகு, ழெண்டி சைதொறு முழவிரவலர்கொடை தருமிறைவனையெதிர்கொடு புகழ்வதெனு, வண்டிரைமலர்விரி குரைதிரைநிரையொடு வருமொருகழுமலமுதுநதியே. ()

வீசுருகவரிய மொளியுமிழ்மணிகளும் விடுமெதகரிகளு மடுகொடியு
மூசியசிலைகளும் வகைபடுகணைகளு முரிதிரைநிரைமிசைகொடு வரலா
லாசறுகுடபுலவ ரசரையிகல்பொருதள வறுபொருள்கவர்வளவர் பிரான்
மாசறுதெறுபடை வயவரைநிகரெனவருமொரு கழுமலமுதுநதியே. (உங)

எழுறுநடைமலியன மிசைபுனைதலினிசைமறை விரிதிசைமுக முறலிற்
றுமரைவிரவலி னவனியைவிதிமுறை தருதலின்மணிவரை வழிவாவி
ஞமலிகொடியொடு தழுவலின்முழுதுணரய னுடையளிவன ரயனெனநீள்
மாமலிநிலமகள் வனமுலைவடமெனவருமொரு கழுமலமுதுநதியே. (உச)

தானமுமருமறை நெறிகளுமுயர்சிவதருமமும் விழுமியகருமமு மெய்ஞ்
ஞானமுநவையறு கலைகளுமொருகுடை நரபதிமுறைசெயு மனுநெறியு
மூனமிலன முதலினமலிபொருள்களு மொருமுதலடியவர் திருவடிசொல்
மானமுமலர்தலை யுலகினினிலைபெற வருமொருகழுமல முதுநதியே. (உரு)

வேறு.

ஆழியபொருளார்ப் பொழுகலாறுடைத்தா யைந்திணைநெறியளாயகன்று
சூழிருந்துறைத்தாய் நாற்பொருள்பயக்குந் தொன்னெறித்தாகிநல் லுரவோர்
வாழிசால்கவி போற்கழுமலமெனும்பேர் மணிநதியணிகிளர் மாடக்
காழிமாநகர்க்கண் ணணைந்ததுமுனியுங் காரியைக்கடிவனென் றணைந்தான்.

அணைந்தவன்விரல்க ளொருங்குறமுறுக்கியருளுடைப் பிள்ளைமேற்றுக்கப்
பிணங்கினன்வரலு மொருதனிக்கோட்டுப் பிள்ளையாய்த்துள்ளலர்மழைதூய்க்

கணங்களேத்தெடுப்பப் புகர்முகச்சிறுகட் கடம்பொழிநனைகவுட் களிற்றி
னிணங்கியநிலை கண்டலமரலுற்றவேதமில் மாதவனிசைப்பான். (உஎ)

குலமறைபுகன்ற கடவுளரெவர்க்குங் குழகநின்னடித்துணை போற்றி
யலதொருசெயலு முற்றுருவதனாலாண்டகை நின்னையீண்டறியா
துலகுறுகொடியேன் றிருகாமுறுக்கியோங்கிய குட்டெனக்காகக் [லும்.
கலைவலாவெளியேன் பிழைத்தமைபொறுத்திக் கணகணேபோற்றியென்றிட

வேதமில்குணத்தாய் மகபதிக்காகவிருமுது குரவர்தம் பணியால்
மோதலக்குடிகை கவிழ்த்தனமெம்மான் முன்னருற்றிடினிது தெரிப்பன்
போதருக்கெனக் கொண்டமலனையறியும் பொழுதுநோதய னிருப்ப
மாதவனொருதோட் டிருசெவிமலையை வணங்கினனதிபெற விரந்தான்.(உகூ)

இரந்துழியனையான் கரம்படுகோகத்தெறுழ்வலித் தடக்கையாற் றுளிநீர்
வரந்தருமொரு தோட்டிறைமகனளிப்ப வயங்குபொற்கரகமேல் முன்போற்
பரந்தபின்காழி புரந்தனிலென்பேர்படைத்துல கிடரெலாந்துடைத்துப்
புரந்திடென்றுழிய வாதியைங்கரன்பேர் புண்ர்ந்ததுகழுமலப் பொன்னி. ()

புணர்ந்தபூம் பொன்னியணங்குமாதவத்துப் பொருப்புறழ்முனிவர னின்றுற்
கணங்குழைபாகன் கயிலைமால்வரைபோற் காழிமாநகரிலுங் கலந்தே
னுணங்குபல்லுயிர்கட் குன்னருள்வலியா லுலைவறுமேலைவீட் டின்ப
மிணங்குமாறளிப்பன் வரம்பிலாவுவகை யித்தலத்தெய்திய வதனால். (ஙக)

துடக்குறும்பிறவி யடற்பிணிதணிக்குந் துகளருமருந்தும் வல்வினையின்
கடக்கரும்புணரி கடத்துநாவாயுங் கரைபெருவவிச்சை வல்லிருளை
யடக்கிநல் லொளிவிட்டெறிக்குமெண் சுடருமழிபசிகிரப்புறும் பரப்பை
யுடைத்தினிதளிக்குங் கடவுண்மாமணியு மரவணிந்நகரில்யா னுரவோர்.(ஙஉ)

வார்ந்ததெண்டிரைய தெய்வதநதிகள் வகைக்கெலாமொருதனி சிறந்து
சேர்ந்தவிண்ணவரோ டெவர்க்குநல்விழுப்பஞ்செய்துவையகத்திலென்மேனி
யிர்ந்திரையிளங்கா ரேய்திடிற்காணிலெய்திடிற் கைதொடிற்பருகிற், கூர்ந்த
வல்வினைகள் பருதிமுன்பனிபோற் குமைப்பனக்குலத்துமன்பதைக்கும். ()

ஐவகைப்பவத்தோர்வெவ்வழல்வேள்வி யலைத்துளோர்குரவரையிகழ்ந்தோர், செவ்வரித்தடங்க ணயன்மனைவிழைந்தோர் செயிரறுதெய்வதம் பழித்தோ, ரெவ்வமுற்றுழலும் வறிஞரைநலிந்தோரிருமுது குரவரையயர்த்தோர், கைவினைகரந்தோர் பொய்க்கரிபுகன்றோர் கடுஞ்சமரினில் வெரிநிடுவோர். (ஙச)

சுளித்துரைதருவோர் தூனறைமடுப்போர்சுற்றம் வெம்படருறக்களிப்போர், களங்கறுமுல்லைக் கற்பினல்லாரைக் கனன்றுளோர்கன்னியைக் கலந்தோர், துளங்குருநன்றி கொன்றுளோர்நட்டோர் தொகுபொருள் கவர்ந்து



ளோர்மூத்த, விளங்கிழையவர்தோண் மணந்துளோர்நறையூன் விலைஞர்கையிழிபொருள்வேட்டோர். (ஙரு)

விருந்தினைத்துறந் தோரவையமென்றளித்து விடுத்துளோர் கருவினைச்சிதைத்தோர், தரும்பொருள்கெடத்தென்புலத் தவர்வேள்விதணந்துளோர் நாண்டுறந்துழல்வோ, ரருங்கலன்கன்றுமிருங் குழன்முடித்தோரமணராயரும்புன விழிந்தோர், பெருந்துறை வழிக்கணெடுந்தருக் குறைத்தோர் பேதுறவாறலைத்திடுவோர். (ஙசு)

அருமறைக்கிழவர் பெறும்பயனுகுத் தோரரசியற்றிறம் பிழைசிருள்வாய்
தருமிடமறுத்தோர் கண்ணியின்வலயிற்சார்ந்தபுள் விலங்கினைவளைத்தோர்
பெருகுநீர்க் கூவல்வீழ்பசு வெடாதோர்பெய்கவருடுவோர் குரவன்
றிருமொழிமறுத்தோர் காலையிற்கடவுட் சினகரம்பணிந்திடாதகன்றோர். ()

கடவுளாலயத்து மகளிரைப்புணர்வோர் கணிகைமாட்டரும் பொருளேற்போர், தடமலர்வாவிதூர்த்துளோர் குறளைச்சாற்றுவோர் மணவினைகெடுத்தோர், மடமகவினைநீர் வீழ்த்துளோர்விலைநெல் வாணிகர்க்கேற்றினைவிற்போர், புடைவனமுலையா ளொருதனிப்பாகன் புனைவுறுமலரினையனைந்தோர். (ஙஅ)

மெலியபால் விஞ்சைதடுத்துளோரையம் விலக்குவோர் பொய்விலைபகர்வோர்
நலியிளங்கன்றைப்பால் விடாதலைப்போர் நயனிலகூறுவோராதி
கலிகெழுவினைஞரே வருமுவந்தென் கடவுணீரிடைப்படிந்தனரேல்
வலிவினைக்கழுவிக்கழுமல நதியாய்வயங்குவன்றயங்கு மிந்நகர்க்கண். (ஙகூ)

கோணிலைதிரிந்தகாலையுமாலைக் கொழுஞ்சுவையமுது மிழ்புனல்வாய்
வாணிலாஞ்சுடரோரிரண்டுள காறுமாறுருதிந் நகர்வாழ்வேன்
சேணுலாங்கங்கையாடின் முத்தினத்துந் தெய்வநீர்யமுனையைந்தினத்து
மாணியாம்பலபேறளிக்கு மோர்தினம்புக்காடினுற் பலனளிக்குவன்யான். ()

தென்புலக்கிழவர்க் கருத்துநாளுரகஞ் செழுஞ்சுடர் விழுங்குநாள்கதிரோ
னன்புறுதகர்மேற்றலையின் மேல்வருநாளயன் நாளுவவுநாள்மாக
மென்பெருநெடுநாளிவற்றி னென்மேனியீர்ம்புனல் படிந்துளோரடிநாட்
டுன்னருவினைக்கோர்கனலியு மனையார்தொல்லுயிர்க் கமுதமாகுவனால்.(சக)

படிபடுமொந்தர் கரைபடிற்பிணியிற்படிபடார் நெடுகியதிரைநீ
ரடிபடிலகலா விருவினைத்துவக்கிலடிபடா ரடைதரைவார்ந்த
பொடிபடினிரையத் தருந்தழல்வறுத்தபொடிபடா ரெள்ளளவுறுநீர்
குடிபடிவினியோரன்னையர் முலைப்பால்குடித்திடார் முடிப்பருங்குணத்தாய்.

பற்பலவியப்போடின்னகரிருப்பன் பகவநின்னருளுமோர் புழைக்கை
யற்புதனருளும் பயத்தலாலென்ன வகமகிழ்தூங்கியமுனிவன்

பொற்பொடுபொலிக வடபுலத்தமைந்தபுனித நீர்க்கங்கைபோலுன்பே
ரெற்படமவுலிச் செம்பியன்புவிக்கு மெய்துகதெய்வநீரணங்கே. (சந)

கழிதொறுங்குவளைகயந் தொறுங்கமலங்கரைதொறும் வெள்வளைமடைநீ
ரிழிதொறுந்தரளமேர் தொறும்பசும்பொன்னிரு கரைதொறுமறைமுனிவர்
பொழிறொறும்புயல்கள் புடைதொறுங்கடவுட் புனைமணிச்சினகரமியங்கும்
வழிதொறுங்கன்னல் வயறொறுஞ்செந்நெல் மல்குகநின்னுழைமாதோ. (சச)

கறங்குவெண்டிரையங் கங்கையேயாதிகடவுண்மா நதிகளுநின்பா
லறங்கிளர்துலைக்கணுடமாச கற்றியருளு மாறலறியமுந்நீர்
பிறங்குதொல்புவிக்கு மருளுகவென்னப் பேரியமுனிசெலமகவா
னிறங்கிளர்நளிநீர்மலர்த்திய மலரானிருமலன் பூசனைமுடித்தான். (சரு)

ஆண்டுதென்கயிலைக்கமரர்கோனே கவயிலெழிற்றசமுகியென்பாள் [பப்
றாண்டுமொன்தடந் தேர்த்துணைவனுக்களிப்பான் சுந்தரிவலக்கைதொட்டேர்ப்
பூண்டுழாயலங்கன் முகிற்குமுக்கணர்க்கும் புதல்வன்வெஞ்சேனையந்தலைவன்
காண்டலுங்கொடியாள் கையரிந்தெறியூர்கைவிழுஞ் சேரியென்றுளதால். ()

மற்றவளகளப்பு கலிமாநகர்க்குவன்னியந் திசையின்மாகாளன்
வெற்றியங்கழற்காலொரு தனிச்சாத்தன் வியன்பணிபுரிந்தனன்வைக்கக்
கற்றைவெண்டிரைநீர் பொன்னிமாதளிப்பக்கடி மலர்த்துடவையும்பிறவும்
பொற்றளிர்குழைத்து நறுமலர்விரித்துப் பொலிந்தனபொங்கராங்கதன்பின்.

பூதலங்கடந்தவொரு தனிமுளரிப் புங்கவன்றேடருங்காழி
மாதலத்தொருகூன் பிறையணிவேணிவர தனதாரருள்பூண்டுங்
காதலஞ்சசியோடமரர்கோன் போதக்கடமுனிசைய மெய்தினனென்
ரோதியருதனரு வரைவளனுண்டுறுவ ருக்குணர்த்தியநெறியை. (சஅ)

வேறு.

தெய்வங்கமழும் பளிக்குண்டைத்திரள்காய் நெல்லிதருமூலத்
தையமகன்றமுனிகரகத்ததி நீருய்ப்பநதிநீராய்ப்
பெய்யுங்குளிர்பூம் பொன்னியினாற் பெருமாநிலத்தின்னுயிர்புரக்கும்
வையம்புகழுஞ் சையமெனும்வரையின் வளனீங்கறைகுவனால். (சகூ)

அடர்செஞ்சடையுமிராவணன் மேலடருஞ் சிறுகானகக் கண்ணும்
படரம்புலியுமாகணமும் பலதாழ்வடமுமானிடமுந்
தடகண்கலையுமடங்கலுடைத் தருக்குஞ்செருக்குந் தன்மையினாற்
கடலின்விடமுண்டளித் தமலர்க்கையனிகர்க்குஞ்சையவரை. (ரு0)

கோடுதாங்கிவெயில்மறைத்துக் கொண்மூவடிக் கொண்டலைவிலதாய்
நீடுதருமாமணிமணந்து நெறிக்கட்டடந்தாமரைகாட்டித்



தேடும்பலனுமூலமுமாய்ச் செல்வந்தேறவதரமெல்லா
மாடும்பகட்டா லறிதுயில்கூரையநிகர்க்குஞ் சையவரை. (ருக)

முன்னூலணியா லெவ்வாறுமுழங்குமதவாரணச் செறிவால்
மின்னூல்வாயால்வனப்புறு வேதண்டமருங்கைவிரித்தலினாற்
கொன்னூராருகுகரங்காட்டலினாற் குடுமிநாலுமருவியதாற்
றொன்னூல்விரிக்குமடல் வனசத்துய்யனி கர்க்குஞ்சையவரை (ருஉ)

எவார்தடங்கட் கொடிச்சியர்வாழில்வாய் விளக்கும்பொற்றுகள் போய்ப்
பவார்த்தடமென்சினை தோறும்பொதுளியொளிசூழ்கிடந் தமையாற்
றுவாவிணங்குராவதிதரு பூநதருமையெடுபொற் றருவென்றே
யோவாயொரு பேர்கொடுத்தகிந்த வோங்கற்றொடந்தமணி முன்றில். (ருந)

சோதிவாய்ந்த பசுங்கமுகந்துணர்ப்பூம் பாளைவாள்விதிர்த்துப்
போதிவாரமென் றலினாற்பலகைதாங்கிப் பொருப்பாத
மீதிலாகண்ட னிலையாய்ந்தெழுந்து மிளிர்வனசிலறையரிந்த
சாதிமானப்பழிதுடைக்கத் தருக்கின்றதுபோன்னெருக்கு மால். (ருச)

திவளப்பசும்பொற் கொழுந்துயிற்குஞ் சேமப்பாறைநிழலுடன்மே
லிவரத்திரியும் வரைவருடைபசிய யிணையென்றெறி சுடரோன்
பவளக்குரத்துக் கொய்யுளைமானேழும் படர்மாலுழந்துருகி
யவணத்தின்மை யாக்கண்கொடுபார்த்தலைக்குந் தடர்ந்தேர்நிலைக்கவே. (ருரு)

பெருகியொளிகால் நறுங்குவிகப்பெருஞ்சேதகந் தோய்ந்தொழுகு தெண்ணீ
ரருவிகுளித்துப் பவளமருப்பாயவேழ மியங்கிடுமாற்
றிருகுசினத்தின் ஞாட்பினுய்த்த செறுனர்மார்பிற் செருகிவருங்
குருதிபொழியுங் கூர்ங்கோட்டுக் குருங்கட்பெருங்கைக் குஞ்சரம்போல். ()

கண்ணூர்பீலி மஞ்ஞையுயிர்க்கதிர்க்கால் மணியைக்கோபமெனு
வெண்ணுதயில்வான் கவர்ந்துபசையின்றி யெறிவமாலுழந்து
பெண்ணூருருக் கண்டுணர்விழந்தவிழியான். முழங்கிப்பெறுமின்ப
நண்ணுமடவார் நசையின்மைகுறித் தாங்கொருவு நல்லவர்போல். (ருஎ)

கூன்றேய்மருவிப் பையறைநீட்டிக்கூர்மையறி வாள்குழியழற்க
ணூன்றேயகட்டுத் துறுமயிர்மெய்யொடுக்கி யடுக்கத்தெற்றேனந்
தேன்றேய்மலப்பூந் தருவிலக்காய்ச்செருக்கிப் பாயப்பிலிற்றிய தேன்
மான்றேற்பள்ளியெயின் மகவாய்மடுக்குந்துயிற்க ணடுக்குமே. (ருஅ)

தெறியாரிந்தவரைக் குடுமிநிலவுமூரவோ ரருளுண்மை
சிறியார்புகலுந் தரத்தோசெற்றநீங்கி முற்றமெலாம்
பொறியார்மனவப் பெருமணிப்பூண்பொம்மன் முலைப்பால்பருகியவாய்
வெறியாரெயினக் குழவியொடுவேங்கைப்பறழு முகளுமே. (ருகூ)

கருங்கால்வேங்கை வீயுகுத்தகடுக்கை நறுந்தண்டுணர் சொரிந்த
விருந்தாதரிக்கொண் டரிதாரமீர்த்துப் பசும்பொன்சேர்த்து வரைப்
பெருந்தாளடிக்கண் முடியினின்றும் பெருகுமருவி தூங்கு மூல
கொருங்கேயுண்ட வானவன்பொன்னுத் தரீகந்துயல்வரல் போல். (௬0)

கொல்லாடரவ மிணைநேரக்குறித்துக்கான்ற மணிக்குவைகள்
வில்லர்ரொளி விண்முகட்டளவும் விரியப்புரைநீரதிரு ரிடைப்
புல்லாவெழுத்தின் வறுங்கோடிப்புலனில் புலவர்முகம்போல
வொல்லாக்கதிரும் வெண்கதிரும்மொளிமாண் மழுங்கியியங்குமே. (௬௧)

தானமடுத்த முகிற்குலங்கடவழுங்குவட்டிற் றோகைவிரித்
தானகளியின் மஞ்ஞைபலவமைந்தந்தோற்றம விமுருளிசூழ்
வானமடவார்கண் சுனைநீராடியயிர்க்கால் விரலுளர்ந்து
கானமருப்பூங்குழ லார்விரித்தாங்கிருத்தல் காட்டுமே. (௬௨)

வளிசால்விசும் பூடுரிஞ் சுபசுங்கழைமேற்குறு கூன்மட மந்தி
களிசால்பவுரியிட் டோக்கிக்கங்கைப்பசுங்கட்குழிகவுளி
னளிசால்கடுவன்முட் பலவின்சுளை நல்குவவேலடர்வேந்த
ரொளிசால் பொன்னந்துணிகளைக்கண்ணுளர்பாலீவ லொத்துளதே. (௬௩)

வெளிறுநீத்தகருமுகிலைப் பிடியேயென்றுவியன் புழைக்கைக்
களிறுநீட்டவிலங்குழுமிக் கண்ணின்றழுது சான்றுவளைந்
தொளிறும்பிறையைச் சிமையவரைப் பாகற்களிப்பானுருத்தெழுந்து
பிளிறிநிவந்துதோட்டியெனத்தடவும் பெற்றியன்னதே. (௬௪)

இமைக்கும் புலன்கோட்டருவரை நின்றிழியுமருவி விழுந்தமையிற்
குமைக்குங் குழிவாய்மாமருப்பாற் குறுங்காற்குரம்பைக் கொடிச்சியர்கள்
சமைக்குங்கிழங்கா லகழ்குழிவாய்வல்சியாகத் தனிகொழிக்கு
மமைத்திண்கதிர்கான் மணிமுத்தந் தூர்க்கு மாநோவகல்சாரல். (௬௫)

சகடொன்றுடைத் தேரிரவிதொறுந்தழலங்க ரங்கள்காணரிய
முகடுமொய்த்த பனிப்பாறைகிடந்த வண்ணமூதண்டத்
தகடுதேய்க்குங் குவட்டினுறையறவோரியங்கவற்றைவெள்ளித்
தகடுபொதிந்து படுத்திழைத்ததன்மை போன்றுதயங்குமே. (௬௬)

வருகாலாற்றின் மருங்கெல்லாமை கோடுறழுந்தழை மேனித்
திருகுகோட்டுப் பாரமடிச்செங்கண் மேதிபொழிதீம்பால்
முருகுமலர்ப்பூங் கோடுழுதுமுழுவெண் மதியினுடல்கிழியப்
பெருகிவழியாரழ் தோடுமயங்குமொருசார் பெருமுன்றில். (௬௭)

முழைக்குன்றிடைக் கோளரியுகிரின்முளையா லுறுகண்டேதியுரு
திழைக்கமோட்டு வெரின்காட்டினெரிகண் முகிழ்த்துநாலவிட்ட



தழைக்குங்குழைகாற்றெறி செவியத்தந்தாவளத்தின் பிணருருவ
புழைக்கையேறிப்பொன்னூசற் கொள்ளுமவ் வரிமாண்பூங்குருளை. (௬௮)

உரையிற்கூடாமேதகுசீர் யோகக்கிழவர்முறை பயிற்றுங்
கரையிற்றுளமாமறையோதை செவிவாய்மடுத்துக் கன்றொடும்போந்
திரையிற்கண்ணுந்தருகிய வானினம்வெஞ்சின வேரெறிந்தவர்தம்
புரையுட்டொறும்பால் மணிச்சிரகவிளிம்புதளும் பப்பொழியுமே. (௬௯)

எறிகொள்வடர்ந்தை சுழன்றுடவீரங் கொண்மூநின்றயலாடப்
பொறிகொள்கலபப் பிணிமுகங்கூத்தாடல் புகன்றென்புரைவிடங்காற்
செறிமுள்ளெயிற்று நெட்டுடல்வாளரவமாடுந் தெறுஞ்சுடிகை
மறியுநிழற்கட்சீ றெலிபாய்ந்தாடுந் தடஞ்சார்மாடெல்லாம். (௭0)

மெய்தூங்கழலோன் வழிபடல்போலரும் பலாசின்மிடைந்தலர்ந்த
நெய்தூங்கடாய்பூஞ் செம்மலூகுநெடுங்கல்லிடலாய் முரட்கடுவன்
கைதூஞ்சுனைநீர் பெய்தேனின்கணமேற் றூவியிருல்பொதிந்த
பெய்தேன்கெடச் சூளில்லான்போல்வினையே யிழைத்துப்பிழைத்திடுமால். ()

ஒழுங்கிற்சிறந்தோருழைப்பல் லாண்டுறைநட்டாலும் புலனிலாத
மழுங்கிக்கிடந்ததின் னறிவுநுண்டுகொல் லோவண்பளிங்கி
னொழுங்கிற்பாறை நிழலுறவேதிலே றென்றெதிரளித்துக்
கொழுங்கட்சுடர் கான்றடிநிலத்தைக் குரத்தார்கிளைக்குங்கொல்லேறு. (௭௨)

துறுவியோடுமழைப்படலஞ் சூழவோடும் புல்லொடுமான்
மருவியோடுநுதற் சூட்டுமாலைபோலக் குவட்டினிழிந்
தருவியோடும்பருவரைபோலானே றேடுமேனல்மிசைக்
குருவியோடும் வயவேழங்குழியவோடும் வழியெல்லாம். (௭௩)

விரைப்பைந்துணர்தோய் மானிடத்தீவிளிசால் விரிபூம்பொழிறேறுங்
கரைக்குங்கண்ணீ ரொடுந்துரியங்கடந்தவெளியிற் கருத்தொடுங்கி
யிரைக்குஞ்செயல்போதெழுதும் விளக்கெனலாய சைவற்றிருப்பவர்மே
லுரைக்குமுழுவைதனைத் தெருட்டுமுயர்ந்தோர் கரம்போல்வியன்காந்தள். ()

ஓடுமதிமேலுருஞ்சிய கோடுகுத்தவமுது முட்பலவின்
கோடுங்குனியுங்குடங்கனி வீழ்ந்தழிதீஞ்சாறுங் கோரண்டத்
தாடுமலர்வாயிலங்குமிரு லழிதேனொழுகி யாறிழுக்காப்
வீடுதருமாமுனிவருக்கு மவ்வாறிழுக்கும் பெரிதாக. (௭௫)

விண்வாயெழுந்த மின்னலெனவிருகுன்றேந்தி வியன்கீதம்
பண்வாய்மிழற்றச் சுடர்ப்பவளவல்லியார்த்த பசும்பலகைக்
கண்வாயெழிற் சூரரமகளிரூசலாடக் கவின்றருவ
தண்வாய்நறவ மலர்கொழிக்குந் தடமென்சினைச் சந்தனப்பொதும்பர். (௭௬)

மூன்றுபுவியு மூன்றிலிடையுய்ப்பார் முதுமாமறைக் கொடிக
ளூன்றிவளருந் தருவனையாருறங்காது றங்குமோர்குடையார்
சான்றபனுவலாட்டி தனிக்கிழவன் வியக்குந்தவக்கிழவ
ரான்றமுதுதாபதப் பள்ளியலகில்லன வாண்டுளதம்மா. (௭௭)

விடங்கூர்ந்துளை முள்ளெயிற்றுமணி வெஞ்சுடரவமீக் கிடந்து
தடங்கூர்கமலத் தவட்புணர்ந்துதழல்வாய் நேமியுருட்டியக
விடங்கூர்ந்தளித்தோ னவனளித்தோன் முதலோர்பதமு மிகழ்ந்திவர்பாற்
கடன்கூர்ந்தேவற் றுறைபிழையாதொழுகு மாணர்களும் பலரால். (௭௮)

விரிக்குங் கமலாசனத்திருந்துவிழியைக் கொடிமூக்கிறுதி நிறீஇப்
பரிக்குந்துடர் மார்பெதிரேறப் பண்டியாழா துயராது
தரிக்கும்பொடி தோளுயர்நகைத்தாளம் பிரியாமூலவொளி
தெரிக்கின்றவனைத் தெரியோகத்திறத்தின வரும்வரம்பிலரே. (௭௯)

தென்பால் வடபால் மேல்கீழ்பால்சிகை நாவளைக்குஞ் சுடர்நாப்ப
ணின்பாலகந்தைக் கிழங்கையகழ்தெறிந்து பனிக்கோட் டிமையவனா
மின்பாலவனை யுளத்திருத்திவெய்யோனிடைக் கட்புலனமைத்துத்
தன்பாலுசி நுதிக்கணின்று தவமாற்றுனரும் புலராங்கே. (௮௰)

அகனும்புறனும் புனிதமுறைவாறைந்தடக்கி யகன்றகமை
தகநன்கியற்றி நறுந்தாமந்தாமந்திரு மஞ்சனமீட்டிப்
பகனுந்துணர்வால் மாயன்வலிபருகுங்கணிச் சிவானவனைப்
புகலும்பூசைத் தொண்டுபுரிகிரியையோரும் பொலிந்தனரே. (௮௧)

எடுத்தபொருளுக் கேற்றகடாவவிடுத்து விடைகொண்டதை விடுத்துத்
தடுத்தவழிநின்றருட் குரவன்குறிப்பானுணர்ந்து சைவநெறிக்
கடுத்தமேற்கோ ளிறைவனடியகத்தி லிருத்தியவனருளே
மடுத்துச்சிவ நான்முறைப்பயில்வல்லார் பல்லார்க்குழு மினரால். (௮௨)

பாலரனைய வைம்பொறியும் படுக்கும்படையர் சுருக்கணிந்த
கோலருயிர்கட் குயிராகிக்குன்றுதொழுகுங் குணக்குன்றர்
சீலரெவற்றுஞ் செறியாதுசெறிந்தோனடிக்கே பிறிந்தறியா
மாலர்முத்தி முற்றத்தர்வைகும்வரையின் வளனீதால். (௮௩)

குழைக்குங்கோட்டு நெல்லியொன்றக் குடுமிநடுவட்பொலிந்தத்த
னுழைக்குஞ்சர வீருரியான் றெண்டுடையார்ந்துவன்ற பழமறைநூல்
தழைக்குமுதலாய் மாமனுக்கட்டடமென்கிளையா யாகமங்க
ளிழைக்குமிலை யாயருட்டுணராயிகழ்வா முத்திக்கனி பழுத்தே. (௮௪)

அன்னகடவுட்டருமூலத்தளிர்நீர்ப்பொன்னி தனையிறக்கித்
தென்னன்பெரு நாட்டளிதூங்குந்தென்றற் குழவிநடையயிலும்



பொன்னங்குவட்டுப் பொதியவரைபுக்கானுளுந்தாழ் புனலாக
முன்னங்கடலேழையு முண்டமுதுமாதவத்துக் குடமுனிவன். (௮௫)

இனையகடவுண் முனியளிப்பவீர்ந்தண்பொன்னி யிருவகைத்தாய்க்
கனைநீருலகிற் சிறந்ததெனக்கலைதேர் சூதனெனுமேலோன்
வனைநீர்க்காந்த புராணத்துவருசங்கர சங்கிதைசொன்ன
வினைதீர்க்கதை யீங்கிதைச்சூதன்வேணிமுனிவர்க் குரைத்தனனால். (௮௬)

கழுமலநதிவத்தியாயம் முற்றும்.

ஆக. திருவிருத்தம். ௧௧௬௨.

---

# குமரவேளுபதேசம்பெற்றவத்தியாயம்.

கொலைவிரிகுடக்காய்த் தெங்கின்கூரிலையென வெவ்வேறு
தலைவிரிந்தளிக்குந் தெய்வத்தண் கழுமலையாறுற்ற
நிலையிதுவாகு மிவ்வூர்நிமலனை முருகன்போற்றி
மலைவிரிவுபதேசங் கொள்வண்ணமும்பகராலுற்றும். (௧)

போழுலாந் திங்கட்கண்ணிப் புரிசடைமுனிவன்சோதி
வீழுலாங் கயிலைக்குன்றின் விரிந்ததென்றிசையினூடே
சூழுலாமருவிமாலை துவன்றியதடமென் கோட்டுக்
கேழுலாங்கடவுட்டேவ கிரியுளதொன்று மாதோ. (௨)

அக்கிரிதன்னிலெம்மா னருளினுலொருமுன்நான்கு
கைக்குமரனுக்கு முந்நூற்கடிமண முடித்துவெங்கோல்
திக்கிரிதரச்செய் சூரன்றெறுபடைக்குடைந்த மேனி
மைக்கிரியனையானுதி வானவர்க்கிரங்கி வள்ளல். (௩)

கவலருமறைகள்பூத்த கனிமலர்ந்தருளிக் கோடி
திவளொளிப் பருதிமேனிச் சேட்டிளங்குகனை நோக்கித்
தவலருந்திருவேஞானத் தனியிளங்குன்றே வானோ
ரவலவேரரிவாள் சூரனுடல்வேர ரிவாயென்று. (௪)

நொறில்வயப் புரவிபூண்டநுகம்படு தரங்கத்திண்டேர்
பொறிவழிச் சிங்கனுதிபொருந்துநூற் றெண்மர்தேர்ச்சி
செறிமதிவீரவாகு முதலியதுணைவர் செந்தீ
யெறிமயிர்க் குருந்தாட்பூத மிரட்டியாயிரத்த வெள்ளம். (௫)

அசனியேறலறத்தாக்கி யங்கையிற்பிசைந்து நூறும்
வசையறுமாற்ற லொன்பானிலக்கம் வாளுழவரோடுந்
திசைமுகங் கமழுந்தெய்வச் செச்சையந்தெரியலானுக்
கிசையுறவளித்து வெவ்வேறெரிமுகப் படையுநல்கி. (௬)

ஓதைமாற்றிய வண்டாடுருள நறுங்கடப்பந்தாரோ
யீதெலாங்கொடு நீவெஞ்சூரிகறடிந்தெறிக்க வென்னாக்
கீதயாழ் மருட்டுந்தீஞ்சொற்கெண்டயந் தடங்கட்பேதை
மாதர்பா லொருவன்ளீயம்மற்றவ னிச்சைபூண்டே. (௭)

குலிசைவே லிறைவனுதி குண்டலவாணர் தத்தம்
வலனுற மிருக்கையேற மாமணியிரதமேறித்
துலையறு கடலந்தானை சூழ்வரத்தென்பாலன்பர்
பலனுற வினிதுசென்றான் பன்னிருகரத்துப்புத்தேள். (௮)

பொற்பமர் கடுக்கைமாலைப் புண்ணியர்நண்ணுந் தானம்
பற்பலவொடுங்கே தாரபனிவரையிறைஞ்சி வேதச்
சொற்பதங்கடந்தோன் வேணித்துறையினின்றி றக்குகங்கை
யற்புதங்கிளருங் காசியமலனை மலர்கொண்டேத்தி. (௯)

வேறு.

குளிர்தூங்கருவித் திருச்சயிலங்குறைவில் விருப்பாக்கமும்பரவித்
தெளிநீரெறி பொன்முகலிநதித் திருகாளத்திவனா போற்றி
விளியாவொருதன் மனக்கியன்றவிரி *வேங்கடமால்வரை நோக்கிக்
கனியாலூர்த்த தாண்டவஞ்செய் கடவுளாலங்கா டேத்தி. (௧௦)

முன்மா மறைகடேடரிய மூலச்சுடரா மொருமுதல்வி
நன்மாவடிக் கீழுறைகாஞ்சி நகர்வாழொருவ னடிபோற்றிச்
சொன்மாசகற்றுங் கார்த்திகைநாட் †சுடரோங்கிய மால்வரைதாழ்ந்து
பன்மாதவர்க்கு முத்திநெறிபயக்குமுதுகுன் றினைத்தொழுது. (௧௧)

காரானந்தமருஞ் சோதிக்களத்தினிடத் தன்மணிக்குழையன்
பேரானந்தமணிமன்றிற் பெருமானிருதாண் மலர்போற்றி
நீரமண்ணிப் பெருநதிக்கு நிறைகாவிரிக்கு நடுவெனென
காராவமுதன்னவ னுறையுமந்தண்காழி நகரணைந்தான். (௧௨)

*வேங்கடமால்வரை=ஸ்கந்தகிரி,இதனைக்காந்தம்சனற்குமாரசங்கிதையிற்காண்க.
† சுடரோங்கிய மால்வரை—திருவண்ணமலை.



வீரந்தருபூணெழில் முருகன் வேணுபுரத்தைக் காணலொடும்
பாரந்தருதிண்புயத்துமிடற் பானுகோபற்பயந்த வெய்யோன்
வாரந்தருமென் பகைவரவை வழூத்திலாயென் றிழித் தென்னைக்
கோரந்தருமென்றெளிப் பான்போற்குடபாலொளித் தானடல்வெய்யோன்.

உரிமைத்தாயவுயிர் புடைநாளுடையாளன்றே கடலீன்றாள்
மருகற்காணூமடற் கதவமறைத்தங் கெனத்தாமரைமுகிழ்ப்பத்
திருவுக்கினியவுயிர்ப் பாங்கிசெல்வாவருக வருகவென
வருமைக்கனிவாய் திறந்தழைத்தாங் கலர்ந்ததாலோவரக்காம்பல். (௧௪)

குமுதம்விரியக்கதிர் விரியுங் குளிர்வெண்மதியென் றுலகுதொறு
மமுதமெழுமுன் விடமெழுந்தாங் கனையவிருளுமாரமுதத்
திமிர்தமிரைத் தாங்குடிக்கணமுந்தெள்ளாரமுதமெனநிலவு
மிமிழ்தெண்டிரை நீரொலிவேலியீர்ங்கண் ஞாலத்தெழுந்தனவே. (௧௫)

துலையாவமணப் பேரிருளைத்துலைத்த பூதிசாதனம்போ
லலையாருலகத் திருணூறியலர்வெண்ணில வந்தலைகொழிப்பக்
கலைதேர்காழிக் கவுணியர்கோன் கடவுண்முருகனென்னமலைச்
சிலையானன்பர்மா னேந்திச்செழியனுன கடவுளர்கோன். (௧௬)

கடல்வாய்முளைத்த சுதைத்திங்கட் கற்றைநிலவஞ்சுற்றியபின்
மிடல்வேண்முருகற் கிடனுகமெய்ம்மைக் கடவுட்கம்மியர்கோன்
சுடர்மாளிகைவிண் முகடடவித்தொடு தோரணத்தினிழல்பரப்பும்
வடமாமறுகிற் படரொளிகால் மணியாலயமொன்றணி செய்தான். (௧௭)

இருள்சீய்த்தொளிகால்மணித்தசும் பினிமைக்கும்பசும்பொன் னெயில்
வளைத்துக், குருமாமணித் தூணிரைபரித்தகோட்ட நடுவெண்மோட்டரிவான்
றருமாதனமேலுருள் கடப்பந்தாரோனிருப்பவார்கழற்காற்
புருகூதனும்விட் புலவோரும்புறஞ் சூழகம்புக்குறைந்தாரால். (௧௮)

உறைந்தார்பலரிற் கிம்புரிக்கோட்டொரு வெள்ளயிராவதப்பாக
னறந்தாழ்சூரன்கொடுங் கோலாலலையார் பழனக்கழூமலத்துட்
புறந்தாழ்கூந்தற்சசிமடந்தை புனைமாணிழைகள் முனைநாளிற்
சிறந்தோருழைவைத்திருந்தவெலாந் தெரிந்தானுருகிப் பரிந்தானே. (௧௯)

பரிந்தானுரிமைப் பெருந்தேவிபணைமென் முலைமேற்றணியாமால்
புரிந்தான்விரகக்கனல் கனற்றப்பொறிந்தான்கன்னற் பொழுதுகமாய்ப்
பிரிந்தானொருபெண் சசிக்காகப் பெருவெஞ்சசியின் கதிருருப்பக்
கரிந்தான்கங்குற்பெரும் புணரிகழித்தான் கதிரோன்விழித்தானே. (௨௦)

குவளைக்களத்தன் கண்வரலாற் கோதாட சுரப்பகைதெறலா
லவனிக்காறுதலை யுறலாலம் போருகக்கண்ணனை விடலாற்

றவருக்கருள் முன்றனுகையாற் றாவில் பூதமகிழ்வரலா
லவனித்தனிவேல் முருகனென வுதித்தோன் கதிரோனுதித்தலுமே. (௨௧)

மாலைக்கவிகை வாசவனும் வானுளோரு முனிவோருஞ்
சோலைக்கவிகை நிழல்பரப்பிச் சூழுங்கழனிக் காழிபுரத்
தாலைச்சுவைநேர்க் கழுமலப்பேரந்தண் பொன்னிகுடைந்தாடிக்
காலைக்கடவகடனிறுத்திக் கடம்பன்றுணைத்தாளிடம் பணிந்தார். (௨௨)

நடக்குங்கால மிதிற் காந்தள் நறுமென்குஞ் சித்திருமுருகன்
சுடர்ச்செஞ் சுடரோனெயிறு குத்ததொல்லைக்காழிவல்லவன்மேற்
கிடக்குங்கருத்தால் வழிபடற்குக் கேழிலொருதன் கோயின்முன்னே
முடக்குங்கொடித்தெண்டிரைபுரட்டுமுதுநீர்த்தடமொன்றதுகண்டான். (௨௩)

கண்டதடத்துக் கங்கைமுதற் கடவுணதிகளெனைப்பலவு
மண்டவிருத்திமலர்க்கரத்தால் மணிநீரேந்திப் பணிமாலை
யண்டர்பெருமான் பிரமன்முடியணிந்த பெருமான்பழமறைநூல்
விண்டபெருமான் முடிகாட்டிவெட்சிப் பெருமானர்ச்சித்தான். (௨௪)

தொண்டால்வழிபா டிழைத்தலர்தூய்ச் சுடரேயிடர் தீரருமருந்தே
பண்டாரணநூல் விரித்ததனிப் பவளமணியே பணிவிலர்பா
லண்டாவொளியே யறிவிலனுளறியாவறிவே யெனைப்புரந்த
தண்டாவமுதே வேணுபுரித்தலைவாவெனமுன் பணிசெய்தான். (௩௫)

உண்ணீருருகநெக்கு நெக்குள்ளுடைந்து குழைந்து தரும்புளகங்
கண்ணீராறாயுள்ளம் வரக்கண்ணீராறாய்க் கரைந்தவன்முன்
பண்ணீர்க்குதலைக் கிளியொடுமான் பரிமேலிவர்ந்து சண்பைவளர்
முன்னீரெயிற்றுப்பணிமாலை மூன்றுவிழியான்றோன் றினனால். (௨௬)

கனிவாய்மகனையாறுமுகக்கருணைக்கடலைக் கழற்றுணைமேற்
பனிநாண்மலர் தூய்ப் பணிவானைப்பணைத்தோளழுந்தவணைத்தேந்தி
நனியாதரங்கொண்டுன் பூசைநயந்தே நயந்தேனின்றாத்தி
வினிவேண்டுவ தென்னென்றருளியிமையச் சிலைவாங்கியமுதல்வன். (௨௭)

பாலம்புனைவெண் பொடிபுனைந்து பவளச்செவியிலுவகையினான்
மூலம்படுமோராம் பதமுமுறையாலோதி முறைதணந்தோர்
காலம்பருகும் பாசுபதக்கணையுங் கதிர்க்கூரிலைவேலு
மாலம்பொருவெம் படைபலவு மளித்தான் கடுக்கையளித்தாரான். (௨௮)

தெவ்வுப்புலத்தை வேரரிந்து சேண்வாயமரர் மாணிழந்த
கௌவ்வைச்சிறைமீட்டெய்து கெனக்காளிபுரியாளுடையபிரான்
கொவ்வைக்கனிவாய் மகற்கருளிக்கோயில்புகலுஞ்ஞாயிறெனச்
செவ்விக்கதிர்வே லிளங்குமரன்சென்றானயல் போய்வென்றானே. (௨௯)



அண்டமனைத்துந்தனிக்க விகையளித்தவசுரன் முரணழிய
வண்டவாணர்தத்த நிலையடையக்கடவுண் முருகனுக்கு
மண்டமளிக்கு நிலைமைபெறவருட்செய்தது வெங்குருப்பதிவா
ழண்டர்பெருமானருளென் றலதன்சீர்புகல்வ தெவன்கண்டீர். (௩0)

முரணிக்கலைமாமுதறடிந்த முருகக்கடவுண் முன்னமைத்த
வுரவுத்தடத்தெள்ளார முதையுதகமெனுங்காற் பதகமெய்யே
குரவுக்கடப்பந்தாரொருவன் குழித்தலாற்றேன் மகனளித்த
வரமிக்குயர்பூந்தடமி தெனமந்தாகினிப் பெண்மருவலினால். (௩௧)

பருக்கைக்கவளக் களிறட்டபகவன்மதலை தெளியமொழிக்
குருக்கட்பெரியோன் றடமொன்றாற்கூறுமா றென்குருகினங்கள்
செருக்கிப்படிந்து விதிர்த்தசிறைத் திவலைபடினும் புள்விலங்கு
விருக்கக்குலங்கள் மானிடங்கள் வினைவெம்பவத்தாலிளையாவே. (௩௨)

தோளார்மதியின் முழுமதியைத்தீர்ந்தநாள்க ளோராறும்
வாளார்துலைக்கட் டெரிசமொழிமற்றை நாள்களவையாறுந்
தாளார்மலர்ப்பூந் தடம்படிந்துதக்க விரதம்புரிபவரே
தோளாமணிப் பொற்கந்தனுறை தொல்லையுலகின் பயன்றுய்ப்பார். (௩௩)

மதியந்தொறு மிவ்வறுநாளும் வந்துபடிந்து முனைமழுவா
ளதிபன்மனுவை விதிமுறையாலறைந்தோர் புறந்தாழ்கருங்கூந்தற்
பிதிருந்திதலை முலைமுளரிப்பெண்ணாரமுதின் கண்ணருள்கூர்
நிதியம்படைத்து மறுமையினு நிலைசேர்முத்தித் தலைவாழ்வார். (௩௪)

மீனமிறுவாய்மதி தோறும்விரிகார்த்திகைமீ னதிகமின்றி
யூனமறுகார்த்திகை மாதத்தொரு கார்த்திகைமீ னவற்றதிகந்
தீனமறுகார்த்திகை மதியுஞ்சிங்கமதியுந் திங்களொனு
மானமலிநாளிக் கமலவாவிபடிவார் சிவமுத்தர். (௩௫)

என்னமலர்ப் பூந்தடத்தியல்புமிறை வேன்முருகனெந்தைபிரான்
சொன்னமனுவால் வென்றதுவுஞ்சூதனோர்ந்து தகளெறிந்த
நன்னர்மறைதேர் முனிவரர்க்கு நலஞ்சேர்காந்தபுராணத்திற்
பன்னவறிய சங்கரசங்கிதையிலெடுத்துப் பகர்ந்தனனால். (௩௬)

## குமரவேளுபதேசம்பெற்றவத்தியாயம் முற்றும்.

ஆக. திருவிருத்தம். ௧௧௬௮.

உ

சிவமயம்.

## திருஞானசம்பந்தப்பிள்ளையார்

# திருவவதாரவத்தியாயம்.

காண்மலிகடப்பந்தாரினூற் குவந்துகாழி காவலன்றிருவருள்செய்
மாண்மியமுணர்ந்தே ஞானசம்பந்தவள்ளலாய் முருகன்வந்துதித்த
பான்மையுண்டென்று யனையதும்விரித்துப்பகர்கென முனிவரர்கேட்ப
மேன்மைசால் சூதன்வினவரும்பொருளீதென்று பின்விரிவுறவிளம்பும். (௧)

ஆன்றசொல்கேள்வி யறிஞரிற்போதாயனமுனி சூத்திரத்தொழுகி
யேன்றமாதவத்தானுயர் சிவபாதவிருதயன் காழிமாநகர்வா
ழுன்றுமாமறையோ னருமகவிருப்பாலுல களித்தவன்றடத்தொருசார்
தோன்றலாயயில் வேன்முருகனைப்பெருவான்றுய்தவம்புரிந்தனனெடுநாள்.

இத்தகைநெறிசால் கவுணியர்தலைவனியற்றவம் புரியுநாளறுதி
முத்தனதுணர்ந்து மூவிருகமலமுகவனைநோக்கி மண்ணிடைநம்
பத்தனைமறையைப் பனுவலையிகழும்படி றனைவல்லமணரைவெம்
புத்தரைதடிந்து சைவவைதிக வெண்பூதிசாதனமுறை நாட்டி. (௨)

தலந்தொழப் பதினாயிரம்பதிகத்தண்டமிழ் மாலிகைசாத்தும்
பெலங்கொள்காரண முண்டாதலினுலகிற் பிறந்திவண்வருகென மகிழ்கூர்ந்
திலங்குநீர்வேணி யண்ணலாங்கருளி யெண்ணிரண்டாயிரங் கணத்தை
நலங்கிளரடியராக வென்றேவநாமவேன்முருகனு நயந்தே. (௩)

இன்னண மிறைத்திங்செய்தவ னெனலுமிறை திருவுளமகிழ்பூப்பக்
கன்னலங்கிளவிக் கவுரியுண்மகிழ்ந்து களிவரவுச்சிமோந்திறைவன்
சொன்னவாறதித்த தலத்தியான்போந்து துணைமுலையமுதளிக் குவனென்
றன்னறுங்களியால் விடுப்பவேலாசு முயர்கணத்தலைவரை நோக்கா, (௪)

ஆதியங்கடவு லருள்வழிப்பதினாயிர வீருநீர்சூழ்ந்த
மேதினித்தலங்கடோறு மவதரித்துமேவுமென்றேவி வெண்கயிலைப்
பூதலமதனிற் காழிமாநகரிற் புண்டரீகன்றடத்தொருசார்
மாதவம்புரிவோன் முன்னிளங்கதிர்போன்மதலையாய்வந்தனன் கந்தன். (௫)

நீங்கருந்தவத்தோன் மகவுகண்டுவந்து நிரப்பினன் கடவுள்மாமணிபெற்
றோங்கினனென்ன வியப்புமீதூரவுயர் வடமீனனகற்பின்
மாங்குயிற் கிளவிப்பகவதியெனும் பேர்மனைவிபாலெடுத்தினி தளிப்பப்
பூங்குழல் களிகூர்ந்துச் சிமோந்தினிய புதல்வனைக்கொடு மனைபுகுந்தாள். ()



பாணிமூவுலகும் புதையமேன்மிதந்து பல்லுயிர் புரக்குமோர் குடிலைத்
தோணியாளுடையான் மேனியஞ்சுடராய்த்துலங்க வந்துதித்தமாமகற்குப்
பேணியதிரு நாளையிரண்டிரண்டுஞ்செய் பெருங்கடனாற்றி நீறணிந்து
மாணியல் பருவந்தொறு மழகதிர்போல்வளர்ந்து மூவாண்டெனவருநாள். ()

குலப்பெருந்தாதைமலர்ப் பெருங்கிழவன் குளிர்தடம்படிகுவான் செலுங்காற்
றலத்துறமழலைக்கிண்கிணி மிழற்றுந்தாள்கொடு நடந்துறுமகவை [விப்
மலர்க்கணால் வெகுண்டுமுடன்வரக் கொடுபோய்மணித்தடங் கரையினிரு
புலப்பகையெறிந்தோன் புனற்படிந்தாடப் புகுதலுங்குமுதவாய்ப் புதல்வன்.

இளம்பசிகூர்ந்தா ரெனவுளமுருகியிரங்கலும் வரம்பிலாமறைநூ
லளந்தறியாதானணங்கொடும் விடைமேலாங்கெழுந்தருளி நின்மகற்கு
விளங்கிழாய் முலைப்பாலருளெனக் கனகவில்லுமிழ் வள்ளமேன்ஞான
வளங்கொள்பாலருத்திமலர்க்கணீர்துடைத்தாண்மலர்தலையுலகெலாமீன்றாள்.

துடைத்தலு ஞானபோனகமுண்டதோன்றலா ரான்றபற்கலைக [யே
ளிடைப்புணர் ஞானந்தோய்ந்து தோய்வின்றி யெவ்வுயிர்க்கண்ணுமோர்நிலை
படைத்தளித் தழிக்குநிறைபரம்பொருளுட்பட *திருஞானமு மாங்கே
கிடைத்தன ரொருதன்றாதையுமாங்கே கிட்டினார் சிறிதுளம்வெகுண்டு. (௧௨)

யார்கொலோவிது பாலளித்தனரெனலுமின் றளிர்மணிவிரற்சுட்டிச் [ர்ந்த
சேர்செய்தோடுடைய செவியனென்றெடுத்துச் செங்கண்வெள்ளேற்றினிலிவ
வோர்பொருட்கடையா ளம்பலவமுத்துமொழிந்த பேரருளாைத்திவனே
யேர்பெறமிதுவே பொருளெனக்காட்டி யீர்ந்தமிழ்ப்பதிகமொன்றிசைத்தார்.

பதிகமுமிமையோர் பொழிமலர்மழையும் பஞ்சதுந்துபியொலி யதிர்ப்பு
மதிபுனைவரதனுமையொடும் போந்தவண்ணமுந்தந்தைகண் டிரங்க
வெதிரில்பொற்றோணி யிருமுதுகுரவரிணையடி போய்ப்பணிந்தெண்ணிற்
குதுகுதுப்பொடுந்தன் றிருமனைபுகுந்தார் குலமறைத்தமிழினில் வடித்தார். ()

துவரொறிகனிவாய் கழைபொருதடந்தோட் சுந்தரியளித்தமெய்ஞ்ஞான
நவையறுதீம்பா லருந்தியவாற்றால் ஞானசம்பந்தரானவர்தாம்
புவிபுகழ்ந்தெடுப்ப வணியகோலக்காப்புனிதன் மேன்மடையில்வாளைகளென்
றுவமைதீர்பதிகம் புகன்றுகைம்மலராலொத்தினார் முத்தமிழ்விரகர். (௧௪)

ஒத்தியோதுதலு மைந்தெழுத்தமைந்தவொளிசெய் பொற்றாளமெய்யருளாற்
கைத்தலம்பெறலு முமையொலிகொடுப்பக் கனிந்துபண்பாடுபுகாழி [தா

* இருஞானமென்றது பரஞான மபரஞானமாகிய விரண்டை. திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் புராணத்தில் "சிவனடியே சிந்திக்கும்" என்ற திருச்செய்யுளைக் காண்க. இவ்வுண்மையினையறியாத சில சைவர் ஞானம் நாலெனக்கூறி நகைப்புறுவர்.

முத்தன்மேற்பூவார்கொன்றையென்றலர்சொன்முருகவிர்மாலைசெய்துயிர்த்தா
யுத்தமநகரார் திருநனிப்பள்ளியுடன்வரும் தாதையோடிறைஞ்சி. (கரு)

காரைகள்கூகை யென்றமெய்யானைக் காட்டியபதிகமங்கிசைத்து
நாரைபாய்பழனத் தலைசயம்பேரூர் நற்றிருவலம்புரம்வலையூர்
தேனைவாய்ப்புனல்சூழ் பல்லவனீசமிவைதொறுஞ்சுவைத் தமிழேத்திப்
பாரையாண்டளிப்பான் மண்புகாரென்றபாடல் சாய்க்காட்டினிற்போற்றி. ()

வேதவெண்காடு பணிந்துகண்காட்டு நுதலெனுந்திருமொழிவிளம்பி
யோதநீண் §முல்லைவாயில் வண்குருகாவூர்மயேந்திரப்பள்ளி யோதி
நாதனுன்மறைசூழ் காழியம்பதிக்கணண்ணு நாட்டிவவுயாழ்ப்பாணர்
காதல்சேர்பன்னி யுடன்வரவவரைக்களித்தனர் கவுணியர்திலகர். (கஎ)

புக்கிருவோருங்கீத யாழகத்துப்புகன்ற தண்டமிழிசைபோற்ற
மைக்கருமிடற்றுத் தோணிநாயகனுண்மன்னருள் பூண்டுபொன்னெயில்சூழ்
திக்குறவளைக்குந் தில்லைமன்றிறைஞ்சத் தெள்ளலைசுருட்டு கொள்ளிடநீ
ரக்கரைநெறிக் கொண்டங்கரடைந்தா ருந்தமிழ்ப்பொழிமுகிலனையார். ()

மன்றுறைமூவா யிரவருங்களிப்பமாதுமைகாண நாதாந்தத்
தொன்றுமாநந்த நாடகம்பரவியுவந்துகற்றுங் கெரியோம்பி
யென்றுறவாழ்த்தி வேட்களம்பாடியியல்கழிப் பாலையும்பழிச்சிச்
சென்றுபாணருக்குத் தில்லையந்தணரைத் தெரித்தனர்முழுதிலுந்தெரிந்தார். ()

பின்னருங்கனக மன்றுடையரன்மேற் பெட்புறவாடினுய்நறுநெய்
யென்னியற்பாடி நிவாக்கரையோடு ¶மேழிசைச் சுருதியாழ்ப்பாணர்
முன்னுரையெருக்கத் தம்புலியூரைமொழிந்து பற்பலதலம்பணிந்து
கொன்னெடும்புரிசை முதுகிரியணைந்தார் கொழுந்திலேவயிரமுற்றனையார். ()

தேங்குநீர்வேணிக் குன்றவாணருக்குந் திருவிருக்குக்குறள்சாத்தி
வாங்குதூங்கானை மாடமும்புகழ்ந்து மாறனூர்வந்தபாலகர்தாம்
பூங்கழல்வருந்தா தாரவெண்சிவிகைபுனை மணிக்கவிகைபொற் சின்ன
மாங்கவையளித்தா ரறத்துறைக்கெந்தையீசனென்றுய்தமிழணிந்தார். (உக)

மிளிர்சிவிகையிற் போந்தரத்துறைபழுவூர்விசைய மங்கைப்பதிவைகா
நளிர்புனற்சேய்ஞலூர் திருப்பனந்தாள்நண்ணுமோ மாம்புலியூர்வாள்
கொளிநகர்கடம்பூர் நாரையூர்மிக்கோர் கொள்கருப்பறியலூ ரேத்தித்
துளிமுகிற்சோலைக் கழுமலமணைந்தார் துரியநீங்கியபொருளணைந்தார். (உஉ)

§ முல்லைவாயில்—தென் திருமுல்லைவாயில்.

¶ ஏழிசையாவன—சட்ஜமம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம். இதன் முதலெழுத்துகளே—ச-ரி-க-ம-ப-த-நி.



தேவியிற்றோணி யிறைவனைப்பரவித் திருமனைப்புகுந்து பாணரைப்பாங்
கேவியன்புடைத்தாய் நீற்றணிபேணியிலங்குமுந்நூன் மணங்கண்டு
மேவுபன்மறையு மந்திரப்பரப்பும்விதிமுறை புகன்றவேதியருக்
கோவிலந்தியுண் மந்திரமெனும்பனுவ லோதினரோதுமுன்னுணர்ந்தார். (உங)

அன்னநாளடுத்த நாவினுக்கரசோடளவளா யங்கவரகல
வின்புறுமொழி மாற்றெழுகூற்றிருக்கை யீரடிதன்னின்மேல்வைப்பு
மன்மடக்கேக பாதநாலடிமேல்வைப்பிருக்குக் குறளிராகம்
பன்னுசக்கர மாற்றுதிகளோதிப்பாணர் பண்ணிசைப்பவைகியநாள். (உச)

ஆரிலைச்சூலத்தா ரழலாடியருந்தலம்பல தொழவருளாற்
றேரியற்றாதை யுடன்வரத்தாளச்சிவிகை பொற்கவிகை முன்னிழற்றப்
பேரியற்பீலி பிறங்கொலியார்ப்பப் பெருந்திரைப்பொன்னியின் வடபா
லேரியவடியார் குழுவொடுமெழுந்தா ரிறையுருக்காட்டுமோ றெழுந்தார். (உரு)

பொடிப்புயன் வேளூர்நின்றியூர்நீடூர்போற்று புன்கூரொடுமண்ணிப்
படிக்கரைகுறுக்கை யன்னியூருயர்பந்தணைநல்லூர் திருமணஞ்சேரி
கடிப்பொழிலெதிர் கொள்பாடிதொல்வேள்விக்குடி திருக்கோடி காக்கஞ்சை
யெடுத்தமாந்துறைமங்கலக்குடிவியலூரிறைஞ்சிவண்டமிழ்தொடுத்திசைத்தார்.

மேலதுதேவன் குடியினின்மருந்துவேண்டிலென் றேதியின்னம்பர்
பாலலோசனன் மேவிடைமடக்கிசைத்துப்பஃறலம்பணிந்துவெண்களிற்றுத்
தோலுடையொருவன் வடகுறங்காடுதுறைபராய் வழுத்திவெவ்வேறு
சீலமார்தலமும் பழனமுமேத்தித் திருவையாறணைந்தனர் செல்வர். (உஎ)

தலமதிற்புலனைந்தெனுந் தமிழ்கோட்டல்கொங்கமென் றொருதமிழ்சாற்றி
யலர்பெரும்புலியூரையனைத் தானமணிமழ பாடிகண்டவ்வூர்
மலைவிலிக்கங்கை யாரழலென்றுவாழ்த்து புவைகியக்கானூர்த்
துலையிலிக்கிறைஞ்சியயல் வடகரைமாந்துறை யணைந்தார்மறைத்துறையார்.

பணிவளர்புயத்தா னம்பிலாந்தண்டுறைபராய்ப் பாச்சிலாச்சிராமத்
திணையுறுகொல்லிமழவன்மா மகடனிடரறிந் தெம்பிரான்றிருமுன்
மணிவளர்கண்டர்மங்கையை வாட்டமயல்செய்வதோ யிவர்மாண்பென்
றணிவளைக்கிரங்கி முயலகற்றீர்த்தாரருளினாற் புவியிடர்தீர்த்தார். (உகூ)

அயற்பலதலம்பைஞ்ஞீலி யீங்கோயிலங்குறீஇக்கொங்கிலுள்ளனவா
முயத்தரும்பொன்னித்தென்கரைச் §செங்குன்றூர்நணுப்பதிபணிந்துறைநாள்
வியக்குமவ்வினைக்கிவ்வினையெனப் பனிநோய்வீட்டினீள் கொடிமுடியேத்தி
வயப்பதிவெஞ்சமாக்கூடல் கருவூர்மாணிக்கமலைப ராய்த்துறையே. (௩௰)

§ செங்குன்றூர்—திருச்செங்கோடென வழங்கும்.

துரிசறுமாலந்துறையொடு திருச்செந்துறைகொள் கற்குடிசிராப்பள்ளி
சரியிலானைக்காத்திருமயேந்திரம் பொற்றவத்துறைபாற்றுறை யெறும்பீச்
சுரநெடுங்களங்காட்டுப் பள்ளியாலம்பொழிலொடு துலங்குபூந்துருத்தித்
திருமலிகண்டியூர் சோற்றுத்துறைமெய்த் திருவேதிக்குடிவெண்ணிப்பதியே

பிறபலதலங்கள்சக்கரப் பள்ளிப்பிள்ளைமங்கையதியாலந்
துறையொடுதிருச்சேலூர் திருப்பாலைத்துறை நல்லூர்
பற்பலவேத்தியிறைகருகா வூரினிலத்தர்வண்ண மென்றிசைத்தவளிவணல்லூ
ருறுதிருப்பருதிநியமமென் பூவனூரொடாவூர்நல்லூரேத்தி. (௩௨)

திருவலஞ்சுழிமேற்றளியொடு சத்திமுத்தமுமுத்தமிழ் சேர்த்தி
யிருமுதுவேனிற் பருவனுளடுத்தவின்னல் கண்டண்ணல் பட்டீசர்
பொருவெயிறணித்துவிரி நிலாவெறிப்பப்பூதராலுய்த்தமுத்திழைத்த
வருமணிப்பந்தர்பெற்று மேலவ்வூர்க்கருந்தமிழலங்கல் செய்தணிந்தார். (௩௩)

வேறு.

பின்னர்வட தளியொடிரும்பூளையரதைப் பெரும்பாழிசேறைநல்லூர்கு
டவாயிற்சீ, ரன்னநறையூர்புத்தூர் சிவபுரத்தோடாதி குடமூக்குக்கீழ்க்கோ
ட்டமெய்தி, நன்னரினெம்மிறையே யென்றுறுகாரோணநா சேம்வாழ்த்தியி
டைமருதூர்நண்ணிப், பன்னருமோடே கலனென்றிசைத்துத் தானம்பல
பணிந்துகுரங்காடுதுறையும்போற்றி. (௩௪)

ஆவடுதண்டுறையினிடரினு மென்பாடலணிந்தமலனருளிய பொற்கிழி
யைவேள்வி, மாவினைத்தந்தையர்க்குதவித் திருக்கோழம்பம்வை க்ன்மாடக்
கோயினல்லசெம்பொற், றூவியழுந்தூர்பல கண்டிறைஞ்சிவாழ்த்தித் துருத்
திநகர்பரவிவரைத் தலையென்றேத்தி, மூவனகர் ‡திருமயிலைச் செம்பொற்
பள்ளிமுளைத்தவிளநகர்கண்டார் முழுதுங்கண்டார். (௩௫)

குளிர்பறியலூரொடு மற்றுளவும் வேட்டக்குடியுமடுத்திசை மாலைதொடு
த்துச்சோலை, வளர்தருமபுரம்பணிந்தியாழ் முரிமாதர்மடப்பிடி யென்றெடுத்
தோதிநள்ளாறெய்தி, மிளிர்போகமார்த்தவெனப் புகழ்ந்துதானம் வேறுமு
றைவணங்கியுயர் சாத்தமங்கை, யனிநீலநக்கர்மனைய முதுங்கொண்டாரன்
னைதிருநிலையழகிய முதமுண்டார். (௩௬)

கிளக்குமதுதலத்தொடு நாகைக்காரோணங்கீழ்வேளூ ரொடுபிறவுபணி
ந்துசெங்கெல்வளத், தடஞ்சூழ்மருகலிலோர்வணிகனுவிவாளரவம்பருகவ வன்
மணக்கும்பேதை, துளக்கெரியின்மெழு கெனவுள்ளுருகியாவி சோர்ந்தலறு
மோதைசெவித்துணையினேறத், தளர்ச்சிதருமோவுடையா யிவளுக்கென்று
சாற்றியளித்தாருயிரைத்தாளம்பெற்றார். (௩௭)

‡ திருமயிலை—மாயூரநகர்.



வடிநெடுங்கட்புகார் வணிகன்மகட்குமாவி வணிகனுக்கு மணமுடித்துத்
திருச்செங்காட்டங், குடிப்பாவியக்கமும் வேதமுமென்றேதிக் குளிர்புகலூர்
வர்த்தமானீசம் போற்றி, யடிமுருகனூர் மடம்புக்குழித் தென்னூரராசுவர
வறிந்தவ்வூரணைகுவார்விற், குடிபணிந்து சாநாளென்றேதியா ரூரடைவோ
மென்றிசைத்திருக்குக் குறளுஞ்சாற்றி. (௩௮)

பதியதனிலந்தமாயுலகென்றேதிப்பவனமாச் சோடையாவென்று மே
த்தி, மதிமுடியானற்றலங்கள் பனையூர்சோலைவலி வலங்கோளிலிவாழ்த்திப்
புகலூர்நண்ணி, முதியகுறிகலந்தவிசையெனுநூற் சாற்றிமுருகனூர் சிறுத்
தொண்டர் நீலநக்கர், விதியொடவர் தமக்கருள் செய்தரசோடாங்கண்மேவி
னூரயல் பரவவேதவாயார். (௩௯)

புடைவயல் சூழம்பரமாகாளம் புல்குபொன்னிறமென்றறைந்து கடவூரிற்
சார்ந்து, சடையுடையாயென விளம்பி †மயானம்போற்றித் தகுகலையனூரமு
துண்டாக்கூரெய்தி, விடையுடையான் மீயச்சூர்பாம்புரத்திற்சார்ந்துவீழிமி
ழலையிலர சோடிறைஞ்சியாங்க, ளுடையனாயாயொடுசடையார் புனலென்
றேதி யொருதிலதைபேணு பெருந்துறையுமெய்தி. (௪0)

வாகீசரொடுமிழலையெய்திப் பன்னாள்வைகிய நாட்சிரபுரமா சனங்கண
ண்ணைப், பாகூரின்னமுதூட்டிக் கனவிற்கண்டபடி தோணிபழகனையத்தளி
யிற்கண்டு, மாகாதன்மைம்மருபூங்குழலென்றேதிவறந்த சிறுவிலைநாளவ்வள்
ளலீய்ந்த, சேகார்பொற்காசு பெற்றுவாசி தீரச்செந்தமிழ் செய்தார்பசி நோய்
தீரச்செய்தார். (௪௧)

அவ்வழிவாஞ்சிய *மாலங்காடே வேளூரணிசாத்தங்குடியொடுதென்
கனைவீரஞ்சேர், செய்விளமர்பணிந்துதிருவாரூராறுய்த் திருக்காறுயிற்றேவூர்
திருநெல்விக்கா, வெவ்வமில்கச்சினந் திருத்தெங்கூர் கொள்ளிக்காடிகை
கோட்டூர் வெண்டுறைதண்டலையுஞ் சோலை, மௌவல்கமழ்திருக்களரு மா
சோடெய்திவாழ்த்தினூர் திருவருட்பான் மணத்தவாயால். (௪௨)

மறைவனத்தில் மறையடைத்த மணிக்கபாடம் வாகீசர் திறக்கும்வழி
வகுத்துமற்றை, யிறையவன் மேற்சதுரமறை யென்றுபாடி யிணைக்கதவம
டைத் தருளிவாய்மூரீசர், நிறைகனவு தெளிந்தரசுசெல்லச் சென்று நிலவுத
ளிரிளவெனவோர் பதிகஞ்சாற்றிக், கறைமிடற்றூர் மறைக்காட்டிலணைந்தார்
யார்க்குங்காணுனாக் கண்டமுத கனிவாய்மைந்தர். (௪௩)

ஆயமறைக்காட்டினில் வீற்றிருக்குமன்னுளணி பாண்டிநாடனைத்தும
மண்பேய்கொண்டு, நோயடையக்கூன் வழுதிமருளக்கண்டு நடங்கிடை

† மயானம்—திருக்கடவூர் மயானம்.
* ஆலங்காடு—திருத்தலையாலங்காடு.

மங்கையர்க்கரசியாருந் தேர்ச்சித், தூயவினைக்குலச் சிறையுமென்றுற்ற
துன்பமறுத்தின்பமிகச் சைவமோங்கத், தாயனையாயெழுந்தருள்கவென்று
நீட்டித் தமிழ் விரகரிணையடிக்கீழ்ச்சார விட்டார். (சச)

விட்டதுகொண்டெழு மமைபத்தரசு பொல்லாவிகட முறைப்பறிதலை
யரிழைக்குமாயை, மட்டலநன்றுறு மலவெனுங்கானன் மைவளங்கெழுவே
யுறுதோளிபங்கனென்றே, யிட்டதமிழியம் பிமுத்தின்சி விகைமேற்கொண்டி
லகுமணிக்குடை நிழற்றவடியாரீண்டத், தொட்டமணிச்சின்னவொலி போர்
ப்பமுத்தின் சுடர்மணித்தண்பந்தர் நிழல்துலங்கச்சென்றார். (சரு)

வருகோடிக்குழகர் கடிக்குளமிடும்பாவனமுசாத்தான மொடுகொடுங்
குன்றேத்தித், திருவாலவாயுறுங்கால மைச்சர்போந்து சென்னிமிசை முகிழ்த்
தமலர்க் கரத்தராகி, யிருபாதம் வணங்கலுநும்மரசியாருக்கின்பமோ வென
வடிகளருளாலின்ப, மொருவாதென்றகமகிழ்வுற்றெழுவார்க் கன்பருதுக்கா
ணுமாலவாயென்னத் தாழ்ந்தார். (சசு)

அதுகணத்தவ்விருவர் பெயராலவாயாவதுவுமிதுவெனும் பதிகத்தமை
யப்போற்றி, மதுரைமறுகடைந்திருக்குக் குறளுஞ்சாற்றி மடத்திலெழுந்
தருளி மதியமைச்சர் செய்த, விதமலிசீருவந்திருப்பஞாயிறுதி வெங்கோ
ளுநல்ல வெனப்பகர்ந்தார் வெல்ல, வெதிரிருள் செய்தமணிருளையழிப்பான்
போல யிரவியொளித்தனன்மடவோரினைய செய்வார். (சஎ)

பன்னகமென் குருளையிடி யொலிகேட்டென்னப் பாசமையகோளரியார்
வந்தாரென்று, சின்னவொலிதிசைப் போர்ப்பத்தலைகள் கீறுச்செவிதகர்ந்து
தென்னவர்கோனோடு மெண்ணி, மன்னருமந்திரத்தழல் விட்டேறுதாக வயங்
குசுடுதழற்கொடுபோய் மடத்திலுய்ப்பப், பன்னுமடியவர்க்குறு மோசொக்
கேயித் தீபையவேசென்று பாண்டியர்க்கா கென்றார். (சஅ)

என்றலுமீனவனுடலிலத்தீமேய விதுவெதுப்பென்ற மணர்கண்மந்தி
ரங்களாலுந், துன்றுபிரம்பாலுமயிற் பீலியாலுந்தொழுது துடைத்திட நெய்
வார்சுடர்போற் பொங்கிக், கன்றுபிரம்பெரிந்து கரமெரிந்து பீலிகரிந்து சுடு
நாறியயற் கண்ணுந்தாவிச், சென்றதருட் பிள்ளைசொல்லால் வந்ததீயைத்
தீர்க்கவந்த தெய்வதமுந்தீய்ந்ததன்றே. (சகூ)

உலகிருளை யொழிக்குந்தானொழியப் பாயலுடையிருளை யொழிப்பார்
கண்டு வப்பான்போலச், சலதிமுகட்டினில் வெய்யோனுதிப்பத்தேமாந்தளிர
ழலிட்டெனவழுதி துயருங்காலை, யலைபொழிக்கண்ணரசியாலமைச் சரெய்
தியருந்தமிழ்வித் தகர்க்குரைப்புவஞ் சீர்வெப்பான், மலைபிணியும மண்பிணியுந்
தொலையக் காட்டுமோவுரி யென்றிறைகோயில் வாழ்த்திப்போந்தார். (ருo)



போந்தளவிலரகர வென்றொலிவிண் போர்ப்பப்புது நிலவுக்குடைநிழற்
றச் சின்னமார்ப்ப, வேந்தனகம்புகுந்தரசன் முடிக்கட்பீடமே லெய்திவல்ல
மிணக்குழுவையஞ்சும், பூந்தொடிமுன்மானினேர் விழியென்றேதிப் புரவ
லர்க்கும் புனைபெயரீராறுபூண்டு, வாய்ந்தகழுமலமெம் மூரெனலுமன்னன்
மனமமணர் மயக்கினைவிட்டொரீஇயதன்றே. (ருக)

மொழிவழுதிப் பிள்ளையார்முகமும் பொல்லாமூகர் முகமும்பார்த்தென்
னோய் தீர்ப்பார்க்கே, வழியடியேனெனலு மிடப்புறங்கொண்டீனர் மாற்றி
யிடமந்திரமாவது நீறென்றே, கழுமலக்கோன் வலப்புறங்கொண்டின்னதீர்ப்
பக் காணருமுத்தியு நரகும முதநஞ்சுந், தழுவினபோல் வலங்குளிர் செய்தி
டந்தீமூளச் சமணினத்தை வெகுண்டொழிந்தான்றமிழ்சேர் நாடன். (ருஉ)

இடமருங்குந்தமிழ்விரகரருளானோய் தீர்ந்திறை மகனுமடிமைபுகவமண
ரெங்கட், கடவுள்வலிநங் கடவுள்வலியுந்தீட்டிக் கனலிலிட்டு தேர்துமெனக்
காழிவேந்தர், மடலவிழ்புத்தகம் பகுத்துபோக மார்த்தவண்பதிகமேந்தி நள்
ளாற்றிறைமேலார்வ முடையதளிரிளவளரென்றொருபா வேத்தியொள்ளெரி
யினடு வணிட்டாரொளி நீறிட்டார். (ருங)

இட்டவேடொளிபசிய தாகப்பொல்லா வேடரிவண்டுகளாகத் தோரார்
பின்னும், பட்டதிரையாற்றினிலிட்டறிதும் யாதும்பழுதுபடிற் கழுமுனையிற்
படர்வோமென்ன, வொட்டலுமீனவனொடு நீள்வைகைப்பேராற்றுறுகரை
யினின்றமணரோலைகீழ்பால், விட்டகலப்பிள்ளையார் வாழ்கவென்று விடு
மொழிப்பாசுரமெதிர் நீர்விரைந்ததன்றே. (ருச)

அன்றுபுனலெதிரேறுமேடு கொள்வானமைச் சர்பரியேறிவணபாசுரஞ்
செல்லாறே, சென்றுழியாயிடைவன்னி யெனும்பேரேற்றிச் சிவஞானப்பிள்
ளையருளேறப்பாட, நின்றதனையமைச்சர்கொண்டு கரையிலேற நிருபன்வியப்
பேறவமண்கழுவிலேறக், கன்றுதலில் கன்னிநாடெல்லா நீற்றுக்காப்பொடு
மைந்தெழுத்தேறிக் கலந்தவன்றே. (ருரு)

கலந்தவழி முறைநிறுத்திப்பொற்கைபூண்ட கவுரியர்பிணிக்காளைக்காழிச்
செல்வர், நலம்புனைந்து முழுதிலும்பொன்றுறுனென்று ஞாலம்வியந்திடப்
பாண்டியரசியாரோ, டிலங்குமதியமைச்சனொடு வழுதிபோற்றவிறைவன
மேனிணைப்பதேநியமமென்றே, ரலங்கல்புனைந்துழிக்காழித் தந்தையார்தாம
ணைவுறக்கண்டகமகிழ்ந்தா ரமணைவென்றார். (ருசு)

முற்றறிவிற்பருவத்தேயாண்டதோணிமுதல்வனையு முதல்வியையுநினைந்
துள்ளூறி, மற்றவர்மேன்மண்ணி நல்லவனமென்றேதிவழிபடு மூவரும்போ
தச்சிவிகைமேற்கொண், டுற்றபலபதி பரங்குன்றுப்பனூர்புத்தூரோடு பூவ
ணஞ்சுழியலுயர் குற்றால, மற்றமில்நெல்வேலி புடைமருதூரேத்தியணியிரா
மீச்சுரம்போற்றிசைத்துக் கீழ்பால். (ருஎ)

கோணமாமலேகே தீச்சரகின்றேத்தியாடானைபுனவாயில் கூறித்தேர்ச்சி, வாணன்மணிமேற் குடிகண்டொருகூவர்க்கும் வழியருளிக்களர்ப்பாதாளீசம் போற்றிப், பேணுமுள்ளிப் பெருநதியிற்கொள்ளம்பூதூர்ப் பெருமான்மேற் கோட்டமே கமழுமென்ருேர், தோணியாரருள்படைத்தோ ரோடமேறிச் சொல்லலங்கல் புனைந்துதிருநள்ளாறெய்தி. (ருஅ)

பாடகமெல்லடிபாடி வாதிற்காத்தபரிசோதித்தெளிச்சேரி யிறைஞ்சிப் புத்தூர்க், காடிடிவீழ்த்தருளி யொழிந்தவரைவாதிலடிப்படிந்திக் கடவூர்புக் கப்பர்வாழ்க்கை, தேடியுயர்பூந்துருத்தி புகுமுன்னன்ஞர்சென்றெதிரேதெரி விலராய்த் தெரிந்துபோற்றிக் கூடுமணிச்சிவிகைபுறம்பரித்தாரென்னக் குதித் தவனைப்பணிந்தவ்வூர்க்கொடுபோய்ப்போற்றி. (ருகூ)

நாவரையர்மடத் தமுதுவிரும்பிக்காஞ்சிநகர்முத லங்கவர்பணிந்தநலம் பாராட்டிப், பாவியமண்குறும்பெறிந்தவாகைகூறிப் பதிபலகைதொழவேவி நளிநீர்ப்பொன்னி, மரவடபால் நெய்த்தானந்திருவையாறுவளர் பழனம்பணிந்துகழுமலம் புக்காதி, தேவன்மிசை யுற்றுமையாம்பதிகம்பாடித் தில்லைநகர் பணிந்துதிருத்தினையூர் போற்றி. (கூ0)

மாணிகுழிகன்னிவனம் வடுகூராதிவக்கரையோடிரும்பை மாகாளமேத்தி, யாணமலியதிகைகுண்டைகுள்ளா மாத்தூரதிற்குன்றவார்சிலையாமலங்கல்சாத்தி, நீண்மதில்சூழ் கோவலரையணிநல்லூர்பின்னிலவண்ணுமலை பணிந்தவ்வரையிலெம்மான், ருண்மலர்க்கண்ணுமூலை பூவாரென்ருயந்துசாற்றிஞரணியதிருவோத்தூர் சார்ந்தார். (கூக)

மற்றதிலாண்பனை கனியக்கனிவாய்பூத்து மாகரலுங்குரங்கணிமுட்டமும் வந்தேத்தி, பென்றுபுனற்காஞ்சியினில் மறையானென்றும்யமகமொடு மின்னிருக்குறளும்போற்றி, யற்றமில்காமக்கோட்ட நெறிக்காரைக்காடனேகதங்காபதந்திருமேற்றளியுஞ் சூழ்ந்து, சுற்றியபாலாற்ருேடு போய்த்திருமாற் பேறுதுதிவல்ல மிலம்பயங்கோட்டூர் கண்டேற்றி. (கூஉ)

விற்கோலந்தக் கோலமூறலாதிவிரிபழையனூர் பரவியாலங்காடர், சொற்கோலக்கனவுணர்ந்து பதிகமாலைதுஞ்சவருவாரெனுஞ் சொற்ருெடுத்துச்சூட்டி, நற்கோலப்பதிய தினிலிருப்பார்வாய்மைநழுவாமை நயந்திசைத்துப் பாசூரெய்தி, யெற்கோலஞ் சிந்தையுடையாரென்றேத்தி யேதமில் வெண்பாக்கநகரினிதுவாழ்த்தி (கூங)

வரத்துயர்காளத்திவரைபணிந்தவ்வூர்க்குவானவர்களெனுமாலைவகுத்துச் சோலை, பரப்பியகேதாரங்கோக ரணந்தெய்வப்பருப்பதமிந்திர நீலப்பருப்பதாதி, யிருக்குமலைபதிற்பரவியெந்தையாரென்னிசைமாலைபுனைந்துவேற்காடுமேத்தி, யுருக்கமொடு *வலிதாயம்பரவி யொற்றியூர்க்கண் விடையவனெனும்பாவுரைத்துவாழ்நாள். (கூச)

---

* வலிதாயம்—பாடியென வழங்குகின்றது.



தேமருபூம்பொழில்மயிலாப் பூரிஞய்கன்சிவனேசஞர் மகளேழ்பருவஞ் செல்ல, மாமுனைவாளெயிற்றரவ முருக்கவாவிமரிந்தவுடலெற்பு மணித்தசும் பயெம்மான், பூமணிமுன்றிலிற் கொணர்வித்தோர் மட்டிட்டபுன்னையென வொருபதிகம்புனைந்துமாதைச், யேமுறுமாறெழுவித்துவான்மியூர் புக்கிறைஞ்சிஞரெவ்வுலகு மிறைஞ்சவந்தார். (கூரு)

வேறு.

கண்ணூரும்விடைச்சுரம் போர்திவர்வண்ணத் தமிழ்பாடிக்கழுக்குன்றெய்தி
யெண்ணூருநிறைகாதல் செய்கோயில்கழுக்குன்றே யெனுநூற்சாற்றிப்
பண்ணூரச்சிறுபாக்கத்தாட்சி மொழிந்தரசிலியும் பனங்காட்டூரும்
தண்ணூரன்பொடும்வணங்கித்தில்லைநகர்மீண்டணைந்தார்தமிழ்ப்பாவுண்டார்.

அக்கனகமணிமன்றிலரு மருங்கையடி[illegible]
[illegible]
புக்கடருஞ்சினைக ட்டுறும்பைங்கிளி செந்தமிழ்தெரிப்பப்பூவைசேட்கு
மிக்கபொழில் புடையுடுத்தகாழிபுரத்தந்தையார் விருப்பினேற்பத்
தக்கமனத்தொருதோணித் தாதையாரடிபணியார் சண்பைவந்தார். (கூஎ)

மாநகரமணித்தாக வெய்துழிவண்டார்குழலென் மாலைசாற்றித்
தேனகுதார்நறையிதழிப் பெரியநாயகன்றனைத்தாள் சென்னிசேர்த்திப்
பானல்வயற்காழிநகர்சேர்மினென வொருபதிகம் பரவிச்செம்பொன்
வானகுமாளிகையணைந்தார் நீலநக்கர்முருகர் புகமருவிவாழ்நாள். (கூஅ)

பழமறைதேரந்தணருஞ் சிவபாதவிருதையரும்பலரும் வேழ்விக்
கிழமைதனக்குரிய மணக்கிழமைவினைமுடித்து மெனக்கிளக்குநல்லூ
ரழல்வினைதேர் நம்பாண்டாரருங்குலத்துமகட் பேசியமலன்காழி
மழவிடையான்றிருமணியைச்சிவிகைமிசைக்கொடுபோந்தார்மறைகளார்ப்ப.

நிறைக்கோலமதிகண்ட நெடுங்கடல்போலியங்குளிர நிகழுஞ் சைவத்
துறைக்கோலந்தலைபெடுப்பழகினுக்கோரழகு செயத்தொடங்கிஞற்போற்[ல்
சிறைக்கோலத்தும்பிபடர் நறைக்கோலக்கொன்றையிஞர்செவிக்கட்டீஞ்சொ
மறைக்கோலம் புனைபவரை மணக்கோலமதுபுனைந்தார் மறையோரெல்லாம்.

விதிமுறையால் மறைச்சடங்கின் விண்ணவர் பூமழைபெய்ய விளங்குஞ்சோதி
மதிவதனத்தருள்பொழியச் சின்னவொலிதிசை போர்ப்பமருங்குபோற்றப்
பொதிமணிப்பூஞ்சிவிகையிழிந் தங்கமலத்தாள் பெயர்த்துப்புனை முத்தாரக்
கதிர்மணிப்பந்தரினடந்துகடி மணப்பந்தரினிருந்தார் காழிவேந்தர். (எக)

மங்கலதூரியமுழங்க மாதர்கள் பல்லாண்டிசைப்பமறைகள் வாழ்த்தப்
பொங்குமெரிவலஞ்சுழலப் புண்ணிய தெய்வங்களிக்கப் புலவரேத்த
வங்குளநல்லடியவர் பேரானந்தக்கடல் மூழ்கவகிலமெல்லா
நங்கள்பெருமான்மகஞர் நம்பாண்டார் மருகரென நலம்பாராட்ட. (எஉ)

குழுத்தனகை முகத்தினராய்ப் பேருவகை தலைக்கேறக்குலவு நல்லூர்
நெறித்தருமப் பெருந்தகையார் கிள்புகலிப் பெருந்தகையார் நீண்டகையிற்
கறுத்தகுழல் வெளுத்தநகை சிவத்தவிதழ் பசுத்தகுழைக் கதிர்வேலுண்கட்
பொறித்தநுதற்செறித்தவளைப் பூங்கொடியையாங்களித்தார்புனைநீர்க்கையார்.

ஒருமாதைமுயலகனீத் தொருமாதைத் திருப்புனைவித் தயருங்கூடல்
வருமாதையடிப்படுத்தி வழிமாதை யெழுவித்தவாக்கின் ஞானத்
திருமாதைப்புணர்ந்து பெருந்தரைமாதை யிருடைத்தார் தெண்ணீரோடு
தருமாதைக் கைப்பிடித்தார் வரைமாதைப்புணர்ந்தவர் தாடணவர்மாதோ.

பஞ்சியொளி விஞ்சுமலர்ப்பாட்டளி செய்கிண்கிணிக் கார்பதுமம்பூத்த
கிஞ்சுகமென்மடவரலோடங்கி வலம்வருவாரைக் கிரியைசான்றோ
ரஞ்சொலிவளடிமலரை யம்மியில்வைத்தருளுமென வணிசேர்திங்கட் [வார்.
பிஞ்சுமுடியனை *நல்லூர்ப்பெருமண மென்றனர[illegible]யர்த்துஞ்சொல்

ஈதமலன்திருத்தாளுக்கியற்றுவது முறைமையென வெழுந்துபோந்து
நாதனைநல்லூரரசை நமச்சிவாயப்பதிக நவிற்றலோடும்
பூதலமுமீதலமு நீடொளியவாடேரிகால் பொருப்பாயோங்கி
வேதமுதலளப் பரியான்விளங்க வதிலடியவரைவிடுத்தல் செய்தார். (எசு)

இன்னிசையாழ்ப் பாணரொடு நீல்நக்கர் சிவபாதவிதையர் மூந்நூன்
மன்னியதோட்டிரு முருகர்வழியடியாரெனைப் பலருமடியாக்கற்பிற்
பன்னியரோடுறு ஞானப்பாயொளியிற் புகவேவிப் பணிக்கைதோய்ந்த
கன்னியொடுமெதிற் புகுந்தார்கனலோடும் புனலறியுங் கவிதைவல்லார். (எஎ)

பொறிவாகைமாறனுட லெழிலாகப் பூதியரும் பொருளுண்டாக
நெறிவாய்ந்தவைதி கமுஞ்சைவமும் வீறுண்டாக நிகரில்காழி
மறிவார்ந்த கரதலத்தார் மகவானோர் புகுந்தமுத்தி வழியென்றியார்க்கு
மறிவாகத் சிவலிங்கக்குறியாயிற்று யிடைமுன்னலங்கு செந்தீ. (எஅ)

வேறு.

இன்னவாறு நிகழ்ந்ததன்மேலெழிற் சீகாழிப்பதிநாத
னென்னவூர்திபுள்ளூர் தியானையூர்தியாதியரை
துன்னலோடு மவரொய்தியுலசேழீன்ற சிற்றூரக்
கன்னிபாகத் திருந்தானைக்கசிந்து பணிந்து முன்னின்றார். (எகூ)

செம்மைக்கருணைக் கடலனையான்றிரு முன்னின்றோர் தமைநோக்கி
யெம்மைதலங்கடொறும் பதிகத்தேத்துஞானக் கவுணியனை

* நல்லூர்ப் பெருமணம்=ஆச்சாப்புரமெனப்படும்.

169



யம்மைப்பொலஞ் செய்விம்பத்திலாவாகனஞ் செய்தென்னுளு
மும்மைப் பயன்பெற்றுலகுய்யமுது பூசனை நித்தியமியற்றி. (அ0)

நிகழ்சித்திரை பங்குனிமாத நிறையாதிரையும் வைகாசிப்
பகர்மூலத்துமாவணியைப் பசிமாதச் சதையத்து
மகரமதியிற் கதிர்மதியமருவு நாளுமிதுனமதி
திகழவருரோகணியுமென்றேழ் தினத்துநைமித்திய மியற்றி. (அக)

புனாயில்கேழ்வியிமையோர் காள்புகல்பங்குனியிற் சதையத்தி
னிரைசெய்மணிப்பூங்கொடியேற்றி நெடுமொன்றலை நாடோர் நடத்தித்
திரைசெய்தீர்த்தமாதிரை நாடிளைத்தாடுதிரென்றருள் செய்ய
வரைவில மரராண்டுதொறுமகிழ்ந் திவ்வாறுபுரிந்தனபால். (அஉ)

ஓதுமினையநல் விழவுக்குதவுந் திறலோ ருயர்ந்தசதி
மீதுபுகுவாரது புரியார்வெவ்வாய் நிரயத் திடைபுகுவார்
கோதில்ஞானப் பிள்ளைதனைக் குழைந்துபணிந்தோர் மறலிநகர்
போதலறியார் தொழவேண்டிப் போந்துவழிக்கண் மாய்ந்தவரும். (அங)

வீடுபெறுவாரிச் சரிதை வினவினவரும்படித்தோரு
நீடும்பரமமுத்தியெலா நெறியேதுய்த்துப் பெ[illegible]றிமணிச்சூட்
டாடுமரவமசைத்தவன்றுளனைவர் ரென்னவருட்சூத
னுமெறைதேர்முனிவரர்க்கு நவின்றவாறு நவின்றனனால். (அச)

திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருவவதார
வத்தியாயம் முற்றும்.

ஆக. திருவிருத்தம். கஉஅஉ.

# தீர்த்தமகிமையத்தியாயம்.

திங்கள்முடி யணிவேணிச்சிவபெருமானடித் தொழும்பின்றிறத்தைநாடிப்
பங்கமில்சீரொளிக்கொளியாய்ப்படர்ந்த கவுணியப்பெருமான்பரிசுகேட்டோம்
புங்கவவின்னமுந்தீர்த்தந்தனித் தனிசொற்றனை தொகுத்துப்புலப்பாடெய்த
விங்கருளுகெனச்சூதனங் கவருக்குரைத்த முறையியம்பலுற்றும். (க)

ஞாலப்பேராழிவளையுலகனைத்து நிலைகுலைய நலிந்துமூழ்கி
[illegible]

சோலப்பேராழியம்புட் பொருப்பரனைப்பணிந்து வரங்கொண்டதீர்த்த
மோலப்பேராழிவைப் பிலதுபிரமதீர்த்த மெனவோங்கிற்றன்றே. (௨)

ஒருமறையோனீராடிச் சேட்டுலகுதனைப் பயந்தானுலவாத் தெய்வத்
திருமறையோனென நின்றுன்றொருமறையோன கன்சுனைக்கட்சேர்ந்தவாறே
விருமறைநூலியல் விரித்துவீட்டுலகுதனைப் பயந்தானெனிலித் தீர்த்தம்
பெருமறைநூலறி வதல்லாற்பிறிதொரு நூலோவறிந்துபேசு நூலே. (௩)

ஒருணர்வாலிருமை வினைமும்மலங்களூற்பிறப்பு மொழிப்பானைந்து
பேருறுமிந்திரியங் களாறடக்கி யேழிசையும்பிறங்கவோதி
நீருறுமெண்குணத்தோன்பாணிக ழொளியயாபத்தை நீக்குங்காழிக்
காருறுகண்டனை யறிவாரவரே கண்டறிவாரக் கடவுட்டீர்த்தம். (௪)

மின்மணிநூபுர மலம்புமினிரிளங் காலரமாதர்வி மானஞ்சூழ
வென்மணிக்காலினை வருதாதிலைக்க வரிகாலசைப்பவேறிச் செல்வார்
நன்மணிவார்சிறையறு காலிசைமுரலுமொருகணைக் கானனிப்புத்தேள்
பன்மணிக்கான் மலர்த்தடத் திற்றவழ்பசுங்காலஃதுடலிற் படுங்கால்மாதோ.

கூர்த்தவருந்தவம் பன்னாளிழைத்து முயர்மதிட் காழிக்குன்றின்மேய
தீர்த்தனருள்படைத் தொழிலாவலிபடைத்தனேனு மயன்றிறமென்னேயோ
வார்த்ததடந்திரைக் கடவுட்டீர்த்தமது படிந்துலகை யளித்தானன்ன
போர்த்தடமாடுநரெல்லா மேற்படையாவீட்டு நெறிப்பெறப்பெற்றாரே. (௬)

வண்டறுநறைமலர் தூய்வணங்கினர்பால் மோனமுத்திவழங்குமெம்மா
னண்டகோடிகள்பொதிந்த சிற்றுதரப் பூவையிடத்தருகண் காட்டப்
பண்டைநூல்போற்றுதிரு நிலையழகி கண்ணருளே பசுக்கள்யாவு
முண்டகமாசகற்றி யொளிதருபுனல் போற்றிருமுன நின்றொளிருமீதால். ()

முத்தலைவையேந்தலினான் முடிவிலாரணங்காட்சி முடித்தவாற்றான்
மெய்த்தவராடகம் பெறலாற் சுற்றுமலங்களைதலினால் விமலந்தன்னாற்
சித்தியருட் கண்பொலியுந் தரத்தாலும் பேரரவந்தரித்தலானு
மித்தகையவிதிதடந்தான் மத்தமலர்த்தொடைவேணி யீசன்போலும். (௮)

திரையாட்ட நிலமடந்தை திருமுகமோவரிவிழி யோதிலகமேயோ
வரையாமங்கலநாணோதிரு மகட்குமருமலரோமணிப் பூண்வைப்போ
புரைதிருமாலுலகின் மேலுலகோவேனும் பிரமபுரியிலின்னீர்க்
கரைகாணாரேவருளர்மற்ற வரன்றேமுத்தியெனுங் கரைகாணாரே. (௯)

மறைநான்குவல்லபிரான் பதினறுநான் கோடிரண்டு வகையாங்கோடி
முறைநான்குந் தருங்கடவுட்டீர்த்த மெலாந்தொகுமிதனின் முழுகியண்டத்
துறைநான்குகதியும் வகுத்துறுநான்கு பவத்தினில் வீழ்ந்துழலாதியார்க்குந்
துறைநான்கு மளித்திடுமோரொருநான்கு கோணமுறத்துலக்கினனால். (௧௦)



வேறு.

கோன்மதிநாளில் வெய்யோன் குலவியதினத்திற்கங்கை
மாநதிமுதலாந் தெய்வமணிநதியெனைத் தூமீண்டித்
தானதிலுறலாலன் றட்டமதுபடிந்தோர் தீர்வா
ருனவல்வினையுமாயை யுற்பவவினையுமாங்கே. (௧௧)

ஆயமாமதியுவா வினருந்ததிக்கிறைவனாதி
தூயநீர்க் கங்கையாதி சுரபதியாதியோகத்
தேயவன்சனகனாதி யெய்துவரிதுபுக்காடப்
போயதுபடிவாரெய்தாப் பொருளெவை புவனமூன்றில். (௧௨)

முன்புறுமேடத் தென்றாழ்முளைத்த நாளிடையுவாவி
னன்புறமின்னீராடி லரும்பவக் கடலிலாடார்
பின்பு மோரயனஞ் சேயாற்பேதுறு மடவார்தோயி
னின்புறுமழலைச் செவ்வாயெழின் மகப்பெறுவருண்மை. (௧௩)

ஓரிரண்டயன மாண்டினு தையங்கள்வெதிபாதங்கள்
சேர்தருதினம் புக்காடிற் செங்கதிர்ச் செல்வனாதி
யேர்தருகோளு நாளு மின்னறீர்பலத்தை நல்கக்
வார்கடலாடை மாதைமணந்துலகளிப்பான் மன்னே. (௧௪)

துளையெயிற்றழல்வாய்ப்பாந்தள் சுடர்களைத்தொடு நாட்போன
[illegible]யெயிற்றானவ மூன்றாலறவமாட்டறல் பெய்தீர்வார்
களைகணாயுலகமூன்றிற் காவலுநருவு மெய்தி
முளைமதிக்கண்ணியெம்மான் மூதுலகடைவரம்மா. (௧௫)

வீழியங்கனிவாயாளை வேதவாணியர்க்கு நல்கி
னூழியினடுவெட்டுஞ் சுமரவனைப் புனிதனாவார்
கோழிளம்புனிற்று நல்லான் கொடுப்பரேல் மயிர்க்கோராடை
வாழிநாளளவுந் தாவாவளனொடுங்க யிலைவாழ்வார். (௧௬)

எரிமணிப்பொலன் கோட்டோர் சாரியல்புளி மனுவொன்றாய்ந்தோர்
விரிகடலுலகத்தான்ற விழுத்தலமெவற்றுங்கோடி
தெரிதருமனுக்களாய்ந்த திண்பலம் பெறுவாரென்றே
கரியுரிவனைந்த வெண்டோட் கண்ணுதல்கழறினானால். (௧௭)

அரிமலர்க்கிழவன்றீர்த்தத் தாழ்ந்த புள்ளினங்கண்மீக்கன்
விரிசிறைவிதிர்த்ததெண்ணீர் மேனியிற்படினுமன்னார்
முரிதிரைமுகட்டிற்றோன்று மொய்யொளிச் செல்வன்போன்று
பிரிவரூர்மாயை போயப்பெரு வெளிக்கருகராவார். (௧௮)

உலப்பிறென்புலத் தார்வேழ்வியூட்டு புதிலதமீந்தோ
ரலக்கண்வல்வினை போயீசனருள் பெறத்திலகமாவார்
குலப்பெருங்கிழவர் தாமுங்கோமளக் கொடியோன்பாகன்
மலர்ப்பதம் பெறுவரல்லால் மறுபதம் பெறுகலாரோ. (௧௯)

படைப்பினுக் கர்தியாய பனிமலர்த்தடமாமீது
கிடைப்பவுமயல் புக்காடக் கெழுமுதலமிழ்தவாரி
யுடைப்பருந்தசுமை வீசியுறுபலிக்கலனென்றேந்தி
யடைப்படாதுழன்று வாளாயங்கைளய நக்கல்போலும். (௨௦)

பற்பலமனுக்கடம்மிற் பழிப்பி லைந்தெழுத்தும் வேதத்
துற்றனமனுக் கடம்மி லுருத்திரசம கந்தானு
மற்புதத்தருக் கடம்மில் வில்வமும மரர்தம்மில்
கற்பனைகடந்த முக்கட்கறைமிடற் றிறையுமாங்கே. (௨௧)

புனிதரிலழற்புத்தேளும் பொங்கொளிகளில் வெய்யோனு
முனிவரிலென்னை யாண்டமுதல்வனு முதன்மை சான்ற
தனிவிரதத்திற் கொல்லாவிரதமுந் தருமந்தம்மிற்
கனிபடும்பொறையும் யோகக்காட்சியிற் சனகன்றானும். (௨௨)

மைவரிமணிவண்டே திங்கரந்தமிறைப்பவானுட்
டைவகைத்தருக்களேய் கருமணிபொழிற் காழிதன்னிற்
பெய்வகைகிடந்த தீர்த்தபேதத்திற் பிரமன்கண்ட
தெய்வநீர்ப் பெருக்கருத தீர்த்தமும[illegible]தோ. (௨௩)

மனவலிகடந்தமிக்கீர்மற்ற தன்கரைக்கட்பட்ட
வினைதருகுப்பைவாரி யெறிந்தவர்பெறுவர் மெய்யே
கனைதிரை கங்கையாதி கடவுண்மாநதி கட்கெல்லாம்
புனைகலனணிந்து தெய்வப் பொற்படாம் புனைந்தபேறே. (௨௪)

வேறு.

காதன்மணஞ்சின மடங்கல் கவுணியர்கோன் பருகருட்பாற்
காதன்மணந்தரு தடத்தைக்கண்டார் நோய்விண்டாரே
மாதரங்கமலை யிளங்கால்வரைமார்பினுறப் பெறுவார்
மாதரங்கமலை யரங்கேமன்னுரிமைப் பெறுவாரே. (௨௫)

முத்தமிழும்படித்துறை நீர்முகந்து துளியருந்தினரேல்
முத்தமிழும்படித் துறைநீர்முகிலெனத் தண்டமிழ் பொழிவார்
சித்தமருங் கலையாது தீரமதிற்கணமுறினுஞ்
சித்தமருங் கலையாதுந் தெரிவரியநிலைசேர்வார் (௨௬)



பத்திவலை முடித்தலை மேற்படாந்தாரித் தடத்தின்
பத்திவலை முடித்தலை மேற்படின்மாயை யடுவாரே
நித்திலமாகடந்தரு மின்னீரேந்தி யோர்பலமுன்
நித்திலமாட கந்தருவார் நினைத்தசெயல் பெறுவாரே. (௨௭)

பதகமலம் வலம்வருவார் பண்டுயிரோடுறத் தோய்ந்த
பதகமலம் வலம்வருவார் பாயொளி யொன்றுயிடைத்த
மதுகையிட வரையகன்ற வல்வினைபோய்த் தொல்லருள
மதுகையிட வரைவென்றோன் மன்னுரிமைப் பெறுவாரோ. (௨௮)

மாகனத்த தினங்காட்டுமணிமறை நான் மறையவர்க்கு
மாகனத்த தினங்காட்டும் வல்லார் மாறில்லாரோ
கோகனகத்துச் சிவந்தகோதை மணாளன் பணியுங்
கோகனகத்துச் சிவந்த குழகனடி பெறுவாரோ. (௨௯)

திருக்குளத் தினிருள்பாறச் சேமநெறி தரும்பிரமன்
[illegible] கினியற்கையிது திரைமுரசு படைத்தானை
யுருக்கவரு மரன்குலதன [illegible]யருளே பொருளா
யுருக்கவரு மொருகுல தீர்த்தவியலுணாத் [illegible]. (௩௦)

கன்னி மணிவண்டுழலுங் கடிகமழ் தாமரைத்தடஞ்சூழ்
பொன்னிவளந்தரு புகலிப் புண்ணியன் போற்றளிக்கயமேல்
முன்னியகாற் பெருந்திசையின் முக்கோலெல்லையினுரைத்த
தன்னி கரிலொரு சூலத்தீர்த்தவியல் சாற்றரிதால். (௩௧)

முத்தலை வேலகழ்ந்ததுதான் முழங்கலையி னடுநாகப்
பைத்தலையாள் முனிசாபம் பரித்தலையா தவன்படிய
வத்தலையே வினையகற்றி யலைத்தலைமாறொடு முன்போல்
வைத்தலையா திருத்தியதிம் மலர்தலை மாநிலம்போற்ற. (௩௨)

தலைமதியின் முழுமதியிற் சூழுதி மறுகனெடு
மலைமதி மாயவன்பெறலான் மறுமதியிலவர் படிந்து
நிலமதிசேர் தென்புலவோர் நிறைமதிசால் கடனிறுத்தோர்
கலைமதி வேணியனிருபொற் கழன்மதி பெற்றிருப்பாரோ. (௩௩)

கலிகடியுந் தனிக்கவிகைக் கன்னியாகுச்சபதி
பலிகவருங் கொடியுருவிற்பறந்தவன் முன்னிறம்பொலிய
வொலிகெழுநீர்ச் சூலதடத்தொருமுனிவன் விதிர்த்ததுளி
வலிபலவு மளித்ததென்றால் வழுத்துவதுமற்றெவனோ. (௩௪)

மல்குமதிப் பக்கத்துமாசயினேகாதசிக்கண்
புல்குபுகழ் விகடாங்கன்புரையறுமா ணெழில்பெறலாற்

பல்கிளைஞரோடுங் கயிலைப்பனிவரையி னினிதிருப்பா
ரொல்கலிலென் னுளதுபுக்குட்னுடக்கடவாரே. (௩௫)

வேறு.

தீர்த்தலை வெடிவாளை நீடமரினடவாளைப்
பார்த்தென வெதிர்பாயும் பணைமலிபுகலிக்கட்
பேர்த்தனி யதன்மேல்பாற்பிறழ் திரையானந்தத்
தீர்த்தமதுள தன்னீர்த்திறமினியறை கிற்பாம். (௩௬)

அம்புயமலர்வாண னன்னகரிடை வைத்த
வும்பருமுனிவோரு முணர்வுடையரவோருஞ்
செம்பொரு ளியல்கண்டுஞ் சேமறைநெறி நின்றுந்
தம்புலமறவென்றுந் தவநிலைதவருராய். (௩௭)

அறநெறிவழுவாரு மரனருள்பிழையாரு
மறவினைகடிவாரு மகவினைமுடிவாரு
மிறைபணிவழுவா ராயிவர்புரிசெயல் கண்டே
பிறைமுடியொருகாழிப் பெருமுதலருள் கொண்டே. (௩௮)

மதிநதிமுடியாட ... மதி யாடப்
பொதியவிழ் தொடையாடப் புலிமுனியரவாடக்
கதிர்விரி வடிவாடக் கரதலநிரையாடப்
பதமலர் தனியாடப் பலமுனிவராட. (௩௯)

ஆடினனெடுநாள் புக்கவ்வழியானந்த
நாடியவமையத்தோர் நாயகனயனத்தே
பீடியலருள் வெள்ளம்பெருகிய துளிவீழக்
கூடியததுமேல் பாற்குறுமுனியுறை சாலை. (௪0)

மேலருள் முனிகண்டவிமலன தானந்தத்
தால்வருமிது வென்றங்கனைவர்க ளொடுமாடிச்
சால்புறவரலாலே தரணியிலதுபோரய்க்
கோலளவினிலாடக் குடதிசைதனிலுண்டே. (௪௧)

மற்றதைநினைவோரு மருமலர்புனைவோரு
முற்றிடானைவோரு முறையினிலணைவோருங்
கற்றறிவரும் ஞானக்கடலெனு மடலேறூர்
சொற்றவனடி நீழற்குலவு வரிஃதுண்மை. (௪௨)

வேறு.

கூளியகற்றிய காளிபுரத்தருள் குழைவிக்கு
மாளியுகைத்தெழு காளிதடத்திய லறைகிற்பா
மீளிவயப்புலி யூரிலிடர்ப்படு வினைமோடி
நாளுமிகக்கரு நோயினளப்பரு நலிவாலே. (௪௩)



175

கொச்சைநகர் தலைவர்க்கருகுற்ற குடக்கூடே
மெச்சதுரத்தோர் தடத்தையியற்றி விரித்தாடி
யச்சிவனெப்ப நிருத்தமிழைத்தவ கிற்பால
குச்சிதமுற்ற கரும்பிணிவிட்டொளி கொண்டாளால். (௪௪)

வர்க்கவினைப் பிணியகலநினைப்பவர் மதிதோறுந்
தூர்க்கைமனுக்கொடு தெரிசநினைத்திது தோய்வாரேல்
விற்கழைபெற்றவ னெழிலுருவத்தொடு மேலான
வற்கலின் முத்தியினெளிமையினிற்பெற லாவாரே. (௪௫)

இயல்பகலுஞ் சிவசிந்தனையாதியு மிதுதோயிற்
பெயருமதற்கிணை வேறுளசெய்வது பிழையாமால்
வெயில்விரி மாளிகைவேணிபுரிக் கயல்வடபாலோர்
வயினவர் தீர்த்தவியப்பமு மொருவழிவருவிப்பாம். (௪௬)

அன்னகருக்கோ ரிரண்டுகுரோசத் தளவாகப்
பொன்னணிமார்ப னகழ்ந்துவிரித்த பொலன்கோட்டிற்
றன்னுடைநாதனை வைத்துவிழைந்ததவம் பெற்றுன்
பன்னியவாவி படிந்தவர்தீவினை படியாரே. (௪௭)

கும்பமதிக்குளம் பூரணநாளிது குடைவாரே
யும்பருந்தவர் சாபமுதற்பவ மொழிவாரே
யிம்பரிலிம்மொழி சத்தியமேயென வெனையாளு
நம்பெருமானது மும்முறையாக நவின்றுளனால். (௪௮)

அம்மதிமுற்றவ மாடினரும்பவ மாடார்பொன்
னிம்மியளித்தவர் கோடியரும்பல னிசைவாரால்
கொம்மைமுலைச்சியர் மண்ணணியாடைகள் கோதான
மிம்மையிலீகுவர் பேறுதெரிக்குளர் யாரோயால். (௪௯)

முத்துறழ்தண்டுல நல்குநர்தங்கலை முறைவாளு
ரத்துணையாண்டு மரன்கயிலைக் கிரியகலாரார்
முத்தமிழாளி முயங்கியவெங்குரு மூதூரில்
மைத்தவராக்கு தடாகமுமேலொரு வழிசொல்வாம். (௫0)

வேறு.

தடத்தியல்காழி யந்தளிக்கு நீள்வட
குடக்கினின்மேலொரு கோவின்மேயது
கடற்றிரைமுகட்டெழு கதிரின்செல்வனைப்
படப்பொருபனிமகன் பண்டுதொட்டது. (௫௧)

அனல்வினைக்குரவனை யயர்த்தசிங்ககே
தனன்மறை யலகையைச் சாய்த்தநீரது
முனைவருமமரரு முற்றுமற்றும்வே
றெனைவரும்வினை கெடவின்றுதோய்வது. (௫௨)

போதருகோட்டிடைப் புயங்கனுமத்து
நாதனையுள்ளத்து நாளுமாடினர்க்
காதவன்முதல் கோளனைத்து நன்றிசா
லேதமில்பலன் றரவிலங்குபொற்பது. (௫௩)

மற்றதனயலொரு வாளியெல்லையின்
முற்றரவணையினான் முனிவன்வெம்பழி
பற்றறவாடியோன் பண்டுதொட்டது
பெற்றபேராழியின் பெயரினோர்தடம். (௫௪)

ஆசிலத்தடமுவந்தாடி மாமறைத்
தேசிகர்திறத்தொரு செம்பொனீவரேல்
வீசிவில்லுமிழ்மணி மிளிருமார்புடைப்
பாசிலைப்பள்ளியான் பதத்தில்வாழ்வரே. (௫௫)

மங்குலேறுயமதில் மயேந்திரத்துக்காவலன்
பொங்குருதவஞ்செயப் புகலிவாணன்முன்
சங்குறுகொடுங்குழைத் தாணுவேணுவா
யங்குவந்துறத் தடமவனொன் றுற்றதால். (௫௬)

சங்கொலிவழக்கலிற் சங்கதீர்த்தமென்
றெங்கணுநிலவிய விதுபுக்காடினர்
வெங்கொலை மருவலாத் தொலைத்துவேலைசூ
ழங்கண்மாநில முழுதளிப்பருண்மையே. (௫௭)

விண்ணவர்க்குடைந்த வெஞ்சூரன் வெவ்வலி
நண்ணியதடமிதி னானுந்தோய்பவ
ரெண்ணரும்பகைப் புலங்கடப்பரென் றருட்
கண்ணுதலந்தணன் கழறினனரோ. (௫௮)

அளிபுனை திருநிலையழகியாயபூங்
கிளிபுணர்மருங்கி னன்கிளர்பொன்னாலயத்
தொளிபுணர்தெற்கிலோர் கணையிலோங்குநீர்த்
தெளிதிரைச்சுக்கிர தீர்த்தமென்றரோ. (௫௯)

வன்கணுலெண்கணன் மதித்துவீழ்த்தநாட்
பொன்கணனூர்திவாழ் புகலிமாநகர்த்



தென்கணன்கொன்றெனக் கோணஞ்செய்தடத்
தின்கணனந்த நீரிழைத்துப் புன்கணன். (௬௦)

தேர்ந்தனன்பூந்தராய்த் துணைவனாலுயிர்
தேய்ந்திடர்மிருத சஞ்சீவினிப்பெய
ராய்ந்தநூல் விஞ்சையுமமரர் தேசிக
னேய்ந்தநல்விழுப்பமு மெய்தினானரோ. (௬௧)

தனிப்புகர்வார மத்தடத்தினாடினர்க்
கினிப்படாவறுமை கோயிலைக்கோமயம்
பனித்தபுல்லறுகொடு பரித்துகோன்மதி
தனிற்படிந்தோர்க்கினை தணைக்கணில்லையால். (௬௨)

இனிதருவலைஞர்த மேழைதோன்புணர்
மிளிர்சடைமுனிவரன் விமலன்கோயிலுட்
டெளிதரநாட்டிய தீர்த்தமொன்றது
குளிர்புனற்பராசர கூபமென்பவே. (௬௩)

அச்சுதனனைய மேலவர்க்குமேலவன்
கொச்சையையகற்று மிக்கூபந்தோய்பவர்
நிச்சயமுணவூ ணோர்தலேதிலா
ளிச்சையின்முயங்கல் மற்றெவையுந்தீர்வரே. (௬௪)

தேட்பெயர்மதியிற் செறிந்தபூரணை
நாட்புனல்படிந்து நென்மணியை நான்மறை
யாட்சியர்திறத்தினி தளிக்குமன்பினோர்
வேட்கைகூர்பிறவி வெவ்வினைப்படார்களே. (௬௫)

வாங்கொலியருவிவீழ் மலையமாதவன்
பூங்குயிற்கிளவிபாற் புரைநற்பூந்தராய்க்
காங்கிருகோலள வாகக்கீழ்புலத்
தோங்குநீர்மலிதட மொன்றுநாட்டியே. (௬௬)

பைந்தொடிப்பாகனைப் பதித்துப்பாங்கரின்
வந்தனைமலர்கடேய் வணங்கிவீறுபெற்
றுய்ந்தனனெலிதிரை யுலகுளோரதைச்
செந்தமிழகத்திய தீர்த்தமென்பரால். (௬௭)

கோதமன்குறுமுனி குழித்தவாவிபாற்
போதலரொருதடம் புதுக்கிப்பூந்தராய்
கர்தனையிறைஞ்சி மெய்நலம்பெற்றனது
தீதறுகவுதம தீர்த்தமென்பரால்.

இவ்வகையா றிரண்டிண்டைவானவன்
செவ்வுநீர்த்தடமுதற் றீர்த்தமாமிவை
யொவ்வொருதீர்த்தமே யுய்க்கும்வீடெனி
லெவ்வகைவிரிக்கு மதின்னுங்கேட்டிரால். (௬௯)

முந்தையீரொன்பதாமுறு புராணங்கள்
செந்தழல்வானவன் றிங்கள்வெய்யவ
னந்தமிலுலகிறே டலகிலண்டங்கள்
தந்தசீர்புனைதடந் தனிப்புருநதி. (௭௦)

இவ்வகைப்பேர்புனைந் திலங்குதீர்த்தங்கள்
கௌவையிலவர்பணி காழிசூழ்தருஞ்
செவ்வியதிசைதொறுந் திகழுமான்மனத்
தெவ்வமில்முனிவிர்கா ளின்னுங்கேட்டிரால். (௭௧)

வேறு.

கின்னரர்கிம்புருடர் சித்தரியக்கர் நாலிருவசுக்கள் கேடில்வானோர்
பன்னகர்பாரிடர் சுரர்முனிவர்முதலோர்புகலிப் பணிந்துபோற்றி
யன்னவரோ ரொருதடமுந்தடத்துறையோ ரிலிங்கமுமவைத்தரிச் சித்தாரா
லிந்நகரக்காழிவளா வடுகேசன்மகிமையினி யிசைக்குமன்றே. (௭௨)

## தீர்த்தமகிமையத்தியாயம் முற்றும்.

ஆக. திருவிருத்தம். ௧௩௬௪.

---

# வடுகனுதவத்தியாயம்.

கொண்டல்கண்படை கொளக்கிளந்தளிகுலாவி யின்னிசைமிழற்றுபூந்
தண்டலைப்பொழிலுடுத்த காழிவளைதன்னிலே வடுகனென்னவே
அண்டநாயக னிசைந்தகாதை வரலாறுகூறுகென வீறிலா
வெண்டவத்து முனிவோர்வினவ வருளேறுசூதனது கூறுவான். (௧)

முள்ளெயிற்றரவனைக் கசைத்தமுழுமுதல்வனன்கருணை முதல்வியோ
டெள்ளிவிச்சக ம்ளிக்குமாறுமுனிணங்கு கேளியின்மணங்கொளீஇ
பள்ளிவைகவருமறை வனத்திலொளியாய்த் திருச்சுடர்மழுங்கல்கண்
நோக்கியுாக்கமறையோதி ஞனிதனையோதினன்.



ஞென்னவேலையில் விளக்கைவில்லுமிழவீண்டுயாவரது தூண்டினூர்
பொன்னனையவர் புரக்குமாறுவிரிபுவன மும்மையுமளித்துமென்
றென்னையாள்பவ னுமைப்பவன்னையுமெவர் குறங்கொலெனவெண்ணினு
ளன்னபோதரொரி தீபமேவியறியாது நாசிகொடுதூண்டியே. (௩)

பொருகுறும்பு புரிமிருகமாமியல் பொருந்தலாலது தருஞ்சுட
ருருகுகின்றநறை யிழுதையன்று சிறுதுண்டதவ்வொலியை யண்டர்கோன்
வருகநீசுடர்துலக்கலா லுரிமைவைத்துமுப்புவி புரப்பதற்
கொருவனுகி யறிபிறத்தீயிழுதுணலின்வா னிருதனுதியால். (௪)

நம்பெருந்தரணி யாலயங்கடோறு நருபெருஞ்சுடரிழைத்துமே
லெம்பதம்பரவு மன்பரந்தணரிடத்துமீகை நனியீகெனு
வம்பருவிதழியா னுமைப்பவதுவலி விரோசனனெனும்பெயர்
செம்புலாலொழுகு வேலுடைத்தகுவர் செம்மலின்மதலை யாயினுன். (௫)

மாவலிப்பெயர்புனைந்து நால்வகைவயப்படைக் கடலோடுங் குழீஇ
காவல்முப்புரமுந்த ஞதுகவிகைக்குள்வைகமுறை செய்யுநா
ளோவரப்பெருகளி யினுலமகராருலகுபுக்கு வீரிதருகிழற்
தேவனைப்பொருதழிப் பவங்கமொடுதேவர்கோன் முரணிமேவினுன். (௬)

ஆண்டவாசவனு நிருதன்மாவலியு மாழிவேந்தனொடு முரணுகும்
பாண்டனுந்தனதனொடு சம்பரனும்பவனனுந்திருதி மானுமெய்
நீண்டதீயினொடு தூமகேதுவுநெருங்கு காலனொடுநாகனுங்
காண்டகீசதிசை யதிபனொடுபெயங்கரனும் டிண்டிமனு நிருதியும். (௭)

இனையவாணிருதருந்தி சாதிபருமேற்றபோரி னிடையாற்றல்சால்
வனைகருங்கழல் முரட்டயித்தியர்செய் வாகைகண்டதிக வேகமாய்
நுனைமுகக்குலிசவே லெடுத்ததிரநூக்கிமாகபதி தாக்கினு
னனையபேரசுரர்கோன் வெகுண்டுவிறலமரரோட மராடினுன். (௮)

எறும்வரிச்சிலைகுவித்து நாணொலியெறிந்தமூன்று பதினுயிரம்
தெறுங்கடுங்கணைவ லாரிமீதும் விரிதிசையுளோர் மிசையனேகமும்
கறுவுகொண்டலெனவீசி நாணிலைகலங்கினு ரமராரதுதெரிந்
துறுதடக்கைய யிராபதத்தையெதிருந்தி வாசவனுமுந்தினுன். (௯)

மிகநெறுக்கியெ யிற்கடித்துருமுவிசை யினிற்கரமெடுத்தடித்
தகலமத்தியெறி குலிசமிட்டுறவடித்தலும் பொருதயித்தியன்
பகல்மணித்தலையின் நடுவெகிற்பதைபதைப்பவங்கையுறு தண்டினு
லுகவடிப்ப மகபதிதனக்கவசமுற்ற தாலவசமுற்றினுன். (௧௦)

அக்கணத்தையறிந்த மாவலியகன்றதேரி லவனைக்கவர்ந்
தொக்கவேருழையி லறிவுருதவீகையோடினுரமரர் வாடினுர்

மிக்கவேழ்திசை பரிக்குவானவரும் வேறுவேறிரியபோயினர்
புக்கமாவலி துறக்கமேயபல போகமும்பருக லாயினன். (கக)

ஆடகத்தலமகன்று ஞாலமிசையரசுபேணி நிறைமணிவனை
ரூடகோடிமணுளன்மேய தளிதோறுமொள்ளொளிய சுடரிழைத்
தேடதேமலர் மஞ்சனுதியினிலெந்தை பூசனைசெய்தன்பர்பால்
நாடகத்துவழி பாடியற்றிநனி நன்னரன்புசெயு மன்னநாள். (கஉ)

வருகுலக்குருவை மகவினைக்கிடம்வழுத்து கென்னவன்வானுளோர்க்
குருமெனப்பொரு சிவத்துரோகமுமொழித்தவூர் பிரமனெண்ணிலார்
அருவினைத்தொடர் பிரித்தவூரிறுதி யாழிசூழரியகாழியூ
ரிருத்தலததினினுயர்ந்தவூ ரதிலிழைக்கலாகுமெனவவுணர் கோன். (கங)

சொன்னவாறுபுரி மகவினைக்குரிய சோர்விலாதபொருண் மேவரப்
பன்னருஞ்சடைமுடித்த மாமுனிவர்பலர்களோடு மறையவரொடுந்
தன்னெடும்படை சமீவரக்கதிர்தடைப்பநீள்கொடி தொடுத்தபூங்
கன்னிமூதெயிலுடுத்த காழிநகர்காவில்வல் லவுணன்மேவினன். (கச)

எகினவூர்தி தடமாடியீசனையிறைஞ்சி யங்கமர்கம் மயன்
மிகலதென்திசையின் யோசனைப்பரவை வேள்விபந்தலுமிழைத்ததிற்
சகலமுங்கொடுபுகுந்து நாதனிருதாள்குறித்த னனியற்றமே
விகலுடைந்த கடவுளரும் வாசவருமின்னைவானவரை யண்டினர். (கரு)

புண்டரீகமனைகொண்ட பூரணபுராணமாவலியி னேவினற்
சண்டமாருத முடன்றபோதுபடுசெருக தாயினமெனக்கனாந்
தெண்டிசாதிப ரிரங்கவேதனவரெவரொடு முயர்காழிபுக்
கண்டராழ்துயரு கிருதன்வாகையுமெனத் தன்முன்றெழு துனாத்தனன். ()

ஈதியம்பவு மிரங்கலீர்பலருமென்று காழிவனநின்றுளான்
சீதரன்றனை நினைப்பநீர்பருகுசெல்லை யன்னவனவ் வெல்லைவாய்ப்
பாதபங்கயமுன் வந்திறைஞ்சியிசை பன்னியங்கைமலர் சென்னிகொண்
டாதரம்பெருகி நிற்கமாயவனுடைருள் புரிந்திதனையுரை செய்தான். (கஎ)

மாயமாவலிசெயன் புமன்பினில்வரம் பெருந்திறனுமும்மைசா
லேயதிண்புவிபரிப்பதுங் தவமிகந்து விண்ணவரை நலிவதும்
நீயறிந்துணர்தி யாவரேனுமறை நேயர்பாலிவு மெனன்புடைத்
தூயர்பாலிவு மொரிடர்வினைக்கிலவர் தோய்வரால் நிரையவாதையே. (கஅ)

மைந்தர்தந்தையர்களேனுமும் முடையவடிவமான பழவடியர்பால்
சிந்தையாளரை யொறுத்தபேரெமது நேயமுன்னவர்களது செயார்
புந்திநல்லறமிழைத்து மென்னநதிபுகுவர்யாமது பெறேமெனு
வந்தமாவலியடங்குமாறு புவியாசிலாத முனிகாசிபன். (கக)



பாலனுகியவுணனை யொடுக்கி விரிபாய்திசைத்தலைவர் கீழுளோர்
மேலுளோரை நிலைநிறுவிமீள் கெனவினைத்துழாய் மணியலங்கலான்
சாலநன்றிதெனவம்புயம் பொருவுதாளிறைஞ்சி விடைகொண்டுநீள்
மாலகன்றமுனி காசிபர்க்கதிதிமணி வயிற்றிலொரு மதலையாய். (உ0)

தெளிபசுங் குறளதாகிவந்து விரிசிகையொடும் புரிமுன்னூலொடு
மொளிதருங் குசையொடுங் கமண்டலமொடுங் குறுங்கையொரு தண்டொடும்
மிளிர்தரும் பிரமசாரியாயடல்விரோசனன் புதல்வன் வேள்விவாய்க்
களிதரும்படிபுகுந்த மாலையெதிர்க்கண்டு நேயமதுகொண்டனன். (உக)

அருக்கியாதிவழிபாடுசெய்து மணியாசனத்ததி சயத்தொடும்
பொருத்தினன்முனிவரும் பராவினர்புகன்ற மன்னனைமுகுந்தனு
முரித்தியோ டினிதினின்று மூவடிமண்யர்ம் விருப்பினமளிக்கெனக்
கருத்தியந்தனுவப்பவங் கனுறுகவிமகன் கருதியிதுசொனன். (உஉ)

ஆழிமாயனெழிலுருமறைந்து குறளாகி வஞ்சனையிலெய்தினன்
வாழியாயிது கொடுக்கிலின்னலிடை மன்னுவாய் தவிர்தியென்னவு
மூழிமாலெமையாக்கி லீவதினுமுறதி வேறுமுளதோவெனு
வீழிவாய்மனைவி தானனீர்கொணர் விரகினலவுணனுரைசெய்தான். (உங)

கொண்டுவந்த நகைகெண்டிகைப்புனல் கொடைத்தடக் கையன்விடுப்பநீர்
வண்டுவாரமதனைப் பெருமையிடைவமபல் வெள்ளிதடைசெய்தலுந்
தண்டுழாயவனறிந் துகையணிதருப்பை கொண்டது திறத்தலான்
மண்டுசுங்கனொரு கண்ணிழந்தயலின் மருவினனது பினிருதர்கோன். (உச)

மூவடித்துணைநிலங்கொளென்று புனல்முளரிபங்கையில் விடுக்கமா
லேரவலிற்புவியளக்குநீள் விசுவவுருவமெய்தி விரிதரையையோர்
சேவடிப்படவளந்து விண்ணையொரு சேவடிக்களவ கண்டுமேன்
மாவலித்தகுவன் முடியிலோரடியைவைத்து மண்ணிடையழுத்தினன். (உரு)

நேரமண்ணதனில் விண்ணும் விண்ணுமுறு நிலைகலங்கியல மருதனுஞ்
சூரணைந்தபுரு கூதனோடமரர்துன்னெனப்பதறி மண்ணினிற்
காரணைந்தெழில்கனிந்த சோலைநிறைகாழி மாநகரிலாபதுத்
தாரணன்றிரு முன்வந்துகூறவவர் தம்மையெம்மிறைதடக்கையால். (உசு)

அஞ்சலென்றருளி வடுகனுகிமுரண வுணனைக்கடியுமவனைநா
மஞ்சுலாம்வடுகெரூப முற்றிகலமடித்து மென்றுரை செய்தாயிடை
யெஞ்சலில்லவனு மவ்வுருக்கொடவரெதி ரெழுந்தருளுமமதையா
னஞ்சுகொண்டவல் வணங்கலாமையினென்னுதன்மற்றவனோடோதுவான்.

விழியிருந்தும் விழிப்பவரினிது புரிமிடலதென்னையென வெகுளியா
லழிவிலாதொருகரத்தின் மார்பினிலடிப்ப மாலிவனுமாவிபோ

யிழிவொடுந்தரணிமேல் விழுந்தனனவ்வெல்லைமா முளரிவல்லிகன்
டொழிவின்மங்கலமெனக் களித்தருள்க வூழிநாளுமுயர் காழியாய். (உஅ)

வேறு.

என்றுதுளி நறையுமிழுநீர்ங்கமலத்தர சிருந்தாள
கன்றுதுயர் கனல்கனற்றக் கடுவேனிலிளந்தளிர்போ
னின்றிடர்கூரமையத்து நீதுவளே லெனக்காழி
குன்றுடையான் வேற்றுருவிற் கொழுனனையாங்கவட்களித்தான். (உகூ)

அவ்வழிமாயவன் போற்றியகந்தை யெனக்ககற்றியதை
யெவ்வழியோருந் தெரிவானிடும் பையானகற்றிடுவா
னிவ்வழியேகிடந்த வுடலென்பு மதனுரிமையுநீ
வெவ்வழியில்லாய் தரித்தல்வேண்டு வலென்விருப்பிதுவால். (௩௦)

எனமொழியத் திருவருள்கூர்ந்திமையவர் தங்கம்பியனை
மனவணியான் பணித்தருளமரிந்தவுடற் பசுந்தோலைக்
கனைவிளைவாலுரித் தெலும்பின் கணத்தையொரு கதையாக்கி
முனைமழுவாளேந்தி திருமுன்வைத்தான் வணங்குதலும். (௩௧)

பாசொளிய வீருரியைப்பரித்தருள் கஞ்சுகமெனக்கொண்
டாசிகந்தமணிக் கதையை யங்கையினிற்பிடித்தருளி
வாசவனுதியர் போற்றவடுகேசன் வயற்காழி
தேசுபொலிமலைச் சிகரத்தென்றிசையிலினிதிருந்தான். (௩௨)

வியல்வடுகனென்னிருதன்மிடல் கெடுத்தான்றனையிடலாற்
பெயர்வடுகநாதனெனும் பிஞ்ஞகனும் பரையருளா
லியலிடமெய்துறி ரெனவுமெம்பெரு மானின்பூசை
யயர்வகலப்புரிகுறு நின்னருளுண்டேலென வாங்கண். (௩௩)

அண்ணன்முடிக்கணி பெறுமானைந்து முதன்முறையாட்டி
பண்ணமரும்பூகுநறும் பளிதமொடுங் கலந்தணிந்து
தண்ணமருங்கொழுந்து கொளுஞ் சண்பகமாதிய விரைதோ
யொண்ணறுந்தார் வகைபுனைந்து வொலியல் முறைமுறைசாத்தி. (௩௪)

பதனுளுந்தினப்பமொடு பாளிதமுஞ் சஃகுலியு
மதுவொழுகுமுக்கனியு மடற்றெங்கின் கொழுங்கனியும்
விதிமுறையினினிதருத்தி வெள்ளியிரா நள்ளிருட்க
ணிதையமலர்தூவழி பாடியற்றியிசை யெடுத்தேத்தி. (௩௫)

ஈற்றுளைந்து வலம் புரிகளீன்றமணிநிலவுமிழச்
சேற்றும்மை மலர்குவியுந்தென்காழிப் பொருப்பாசே